தென்னாபிரிக்கா: இனவாதத்திற்குச் சாவுமணி

# உலக உலா



தொடரும்

உள்நாட்டுப் போர்

மே 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறுபட்ட தேவைகளை
நிறைவு செய்து
மக்களின் மனத்தில்
இடம்பிடித்த வாணிபம்!

# சேரன்
# பல்பொருள் வாணிபம்

உப நிறுவனங்கள்:-

எழினி புடவை வாணிபம்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண விற்பனை நிலையம்
அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

விக்ரம் இயந்திர உதிரிப்பாக வாணிபம்
அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்,

சேரன் விவசாய இரசாயன பொருள் வாணிபம்
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.



கிளைகள்:-

சேரன் பல்பொருள் வாணிபம்
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

சேரன் பல்பொருள் வாணிபம்
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

சேரன் பல்பொருள் வாணிபம்
கண்டி வீதி.
சாவகச்சேரி.

சேரன் பல்பொருள் வாணிபம்
கண்டி வீதி,
கொடிகாமம்.

உங்கள் தேவைகளை மலிவுடன் பூர்த்தி செய்ய
இன்றே விஜயம் செய்யுங்கள்!

## சேரன் பல்பொருள் வாணிபம்

83, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
மாநகராட்சி மன்று
-1-6-1994
யாழ்ப்பாணம்

## ஆசியா


சக்மா இனத்தவர்கள் திரும்புகின்றனர் 07
பெனாசிரின் அரசியல் 08
ஆப்கானிஸ்தானில் உள்நாட்டுப்போர் 10
உறவுகள் கசந்து விட்டன 13
மீண்டும் முதல்வர் 15
சீனாவில் ஊழல் 17
ஸ்பிராட்லித் தீவுகள் 19
வடகொரியாவின் அணுவாயுதத் திட்டம் 21
மீன்பிடிச் சண்டை 23
கெப்ரோன் உண்மைகள் 24


## ஐரோப்பா


அயர்லாந்துப் புதிர் 27
உள் இருந்து ஒரு பார்வை 29
மீண்டும் கெடுபிடிக்காலம் 32
பழைய தலைமுறைக்குத் துரோகம் 34


## அமெரிக்கா


சப்பாட்டிஸ்ராவுடன் பேச்சுவார்த்தை 36
கேலிக்குரிய தடுப்பாணை 39


## ஆபிரிக்கா


பழைய நிலைக்குத் திரும்புகிறார்கள் 42
இனவாதத்திற்குச் சாவுமணி 44


## ஆராய்ச்சியும் கண்டுபிடிப்பும்


மிக ஆழமான மலையிடுக்கு 45


## குற்றவியல்


விமானக் கடத்தல் 47
இங்கிலாந்தில் படுகொலைகள் 50


## முகாமைத்துவம்


தரவுகள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல் 52


## சமூகவியல்


மணமாகாத தாய்மார் 55
சமயம் ஏற்படுத்திய பிரிவினை 58


## பொது அறிவுப் புதிர்


உலகைப்பற்றி அறிந்து கொள்ளுங்கள் 62


## தெரிந்து கொள்ளுங்கள்


ஆபத்தான உயிரினங்கள் 65


## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்


எஸ்ரோஜன் கொம்பிளைக்ஸ் 67
மின்னுவதெல்லாம் இரசாயனமல்ல 70
அணுமின் நிலையங்களில் மாற்றம் 71


## சுற்றுச் சூழல்


கிவியின் கடைசி அறை கூவல் 73
ஆதிவாசிகளின் தடுமாற்றம் 77


## மனிதவியல் வரலாறு


லூசியின் பேரன் 79


## பல்திணைப் பகுதி


செய்திச் சரம் 02
புதியன அறிமுகம் 03
பார்வைகள் 06
நேசப்பூக்கள் 81


PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

விலை: ரூபா 100/-

உலக உலா
பல்துறைசார்
மாத இதழ்

உலா: 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொஸ்னியா

பொஸ்னியாவில் கொருசாடே மருத்துவ மனையை மோட்டார் எறிகணை மூலம் சேர்பியர்கள் தாக்கி அழித்தனர். இத்தாக்குதலில் 44 பொஸ்னிய முஸ்லிம்கள் கொல்லப்பட்டும், நூற்றி முப்பத்தேழு பேர் காயமடைந்தும் உள்ளனர்.

பொஸ்னியாவில் உள்ள பொதுமக்கள் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள சேர்பியரது ஆயுதக் கிடங்குகள், விநியோகக் குதங்கள் ஆகியவை நேட்டோ விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகுமென அமெரிக்க அரசு எச்சரித்துள்ளது. இப் பிராந்தியத்தில் 200 இற்கு மேற்பட்ட அமெரிக்க நேச நாட்டு விமானங்களும், அற்றியாட்டிக் கடலில் விமானந் தாங்கிக் கப்பல்களும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டன்

பிரிட்டன், வட அயர்லாந்து ஆகிய இடங்களில் உள்ள 41 கட்டடங்களைப் பிரித்தானியக் காவற்றுறையினர் முற்றுகையிட்டனர். இம் முற்றுகையின் போது கணிசமான போதைப் பொருள்கள், பணம், கணனிகள், நிதித்துறை சம்பந்தமான ஆவணங்கள் ஆகியவற்றைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். அயர்லாந்து குடியரசு இராணுவம் தமது ஆயுதத் தேவைக்காக இவற்றை வைத்திருந்ததாகக் காவற்றுறையினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

பிரிட்டனின் முடியாட்சிக்கு முடிவு கட்டுமாறு கூறிப் பிரிட்டனிலுள்ள சிறிய குடியரசு இயக்கமொன்று காடியன் பத்திரிகையொன்றில் விளம்பரமொன்றைப் பிரசுரித்திருந்தது. முடியாட்சிக்கு முடிவு கட்டி அரசியலமைப்பை மறுசீரமைக்க வேண்டுமெனவும் மக்களிடமே இறைமை இருக்க வேண்டுமெனவும், அவ்வியக்கம் கூறியுள்ளது,

## கனடா

30 வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்ட, ஆகாயத் தாக்குதல் பற்றி முன் எச்சரிக்கை செய்யும் சங்குகளை அகற்றும் நடவடிக்கையில் கனடா ஈடுபட்டுள்ளது. உபயோகிக்கப்படாத 1449 சங்குகள் அகற்றப்படவுள்ளன. கெடுபிடி யுத்த காலத்தின் போது மக்களைப் பாதுகாப்பதற்கே இவை அமைக்கப்பட்டவையாகும்.

## ருவாண்டா

ருவாண்டாவில் பயங்கரமான உள்நாட்டு யுத்தம் தொடர்ந்து நடந்து வருவதால் அங்குள்ள ஐ. நா. படைகளைத் திருப்பி அழைக்கும் தீர்மானம் ஒன்றை ஐ. நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றியுள்ளது. 10 பெல்ஜிய வீரர்கள் அங்கு கொல்லப்பட்டதை அடுத்து 340 படையினரைக் கொண்ட பெல்ஜியமும், 213 படையினரைக் கொண்ட பங்களா தேசும், 114 படையினரைக் கொண்ட கானாவும் தமது படையினரைத் திருப்பி அழைத்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா

அமெரிக்காவின் 37 ஆவது ஜனாதிபதியாகப் பதவி வகித்த ரிச்சாட் நிக்சன் மூளை வீக்க நோயினால் மரணமடைந்துள்ளார். காலஞ்சென்ற நிக்சன் வோற்றகேற் ஊழலில் சம்பந்தப்பட்ட போதிலும் சர்வதேச விவகாரங்களில் மிகவும் சிறந்த இராஜதந்திரியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சீனாவுடனும், சோவியத் யூனியனுடனும் இவரது காலத்திலேயே சமாதானத்திற்கான ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் வியட்நாம் மீது மோசமான தாக்குதலை நடாத்தக் காரணமாக இருந்தவரும் இவர்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தாய்லாந்து

### தூதரகங்கள் விற்பனைக்கு

தாய்லாந்துத் தலைநகரான பாங்கொக்கின் நடுப்பகுதியில் பெரும் இயற்கை அழகு மிகுந்த நிலப்பரப்பில் பிரிட்டிஷ் தூதரகம் இருக்கின்றது. தனக்குச் சொந்தமான இந்த விலையுயர்ந்த நிலத்தின் ஒரு பகுதியை விற்பனைக்குவிட பிரிட்டிஷ் அரசு தீர்மானித்துள்ளது. தாய்லாந்தின் இயற்கை அழகு ஆர்வலர்களுக்கு இது பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலத்தை வாங்குவோர் பெரும் மாடிக் கட்டடங்களை அதில் கட்டப் போவது திண்ணம். இதனால் அப்பிரதேசம் தனது பாரம்பரிய அழகை இழந்துவிடும். இதே மாதிரியான நிலத்தில் வசிக்கும் அமெரிக்கத் தூதுவரும் தமது இருப்பிடத்தை வேறு இடத்திற்கு மாற்றும் எண்ணத்தை அண்மையில் வெளியிட்டுள்ளார். இதுவும் சூழல் பாதுகாப்பு நேயர்களுக்கு மேலதிக அதிர்ச்சியைக் கொடுத்துள்ள செய்தியாகும்.

## சீனா

### பொருளும் அரசியலும்

முற்போக்கு எண்ணங்கள் கொண்டு இயங்கிய சீனப் பிரதமர் சயோ சியாங் 1987 ஆம் ஆண்டு பதவி இறக்கப்பட்டுள்ளார். இவருடன் இணைந்து செயலாற்றிய சீனப் புத்திஜீவிகள் பெரும்பாலானோர் அரசியல் துறவறம் பூண்டு தமது கவனம் முழுவதையும் வர்த்தகத்திலும், தொழிற் பெருக்கத்திலும் செலவிடுகின்றனர். சிலர் பெரும் பொருளீட்டியுள்ளனர். முற்போக்காளர்களைக் கண்காணிக்கும் பிரிவினர் இவர்களுடைய நிறுவனங்களில் தமது ஆட்களை நியமித்துள்ளனர். எங்கே தமது பொருளை மூலதனமாக்கி மீண்டும் அரசியலுக்குத் திரும்பிவிடுவார்களோ என்று பெய்ஜிங் ஆட்சியாளர்கள் பயந்த வண்ணம் உள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணனி பொருத்திய குறிப்பேடு

ஜப்பானின் ரொஷிபா (Toshiba) நிறுவனம், (T) 6,600 (C) என்ற இலக்கத்தில் மிகவும் பூரணமான இலத்திரனியற் குறிப்பெடுக்கும் ( Note Book ) சாதனத்தைச் செய்துள்ளது. இதில், புதிய அம்சங்கள் ஒன்று சேர்க்கப்



பட்டுள்ளன. வர்ணக்காட்சித் திரையில் விரைவாகச் செலுத்தும் சாதனம், ஒரு மின்சார ஒலி பெருக்கி ( Micro Phone ), நடுத்தரத் தட்டு ( Midi Disc ), சிறிய ரகத்தட்டு ( Compact Disc ) பொருத்தக்கூடிய ''ஓடியோ'' ப் பாகம் ஆகியன அதிற்சில. தேவைப்படின், வீடியோ சாதனங்கள் பொருத்தும் பாகத்தை வாங்கி, இதில் இணைக்கும் வசதியும் உண்டு. அமெரிக்காவில் இதன் விலை மிகவும் உச்சம். 9,500 டொலர்.

## உங்களைப் பார்த்துப் பாடும் வானொலிப்பெட்டி

சொனி ( Sony ) ஸ்தாபனம், தனது இவ்வருடத்திற்கான இரட்டை ஒலிப்பெட்டிகளும், தூர இருந்து இயக்கும் வசதியும்



கொண்ட வானொலியை வெளியிட்டுள்ளது. ( Two Speakers With Remote Control ) இந்த ரிமோற் கொன்றோல் முறையில், ஒலியின் தன்மையைத் தூர இருந்து மாற்றியமைக்கமுடியும். உதாரணம்:- ஒலியை மெல்லியதாக்கவோ, தடித்ததாக்கவோ, இயலும். மேலும், இயக்குபவர் இருக்குமிடத்தை நோக்கி, இந்த றேடியோ தன்னைத் தானாகவே திருப்பிக்கொள்ளும். இசைகேட்பவருக்கும், எது மிகவும் இதமான நிலை என்பதை, இந்த வானொலிப் பெட்டியிற் பொருத்தப்பட்டிருக்கும் மிகச் சிறிய கணனி தீர்மானிக்கும். ( Micro-Computer ) இது, ஜப்பான் சந்தைக்கு மாத்திரம் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. ஜப்பானில் இதன் விலை அமெரிக்க டொலரில்–600.

இனிமேல் தெருத் தெருவாகக் கத்துகின்ற ஸ்பீக்கருக்கு குட் பை சொல்லி விடலாம்.

## புதியதொரு சமையற் சாதனம்



ஒளிர்க்கதிரினால் சமையல் செய்யும் சாதனம், ( Microwave Oven ) இன்று பழைமை வாய்ந்ததெனலாம். இதை விஞ்சும் வகையில், சில நொடியில் ( Seconds ) உணவைத் தயாரிக்கும் மின்சார அடுப்பு, (F) பிளாஷ்பேக் 3,000 ( Flash bake ) என்ற பெயரில் விற்பனையாகின்றது. உணவு பதமாக அவிந்ததா என்பதை, இதிற் பொருத்தப்பட்டிருக்கும் உஷ்ணமானிகள் பரிசோதித்துத் தெரிவிக்கின்றன. மூன்று அங்குலத் தடிப்புள்ள உணவுகளை, இது எளிதிற் சமைத்துத் தந்துவிடும், சில நொடிகளில். இதன் விலை, அமெரிக்காவில் 9,500 டொலர்கள்.

இது எல்லாம் இங்கே எப்ப வருமோ என்று பச்சைவிறகுப் புகையுடன் போராடும் தமிழீழ இல்லத்தவர் ஒருவரது ஏக்கம்.

## பொது மக்களுக்கு ''ராடார்'' கருவி

''ராடார்'' ( Radar ) எனப்படுவது, இரண்டாம் உலக மகாயுத்தத்தின் கண்டுபிடிப்பு. அண்மையிலுள்ள, அல்லது,



எதிரில் வரும் கப்பல்கள், விமானங்கள், நிலப், பாறை யாவற்றையும் ஒரு குறித்த திரையிற் காட்டும் கருவி. காட்டுவது மாத்திரமல்ல, அப்பொருள்கள் நிலை கொண்டுள்ள இடத்தையும் துல்லியமாக ராடார் காட்டிவிடும். ராடாரின் அருமை, இருட்டிலும், பார்வை குறைந்த நிலையிலும் தெரியவரும். இது வரை காலமும் அரச நிறுவனங்களும், விமான நிலையங்களும், கடற்படைகளும் இதைப்பயன்படுத்திவந்துள்ளன. இப்போது, மிகவும் முன்னேற்றகரமான ராடார் தொழில்நுட்பம், குறைந்த விலையில் பொது மக்களுக்கு விற்பனைக்கு வந்துள்ளது. சிறிய படகுகள் கூட, இதைப் பயன்படுத்தலாம். அதாவது, $13\frac{1}{4}$ அடி நீளமான படகுகளும் இதைப் பொருத்திக் கொள்ளலாம். இந்தக் கருவி, உருவத்திற் சிறியது. 7·2 நீளம் 7·4 அடி அகலம். 2·6 அங்குலம் தடிப்பு. இதிற் பொருத்தப்பட்டிருக்கும் ராடார் குடை, 15 அங்குலக் குறுக்களவு கொண்டது. நிறை 5·8 இறாத்தல். அண்மைக் காலநுண்தொழில் நுட்ப முன்னேற்றம், ( Micro Technological Advances ). இந்த ராடார் கருவி அமைப்புக்கு உதவியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியன அறிமுகம்

## சுழியோடிகளின் குமிழி
( BUBBLE )

நீருக்கடியில் மூழ்கி முத்தெடுக்கவோ, மீன்பிடிக்கவோ, அல்லது, தேடுதல் நடத்தவோ, சுவாசிக்கும் காற்று அத்தியாவசியம். காற்றை, போத்தலில் அடைத்துச் சுமந்து செல்லாவிட்டால், நெடுநேரம் நீருக்கடியில் இருப்பது இயலாத காரியம். இதனால், நெடுங்காலமாகப் பிராணவாயுப் போத்தலும், சுவாசிக்கும் கருவிகளும், முகமூடியும், சுழியோடிகளுக்கு உதவும் வகையில் தயாரிக்



கப்பட்டு வருகின்றன. இப்போது, புதுமாதிரியானதொரு வடிவத்தில் இச்சாதனம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான பாகம், உருண்டைவடிவான 30 இறாத்தல் நிறையுள்ள, தலையை மூடியபடி, தோளிலும் நெஞ்சிலும் காவப்படும் குமிழியாகும். இது, கண்ணாடி நாலிழையிற் செய்யப்பட்டுள்ளது. இது, பார்வையை மறைக்காதென்றும், விரும்பிய இடத்தை நோக்கிச் செலுத்த, இதிற் ''செலுத்திகள்'' (Propulsion Unit) பொருத்தப்பட்டுள்ளன என்றும் தயாரிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். இதை அணிந்தபடி, 40 அடிஆழம் நீருக்குள் போகலாம். இதன் மொத்த நிறையில், பிராணவாயுப் போத்தலின் நிறை சேர்க்கப்படவில்லை. உலகின் மிக நீளமான ''வெள்ளை மணற் கடற்கரை'' எனப் பெயர் பெற்ற (F) புளொறிடாவில் இது தயாரிக்கப்பட்டுள்ளதில் (Florida) அதிசயமொன்றுமில்லை. இதன் விலை ஆறாயிரம் டொலர்.

## ''அதிர்ச்சி தாங்கிகள்'' பூட்டிய மிதிவண்டி

எமது போக்குவரத்தின் உயிர் நாடியாகிய இரண்டு சில்லு மிதிவண்டிக்கு, ''அதிர்ச்சி தாங்கிகள்'' (Shock Absorbers) என்ற அணிகலன்களைப் பூட்டியிருக்கிறார்கள், அமெரிக்காவில்! முன்னும், பின்னுமாக இரண்டு அதிர்ச்சி தாங்கிகள், இந்த ரக மிதிவண்டிகளிற் பொருத்தப்பட்டுள்ளன. ஒன்று:- கைகளாற் பிடித்து மிதிவண்டியை ஓட்டும் பகுதியிலும், (Handle) மற்றொன்று:- இருக்கைக்குக்கீழ் (சீற்) உள்ள சட்டத்திலும் காணப்படுகின்றன. இந்த ரகத் தாங்கிகளில், ''இலாஸ்ரோமர்'' இரசாயன நுரை நிரப்பப்பட்டுள்ளது. மிதிவண்டியும் பாரங் குறைவான ''புறோபிளெக்ஸ்'' (Proflex) தயாரிப்பாகும்.

யாழ்ப்பாண வீதிகளிலே இந்த மிதிவண்டி சொகுசாக ஓடிக்காட்டினால்தான் நாம் ஏற்றுக் கொள்ளலாம். இதன் விலை:- 45 அமெரிக்க டொலர்.

## காலநிலை பற்றிய தகவல்களைத் தரும் வானொலிப் பெட்டி

அமெரிக்கர்களின் பிரத்தியேகத் தேவைக்கென, ஒரு வானொலிப்பெட்டி தயாராகியுள்ளது. அமெரிக்காவில், தேசியக் காலநிலை ஆய்வுக் கழகமொன்று உண்டு. இதன் கிளைகள், ஒவ்வொரு மாகாணத்திலும் இருக்கின்றன. அந்தந்த மாகாணத்தின் காலநிலையை ஆய்வதும், வானொலி, தொலைக்காட்சிவானொலி மூலம் காலநிலைத் தகவல்களைத் தருவதும், இதன் முக்கியவேலைகள். இப்போது புதிதாகத் தயாரிக்கப்பட்ட வானொலிப் பெட்டி, இரண்டே இரண்டு முக்கிய கடமை



களைச் செய்கின்றது. ஒன்று நேரம் காட்டும் மணிக்கூடாகப் பணியாற்றுவது. இரண்டு:- எந்நேரமும் ஒரு பித்தானை (Button) அழுக்கியவுடன், காலநிலை அறிக்கையைத் தருவது. இந்த றேடியோவின் பெயர், ''மெமோறெக்ஸ் சீ. ஆர்.3,780.'' இதன்விலை நாற்பது டொலர்.

சிறிலங்காவில் இதனை நம்பி வெளியிற் போகேலாது.

## கால் வலுவிழந்தோரின் உதவிக்கு

ஏதாவது ஒருவழியிலே, கால்களிற் காயம் பட்டவர்களும், கால்களே அற்றவர்களும், தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் 'கக்கத் தண்டம்' எனப்படும் ஊன்றுகோலின் உதவியுடன் நடமாட வேண்டியுள்ளது. நடையை இலேசாக்க, தடியின் அடிமட்டத்திற் பொருத்தும் ''இறப்பர் அணிகள்' தயாரிக்கப்பட்டுச் சந்தைக்கு வந்துள்ளன, இவை நிலத்தைக் கவ்விப்பிடித்து, நடையை எளிதாக்குகின்றன. அத்துடன், சறுக்கும் விபத்துக்களையும் தவிர்க்க உதவுகின்றன. மருத்துவப் பொருள்கள் விற்பனை நிலையங்களில் இது கிடைக்கும். அமெரிக்காவில் இதன் விலை 12 டொலர்.

## இரு வகை வெண்பலகை

கரும்பலகையையும், வெண்கட்டியையும், சிறு வயதிலிருந்தே யாம் அறிவோம். இப்போது, '' இலத்திரனியல் வெண்பலகை '' பாவிப்புக்கு வந்துள்ளது. இதில் எழுதும்போது, அவ்வெழுத்துக்கள் நாடாவொன்றில் நிரந்தரப்பதிவாகின்றன. அதே சமயத்தில், படிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பில் அல்லது ஆய்வில் ஈடுபட்டிருப்போருக்கும் இது உதவுகின்றது. அது மாத்திரமல்ல, அறையில் இருந்தபடி இதில் எழுத, அந்த எழுத்துக்கள் நீங்கள் தொடர்புகொள்ள விரும்புவோரைச் சென்றடையும். பெரும் வர்த்தக நிறுவனங்கக்ளுக்கு இது வொரு வரப்பிரசாதம் என்றே சொல்லவேண்டும். இது, தலைமைச்செயலகத்தில் எடுக்கப்படும் முடிவுகளை, உடனடியாகக் கிளைகளுக்கு அறிவிக்கச் சுலபமான முறை! மூவாயிரம் டொலருக்கு இதை வாங்கலாம்.

உலக உலாவின் தலைமைச் செயலகத்தில் இதனைப் பூட்டி, கிளை அலுவலகங்களிற்கு இதன் மூலம் செய்திகளைப்பரிமாறி வந்தால்....! இது உலக உலா ஆசிரியரது கனவு.

## "லான்ட் றோவர்" வாகனம் - 1994 ஆம் ஆண்டு வெளியீடு

இரண்டாம் உலக யுத்தத்தின் பின், 'எல்லாத் தேவைக்கும்' பாவிக்கும் வாசுனங்கள் உலகின் பல பாகங்களில் தயாரிக்கப்படுகின்றன. ஆங்கிலத்தில் 'ஜெனரல் பேர்பஸ்' (General Purpose) என்ற இரு சொற்களின் முதலெழுத்துக்கள், (G . P) 'ஜீப்' ஆக உருவெடுத்துள்ளது. இன்று, ஜீப் வாகனம் உலகெலாம் பரவியுள்ளது. ஜீப் போன்ற வாகனங்களைத் தயாரிப்பதில், உலகின் சகல நாடுகளும் வித்தியாசமின்றி ஈடுபடுகின்றன. இவைகளிலொன்று, இங்கிலாந்து தயாரிக்கும் 'லான்ட் றோவர்.' பாதையே இல்லாத இடங்களிலும், நெடுஞ்சாலைகளிலும், இவ்வாகனம் ஒரே சீராகச் செல்லக்கூடியது. இதன் அடிச்சட்டமும், அதிர்ச்சி தாங்கிகளும் மிகவும் உறுதியாகவும், அந்த சமயத்தில் ஓட்டத்திற்கு உதவும் வகையிலும் செய்யப்பட்டுள்ளன. இதற்கு வீ. 8 இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளதால், அதனிடம் மித மிஞ்சிய சக்தி இருக்கின்றது. 94 ஆம் ஆண்டிற்குரிய இவ் வெளியீட்டின் விலை 28,000 டொலர்.

என்னதான் திறமான வாகனமென்றாலும் யாழ்ப்பாணம், வன்னி றோட்டில் உருப்படியாக ஓடிக் காட்டினால் தான் நாங்கள் ஏற்றுக் கொள்வோம்.

## வாகனத்தைப் பாதுகாக்கும் போர்வை

இருக்கைகளை மடித்து வைத்து விட்டு, பொருள்களை ஏற்றக்கூடிய வசதியுள்ள ஊர்திகளில், சில காயங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்று. வர்ணப்பூச்சுக்கள் சேதமடைவது, இக்காயங்களில் ஒன்று. இது போன்றவற்றைத்



தவிர்த்துக் கொள்ள, வாகனத்திற்குள் விரிக்கக்கூடிய, மிகவும் பலமான 'நைலோன்' ரக விரிப்பு விற்பனைக்கு வந்துள்ளது. நீர் முதலிய திரவங்களைத் தாங்கக்கூடிய தன்மை வாய்ந்தது. இரசாயனப் பொருள்களால் இதை அழிக்க முடியாதென்று, இதன் தயாரிப்பாளர் கூறுகின்றனர். விலை சொற்பம்; 105. டொலர்.

## மீண்டும் கைறோ பிளேனின் வருகை

கைறோபிளேன்கள் (Gyro planes) உலங்கு வானூர்திகளுக்கு முன்பானவை. இவை இயந்திரமற்றவை. மேற்காற்றிலுள்ள காற்றோட்டத்தையும், அலையையும் சாதகமாகப் பயன்படுத்தி, இவை விண்ணிற் பறக்கின்றன. 1940 ஆம் ஆண்டளவில் இவை கைவிடப்பட்டன. காரணம், இந்த ரக வானூர்திகளில் இரண்டு பெருங்குறைகள் உள்ளன. ஒன்று இவை காற்றிற் பறக்காமல், நிலையாக நிற்க முடியாதவை. அத்துடன், காற்றோட்டம் குறைந்த இடத்தில் இவை செல்ல மாட்டாதென்பது, இரண்டாவது காரணம். ஆனால் அமெரிக்க நிறுவனமொன்று கைறோபிளேனுக்குப் புத்துயிர் கொடுத்துள்ளது. அதன் விசிறிகளில் சில தொழில்நுட்ப மாற்றம் செய்து, உலங்குவானூர்தி போல் இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இவை, உலங்கு வானூர்திகளிலும் பார்க்கப் பாதுகாப்பானவையென்றும், பராமரிப்புச் செலவு குறைவென்றும், வேகம் கூடியதென்றும் நிறுவனம் கூறுகின்றது.

## நீச்சல் வேண்டாமென்றால் சறுக்கல் இருக்கின்றது

உங்கள் வீட்டு நீச்சற் தடாகத்தினை, நீங்கள் பணச்செலவுடன் ஐஸ் சறுக்கு விளையாட்டிடமாக மாற்றலாம். தண்ணீர் கீழே இருக்கையிலேயே, மேலே தடித்த விரிப்பைப் பரப்பி, அதன்மேல் பனிக்கட்டிகளைச் சீராகப் பரப்பியபின், இதன் மீது விளையாடலாம். தடாகத்தின் சுவர்களைப் பாதுகாக்க, அதன் மீதும் விரிப்புப் போர்த்தப்படுகின்றது. இந்த மாற்றியமைத்தல், வேலை அனுபவமும், வேலைத் திறனும் இல்லாதோர் செய்வது, இயலாத காரியம். தொழில் நிறுவனங்கள் தான். இதைத் திறம்படச் செய்யமுடியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதில் விழுந்தவை




● கடின உழைப்பையே நான் விரும்கின்றேன். இது ஒரு அதிஉன்னத சுகத்தைத் தருவதாக உணர்கின்றேன். இஸ்ரேலிய பிரதமர் ராபீனும் இதனைப் பின்பற்ற வேண்டும் என்பதே எனது விருப்பம்

கடந்த டிசம்பர், மாதத்தில் இஸ்ரேலியப் பிரதமர் யிற்சாக்ராபீனின் வேண்டுதலுக்குத் தலையசைத்த யாசீர் அரபாத் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு கூறினார்.

● ஒரு வேளை அதிசிறந்த உணவை உண்பதனால் மாத்திரம் நீங்கள் ஒரு கொழுத்த மனிதனாகிவிட முடியாது!

படைபலத்தின் வலிமையைக்கூட்டுவதானால் மாத்திரம் சீனாவில் மனித உரிமைகளைக்காப்பாற்ற முடியாது என்ற கருத்துப்படச் சீனத்தலைவர் ஜி. ஆங் – செமீன் அவர்கள் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் வாறன் கிறிஸ்தோபருக்குக் கூறியது.

● அமெரிக்க இராணுவத்தினரால் எங்களுக்கு எதுவித பயனுமில்லை. அவர்கள் எம்மக்களைக்கொன்றொழித்தது மட்டுமல்லாமல் எமது உறைவிடங்களையும் அழித்து விட்டனர்.

அமெரிக்கப் படையினர் வாபஸ் பெற்றுச் சென்றபோது ஜெனரல் மொகமட்பாறா அயிட்டின் சோமாலிய வாசஸ்தலத்திற்கு அண்மையில் வாழ்ந்துவரும் ஆசோ மொகமட் கூறியது.




● சீனாவில் தடுப்புக் காவலில் இருந்த அரசியல் கைதிகளை விடுவிக்கும்படி கோரிக்கைவிடுத்திருந்த 7 (ஏழு) புத்திஜீவிகளில் ஒருவராக இருந்தவரான ''சே- லியாங்கிங்'' வீட்டு முன்வாசற் கதவருகே முன்னறிவித்தலின்றி வந்து நின்ற பொலிசாரிடம் ''நீங்கள் என்ன செய்கின்றீர்கள்'' எனஅவர்களைகேட்டபோது, ''நாங்கள் புத்திஜீவிகளைப் பாதுகாக்கின்றோம்'' என்று அவர்கள்கூறிக்கொண்டு அவரது நண்பர்கள் யாரும் உள்ளே நுழையாது தடுத்தனர்.

● 'டாங்கிகள் ஓட்டுவதை நிறுத்தி நாங்கள் மேர்சிடிஸ் பென்ஸ் போன்ற சொகுசு, வாகனங்கள் ஓட்டப் போகின்றோம்'' சமாதானப் பேச்சு வார்த்தையை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம் என்ற கருத்துப்பட பொஸ்னிய சேர்பியத் தலைவர் ராடோவான் கறாடிக், தனது படைகளுக்குக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் அடைக்கலம் புகுந்திருந்த பங்களாதேஷின் "சக்மா" இனத்தவர்கள், இந்தியா விரட்டாமலே, நாடு திரும்புகின்றனர்.

எழுதியவர்: பங்களாதேஷிலிருந்து

— கமாலுடீன் —

1973 ஆம் ஆண்டு தொடக்கம் பங்களாதேஷின் சிற்றாகொங் மலைப் பிரதேசத்தில் வாழும் சக்மா (CHAKMA) இனத்தவர்கள், பங்களாதேஷ் அரசுக்கெதிராகப் போராடி வருகின்றனர். 14, 200 சதுரக் கிலோ மீற்றர் நிலப்பரப்புள்ள, இவர்களுக்குரிய பாரம்பரியப் பூமியினுள், மொழியாலும், இனத்தாலும் வேறுபட்ட 300,000 பங்களாதேஷ் மக்கள் அத்துமீறிக் குடியேறியதே, இதன் காரணம். அரசின் அநுசரணையுடன் இக் குடியேற்றம் தடையின்றி நடைபெறுவதனால் தமது வாழ்க்கை முறையும், மொழியும், தாயகமும் அழிவதைத் தடுக்க, சக்மா இனப் போராளிகள் தன்னாட்சி கோரிப் போராடி வருகின்றனர். போராளிகள் தம்மைச் '' சாந்தி பாஹினி '' என்று அழைக்கின்றனர். (பாஹினி என்றால், இராணுவம்) பங்களாதேஷ் அரசும் மிகவுங் கொடூரமான பதில் தாக்குதலை நடத்தி வருகின்றது. இதுவரை, 3, 500 -க்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தமது உயிரைக் காப்பதற்காக 56,000 -க்கு மேற்பட்ட '' சக்மா'' இன அகதிகள், இந்தியாவின் அண்டை மாநிலமாகிய திரிபுராவினுள் நுழைந்துள்ளனர். திரிபுரா வாழ்க்கை சொர்க்க புரியாக இல்லாவிட்டாலும், உயிர் தப்பியதே போதுமென்று இவர்கள் நம்புகின்றனர். இப்போது, இவர்களைத் தாயகம் திரும்ப வைக்கும் மிக இனிப்பான திட்டமொன்றை, பங்களாதேஷ்—இந்தியா அரசுகள் கூட்டாக நிறுவியுள்ளன. விவசாயத்திற்குதவும் வண்ணம் இரண்டு காளை மாடுகளை வாங்கவும், பிற தேவைகளுக்குமாக நாடு திரும்பும் ஒவ்வொரு சக்மா இனக் குடும்பத்திற்கும், பங்களாதேஷ் அரசு 250 டொலர் கொடுக்க முன்வந்துள்ளது. அத்துடன், ஆறு மாதங்களுக்குரிய இலவச உலர் உணவையும், தமது வீடுகளைத் திருத்தி அமைக்கத் தேவையான தடிகள், வேயும் பொருள்கள் யாவற்றையும், இலவசமாகத் தருவதாகவும் இவ்வரசு உறுதியளித்துள்ளது. தனது பங்கிற்கு இந்திய மத்திய அரசும், வெளியேறும் ஒவ்வொரு சக்மா இனக் குடும்பத்திற்கும் 63 டொலர் கொடுக்க முன்வந்துள்ளது. இதெல்லாவற்றையும் விட, சக்மா இன மக்களை வரவேற்பதில் பங்களாதேஷ் காட்டும் உண்மையான உற்சாகத்தை, இந்த அகதிகள் முதன் முறையாக நம்பத் தொடங்கியுள்ளனர். திரிபுராவிலும், சிற்றாகொங் மலைப்பகுதியிலும் இருக்கும் சக்மா இனத் தலைவர்கள், நாடு திரும்பும் திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்குவதற்கு ஒத்துக் கொண்டுள்ளனர். ஆகவே, இவ்வருட பெப்ரவரி 15 இல் 282 அகதிகளும், 17 இல் 500 அகதிகளும் நாடு திரும்பியுள்ளனர். இரு நாடுகளின் திட்டப்படி அகதிகள் அனைவரும் இரு மாத காலங்களுக்குள்ளாக நாடு திரும்பி விடுவர் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

பதவியிறக்கப்பட்ட முன்னாள் பங்களாதேஷ் ஜனாதிபதி, எர்சாத் அவர்களின் ஆலோசகர்களில் ஒருவரான உபேந்திரலால் சக்மா பின்வருமாறு கூறுகின்றார்:—

'' துணிவுடன் பயணத்தை மேற்கொள்ளக் கூடியவர்களே முதற் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்குக் கொடுக்கப்படும் வரவேற்பும், குடியேற்ற வசதிகளும், மிகுதிப்பேர் திரும்புவதைத் துரிதப் படுத்தும், அல்லது தாமதமடையச் செய்யும்.''

அண்மைக்காலத்தில் சாந்தி பாஹினியும் பங்களாதேஷ் அரசும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். தமது கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து ஏற்றுக்கொண்டால் தாம் கிளர்ச்சியைக் கைவிடவும் தயாராக உள்ளதாக, சாந்தி பாஹினியினர் தெரிவிக்கின்றனர். மேலும் இரு பகுதியினரும் நெருக்கமடைவதற்கு பங்களாதேஷ் எதிர்க்கட்சிகளும் ஒரு காரணமெனலாம். சில வாரங்களுக்கு முன், ஏழாவது சுற்றுப் பேச்சுக்கள் முடிவடைந்தபோது எதிர்க்கட்சித் தலைவர் றசீத் கான் மேனன் திரிபுராவிற்குச் சென்று பேச்சுக்களுக்குச் சக்மா போராளிகளை அழைப்பதில் வெற்றி கண்டுள்ளார். மேலும், இந்தியா—பங்களாதேஷ் உறவுகளைப் பாதிப்படையச் செய்த சில கசப்பான காரணங்களில் சக்மா அகதிகள் விவகாரமும் ஒன்றாகும். அகதிகள் எல்லோரும் நாடு திரும்பிவிட்டால், இரு நாட்டு உறவுகளும் சீரடையும் நல்ல வாய்ப்பு உண்டு.

(F)பார் ஈஸ்ரேன் எக்கனோமிக் றிவியூ,
மார்ச் 3, 1994.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தாளும் தந்திரம்

லாகூரிலிருந்து எழுதியவர்:
— அஹமட் ரஷீட் —

இரண்டாவது முறை பதவிக்கு வந்தபின், பிரதமர் பெனாசீர் பூட்டோ மாறுவாரென்ற பாகிஸ்தான் மக்களின் நம்பிக்கை வீண் போய்விட்டது. பல்வேறு பிரிவுகளையும், எதிரும் புதிருமான அரசியற் கட்சிகளையும் ஒன்றுபடுத்தி, நாட்டின் நலனை முன்னெடுத்துச் செல்வார் என நம்பியவர்கள் ஏமாந்துள்ளனர். நலிவுற்ற பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதை விடுத்து, அவர் தனது வைரியான முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் அவர்களை ஓரங்கட்டுவதிலும், உழுத்துப் போன பிரித்தாளும் சுதந்திரத்தை நடைமுறைப்படுத்துவதிலும் குறியாக உள்ளார்.

பெப்ரவரி 25 ஆம் திகதி, வட-மேற்கு மாநில முதல்வரின் ஆட்சியும், அவருடைய மந்திரி சபையும் கலைக்கப்பட்டு ஆளுநர் ஆட்சி கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த மாநில ஆட்சிப்பொறுப்பை, நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம் லீக் கட்சியும், அவாமி தேசியக் கட்சியும் கூட்டாக நிர்வகித்து வந்துள்ளன. சென்ற ஒக்ரோபர் மாதம் நடந்த பொதுத் தேர்தல்களில், இவ்விரு கட்சிகளும் இங்கு வெற்றி பெற்றுள்ளன. ஆட்சிக் கலைப்பை நிகழ்த்தியவர், பூட்டோ அம்மையார் நியமித்த பாகிஸ்தான் ஜனாதிபதி ஃபறூக் லெகாறி என்பது குறிப்பிடத்தக்கது.



பெனாசிர் பூட்டோ: ''பழைய குருடி கதவைத் திறவடி'' என்ற நிலையில், பாகிஸ்தான் பிரதமர்.

**பாகிஸ்தான்: பெனாசீர் பூட்டோ அரசியல் நடவடிக்கைகளில் ஒரு மாற்றத்தையுங் காணோம். பழைய அரசியல் விளையாட்டுக்களையே, அவர் மீண்டும் நடத்துகின்றார்**

வழமையான தனிமனித விரோத நடவடிக்கைகளே, அரசியல் என்ற பெயரில் பாகிஸ்தானில் நடத்தப்படுகின்றன என்பதற்கு, இது சான்று பகருகின்றது. ஆட்சிக்கு வந்த நாலு மாதங்களுக்குள்ளாகவே, நவாஸ் ஷெரீப்பைத் தனிப்பட்ட முறையில் தாக்குவதைத் தனது தலையாய செயலாக பெனாசீர் எடுத்துக்கொண்டது வேதனைக்குரியது. இருவருக்கிடையிலான முரண்பாடுகள் நெடுங்காலமாக இருந்து வந்துள்ளன. ஆனால் பெப்ரவரி மாத முதற் பகுதியுடன் அதிகளவிலே சூடுபிடித்துள்ளதைக் கவனிக்க முடிகின்றது. பாகிஸ்தானின் காபந்துப் பிரதமர் மோயீன் கியூறேஷி, சென்ற வருடம் கட்சித்தாவல் தடைச்சட்டமொன்றை அமுல்படுத்தியிருந்தார். இது, பாகிஸ்தான் அரசியலில் நல்லதொரு திருப்புமுனையென, பல தரப்பினராலும் வரவேற்கப்பட்டுள்ளது. ஆனால், பெனாசீர் ஆட்சிக்கு வந்தபின், இந்தத் தடைச்சட்டம் கிடப்பிற் போடப்பட்டுள்ளது. நவாஸ் ஷெரீபின் கட்சியினர், தனது பாகிஸ்தான் மக்கள் கட்சியிற் சேரும் வகை செய்யவே, பெனாசீர் இதைச் செய்துள்ளார் என்று அரசியல் அவதானிகள் நம்புகின்றனர்.

பெப்ரவரி 25 இல் நடந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கு முன் எதிர்க் கட்சியாகச் செயற்பட்ட பாகிஸ்தான் மக்கள் கட்சியினர், வட-மேற்கு மாநில அரசின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானமொன்றைக் கொண்டுவந்தனர். வாக்களிப்பு நேரத்தில், ஆட்கடத்தலும், மறைத்தலும், லஞ்ச லாவண்யங்களும், இருபகுதியினராலும் தாராளமாக நடத்தப்பட்டுள்ளன. 1989 ஆம் ஆண்டு தொடக்கம் பாகிஸ்தான் அரசியலின் சாபக்கேடு இதுதான் என்பது நாடறிந்த உண்மை. 23 ஆம் திகதி நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்களிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தபோது, கட்சி மாறிய இரண்டு முன்னாள் நவாஸ் ஷெரீப் கட்சியினர் மன்றத்துக்குள் வருவதைச் சபாநாயகர் தடைசெய்தபோது, பெரும் அடிதடியும், குழப்பமும் ஏற்பட்டதும், சட்டமன்ற நடவடிக்கைகள் யாவும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டதும் கறைபடிந்த நிகழ்ச்சிகளாகும். பின்பு மத்திய அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர் சபையை மூன்று நாள்களுக்குள் கூடும்படி கட்டளையிட்டபோது, சபாநாயகர் பணிய மறுத்து விட்டார். இதன் பின்னரே, 'ஆட்சிக் கலைப்பு' நடந்துள்ளது. பெனாசீர் பூட்டோவைத் தலைவராகக் கொண்ட பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இரண்டாவது தலைவர், பாகிஸ்தான் ஜனாதிபதி ஃபறூக் லெகாறி என்பது பெரும் இரகசியமல்ல.

பாகிஸ்தான் பத்திரிகையாளர் ஏறியா நிஸாமி பின்வருமாறு, தனது ''நேஷன்'' (Nation) பத்திரிகைத் தலையங்கத்திற் குறிப்பிட்டுள்ளார்:- ''இந்த வெட்கக் கேடான ஆட்சிக் கவிழ்ப்பு, பாகிஸ்தானில் மிகவும் நொந்து போயிருக்கும் ஜனநாயகத்திற்கு, பெனாசீர் பூட்டோ கொடுத்த பலத்த அடியாகும். ஆட்சி செய்யும் தார்மிகப் பொறுப்பை அவர் இழந்துள்ளார்.'' சிந்து மாகாண ஆட்சி, பாகிஸ்தான் மக்கள் கட்சியின் கையில் இருந்தாலும், அங்கும் அமைதியின்மைகாணப்படுகின்றது. பிரிவினைக்குப் பின், இந்தியாவிலிருந்து சென்று, இங்கு குடியேறிய உருது மொழிபேசும் முஸ்லிம்கள் இக்கட்சியை வெறுக்கின்றனர். ''முகாஜீர்'' என்று அழைக்கப்படும் இவர்களுக்கும், சிந்து மாநில மக்களுக்கும், நாற்பதுகளில் தொடங்கிய விரோதம் இன்னும் தணியாது தொடருகின்றது. பெனாசீர் பூட்டோவின் கட்சியோ, பாகிஸ்தானிற் பெரும் சக்தியாக விளங்கும் இராணுவமோ, இதைத் தணிப்பதற்கு ஒரு முயற்சியும் எடுப்பதாகக் காணோம். ஆனால், அடுத்துவரும் தேர்தல்களிற் கூடுதலான தொகுதிகளைப் பெறும் வகையில், கராச்சி நகரைக் கூறுபோட்டமை முகாஜீர்களை மேலும் ஆத்திரமடையச் செய்துள்ளது.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இளைய தலைமுறை ஆதரவாளர்கள் வேதனை அடையும் சம்பவங்களும் நடைபெறுகின்றன. மேற்சபைக்கு நடக்கவிருக்கும் தேர்தல்களுக்கு, மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட பழைய அரசியல்வாதிகளுக்குப் பெனாசீர் மீண்டும் நியமனப் பத்திரங்கள் கொடுத்துள்ளார். எதிர்காலத்தில், கட்சிக்குள் அதிருப்தியாளர்களை உருவாக்கும் நிகழ்ச்சியென இது வர்ணிக்கப் பட்டுள்ளது. அத்துடன், சகல அதிகாரங்களையும் பகிர்ந்தளிக்காது, தனது கைகளிலேயே பெனாசீர் முடக்கி வைத்துள்ளார். நாட்டின் நலனில் அக்கறை உள்ளவராக, அவர் காணப்படவில்லை; சுருங்கச் சொன்னால், முன்புவிட்ட பிழைகளையே இப்போதும் அவர் செய்து வருவது, மறைவின்றித் தெரிகின்றது.

''(F) பார் ஈஸ்ரேன் எக்கனோமிக் றிவியு,''
மார்ச் 10, 1994.

# எரிமலை எறியும் கண்ணாடிக் கற்களுக்கு புதிய உபயோகம்

*எரிமலைகள் தீக்குழம்பையும், பல்வேறு கனிப் பொருள்களையும் வெளியேற்றுகின்றன. 'ஒப்சிடியன்' எனப்படும் கருநிறக் கண்ணாடிக் கற்களும், எரிமலை வாயிலிருந்து பிறந்தவையே. ஆதி மனிதன், எரிமலைச் சுற்றாடலில் இக்கற்களைக் கண்டெடுத்து, கத்தி போன்ற ஆயுதங்களாக மாற்றி அமைத்துள்ளான் விண்வெளியிற் சஞ்சாரம் செய்யும் மனிதனுக்கும், ஒப்சிடியன் கற்கள் புதிய பணி செய்யத் தலைப்பட்டுள்ளன. சூடு காட்டும்போது, இவை இருபது மடங்கு பெருக்கின்றன என்பது புதிய கண்டுபிடிப்பு. அத்துடன், 2,000 பாகை பரனைற் சூடு தாங்கும் சக்தியும் இதற்குண்டு. ஆகையால், வீட்டுப் பாவனைப் பொருள்களிலும், விண்வெளி ஆய்வு கூடங்களிலும், சூட்டையும் நெருப்பையும் தாங்கும் தடைப்பொருளாக இது பயன்படும். அதாவது, இது ஒரு மின்தடைப் பொருள் என்பது தெளிவு. கட்டடங்களை நெருப்பிலிருந்து பாதுகாக்க, இதைப் பயன் படுத்தலாம். இப்போது இத்தேவைகளுக்கு, கூரைத்தகடுகள் செய்யும் அஸ்பெஸ்ரெஸ், உபயோகிக்கப்படுகின்றது. நிறையக் கிடைக்கும் ஒப்சிடியன், இனிமேல் பாவிக்கப்படலாம். இயந்திரங்களில் 'காஸ்கெற்' உதிரிப்பாகத்தில், அஸ்பெஸ்ரெஸ் இன்று பெரும்பாலும் பாவிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில், ஒப்சிடியன் இந்த இடத்தைப் பிடித்துவிடுமென்பதிற் சந்தேகமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆப்கானிஸ்தான்:

# உள்நாட்டுப்போர், மக்களின் பட்டினிச் சாவரை சென்றுள்ளது.



ஹெக்மத்தியாரும் தாங்கள் வைத்திருக்கும் இராணுவ உதவியுடன் தனித்தனியாகப் போராடி வருகின்றனர். புர்கானுடீன் றபானியும், அவருடைய தளபதி அகமத் ஷாமசூத் என்பவரும் காபுல் நகரைத் தமது பிடியில் வைத்திருந்தாலும், பிரதமர் குல்புடீன் ஹெக்மத்தியாரின் படைகள் இடைவிடாது எறிகணைத் தாக்குதல் நடத்திய வண்ணமே இருக்கின்றன. அங்கிருந்த உணவு வகை யாவற்றையும் தளபதி மசூத்தின் படைகள் கைப்பற்றியுள்ளன. பொது மக்களுக்கு யாதொரு உணவும் பங்கிட்டுக் கொடுபடவில்லை. அத்துடன் 50,000 மக்கள் உறைவிடம் இன்றித் தவிக்கின்றனர். பெருந்தொகையான மக்கள் நகரை விட்டு வெளியேறி உள்ளனர். பெரும்பாலானோர் தலைநகருக்கு 80 கிலோ மீற்றர் அப்பால் உள்ள ஜலாபாத் நகரில் பெருந் தொகையான கூடாரங்களில் அடைக்கலம் புகுந்துள்ளனர். தலைநகரின் முக்காற் பங்குக் கட்டடங்களும், மாளிகைகளும் தரை மட்டமாகி விட்டன. செய்வதறியாது சித்தங் கலங்கிய சிறிய தொகை மக்களும், போராளிகளுமே காபுலிற் காணப்படுகின்றனர். கடும் உறைபனி பெய்துகொண்டிருக்கின்றது. நிலைமை இதற்குமேல் மோசமடைய இடமில்லை என்று சொல்லலாம்.

இன்று ஆப்கானிஸ்தான் நாட்டில் நடக்கும் உள்நாட்டுப் போர் தலைநகர் காபுல் எல்லையைக் கடந்து மத்திய ஆசிய நாடு உஸ்பெக்கிஸ்தான் வரை சென்றுள்ளது. இந்த நாடு ஆப்கானிஸ்தானின் வடக்கெல்லையில் இருக்கின்றது. நிலைமையை மோசம் அடையச் செய்ய தஜிக் இனத்தவர்களுக்கும், உஸ்பெக் இனத்தவர்களுக்கும் இடையிலுள்ள போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. காபுல் தலைநகரில் தமது அதிகாரத்தை நிலைநாட்ட, சென்ற 12 வாரங்களாக ஜனாதிபதி றபானியும், பிரதமர்

பல்வேறு அமைதித் திட்டங்களின் வருகையையும், அவை விரைவில் தூக்கி எறியப்பட்டதையும் ஆப்கானிஸ்தான் மக்கள் கண்டுள்ளனர். ஒற்றுமை என்றால் என்ன என்று அறியாத முஜாகெடின் போராளிகளை ஒன்றுபடுத்தியது சோவியத் ருஷ்யாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNNAKAM BRANCH



வருகை ஒன்றுதான். அவர்கள் துரத்தப்பட்டதும் அமெரிக்கா கொடுத்த ஆயுதங்களுடன் மீண்டும் தமக்குள் போராடத் தலைப்பட்டுள்ளனர். ருஷ்ய ஆயுதங்கள் இப்போரில் உதவுகின்றன. ருஷ்யாவை விரட்டுவதில் பெயரளவில் முஸ்லிமான றசீத் டொஸ்ரம் என்ற உஸ்பெக் இனத்தலைவனுக்குப் பெரும் பங்கு உண்டு. தொடக்கத்தில் நஜிபுல்லா அரசை ஆதரித்த இவன் பின்பு தனது இனப்போராளிகளுடன் சோவியத் ருஷ்யாவுக்கு எதிராகக் கட்சி மாறியுள்ளான். றபானி தனது மந்திரி சபையில் டொஸ்ரமுக்கு இடம் கொடுக்கத் தவறியபோது கடுஞ் சீற்றங் கொண்டு றபானியின் பரம வைரியாக மாறியுள்ளான். இவன் இப்போது 80,000 எண்ணிக்கையான தனது துருப்புக்களுடன் பிரதமர் ஹெக்மத்தியார் பக்கம் இணைந்துள்ளான். ஜெனரல் டொஸ்ரமுடன் அவனுடைய உஸ்பெக் இனத்தவர்களை விட இஸ்மைலி இனப் பழங்குடியினரும் கூட்டாகச் செயற்படுகின்றனர். பிரதமர் ஹெக்மத்தியாருடைய படைகள் பெரும்பாலும் பாதன் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர் ஓர் இஸ்லாமிய அடிப்படைவாதி ஆப்கானிஸ்தானில் திருக்குர் ஆன் வழி அரசை ஏற்படுத்தப் போராடி வருகின்றார். இப்படியான ஒருவருடன் யுத்தத்தைத் தனது தொழிலாகவும், மதத்தை ஒரு கருவியாகவும் கொண்ட டொஸ்ரம் இணைவதற்குப் பல பின்னணிக் காரணங்கள் உள்ளன.

முன்பு மந்திரி சபையில் இடம் கிடையாததால் டொஸ்ரம் சீற்றங் கொண்டதைக் குறிப்பிட்டோம். இதைவிட மிகவும் ஆழமான சர்வதேசப் பின்னணியும் உண்டு. காபுல் நகரிலிருந்து யுத்தம் வடக்குப் பிரதேசத்தை அணுகியதற்கும் இதுவே காரணம். ஆப்கானிஸ்தானின் வடபகுதியைத் தனது கட்டுப்பாட்டிற் கொண்டு வருவதுதான் டொஸ்ரமின் பிரதான நோக்கம். இதற்கு ருஷ்யா, உஸ்பெக்கிஸ்தான், துருக்கி, ஈரான் போன்ற நாடுகளின் பூரண ஆதரவு இவனுக்கு உண்டு. இந்த உயிர் கொல்லும் சதுரங்க விளையாட்டில் ஒவ்வொரு நாடும் தனது தனித்தனிக் காரணங்களுக்காக இந்தத் தொழில்சார் இராணுவத் தலைவனை ஆதரிக்கின்றனர்.

மறைந்த சோவியத் ருஷ்யாவின் அடிவயிற்றுப் பிரதேசம், ஆறு குடியரசுகளாகப் பிரிந்துள்ளன. இந்த நாடுகளில் உள்ள சிறுபான்மை, பெரும்பான்மை இனங்களைப் போன்றவர்கள் ஆப்கானிஸ்தானிலும் காணப்படுகின்றனர். ஆப்கானிஸ்தானில் நடக்கும் போராட்டங்களில் அவர்களுக்கு நேரடித் தொடர்பு இல்லாவிட்டாலும் உணர்ச்சி பூர்வமான ஈடுபாடு உண்டு. இந்த ஆறு நாடுகள் சிலவற்றில் அரசியல் மாற்றத்தை விரும்பிப் போராடும் இனங்களின் செயலகம் ஆப்கானிஸ்தான் மண்ணிற் காணப்படுகின்றன. உதாரணத்திற்கு:-ஆறு நாடுகளில் ஒன்றான தஜிக்கிஸ்தானை எடுத்துக்கொள்வோம். இங்கு ருஷ்யா தனக்குச் சாதகமான அரசை நியமித்துள்ளது. அத்துடன் ருஷ்யப் பொதுநலவாய நாடுகளின் பங்காளன் Partner Russian Commonwealth) என்ற முறையில் இந்த அரசைப் பாதுகாக்கும் பொறுப்பையும் ஏற்றுள்ளது. இங்கு தஜிக் இனத்தின் ஒரு பிரிவினர் இந்த அரசுக்கெதிராகப் போராடி வருகின்றனர். இந்தப் பிரிவினர் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பிரிவினரின் தலைமைச் செயலகம் ஆப்கானிஸ்தானிலும், ஈரானிலும் காணப்படுகின்றது. றபானியும், மசூதும் தஜிக் இனத்தவர்கள். தஜிக் இனப் பிரிவினருடன் கூட்டுச் சேர்ந்து ஒரு பரந்த தஜிகிஸ்தானை நிறுவுவது இவர்களின் நீண்டகாலத் திட்டமாகும். டொஸ்ரமின் கை வடக்கில் ஓங்கினால் இத்திட்டம் தவிடு பொடியாகும். டுசான்பியில் உள்ள அரசும், மொஸ்கோவில் உள்ள அரசும் கூட்டாக டொஸ்ரமுக்கு உதவுவது இக்காரணம் கொண்டே. ருஷ்யாவின் முன்னாள் எதிரியாகிய டொஸ்ரம் இப்போது செல்லப் பிள்ளையாகி விட்டான். அரசியலில் நண்பனும் இல்லை; எதிரியும் இல்லை என்பது முதற்பாடம்.

ருஷ்யா தனது 25,000 துருப்புக்களைத் தஜிகிஸ்தான் பாதுகாப்பிற்கு என உறைபனி நிறைந்த தஜிக்-ஆப்கான் எல்லையில் நிறுத்தியுள்ளது. ஆப்கானிஸ்தானின் வடக்குப் பிரதேசம் டொஸ்ரமின் கட்டுப்பாட்டில் வந்தால் ருஷ்யத் துருப்புக்களுக்கு ஓய்வு கிடைக்கும் என்பது ருஷ்யாவின் எதிர்பார்ப்பு. இனி உஸ்பெக்கிஸ்தானை எடுத்துக்கொள்வோம். ஆப்கானிஸ்தானில் நடந்து கொண்டிருக்கும் உள்நாட்டுப் போரில் தஜிக் இனத்தவர்களும், உஸ்பெக் இனத்தவர்களும் பங்கு கொண்டிருப்பது நாம் அறிந்ததே. இந்த இனப்போர் தனது நாட்டிற்கு வரக்கூடாதென்பது உஸ்பெக்கிஸ்தானின் கவலை. இந்த நாட்டில் 5 சத வீதமானோர் தஜிக் இனத்தவர்கள். அதேபோன்று தஜிகிஸ்தானில் 23 சத வீதத்தினர் உஸ்பெக் இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆப்கானிஸ்தானில் நடக்கும் இனப்போர் தஜிகிஸ்தான்-உஸ்பெக்கிஸ்தான் நல்லுறவைப் பாதிக்கக்கூடாதென்பதில் ருஷ்யா மாத்திரமல்ல இவ்விரு நாடுகளுமே கவனமாய் இருக்கின்றன.

துருக்கி, ருஷ்யா மேற்கூறிய இரு குடியரசுகள் எல்லாவற்றுக்கும் பிறிதொரு பொதுவான குறிக்கோள் இருக்கின்றது, ஹெக்மத்தியாரின் மதத் தீவிரவாதம் டொஸ்ரமின் இணைப்பால் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். பிரதமர் ஹெக்மத்தியாரின் சார்பில் டொஸ்ரமின் வெற்றிகள் அவருடைய அடிப்படைவாதத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் என்பது இந்த நாடுகளின் நம்பிக்கை. ஈரான் ஒரு சியாபிரிவைச் சேர்ந்த இஸ்லாமிய நாடு. ஹெக்மத்தியார் சன்னி இஸ்லாமியப் பிரிவைச் சேர்ந்தவர். டொஸ்ரம் தலைதூக்கினால் சன்னிப் பிரிவு இஸ்லாம் மழுங்கிவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA



என்பது ஈரானின் திட்டம். ஆகவே ஒவ்வொரு நாடும் தனது தனிப்பட்ட சுயநலக் காரணங்களுக்காக டொஸ்ரம் ஆதரவாளர்களாக மாறியுள்ளனர்.

போரில் எவ்வாறு டொஸ்ரம் செயற்படுகின்றான் என்பதைப் பார்வையிடுவோம். பெப்ரவரி 28 ஆம் திகதி மசாரி சரிப் முகாமிலிருந்து தனது துருப்புக்களுடன் வட-கிழக்குப் புறமாக நகர்ந்து அங்குள்ள ''குண்டூஸ்'' நகரைத் தாக்கிக் கைப்பற்றியுள்ளான். இந்த நகரைப் பாதுகாத்த மசூத் பெருந் தோல்வி அடைந்தார். ஆனால் மார்ச் 10 ஆம் திகதி அளவில் மசூத் தனது படைகளைத் திரட்டிக்கொண்டு பதில் தாக்குதல் நடத்தி டொஸ்ரமை விரட்டி அடித்துள்ளார். டொஸ்ரமின் 400 துருப்புக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இன்னும் 500 ஐ மசூத் கைது செய்துள்ளார். டொஸ்ரம் தாக்குப்பிடிக்க முடியாமல் மசாரி சரிப் முகாமுக்குப் பின்வாங்கியுள்ளான். இந்த முகாமையும் தாக்குவதற்கு மசூத் ஆயத்த நிலையில் உள்ளார். டொஸ்ரம் இப்போது தோல்வியைத் தழுவும் நிலையில் உள்ளான். ஆனால் மேற்குலக இராஜதந்திரி ஒருவரின் பார்வையில் டொஸ்ரம் தோல்வி அடைய ருஷ்யாவும், உஸ்பெக்கிஸ்தானும் ஒரு போதும் கைவிடப்போவதில்லை. தேவையேற்படின் உஸ்பெக்கிஸ்தான் விமானத் தளத்திலிருந்து கிளம்பும் யுத்த விமானங்கள் ஆப்கானிஸ்தானிலுள்ள மசூத்தின் நிலைகள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தி அழிக்கக் கூடுமென அவர் ஆரூடம் கூறியுள்ளார்.

டொஸ்ரமின் படைகளில் ஆப்கானிஸ்தானின் இஸ்மைலி இனத்தவர்களும் இணைந்திருக்கின்றனர். இந்த இஸ்மைலி இனத்தவர்கள் கோர்னோ படக்சான் குடியரசில் தமக்கென ஒரு நாட்டை அமைக்கும் போரில் சில வருடங்களாக ஈடுபடுகின்றனர். ஆகையினால் இன்று ஆப்கானிஸ்தானில் நடக்கும் போரை ஓர் உள்நாட்டுப் போர் என வர்ணிப்பது பொருத்தமல்ல. ஆப்கானிஸ்தானையும், மத்திய ஆசிய நாடுகளையும் பிரித்து வைத்த பனிப்பாறைகள் நிறைந்த மலைப்பிரதேசம் தொடர்ந்தும் தடையாக இருக்கப் போவதில்லை.

இதற்கிடையில் ஐநாவையும், குறிப்பாக அமெரிக்காவையும் நேட்டோ நாடுகளையும் இந்தப் படுகுழியில் இழுத்துவிடும் நடவடிக்கையில் ருஷ்ய ஆதரவுடன் உஸ்பெக் பிரதமர் அப்துல் ஜலீல் சாமடோவ் பல பிரயாணங்களை மேற்கொண்டு வருகின்றார். ''மத்திய ஆசியாவின் சகல முரண்பாடுகள், சவால்கள் யாவும் தஜிக்கிஸ்தானிற் காணப்படுகின்றன'' என்று அவர் நியூயோர்க் நகரிற் கூறியுள்ளார். அதே சமயத்தில் தனது அரசுக்கு எதிராகப் போராடும் தஜிக் இன மதத் தீவிரவாதிகளுடன் தான் பேசவும் தயரெனக் கூறியுள்ளார். ஆனால டொஸ்ரமினின் அண்மைக்காலத் தோல்விகள் தஜிக் போராளிகளின் கையோங்கியதையே காட்டுகின்றது. இதனால் தான் டொஸ்ரமின் வெற்றியில் ருஷ்யாவின் ஆதரவுடன் பதவியில் இருக்கும் உஸ்பெக் அரசு இவ்வளவு அக்கறை காட்டுகின்றது.

பல நூற்றாண்டுகளாக ஒரு வல்லரசாலும் அடக்க முடியாத உன்னதமான வரலாறு கொண்ட நாடு ஆப்கானிஸ்தான். இன்று தன் வினையாலே அது மெல்லச் செத்துக்கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். இனவெறியும், மதவெறியும், எல்லை நாடுகளின் சதியும் ஆப்கானிஸ்தானைச் சின்னபின்னமாக்குகின்றன. ஐநாவும், சர்வதேசச் செஞ்சிலுவை அமைப்பும் செய்யும் சிறிதளவு உதவியைக் கூடத் தடைசெய்யும் அளவுக்குப் போர்வெறி சென்றுள்ளது.

'',ரைம்'' மார்ச் 28, 1994,
(எவ்) பார் ஈஸ்ரேன் எக்கனமிக் றிவியு 37 /03/ 1994

---

தென்கிழக்காசியா

## பொருளாதார வளர்ச்சிப் பிரதேசம்:

*மலேசியா - பிலிப்பைன்ஸ் அரசுகள் நெருங்கிவரத் தொடங்கியுள்ளன. இதன் காரணமாக, இந்தோனேசியா, புரூனி ஆகிய நாடுகளும் கூட்டாகச் சேர்ந்து கிழக்கு ஆசியன் பிரதேசம் ஒன்றை நிறுவும் முன்வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. இந்த வளர்ச்சிப் பிரதேசம் தெற்குப் பிலிப்பைன்ஸ். கிழக்கு மலேசியாவின் சாபா, சறவாக், இந்தோனேசியத் தீவுகளான சுலவேசி, மொலுக்காஸ் மற்றும் புரூனியை அடக்கியிருக்கும். இந்த அடிப்படையில் வெகு விரைவில் ஒரு முதற்கட்ட ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தான் :

## பாகிஸ்தானுக்கும், ஆப்கானிஸ் தானுக்குமிடையில் நல்லுறவுகள் கசப்படைந்து, மோதல் நிலையை நெருங்கி விட்டன.



சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான போரில், அமெரிக்கா புரிந்துள்ள உதவி யாவும் பாகிஸ்தான் மூலமாகவே ஆப்கானிஸ்தான் சென்றடைந்தன. பாகிஸ்தான் அண்டை நாடான ஆப்கானிஸ்தானுக்கு இவ்வாறு உதவியதுடன், 3 மில்லியன் ஆப்கான் அகதிகளையும் தனது எல்லைக்குள் வைத்துப் பராமரித்துள்ளது. சோவியத் ருஷ்யா வெளியேறிய பின் ஆப்கானிஸ்தான் விவகாரங்களில் ஒரு மேலாதிக்க நிலையைத் தக்க வைத்துக் கொள்வதற்காகப் பாகிஸ்தான் எடுத்த முயற்சிகளெல்லாம் தோல்வியில் முடிந்துள்ளன. சோவியத் ருஷ்யா எதிர்ப்பு யுத்தத்தில், பாகிஸ்தானிய உதவிகளையும், வழிகாட்டலையும் ஏற்ற முஜாகுடீன் போராளிகள், இப்போது பாகிஸ்தானை உதாசீனம் செய்ய ஆரம்பித்துள்ளனர். பல உட்பிரிவுகளாகப் பிரிந்து, உள்நாட்டுப் போரில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் குறியுடன் போராடும் இவர்கள், பாகிஸ்தானின் மத்தியஸ்தத்தை ஏற்க மறுத்துள்ளனர். அத்துடன், பாகிஸ்தான் பக்கச் சார்பாக நடப்பதாகவும் குற்றஞ் சுமத்த ஆரம்பித்துள்ளனர்,

இத்தனைக்கும் சிகரம் வைத்தாற்போல், இவ்வருடம் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி, ஒரு பேருந்து நிரம்பிய பாகிஸ்தானியப் பள்ளிச் சிறுவர்களை, பாகிஸ்தான் மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தே ஆப்கான் போராளிகள் கடத்தியுள்ளனர், இந்தச் சிறுவர்களை விடுவிப்பதாயின், 2 மில்லியன் டொலர் பணமும், தமது நாட்டவர்களுக்கு உணவும் தரவேண்டும் என, இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இறுதியில், பாகிஸ்தான் அதிரடிப் படையினர் தாக்குதல் நடத்தி, கடத்தற்காரர் அனைவரையும் கொன்றுள்ளனர். சிறுவர்கள் எல்லோரும் காயமேதுமின்றித் தப்பிவிட்டனர். முதன் முறையாகப் பாகிஸ்தானிய நிலப்பரப்பில் இப்படியொரு சம்பவம் நடைபெற்றமை, எல்லைக்கு இருபுறமுள்ள நாடுகளிலும் சினத்தையும் வேதனையையும் கிளப்பியுள்ளது. ஒரு மில்லியனுக்கு மேலான ஆப்கான் அகதிகள், இன்னும் பாகிஸ்தான் மண்ணில் இருக்கிறார்கள், இவர்களுக்கெதிராக, பாகிஸ்தான் பொதுமக்கள் பெருங் கண்டனப் பேரணியை நடத்தியுள்ளனர். பாகிஸ்தான் அரசோ, தனது பங்கிற்குத் தனது நாட்டின் நுழைவாயில்களை அடைத்து, ஆப்கான் அகதிகள் உட்புகாமல் தடுக்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ஆனால், ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் பாகிஸ்தான் எதிர்ப்புச் சக்தியானது, அங்குள்ள பாகிஸ்தானியத் தூதரகத்தை நொருக்கியபின், கொளுத்துவதிலும், தூதரக அதிகாரிகளை நையப்புடைப்பதிலும் வெளிக்காட்டப்பட்டுள்ளது. இச்சம்பவம், பெப்ரவரி 23 ஆம் திகதி நடைபெற்றது. அடுத்த நாள், பாகிஸ்தானைக் கண்டிக்கும் பல பேரணிகள் மேலும், நடத்தப்பட்டன. இதன் காரணமாக, பாகிஸ்தான் தனது தூதரக அதிகாரிகளைத் திருப்பி அழைத்துள்ளது. பெப்ரவரி 25 ஆம் திகதி, பாகிஸ்தானுக்கு வர எத்தனித்த ஆப்கான் அகதிகளைத் தடுத்த பாகிஸ்தான் பொலிசார் மீது, ஆப்கான் திசையிலிருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் அசெப்அலி, ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி புர்கானுடன் றபானிக்கும், பிரதமர் குல்புடீன் ஹெக்மத்தியாருக்குமிடையில் நடக்கும் உள்நாட்டுப் போரில், தனது நாடு இருவரில் ஒருவரையும் பிரத்தியேகமாக ஆதரிக்கவில்லையென்று கூறியுள்ளார். ஒருசில மாதங்களில் 1,200 -க்கு மேற்பட்ட உயிர்களைக் குடித்த இந்தப்போர் நிறுத்தப்படவேண்டுமென்றும், அவர் தெரிவித்துள்ளார். ஆனால், அசெப் அலி, றபானியின் தளபதி மசூத் என்பவர் தான் தூதரகத் தாக்குதலுக்குப் பொறுப்பென்று உத்தியோகப் பற்றற்ற முறையில் தெரிவித்துள்ளார். இதே தளபதி மசூத், தனது நாட்டு உள் விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுவதாகவும், பாகிஸ்தானின் உளவுத்துறை ஆப்கான் பிரதமருக்கு உதவுவதாகவும், அண்மையிற் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

ஐ. நா. பொதுச் சபையில் காஷ்மீரில் இந்தியாவின் மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கும் தீர்மானத்தைப் பாகிஸ்தான் கொண்டுவந்த போது, றபானி இந்தியாவுடன் அணிசேர்ந்து, அதைத் தோற்கடிக்க உதவியுள்ளார். மேலும் ஹெக்மத்தியாரின் துருப்புக்கள், இந்தியாவுக்கெதிரான போரில் காஷ்மீர்த் தீவிரவாதிகளுக்கு உதவுகின்றன. ஆகையால், ஆப்கானிஸ்தான் உள்நாட்டுப்போர் இன்று எல்லை கடந்து சென்று விட்டது என்பது கண்கூடு. நடுநிலை வகிப்போர், பாகிஸ்தானின் முப்படை உளவு அமைப்பு ஐ. எஸ் ஐ. நிறுவனத்தையே, ஆப்கானிஸ்தானில் நடக்கும் உள்நாட்டுப் போருக்கான காரணிகளிலொன்று எனக் கூறுகின்றனர். இவர்கள், 1980 - களில் தொடங்கி ஹெக்மத்தியாருக்கு ஆதரவாக இயங்கியதால், குழுக்களுக்கிடையில் ஓர் இணக்கத் தீர்வைக் கொண்டுவர முடியவில்லை என்றும் சொல்லப்படுகின்றது. இவையெல்லாவற்றையும், பாகிஸ்தான் ஒட்டுமொத்தமாக மறுத்துள்ளது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் தனது நம்பகத் தன்மையை இழந்துவிட்டாலும், குழுக்களுக்கிடையில் நல்லுறவையும், நாட்டில் அமைதியையும் கொண்டுவரும் தகைமை, இந்த நாடொன்றுக்கே உண்டு. இதைத் தீர்த்து வைப்பதும், பாகிஸ்தானுக்கு அத்தியாவசியம். பாகிஸ்தான் மக்களுக்குத் தேவையான உணவும், வேறு அத்தியாவசியப் பொருள்களும் பெருமளவில் ஆப்கானிஸ்தானுக்குக் கடத்தப்படுவதால் பாகிஸ்தானில் நித்திய பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன், எல்லையில் வளர்ந்துள்ள தொல்லை, பாகிஸ்தானுக்குப் பெருஞ் சுமையாக வாய்த்துள்ளது.

எழுதியவர்: அகமட் றஷீட்.

(F) பார் ஈஸ்ரேன் எக்கனோமிக் றிவியூ,

மார்ச், 10, 1994.

---

**இந்தோனேசியா:** 

## பங்கு வியாபார நிறுத்தம்

இந்தோனேசியாவின் மூன்றாவது பெரிய சிகரட் கொம்பனி நியூயோர்க் பங்குச் சந்தையில் விற்பனைக்கு விட இருந்த 150 மில்லியன் டொலர் பெறுமதியான தனது பங்குகளைத் தடுத்து வைத்துள்ளமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று இந்த ரக சிகரெட்டின் விற்பனை அண்மைக் காலத்தில் வீழ்ச்சி அடைந்துள்ளது. இரண்டாவதாக இப்பெரிய வியாபாரம் நாடு கடந்து போவதை அதிகாரிகள் விரும்பவில்லை. இப்போது தனியார் துறையில் கடனாகப் பெறும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசியா: சாபா

# மாகாணத்திற்கு, ஜோசப் பாயிறின் கிற்றின்கன் அவர்கள் மீண்டும் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



தேர்தலில் வாக்களிக்கும் பழங்குடிப் பெண்மணி.

எழுதியவர்:
கோலாலம்பூரிலிருந்து
— மைக்கல் வற்றிக்கியோரிஸ் —

மலேசியக் கூட்டாட்சி, மலாயா, சாபா (வடக்கு போர்னியோ) சறவாக் ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும். மலாயாத் தீபகற்பத்திற்கும், சாபா, சறவாக் ஆகிய பகுதிகளுக்கும் இடையில் தென் சீனக் கடல் இருக்கின்றது. இக்கடல், 600 கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டதாகும். அண்மைக் காலத்தில், சாபாவிற் பெரும்பான்மை இடங்களை வைத்திருக்கும் பாயிறின் அவர்களுடைய ஒருங்கிணைந்த சாபாக் கட்சிக்கும், மலேசியாவில் அதிகாரத்திலிருக்கும் பிரதமர் மகதீர் முகம்மது அவர்களுடைய ஆட்சிக்குமிடையில், மிக மோசமான கருத்து மோதல்கள் நிலவுகின்றன. இந்த நிலைக்கு, இன, மத வேற்றுமைகளே பிரதான காரணிகளாகும்.

முதல்வர் பாயிறின் அவர்கள், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். மலேசிய அரசு, தன்னை ஒரு முஸ்லிம் நாடு என இனங்காட்டி வருகின்றது. ஒருங்கிணைந்த சாபாக் கட்சியிற் பெருமளவு முஸ்லிம்கள் இருந்தாலும், அதன் தலைமைப்பீடம் கிறிஸ்தவர் கையில் இருக்கின்றது என்று கட்டிக் காட்டப்படுகின்றது. இக்கட்சிக்கு எதிரணியாகப் போட்டியிட்ட தேசிய முன்னணி, தனது தேர்தற் கூட்டங்களில், முஸ்லிம்களைக் கிறிஸ்தவத் தலைமையுள்ள கட்சியிலிருந்து விலகி, தமக்கு வாக்களிக்கும்படி கேட்டுள்ளது. இந்த யுக்தி, ஓரளவு வெற்றியளித்துள்ளது. 1985 இல் நடந்த தேர்தலில், பாயிறின் அவர்களுடைய கட்சிக்கு, சாபாவின் வாக்காளர் தொகையில் 53·9 சதவீதம் கிடைத்துள்ளது. ஆனால், சென்ற ஜனவரியில் நடந்த தேர்தலில் இது 48·7 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. மத்திய அரசு, தேர்தலின் பின் இந்த வீழ்ச்சி, தான் ஆதரித்த தேசிய முன்னணிக்கு ஒரு தார்மிக வெற்றியென்றும், சாபா மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர் என்றும் கூறிவருகின்றது. இதற்குப் பதில் கொடுக்கும் முகமாகப் பாயிறின் அவர்களுடைய கட்சி, அரசு மீது பின்வரும் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தியுள்ளது:- வாக்காளர் மத்தியிற் பெருந்தொகைப் பணம் செலவு செய்யப்பட்டதென்றும், வாக்காளர்களைக் கவர வேறு பல மோசமான, தேர்தல் சட்டத்திற்குப் புறம்பான குற்றங்கள் புரியப்பட்டன என்றும், அது அறிக்கை விடுத்துள்ளது. தேசிய முன்னணிக்குக் கிடைத்த 23 தொகுதிகளும், பணம் கொடுத்தே வாங்கப்பட்டனவென்று பாயிறின் தெரிவித்துள்ளார். அவர் சொல்கிறார்:- '' உலங்கு வானூர்திகளிலிருந்து பணம் வீசப்பட்டுள்ளது.'' இதை ஆமோதிக்கும் விதத்தில், தேசிய முன்னணியின் மூத்த தலைவர்களிலொருவர்; ''இத் தேர்தலிற் பணம் பெரும் பங்கெடுத்துள்ளது'' என்று கூறியுள்ளார்.

மலேசியாவின் உப - பிரதமர் சேறி அன்வர் இப்றஹிம் இத்தேர்தலில் தேசிய முன்னணியின் சார்பிற் பெரும் பங்கெடுத்துள்ளார். இவர், மலே இனத்தவர்கள் மத்தியிலும், முஸ்லிம்கள் மத்தியிலும் இன மத உணர்ச்சியைத் தூண்டுவதில் வெற்றி கண்டுள்ளார். பாயிறினுடைய ஒருங்கிணைந்த சாபாக் கட்சிக்கு, 1985 இல் மூன்றில் இரண்டு அறுதிப் பெரும்பான்மை கிடைத்துள்ளது. இவ்வருடம் நடந்த தேர்தல்களில், ஒன்பது தொகுதிகளைத் தேசிய முன்னணியிடம் அது இழந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது, அன்வர் இப்ரஹிமுக்குக் கிடைத்த வெற்றியென்று சொல்லப்படுகின்றது. இத்துடன் சாபா மாகாணத்தில் 1 மில்லியன் அத்துமீறிக் குடியேறிய வெளிநாட்டவர்கள் இருக்கின்றனர். இவர்களிற் கணிசமான தொகையினரின் விபரங்கள், இறுதி நிமிடத்தில் வாக்காளர் இடாப்பிற் சேர்க்கப்பட்டுள்ளன. தேசிய முன்னணிக்கு வாக்களித்தால், மலேசிய அடையாள அட்டைகள் தரப்படுமென்று இவர்களுக்கு உறுதிமொழி அழிக்கப்பட்டதால், இவர்களிற் பலர் தேசிய முன்னணிக்கு வாக்களித்துள்ளனர். சில தேர்தல் தொகுதிகளில் 6,000 த்திற்த மேற்பட்ட வாக்காளர் பெயர்கள் இறுதி நிமிடத்திற் சேர்க்கப்பட்டுள்ளன. தேசிய முன்னணியின் பிரதான அங்கமான உம்னோ கட்சியின் தலைவரொருவர், ''எங்கள் ஆதரவாளர்களிற் பலர், முன்பு வாக்காளர் இடாப்பில் இடம் பெறாதவர்கள்'' என்று ஒத்துக் கொண்டு உள்ளார்.

சாபாவின் பிரதான இனமான கடசான் டுசன் இனத்தவர்கள், என்றும் போல் ஒருங்கிணைந்த சாபாக் கட்சிக்கே வாக்களித்துள்ளனர். இவர்கள், கிறிஸ்தவ மதத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. சாபாவின் கிழக்குக் கரை, தென் மேற்குப் பகுதி வாழ் முஸ்லிம்கள், இம்முறை தேசிய முன்னணியின் உம்னோவுக்கு வாக்களித்துள்ளனர். சாபாவின் சனத்தொகையிற் காற்பங்கு வசிக்கும் சீன இனத்தவர்கள், இம்முறை தம் ஆதரவைத் தேசிய முன்னணிக்கு நல்கியுள்ளனர். பாயிறின் கட்சியின் முக்கியஸ்தர்கள் மூவர், தேசிய முன்னணியின் வேட்பாளர்களாக மாறி, தேர்தலில் வெற்றியும் ஈட்டி உள்ளனர்.

1985 இல், மூன்றில் இரண்டு அறுதிப் பெரும்பான்மையுடன் தேர்தலில் வென்றாலும், சாபாவின் ஆளுநர், தோல்வி கண்டவரையே முதல்வர் பதவியை ஏற்கும்படி அழைத்துள்ளார். பின்பு, தலைநகர் கோலாலம்பூருக்கு மனுச் செய்யப்பட்டு, அங்கிருந்து உத்தரவு கிடைத்த பின்பே, பாயிறின் பதவியேற்க முடிந்தது. இம்முறையும், ஆளுநர் மாளிகை முன் பாயிறின் 36 மணித்தியாலங்கள் தவமிருந்த பின்பே, இவருக்குப் பதவியேற்கும்படி அழைப்புக் கிடைத்துள்ளது.

இந்த இடைவெளியை, ஒருங்கிணைந்த சாபாக் கட்சிப் பிரதிநிதிகளை விலை கொடுத்து வாங்கும் முயற்சிகளுக்குத் தேசிய முன்னணி பயன்படுத்தியதாகவும், இதில் தோல்வி கண்டபின்பே, பாயிறினுக்கு அழைப்பு விடப்பட்டதென்றும், செய்திகள் தெரிவிக்கின்றன. மீண்டும் நிலைநிறுத்த முடியாதளவுக்கு, இனங்களுக்கிடையிலான நல்லுறவுகள், சாபாவில் இந்தத் தேர்தலுடன் பாதிக்கப்பட்டுள்ளன என்று சொன்னால் மிகையாகாது. இதற்கு, மத்திய அரசும் பெருமளவு பொறுப்பு என்று சொல்ல, நிறைய இடமுண்டு.

(F) பார் ஈஸ்ரேன் எக்கனோமிக் றிவியூ
03, மார்ச், 1994

## இரைச்சலை ஒழிக்கும் கருவி

இனி, போக்குவரத்து இரைச்சல், அயலவர்களின் சந்தடி, தொலைக்காட்சியின் அலறல் போன்றவற்றினாற் குழப்பப்படாமல் உறங்கலாம்; ஓய்வெடுக்கலாம்; அல்லது புத்தகம் வாசிக்கலாம்; அல்லது மயான அமைதியைப் போக்கி, இனிய இயற்கை ஒலிகளைக் கேட்டுக் கொண்டிருக்கலாம். இத்தனையையும் சாத்தியமாக்குவது, ''மர்சோனா 1250'' என்ற ஒலிக் கட்டுப்பாட்டுக் கருவியாகும். (Sound Conditioner) இக்கருவி, 10 விதமான இயற்கை ஒலிகளைக் கொண்டு, இரைச்சலைத் திறமையாக மறைக்கிறது. பறவைகள் பாடும் ஒலி, கூரையில் மழை பெய்யும் ஒலி, கடல் அலைகளின் ஒலி, ஆறுபாயும் ஒலி, சில் வண்டின் ஒலி போன்றவை பயன்படுத்தப்படும் 10 ஒலிகளுட் சிலவாகும். இக்கருவி 9 அங்குல நீளமும், 6 அங்குல அகலமும், 3 அங்குல உயரமும் உடையது என்பதுடன், மேசைகளில் இலகுவாகப் பொருத்தப்படக் கூடியதும் ஆகும். உற்பத்தியாளரினால், ஒரு வருட மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. விலை – 149.95 டொலர். சிறிய பிரயாணங்களின் போது எடுத்துச் செல்லக் கூடிய மர்சோனாவின் விலை – 99.95 டொலர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடலுக்கு ஆரோக்கியம்!**
**பனை வளத்தின் மகிமை!!**

*இயற்கை அன்னை அள்ளி வழங்கும் மூலவளங்களைக் கொண்டு நவீன முறையில் தயாராகும் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள்.*



- ★ பனை வெல்லம்
- ★ பனம் பாகு
- ★ கல்லாக்காரம்
- ★ பனாட்டு
- ★ கைவினைப் பொருள்கள்
- ★ குளிர்பான வகைகள்
- ★ பாடசாலை உபகரணங்கள்

எதுவானாலும் சரி

சங்க உற்பத்திப் பொருள்களையும், ஏனைய நுகர்வுப் பொருள்களையும் நிகரில்லாத் தரத்தில் பெறுக . . .

**மானிகோப் (1)**
பிரதான வீதி,
மானிப்பாய்,

**மானிகோப் (2)**
கட்டுடை,
மானிப்பாய்.

**மானிகோப் (3)**
சுதுமலை,
மானிப்பாய்.

## மானிப்பாய் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பிரதான வீதி ★ மானிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம்! நிரந்தரம்!!

"இன்றைய அறிமுகம் நாளைய நாகரிகம்"

முகூர்த்தப் பட்டுப் புடைவைகளை
உங்கள் விருப்பத்திற்குத் தெரிவு செய்யச்
சிறந்த ஸ்தாபனம்

# ★ சோபனா ஆடை அகம் ★

இறக்குமதி
செய்யப்பட்ட
சகலவிதமான
ஆடைகளையும்
விதம்விதமாகப்
பெற்றுக்கொள்ள
நாடுங்கள் . . . .

உலக நாகரீகம் உங்களை நாடி
சோபனா ஆடை அகம்
நீங்கள் நாட வேண்டியது

## சோபனா ஆடை அகம்

16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிப்பு உள்ள இடத்தில் இலையான்வரும் சீனாவில் ஊழற் பிரவாகம்



**சீனாவின் கிராமப்புறங்களில் இருந்து தலைநகரம் வரை பல்வேறு மட்டங்களில் லஞ்சமும், ஊழலும் பெருகி வருகின்றன. சீனா புதிய சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி நகர்வதனால் ஏற்படும் விளைவே எனக் கருதப்படுகிறது.**

அதிகாரிகளுக்குக் கையூட்டுக் கொடுக்கும் வழக்கம் சீனாவிற் பெருகி வருகின்றது. கிராமப் புறங்கள் தொடக்கம், தலைநகர் வரை இது பரவியுள்ளது. மருத்துவமனையில் இடம் பிடிப்பதற்கும், சிகிச்சைக்கும் கொடுப்பனவு செய்யவேண்டியது மிகவும் அவசியம். தொலைபேசி இணைப்புத் தேவைக்கும் அப்படியே. அதிகாரிகள் அரச பணத்தைத் தற்காலிகமாக முதலீடு செய்து சுய ஆதாயம் தேடுகின்றனர். இன்று யாதொரு கருமமும் லஞ்சமின்றிச் செய்ய முடியாத நிலை சீனாவில் எழுந்துள்ளது. இது பொருளாதார மலர்ச்சியின் தாக்கம் என்றும் சொல்லலாம். நாட்டிற் பணச்செழிப்பும், செறிவும் அதிகரிக்கும்போது அதிகாரிகளும் வசூல் பண்ணுவதிற் குறியாகவுள்ளனர். அதே சமயத்தில் மக்களும் காலதாமதமின்றித் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்கின்றனர்.

சீன அரசு இந்தச் சீர்கேட்டை ஒரு முடிவுக்குக் கொண்டுவரப் பலமுறை முயன்று தோல்வி கண்டுள்ளது. இவ்வருட மார்ச் மாத நடுப்பகுதியில் சீனாவின் அதி உயர் நீதிமன்றத்தினால் முன்னாள் அமைச்சர் லீ சியோசி என்பவருக்கு அரச பணத்தை மோசடி செய்த குற்றத்திற்காக 20 வருடச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இவருடைய பங்காளி சென்டைபூ என்ற வர்த்தகருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 1949 ஆம் ஆண்டிற்குப் பின் ஓர் அமைச்சர் தண்டிக்கப்பட்டது இதுவே முதல் தடவை. ஆனால் ஓர் ஆசிய நாட்டு இராஜதந்திரியின் பார்வையில் இது வெறும் கண்துடைப்பே. இத்தண்டனை லஞ்சத்தில் ஊறிப்போயிருக்கும் ஒரு நாட்டைச் சீராக்க சிறிதளவேனும் போதாது.

மேற்கு உலக அறிவியலாளர்களின் கணிப்பில் சீனாவுக்கு மூன்று பிரதான தேவைகள் இருக்கின்றன. சிக்கல் இல்லாத தெளிவான, சட்டங்கள் அரசியல்

PUBLIC LIBRARY, JAFFNA. CHUNDIKULI BRANCH LIBRARY.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தங்களுக்கு அப்பாற்பட்ட நீதி நிர்வாகம், பயமின்றி இடித்துரைக்கும் சுதந்திரமான பத்திரிகைகள் என்பனவே அவை. இவை இல்லாதவரை லஞ்ச ஊழலைக் கட்டுப்பாட்டுக்குள்ளே கொண்டு வர இயலாது என்பது அவர்களின் முடிபு. அண்மையில் வெளிவந்துள்ள விபரங்களின்படி சீனாவின் அன்குயி (Anhui) மாகாணத்தில் 300,000 அதிகாரிகள் பின்வரும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். ''உயர்ந்த வட்டிக்குப் பணம் கொடுத்தல், வீட்டுத் தளபாடங்கள், வேறு பாவனைப் பொருள்களை வாங்குதல், அல்லது விற்பனவு செய்தல், அரச பணத்திற் சூதாடுதல், பதவியைத் துஷ்பிரயோகஞ் செய்து விலைமாதரை நாடுதல்.'' இந்த மாகாணத்தில் நடக்கும் இத் திடுக்கிட வைக்கும் செயல்களை பெய்ஜிங் அரசு வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கை உறுதிப்படுத்துகின்றது. இந்த அறிக்கை மேலும் தெரிவிப்பது யாதெனில்:- இந்த மாகாணத்தில் அதிகாரிகள் மோசடி செய்த பணத்தொகை- அதாவது ஒரு வருடத்தில் 141 மில்லியன் டொலர்.

இம்மாதம் நடந்த அரச அவையில் சீன நிதி மந்திரி வியூ சொங்லீ 140,000 தேசியத் தொழிற்கூடங்களிற் பெருஞ் சீர்கேடுகள் நிலவுவதாகத் தெரிவித்துள்ளார். அரச பணம் தனிப்பட்ட அதிகாரிகளின் சுகவாழ்வுக்குப் பயன்படுவதைத் தன்னால் தடுக்க முடியவில்லை என்றும் அவர் பிரலாபித்துள்ளார். கல்வித்துறையிலும் லஞ்ச ஊழல் பெருகிவிட்டது. பல்கலைக்கழக நுழைவுக்கும், நுழைந்தபின் தொடர்ந்து படிப்பதற்கும் பணம் தள்ள வேண்டியுள்ளது. வெளிநாட்டுக்குச் செல்லும் மாணவர்கள் கடவுச் சீட்டுக்கும் மேலதிகப் பணம் அளக்க வேண்டும். கையூட்டு வாங்கிப் பழகிய அதிகாரிகள் சீனாவில் முதலீடு செய்துள்ள பிறநாட்டவர்களையும் விட்டு வைப்பதில்லை. அண்மையில் ஓர் ஐரோப்பிய முதலீட்டாளர் தனக்குத் தேவையான ஒவ்வொரு தொலைபேசி இணைப்புக்கும் 1,000 டொலர் கொடுத்த பின்பும் மேலதிகச் செலவுகள் என்ற வகையில் ஒவ்வோர் இணைப்புக்கும் 2,000 டொலர் கூடுதலாகச் செலுத்தியுள்ளார். ஷங்காய் மாகாணத்தின் பூடொங் பகுதியில் வெளிநாட்டவர் முதலீடு செய்யத் தயங்குவதற்கு இங்குள்ள அதிகாரிகளின் பேராசையே காரணம். அத்துடன் தாம் விரும்பியோரை வேலைக்கு அமர்த்தும்படி முதலீட்டாளர்களை அதிகாரிகள் நிர்ப்பந்திப்பது மிகவும் பரவலாகக் காணப்படும் விடயம்,

ஹொங்கொங் நாட்டைச் சேர்ந்த சோய் சி மிங் வூகான் மாகாணத்தில் முதலீடு செய்துள்ளார். கடத்தற் குற்றஞ் சாட்டப்பட்ட இவர் மூன்று மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். தனது விடுதலையை 500,000 டொலர் கொடுத்துத் தான் வாங்கியுள்ளதாக அவர் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். காவல் துறையும், சுங்க இலாகாவும் இப்படியென்றால் நீதி மன்றங்களும் அதே ரகம் தான். கடன் வசூலுக்காகப் போடப்பட்ட வழக்கில் தேவையற்ற பொருள்களாகவே கொடுத்துச் செலுத்தும்படி நீதிபதி உத்தரவிட்டுள்ளார். அப்பொருள்களை வேண்டாமென்று சொன்ன வெளிநாட்டு நிறுவனத்திற்கு வழக்கைத் தள்ளுபடி செய்வதாக நீதிபதி பதில் கொடுத்துள்ளார்.

சீனாவின் கரையோரப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள கடற்படையினரும், சுங்க இலாகாவினரும் கொள்ளை, கடத்தல், பறிமுதல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகவும் அவற்றால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஹொங்கொங் நாடும், தாய்வானும் சீனாவின் மத்திய அரசுக்கு முறைப்பாடு செய்துள்ளன. ஆனால் இதுவரை ஒரு பிரயோசனமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடந்த 18 மாதங்களில் மேற்குறித்த சீன அதிகாரிகள் நடத்திய 47 கடற் கொள்ளைகளை ஹொங்கொங் சுட்டிக்காட்டியுள்ளது. இது மாதிரியான புள்ளி விபரங்கள் அடங்கிய குற்றச்சாட்டை தாய்வானும் சுமத்தியுள்ளது.

சர்வதேசப் புகழ்பெற்ற தயாரிப்புக்களைப் போன்ற போலிகளைத் தயாரிப்பதில் சீனத் தொழிலதிபர்கள் பன்னெடுங்காலமாக ஈடுபட்டு வருவது யாம் அறிந்த ஒன்று. அழுத்தங்களை மீற முடியாத நிலையில் இவ்விஷயத்தைக் கவனிப்பதற்காகப் பிரத்தியேகமான நிறுவனம் ஒன்றைச் சீனா இப்போது அமைத்துள்ளது. இதன் செயற்பாடுகள் ஆரம்பக் கட்டத்தில் நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கின்றது என்று பாதிக்கப்பட்ட ஒரு சர்வதேச நிறுவனம் தெரிவித்துள்ளது. பொருள்களை நுகர்வோரின் உரிமைகளைக் காக்கும் நடவடிக்கைகளும் சீனாவில் ஆரம்பமாகியுள்ளன. நச்சுப் பொருள்கள் தகுந்த பாதுகாப்பின்றி விற்பனைக்கு விடப்பட்டதும் உடைந்து சிதறும் காற்றடைத்த மென்பானப் போத்தல்கள் விநியோகிக்கப்பட்டதும் நுகர்வோர் பாதுகாப்புக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்காகச் சீனப் பத்திரிகைகளைப் பாராட்ட வேண்டும். பத்திரிகைகள் தாம் அரச அதிகாரிகளின் ஊதுகுழல்கள் அல்லவென்று உணர்ந்தாலும் சுதந்திரமாகச் செயலாற்றும் வாய்ப்பு இன்னும் கிடைக்கவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும்.

அரசின் மேல்மட்டத்தில் லஞ்ச ஊழலை நிறுத்த வேண்டுமென்று சங்கற்பம் பூணப்பட்டாலும் இதன் ஆதிக்கத்தை வேரோடு களைவது இப்போதைக்கு இயலாது போல் தோன்றுகின்றது. மேலிருந்து கீழ் வரை லஞ்ச ஊழல் நாட்டிற் சர்வ வியாபி ஆகிவிட்டதே இதன் காரணம். நிதி மந்திரி லி சொங்லீ உணர்ந்துள்ளதுபோல் நாளடைவில் இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் தன்மை உள்ளதாகும்.

''நியூஸ்வீக்'' மார்ச் 28, 1994.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்பிறாட்லித் தீவுகளுக்கு ஒரு தீர்வு

தென் சீனாக் கடலில் உள்ள இந்த மிகச் சிறிய தீவுக் கூட்டங்களுக்குச் சீனா, தாய்வான், வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனி ஆகிய ஆறு நாடுகள் உரிமை கோருகின்றன. இந்த உரிமை கோரலை, தமது கௌரவப் பிரச்சனையாக நினைத்து, மேற்கூறிய ஒவ்வொரு நாடும் மிகத் தீவிரமாக இருக்கின்றன. பனிப்போர் ஓய்ந்த காலத்திற்குரிய தென்கிழக்கு ஆசியாவின் பாதுகாப்பு, பொருளாதாரம் ஆகிய இரண்டு ஒழுங்குகளும், இத் தீவுப் பிரச்சனைத் தீர்வில் தங்கியுள்ளன. உரிமை கோரும் நாடுகளில் மிகப் பெரியதும், வல்லரசு நிலையிலுள்ளதுமாகிய சீனா, முதலில் உரிமைப் பிரச்சனையைப் பெரிது படுத்தாமல், எல்லோரும் சம பங்கு எடுத்துக்கொண்டு, இத் தீவுகளின் எண்ணெய் வளத்தைப் பயன்படுத்துவோம் என்று கூறினாலும், பின்பு இதை மாற்றியுள்ளது. இப்போது சீனா, முதலில் தனது உரிமையை எல்லோரையும் ஒத்துக் கொள்ளும்படியும், பின்பு சம பங்காக எண்ணெய் வளத்தைப் பெருக்கலாம் என்ற நிலைப்பாட்டையும் தெரிவித்துள்ளது.




தென்-கிழக்கு ஆசிய விவகாரங்களில் அமெரிக்கா இப்போது தனது அக்கறையைக் குறைத்துள்ளதாலும், சீனாவின் நிலை இப்பிராந்தியத்தில் உயர்ந்துள்ளதாலும், ஆசியன் (Asean) அமைப்பு பெரும் முக்கியத்துவம் பெறுகின்றது. இதே சமயத்தில், இந்தோனேஷியாவும் இந்தப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை வெளிக்காட்டத் தொடங்கியுள்ளது. தனித்து விடப்பட்ட வியட்நாம், இப்போது ஆசியன் அமைப்பில் இணைய விரும்புகின்றது. குழப்ப நிலையிலுள்ள இந்த நாடுகளின் உறவைச் சீராக்க, முதற்படியாகச் சீனாவுக்கும், வியட்நாமுக்கும் இடையிலான முரண்பாடான பிரச்சனைகள் தீர்க்கப்படல் வேண்டும். வியட்நாமின் நிலப்பரப்பில் இருக்கும் ரொன்கின் குடாவும், ( Bay Of Tonkin ) வியட்நாமின் கடற்பிராந்தியத்தில் இருக்கும் வான் காட் அணைப்பகுதி ( Vanguard Bank )யும் வியட்நாமின் முழுப் பொறுப்பில் விடப்படவேண்டும். தனது உரிமைக் கோரிக்கைகளைச் சீனா கைவிடுவதற்குப் பிரதியுபகாரமாக, வியட்நாம் ஸ்பிறாட்லித் தீவுகளிற் கோரும் உரிமைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

''ஸ்பிறாட்லித் தீவுகள் மேம்பாட்டு அதிகாரசபை'' ஒன்று நிறுவப்பட வேண்டியது மிகவும் அவசியம். (Spratly Islands Development Authority) இதில், உரிமை கோரும் நாடுகள் பங்குதாரர்களாக இணைந்து கொண்டு செயற்பட்டால், முரண்பாடான உரிமைக் கோரிக்கைப் பிரச்சனை சுமுகமாகத் தீரும் வாய்ப்புண்டு. இந்த அதிகார சபை வெற்றிகரமாகச் செயற்பட, சீனாவும், தாய்வானும் தங்கள் ''வரலாற்று ரீதியான'' முழுஉரிமைக் கோரிக்கையைக் கிடப்பிற் போடுவது மிகவும் அவசியம். இந்த இரு நாடுகளுக்கும் பொதுவாக மேற்படி அதிகாரசபையில் 51 சத வீதம் பங்குகள் கொடுக்கப்படல் வேண்டும். மிகுதி 49 சத வீதப் பங்குகளையும், எஞ்சியிருக்கும் நான்கு நாடுகளுக்கிடையிற் பகிர்ந்தளிக்கலாம். மேற்கூறிய ஆறு நாடுகளின் உரிமைகளும், தத்தமது பங்குகள் மூலம் வெளிப்படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை. விகிதாசார ஏற்றத் தாழ்வு, உரிமைகளின் காத்திரத்திற்கேற்றவாறு அமைந்துள்ளது.

இந்த விதமான அதிகாரசபை ஆணையின் கீழ், இத்தீவுகளின் சுற்றாடலில் இராணுவ, கடற்படை நடவடிக்கைகள் தடைசெய்யப் பட்டிருக்கும். பங்குப் பிரச்சனைகள் இருப்பின், அவை இந்த அதிகார சபையால் தீர்த்து வைக்கப்படும். எண்ணெய்வளம், மீன்வளம் போன்ற செல்வங்கள் அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். வழமையான கப்பற் போக்கு வரத்தை அதிகாரசபை அநுமதிக்கும். சூழல் மாசுபடாமற் பாது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப்படங்களைப் போட்டுப் பார்க்கும் "வியூபைண்டர்"

ஜப்பான் நாட்டு ஷா(ர்)ப் (Sharp) நிறுவனம், தொலைக்காட்சிப் பெட்டிகளையும், வானொலிப் பெட்டிகளையும் செய்து வருகின்றது. இத்தொழில் நுட்பத்தில், மிகவும் முன்னேற்றகரமானதென்று ஷார்ப் நிறுவனம் பெயரெடுத்துள்ளது. இப்போது "ஷா(ர்)ப்", ஒருவரும் முன்பு செய்யாத, முன்மாதிரியான தயாரிப்பொன்றைச் செய்துள்ளது. வியூ:பைன்டர் (View finder) என்பது, புகைப்படத்தை ஒரு கருவியினுள் செருகி அதனுள் இருக்கும் சிறிய கண்ணாடித் திரையில் அப்படத்தைப் பார்க்க உதவும் கருவி. சிறிய மின்கலனும், மின்குமிழும் இதிற் பொருத்தப்பட்டிருப்பதால், விம்பம் துல்லியமாகத் தெரிய வசதி உண்டு. ஆனால், இப்போது ஷார்ப் நிறுவனம் தயாரித்த வியூ:பன்டர்- அதன் தொழிற்பெயர் 'வியூகாம்'(Viewcom)- பல புரட்சிகரமான மாறுதல்களை உள்ளடக்கியுள்ளது. இதனுடைய திரை 4 அங்குலம் அகலம். கலர் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திரையைப் பயன் படுத்தி, இதை ஒரு கமெறாவாகவும் பாவிக்கலாம். இந்தத் திரை, 180 பாகைக்குத் திரும்பிப் படம் பிடிக்க வல்லது. எடுத்தபடத்தை இதில் உடனடியாகப் போட்டுப் பார்க்கவும் முடியும். சுருங்கச் சொன்னால், இதொரு கைக்கடக்கமாக எடுத்துச் செல்லக்கூடிய புகைப்படக்கருவி, தொலைக்காட்சிப் பெட்டி, படம் காட்டும் வீடியோக் கருவி எனலாம். இதன் விலை 2,199 டொலர்.

குறும்படம் எடுப்பவர்களுக்கும், வீடியோவை தொழிலாகக் கொண்டவர்களுககும் பெரும் உதவியளிக்கக் கூடியது.

காத்தல், உயிரினங்கள், தாவரங்கள் போன்றவற்றின் இனப்பெருக்கம், முளையவிருத்தி கெடாது கவனித்தல் போன்ற செயற்பாடுகளையும் அதிகாரசபை வழிநடத்தும் அதிகார சபையின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் விஞ்ஞான ஆய்வுகள் மேற்கொள்ள, சர்வதேச உதவிகளை நாடவும் அதிகார சபைக்கு உரித்து உண்டு.

இந்த யோசனைகளை முன்வைக்க உந்துசக்தியாக அமைந்தது, பின்வரும் சமீபகால நிகழ்வாகும். அண்மையில் தாய்வானும், சீனாவும் ஐக்கிய அமெரிக்காவும், கிழக்குச் சீனாவினதும், தென் சீனாவினதும், கடலில் எண்ணெய் ஆய்வுகள் மேற்கொள்ள, ஒரு முக்கோண ஒப்பந்தம் செய்துள்ளன. இது, முன்பொருபோதும் சிந்தித்துப் பார்க்க முடியாத புரட்சிகர நிகழ்ச்சியாகும். ஒரே ஒப்பந்தத்தில் ஒப்பமிடும் அளவுக்குச் சென்றுள்ள தாய்வானும், சீனாவும் ஒரே அதிகார சபையிலும் இணையக் கூடும் என்ற எண்ணத்தில், இந்த யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

ஸ்பிறாட்லித் தீவுகளின் ஆணைக்குழு அதிகாரத்திற்குட்பட்ட கடல்வலயத்தை இரு பிரிவாக வகுக்கலாம். அவையாவன:– தீவுகளை ஒட்டிய கடல் வலயம், தீவுகளுக்கு அப்பால் உள்ள கடல் வலயம். சீனாவும், தாய்வானும் தீவுகளுக்கு அப்பால் உள்ள கடல் வலய உரிமைகளை விட்டுக் கொடுத்தல் மிக அவசியம். (இதனோடு இணைக்கப்பட்ட நிலப்படத்திற் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.) தாய்வானும், சீனாவும் இவ்வாறு ஸ்பிறாட்லித் தீவுகளை ஒட்டிய கடல் வலயத்துடன் தமது உரிமைகளை நிறுத்திக்கொள்ள, மிகுதியான நான்கு நாடுகளும் தமக்குள் எஞ்சிய பகுதியைச் சுமுகமாகப் பங்கிட்டுக் கொள்ளலாம். உரிமை கோரும் எல்லா நாடுகளும் அமைதியை விரும்புகின்றன. ஆகவே, தென்மேற்குக் கடற்பகுதியை இந்தோனேஷியாவுக்கும், தெற்குப் பகுதியைப் புருனிக்கும், மலேசியாவுக்கும் பொதுவாகவும், வடக்குப் பகுதியைச்சீனா, தாய்வான், வியட்நாம், பிலிப்பைன்ஸ் ஆகிய நான்கு நாடுகளுக்குப் பொதுவாகவும் பகிர்ந்தளிக்க முடியும்.

இந்த யோசனைகளை முன்வைக்கும் திரு. மார்க் ஜே. வலன்சியா அவர்கள், ஹவாய் தீவின் கொனோலூலு கிழக்கு – மேற்கு மையத்தில் சர்வதேச அரசியல், மற்றும் பொருளாதாரப் பேராசிரியராகக் கடமை புரிகின்றார், தனது திட்டத்திற் குறைபாடுகள் உண்டு என்பதை அவர் ஒத்துக் கொண்டுள்ளார். தமது உரிமைகளை விட்டுக்கொடுக்கும் பக்குவம், இன்னும் பல நாடுகளுககு வரவில்லை என்பதையும், அதிகார சபை ஒன்றை நிறுவிய பின்பும், பல நடைமுறைப் பிரச்சனைகள் எழ வாய்ப்புண்டு என்றும், அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். அவருடைய படம் இதில் தரப்பட்டுள்ளது.

வார் (F) ஈஸ்ரேன் எக்கனமிக் றிவியு
மார்ச் 31, 1994.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியாவின் ஆயுதத் திட்டம் பற்றிய புதிய ஆதாரங்கள் வெளிவந்துள்ளன.

கட்டுரையாக்கம்;

— நயான் சண்டா —

ஆகஸ்ற் மாதம் 1993 ஆம் ஆண்டு, சர்வதேச அணுசக்தி நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் வடகொரியாவின் யொங்பியோன் அணுஉலைகளைப் பார்வை இட்டனர். இங்கு, புளூட்டோனியம் குண்டுத் தயாரிப்புக்கு ஏற்ற வகையிற் சக்தி ஊட்டப்படும், ஈயத் தகடுகள் சுவரிற் பொருத்தப்பட்ட அறையைக் கண்டனர். தொடர்ந்து இந்த அறை அணுகுண்டுத் தயாரிப்புக்கு உதவுவதைத் தடுக்கும் நோக்குடன், இந்த அதிகாரிகள் அறையைப் பூட்டித் தங்கள் முத்திரையையும் ( Seal ) பதித்துவிட்டுத் திருப்பியுள்ளனர். மீண்டும், இவ்வருடம் மார்ச் மாத முற்பகுதியில் அங்கு பார்வையிடச் சென்றபோது, தாங்கள் வைத்துச் சென்ற முத்திரை உடைக்கப்பட்டிருந்ததையும், அந்த அறை பாவிக்கப்பட்டதற்கு ஆதாரங்களையுங் கண்டுள்ளனர்.

சீல் உடைக்கப்பட்ட விபரத்தை, இதுவரை காலமும் இந்த அதிகாரிகள் மிகவும் இரகசியமாக வைத்திருந்து, இப்போது வெளியரங்கப்படுத்தியுள்ளனர். மார்ச் முற்பகுதியில் தாங்கள் பார்வையிடச் சென்ற போது, வடகொரியா பலவிதமான தடைகளையும், தொந்தரவுகளையும் செய்ததாகவும், தமது வேலையைச் சரிவரச் செய்ய முடியாதவாறு தடுத்ததாகவும் அவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

ஆகஸ்ற் மாதம் பார்வையிடல் செய்தபின், இந்த அதிகாரிகள் யொங்பியோன் அணுஉலை மையத்தில் உள்ள கேந்திர இடங்களில், தங்கள் படப்பிடிப்புக் கருவிகளைப் பொருத்திவிட்டுத் திரும்பி உள்ளனர். இவை ஒக்ரோபர் 1993 இற்குப்பின் தொழிற்படவில்லை. ஏனென்றால், இந்தக் கருவிகளில் இணைக்கப்பட்ட படச்சுருளும், மின்கலன்களும் காலாவதி ஆகிவிட்டன. அதே மாதம் புதுப் படச்சுருளையும், மின்கலன்களையும் பொருத்துவதற்கு, வடகொரிய அதிகாரிகள் அநுமதி தர மறுத்து விட்டனர். ஆகவே, ஒக்ரோபர் 93 இல் இருந்து, மார்ச் 94 வரை யொங்பியோன் அணுஉலை மையத்தில் என்ன நடந்ததென்று, சர்வதேச அணுசக்தி நிலையத்தினர் ஆதாரபூர்வமாக அறியக் காரணம் இல்லை. சீல் உடைக்கப்பட்டதின் தடயம் ஒன்றே, வடகொரியாவின் நோக்கத்தைக் காட்டுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச அணுசக்தி நிலைய ஆளுநர் சபையின் அவசரக் கூட்டமொன்று, மார்ச் மாதம் 21 ஆம் திகதி கூடப்பட்டது. சபையின் ஒன்பது அங்கத்தவர்கள் பிரசன்னமாயிருந்தனர் சீனா பிரசன்னமாயிருந்தும், வாக்களிக்க மறுத்து விட்டது. ஏனையோரின் பிரேரணை பின்வருமாறு உள்ளது:– ''அணுசக்தி நிலையத்தினர் பார்வையிட, சகல அநுமதிகளையும் வடகொரியாவை வழங்கும்படியும், முன்பு செய்துகொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தின்படி வடகொரியாவை வழங்குப்படியும்'' என்றவாறு. அணுசக்தி நிலைய நிர்வாகி ஹான்ஸ் பிளிக்ஸ் ஐநா பாதுகாப்புச் சபைமுன் தோன்றி, சீல் உடைப்புப் பற்றித் தெரிவிப்பதற்கும் மார்ச் 24 இல் நாட் குறிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அமெரிக்க அதிபர் கிளின்ரன் தென்கொரியாவுக்கு ''பேற்றியட்'' ரக ஏவுகணைத் தடுப்பு ஆயுதங்களை அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளார். வட-கொரியா எடுக்க எத்தனிக்கும் தாக்குதல் முயற்சிகளைத் தடுக்கும் முகமாகவே, இவை அனுப்பப்பட்டுள்ளன. தற்சமயம் வடகொரியாவிடம் இரசாயன ஆயுதங்களும், குறுகிய தூரம் பாயும் ஏவுகணைகளும் உள்ளன. 3,500 கிலோ மீற்றர் பாயும் ஏவுகணைகளை, அது இப்போது தயாரித்துக் கொண்டிருக்கின்றது. தென்கொரிய ஜனாதிபதி கிம்யங், தனது படைகளைத் தயார்நிலையில் வைக்கும்படி, இராணுவத்தினருக்கு உத்தரவு இட்டுள்ளார்.

அதேசமயத்தில், ஒரு மோதல் நிலை உருவாவதைத் தடுக்க அமெரிக்காவும், ஜப்பானும், தென்கொரியாவும் சிரத்தையாக இருக்கின்றனர். தான் அனுப்பிய ''பேற்றியட்'' ரக ஆயுதங்கள், தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படாதென்று கிளின்ரன் கூறியுள்ளார். செயலாளர் வோறென் கிறிஸ்ரோபர், ''அமெரிக்க அரசு மிகவும் நிதானமாகச் செயற்படுகின்றது'' என்று தெரிவித்துள்ளார். தனது அணு உலைகளை, அணுசக்தி நிலையத்தினர் பூரணமாகப் பார்வையிட வட-கொரியா அநுமதி அளிக்கத்தவறின், இந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகள் கொண்டுவரப்படுவது நிச்சயம் என்று சொல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் நாடு, இத்தடைகளை உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று, ஐநாவிற் கூறியுள்ளது. ஆனால், அமெரிக்காவின் ஐநாப் பிரதிநிதி, '' எமது தீர்மானம் பார்வையிடக்கோரும் தீர்மானமன்றித் தடைத் தீர்மான அல்ல '' என்று விளக்கிப் பேசியுள்ளார்.

தென்- கொரிய ஜனாதிபதி கிம்யங் ஓர் இக்கட்டான நிலையிலுள்ளார். வட- கொரியாவுக்கு எதிரான அவருடைய கொள்கைகள் மென்மையானவை; தீவிரம் போதாது என்று, பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் அவரைத் தாக்க ஆரம்பித்து உள்ளன. அவரோ, தனது பங்கிற்கு, ஐநா உத்தேசித்திருக்கும் தடைகளை மீற, பல சுலபமான வழிகள் உண்டு எனத் தெரிவித்துள்ளார். என்றாலும், வட- கொரியாவுக்கு எதிராக, அவர் எதிர்காலத்திற் கடும் நடவடிக்கை எடுப்பது உறுதி. இவ்விடயத்தை ஐநாவுக்கு எடுத்துச் செல்வதில், அவர் மிகவும் ஆர்வமாயுள்ளார். அமைச்சர் அவையில் மென்போக்கைக் கடைப்பிடித்த வெளி உறவு அமைச்சர் சங்ஜூ போன்றவர்கள், ஒருபுறந் தள்ளப்படுவதும் நிச்சயம். மார்ச் 19 ஆம் திகதி, இருநாட்டு அதிகாரிகளின் சந்திப்பு ஒன்றில், வடகொரிய அதிகாரி பின்வருமாறு மொழிந்துள்ளார்:- '' யுத்தம் ஒன்று வரின், தென் கொரியா ஒரு நெருப்புக் கடலில் மிதக்கும் '' என. அவருடைய எதிர்காலக் கொள்கைகளை, இதுவும் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. தமது நாடு, அமெரிக்காவுடன் நேரடியாகப் பேசத் தயார் என்று வடகொரியா கூறியுள்ளமை, தென்கொரியாவின் இறைமையைத் தாக்கும் தன்மை வாய்ந்தது. இதுவும், தென்கொரிய ஜனாதிபதிக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

(F) பார் ஈஸ்ரேன் எக்கொனொமிக் றிவியு,
மார்ச் 31, 1994.

# கம்பியில்லா, ஸ்ரீறியோ ஸ்பீக்கர் தொகுதி

நீங்கள் எங்கிருந்தாலும், இசை நாடாவையோ, வானொலி நிகழ்ச்சியையோ, தொலைக்காட்சியின் ஒலியையோ, கொம்பாக்ற் இசைத் தட்டையோ (Compact disc) கேட்டு இரசிக்க, றெகோற்ரோன் கம்பனியின் கம்பியில்லாத் தொலைக்கட்டுப்பாட்டு ஸ்பீக்கர் தொகுதி (Wireless Remote Speaker System) உதவும். இதன் ஒலி, மிக்க தெளிவானது என்பதுடன், வாகனங்கள் அருகாமையிற் செல்லல், மின்னல் போன்றவற்றால் ஏற்படும் கரகரப்புச் சத்தங்கள் இதில் ஏற்படாது. இக்கம்பியில்லா ஸ்பீக்கர்கள், முதலிலிருந்து (Sources) 150 அடி தூரம் வரை நகர்த்தினாலும், தெளிவான ஒலியைத்தரும். அத்துடன், முதலுக்கும், ஸ்பீக்கருக்குமிடையே சுவர், கூரை, தரை போன்றவை குறுக்கே இருந்தாலும் இயங்கக் கூடியன. எனவே, ஸ்பீக்கர்களை அறைக்கு அறை கொண்டு செல்லவோ, சமையலறை போன்ற வேறு அறைகளில் ஒரே நேரத்தில் நிகழ்ச்சிகளைக் கேட்பதற்காக வைத்து விடவோ முடியும். இவை விருந்துகளுக்கும், வீட்டுக்கு வெளியே ஆறுதலாக அமர்ந்திருந்து இரசிப்பதற்கும் ஏற்றவையாகும். ஸ்பீக்கர்கள் தொகுதியை இயங்கச் செய்வது மிகச்சுலபம். ற்றான் ஸ்மிற்றர் எனும் அலைபரப்பியினைத், தொலைக்காட்சி, வானொலி ஸ்ரீறியோ தொகுதி போன்ற ஏதாவது ஒரு முதலிற் செருகி விட்டாற் போதும். அத்துடன், பார்வைக்குத் தட்டுப்படாதவாறு கம்பித் தொடுப்புக் கொடுத்தலும் தேவையில்லை. இத்தொகுதியில் அலைபரப்பி (Transmitter) வாங்கி (Receiver) ஆகிய எல்லாம் அடங்கி இருக்கின்றன இடுப்புப் பட்டியிலே (Belt) செருகிக் கொள்ளத்தக்க, ''வோலெற்', அளவிலான (Wallet - Sized) வாங்கியுடன் (Receiver) கூடிய ஹெட் :போன்ஸ் (Head Phones) வேலை புரியும் வெளியிடங்களில், அல்லது தனிப்பட்ட முறையிற் கேட்டு இரசிப்பதற்கு மிகச் சிறப்பானவை. அத்துடன், கேட்போர் விரும்பியவாறு, தாழ் தொனியையும் (Base) உயர் தொனியையும் (Treble) இதிற் கூட்டிக் குறைக்கலாம். மூன்று ஏ. ஏ. அளவு மின்கலங்களும், நான்கு சீ அளவு மின்கலங்களும் இதற்குத் தேவை. இதன் சிறப்பு என்னவெனில், இதே போன்ற ஏனைய ஸ்பீக்கர் தொகுதிகளை விடச் சிறந்த ஒலியை, அவற்றைவிடக் குறைந்த செலவில் தருவதுதான். விலை 149 . 95 டொலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பான்-ருஷ்யா மீன்பிடிச் சண்டை

இந்த நூற்றாண்டின்தொடக்கத்தில் ருஷ்யாவைத் தோற்கடித்தபின், ஜப்பான் வடமேல் பசுபிக் சமுத்திர வல்லரசாக உருவெடுத்ததும், ருஷ்யாவின் சக்காலின் (SAKHAKIN தீவின் தென்பகுதியைக் கைப்பற்றியதும், யாம் அறிந்த வரலாறு ஆகும். இரண்டாவது உலக யுத்தத் தோல்விக்குப் பின், 1937 ஆம் ஆண்டு வரை தனதாக்கிக் கொண்ட பசுபிக் தீவுகள் பலவற்றையும் ஜப்பான் இழந்துள்ளது. ருஷ்யா, மீண்டும் சக்காலின் தீவைக் கைப்பற்றியதுடன், ஜப்பானுக்கு நெடுங்காலமாகச் சொந்தமாக இருந்த குறுல் தீவுகளையும்(KURIL ISLANDS)தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது. இத்தீவுகளைச் சுற்றிய நீரில் மிகப் பெறுமதி வாய்ந்த மீன் இனங்கள் வாழ்வதால், ஜப்பானுக்கும், ருஷ்யாவுக்கும் மீன்பிடி உரிமைகள் பற்றிய பிரச்சனைகள் எழுந்து கொண்டே இருக்கின்றன. உலக யுத்தத்தின் பின், ஜப்பான் உலக நாடுகள் எல்லாவற்றுடனும் சமாதான ஒப்பந்தங்கள் செய்துகொண்டாலும், இன்னும் சோவியத் ருஷ்யாவுடனோ, அல்லது இன்றைய ருஷ்யாவுடனோ எந்தவோர் உடன்படிக்கையும் செய்து கொள்ளவில்லை. காரணம் மேற்சொன்ன தீவுகளின் உரிமைப் பிரச்சனையும், அதைச் சுற்றிய நீரில் மீன்பிடிப்பதில் எழுந்துள்ள தகராறுகளுமாகும்.

ஜப்பானிய மீனவர்கள், நவீன சாதனங்களைப் பயன்படுத்திப் பிற நாடுகளின் உரிமைகளை மதியாது வரம்புமீறி மீன் பிடிக்கும் வழக்கம் உடையவர்கள். அழியும் நிலையிலுள்ள உலகின் மிகப் பெரிய உயிரியாகிய திமிங்கிலத்தை வேட்டையாடுவதைச் சகல நாடுகளும் நிறுத்திய பின்பும், ஜப்பான் தொடர்ந்தும் இதைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இனப்பெருக்கத்திற்கு விட்டுவையாது, ஒட்டுமொத்தமாக மீன்பிடிக்கும் வழக்கம் உள்ளவர்கள் ஜப்பானியர்கள் என்றும் சொல்லப்படுகின்றது. குருல்லித் தீவுக் கூட்டங்களைச் சுற்றியுள்ள ருஷ்யாவுக்குச் சொந்தமான நீரில் ஜப்பானிய மீனவர்கள் நெடுங்காலமாக மீன் பிடித்து வருகின்றனர். இங்கு பிடிக்கப்படும் இறால், பெரிய நண்டு, மீன் போன்றவை ஜப்பானிய மக்களால் விரும்பி உண்ணப்படுகின்றன. சோவியத் ருஷ்யாவாக இருந்த காலத்தில், ருஷ்யாவின் கிழக்கு ஆசிய நிர்வாகச் செலவுகள் மொஸ்கோவில் இருந்து வரும் நிதியால் ஈடுசெய்யப்பட்டுள்ளன. இப்போது ருஷ்யாவிற் பெரும் நிதிப் பற்றாக்குறை நிலவுவதால், கிழக்கு ஆசிய நிர்வாகம் தேவையான நிதியைத் தானே தேடவேண்டியுள்ளது. இங்கு, வருடமொன்றுக்குப் பிடிக்கப்படும் மீன் இனத்தின் பெறுமதி ஒரு மில்லியன் டொலர் என்று ருஷ்யர்கள் கணக்கிட்டுள்ளனர். இந்தச் செல்வத்தை ஜப்பான் தட்டிச் செல்லுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளை,



அவர்கள் அண்மைக் காலத்தில் எடுத்துள்ளனர்.

கடந்த ஒரு வருடகாலமாக, ருஷ்யாவுக்கும், ஜப்பானுக்குமிடையில் ஒருவித மோதல் நிலை உருவாகி வருகின்றது. ஜப்பானிய மீன்பிடிக்கப்பல்கள் ருஷ்ய எல்லைக்குள் ஊடுருவுவதைத் தடுப்பதற்கு, தனது விமானப்படையையும், கடற்படையையும் ருஷ்யா பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. ஜப்பானிய மீன்பிடிப் படகுகளையும், கப்பல்களையும் தடுக்கவும், துரத்தவும். உத்தரவு மீறினால் சுடவும், இப்படைகளுக்கு ருஷ்ய அரசு அதிகாரம் வழங்கியுள்ளது. சென்ற ஜனவரி மாதந் தொடக்கம், சுடுகலன்கள் பொருத்தப்பட்ட இரண்டு ருஷ்ய எம், ஐ. 8 (M. I. 8) ரக உலங்கு வானூர்திகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன சென்ற வருடம் 15 ஜப்பானிய மீன்பிடிக் கப்பல்களும். 50 ஜப்பானிய மீன் பிடிப்போரும் ருஷ்யாவால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஏழு ஜப்பானியர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. இப்பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபடும் 5,600 ஜப்பானிய மீன்பிடிப் படகுகளால் மீன் இனமே இல்லாதொழியும் நிலை வரலாம் என்று சில ருஷ்ய சூழற்பாதுகாப்பு அதிகாரிகள் முறையிடுகின்றனர். இப்பிரதேசத்தில், ஜப்பானிய எல்லைப் பாதுகாப்புப் படையினரும் உஷார்ப்படுத்தப்பட்டிருக்கின்றனர். இருநாட்டு அரசுகளும் ஓர் உடன்பாட்டிற்கு வந்து அமைதி நிலை உண்டாவதற்கு குறுல் தீவு விவகாரம் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கின்றது. விரைவில், ஒரு மோதல் நிலை வரலாமென்று பார்வையாளர்கள் அஞ்சுகின்றனர்.

''நியூஸ்வீக்'' மார்ச் 28 . 1994

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய கிழக்கு விவகாரம்:

# கெப்றோன் படுகொலைகள் பற்றி,

### வெளிவரும் சில திடுக்கிடும் உண்மைகள்.

தொழுகையில் ஈடுபட்ட ஐம்பதுக்கும் அதிகமான முஸ்லிம்கள், கெப்றோன் மசூதிக்குள் வைத்து, புத்தி சுவாதீனமற்ற ( ? ) ஒரு யூதக் குடியேற்றவாசியாற் கொல்லப்பட்டுள்ளனர். இது, இஸ்ரேலிய அரசு வெளியிட்ட அதிகாரப் பூர்வமான செய்தி. ஆணைக்குழு ஒன்றை நியமித்து, பிற்புல ஆராய்வு செய்யும்படி பல உலகநாடுகளும் அமைப்புக்களும் கேட்டபோது, இஸ்ரேலால் மறுக்க முடியவில்லை. இவ்வாறு அமைக்கப்பட்ட ஆணைக் குழு நடத்திய விசாரணைகள் பல அதிர்ச்சியூட்டுந் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. வைத்திய கலாநிதி பாரூக் கோல்ட்ஸ்ரைன், இக்கொலைகளை இன்னுமொருவனுடன் கூட்டாகச் செய்துள்ளான் என்பதற்கு, பலமான சாட்சியங்கள் வெளிவந்துள்ளன. கோல்ட்ஸ்ரைன் கொல்லப்பட்டுவிட்டான். ஆனால், இரண்டாவது மனிதன் யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது. இத்துடன், இஸ்ரேலின் உத்தியோகபூர்வ அறிக்கைகள் யாவற்றையும் பொய்ப்பிக்கும் வேறு செய்திகளும், ஆணைக்குழு மூலமாக வெளிவரத் தொடங்கியுள்ளன. கூடவே இவ்வளவு காலமாக இஸ்ரேலியச் சட்டங்களும், நடைமுறைகளும் யூதக் குடியேற்றவாசிகளுக்கு வெகு சாதகமாகவும், பாலஸ்தீன மக்களுக்கு மிகவும் பாதகமாகவும் உள்ளன என்பதும், நீதியின் முன்னிலையிற் பாரபட்சம் காட்டப்படுகின்றது என்ற திடுக்கிடும் செய்தியும் வெளிவந்துள்ளன.

மசூதிக்குள்ளும், பின்பு சனத்திரள் மசூதியைவிட்டு வெளியேறும் போதும் நடந்தவை பற்றி முரண்பாடான தகவல்கள் ஆணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மசூதிக்கு முன்னால் கடமையிலீடுபட்ட இராணுவத்தினர் இருவர், ஓடிய மக்களை நோக்கித் தாங்கள் சுட்டதாகத் தெரிவித்துள்ளனர். அத்துடன் தமது ரவைகள் ஒருவர் மீதும் படவில்லையென்றும், அவர்கள் தமது சாட்சியத்திற் கூறியுள்ளனர். தொடக்கத்தில், இராணுவத்தின் நிலைப்பாடு வித்தியாசமாக இருந்தது. தாம், ஆகாயத்திற் சுட்டதாகத் தான், முன்பு அவர்கள் கூறியிருந்தனர். பாலஸ்தீனியர்களின் வாக்கு மூலத்தின்படி, இராணுவத் துப்பாக்கிச் சூட்டிலும் சில பாலஸ்தீனியர்கள் இறந்திருக்கலாம்.

மேற்கூறிய இராணுவத்தினர் இருவரும் தமது சாட்சியத்தில்:— கொலைகாரன் கோல்ட்ஸ்ரைன் மசூதிக்குள் செல்லும்போது, கையில் எம். 16 ரகத் தானியங்கி றைஃபிளை வைத்திருந்தான் என்றும்; இராணுவம் கூறுவதுபோல், இஸ்ரேல் தயாரிப்பான 'கிலிலொன்' றைஃபிள் அல்லவென்றும் தெரிவித்துள்ளனர். கோல்ட்ஸ்ரைனுக்கு உதவியாக, இன்னுமொருவன் கொலையில் ஈடுபட்டிருக்க வேண்டுமென்றும் இச் சாட்சியங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

மசூதிப் படுகொலைகளும், பின்பு அரசும், இராணுவமும் விடுத்த அறிக்கைகளும், ஆணைக் குழு முன்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களும், பெரும்பாலான இஸ்ரேலியர்களின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பியுள்ளன. தமது அரசின் செங்கோல் வளைந்து விட்டதாகவே அவர்கள் கருதுகின்றனர். அதே சமயத்தில், மசூதி



1992 ஆம் ஆண்டு தொடக்கம், எந்த நேரமும் பெருங்குழப்பம் வரலாமென்று எதிர்பார்க்கப்பட்டதென, படுகொலைகள் சம்பந்தமான புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மசூதிப் படுகொலைகளில் சம்பந்தப்பட்டிருக்கும் இரண்டாம் மனிதர்களைப் பற்றிய விபரங்கள் வெளிவர ஆரம்பிப்பதனால், இஸ்ரேலிய உயர் அதிகாரிகள் சிலர் பதவி விலக நேரிடலாம்.

யின் பாதுகாப்பிற்குப் பொறுப்பான அதிகாரிகள், தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்பதும் வெளிவரத் தொடங்கியுள்ளது. பல மாதங்களாக கோல்ட்ஸ்ரைன் போன்றோர், பாலஸ்தீனியர்கள் தொழுகையில் இருக்கும் போது தாங்கள் சுட்டுத்தள்ளப் போவதாக, பகிரங்கமாகக் கூறியுங் கூட எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒரு வருடத்திற்கு முன்பாகவே, கோல்ட்ஸ்ரைனும் இதைக் கூறியுள்ளார். உள்நாட்டுப் புலனாய்வுத்துறை, ''ஸின்பெற்'' ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையிற் பின்வருமாறு கூறியுள்ளது:— ''இப்படியான படுகொலைகளை யூதக்குடியேற்றவாசிகள் நடத்தலாமென்று, நாங்கள் இஸ்ரேலிய இராணுவத்திற்குப் பலமுறை அறிவுறுத்தல்கள் கொடுத்துள்ளோம்.''

கெப்றோன் நகர இராணுவப் பொறுப்பதிகாரி தனது சாட்சியத்தில்:— யூதக் குடியேற்றவாசிகள் கொலை செய்தாலுங் கூட, அவர்களைச் சுடுவதற்கு இராணுவச் சட்டம் இடங்கொடாது என்று தெரிவித்துள்ளார். அத்துடன், சென்ற வருடம் இரண்டு இனத்தவர்களுக்குமிடையில், இந்த மசூதி சம்பந்தமான 25 கசப்பான சம்பவங்கள் நடந்துள்ளன வென்றும், அதற்கு ஒருவித நடவடிக்கையும், எடுக்கப்படவில்லையென்றும் ஒத்துக்கொண்டுள்ளார். படுகொலைகள் நடந்த அன்று காலையில் மசூதிக்குள் கடமையிலிருக்க வேண்டிய ஆறு இராணுவத்தினரில் ஐவர் வரவில்லை என்பதையும் அவர் ஏற்றுள்ளார்.

பாதுகாப்புக் குறைபாடுகளால், கோல்ட்ஸ்ரைன் எளிதாகப் படுகொலைகளைச் செய்யக் கூடியதாக இருந்தது என்று, ஆணைக்குழுத் தீர்ப்பளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மிகவும் திறமைசாலி என்று பெயரெடுத்த, அதி உயர் இஸ்ரேலிய இராணுவ அதிகாரி தார்மிகப் பொறுப்பேற்று, இராஜினாமாச் செய்யலாமென்றும், செய்திகள் அடிபடுகின்றன. சிலர், இஸ்ரேலியப் பிரதமரே பதவி துறப்பார் என்கிறார்கள். அப்படியென்றால், இஸ்ரேலியச் சமாதானக் கொள்கைகளிலும் மாற்றம் ஏற்படவாய்ப்பு உண்டு.

## மசூதிப் படுகொலைகளுக்குப் பின்பு, அமெரிக்காவிற் பிறந்த யூதக்குடியேற்ற வாசிகளுக்கு, இஸ்ரேலிற் பெரும் வரவேற்புக் கிடைக்காது.

பாருக் கோல்ட்ஸ்ரைன், அமெரிக்காவிற் பிறந்து வளர்ந்து, அங்கேயே வைத்தியத் துறையிற் பட்டம் பெற்றபின், இஸ்ரேலிற் குடியேறியவன் என்பது தனிப்பட்ட ஒரு வரலாறு அல்ல. அநேகமான அமெரிக்க யூத இளைஞர்கள் தமது பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு இஸ்ரேலிற் குடியேறும்போது, மேற்கூறிய கோல்ட்ஸ்ரைனை ஒத்த மனநிலையுடன் காணப்படுகின்றனர். அமெரிக்காவிற் கிடைக்கும் வாய்ப்புக்களை உதறிவிட்டு மத்திய கிழக்கை நோக்கி வருவதற்கு, அவர்களுடைய தீவிர மதக் கொள்கைகளும், அரபு எதிர்ப்பு இனவாதமுமே காரணங்களாய் அமைந்துள்ளன.

இவ்வாறு வரும் பெரும்பான்மையான இளைஞர்கள், காலஞ்சென்ற யூத மதகுரு றபீமீயர் கஹானேயின் அரபு வெறுப்புக் கொள்கையைத் தழுவியவர்களாகவும் காச் (Kach) எனப்படும் தீவிர வலதுசாரி இயக்க அங்கத்தவர்களாகவும் இருக்கின்றனர். இவர்களால் இஸ்ரேலுக்கு அபகீர்த்தி வருவது நிச்சயம். அமெரிக்காவிலிருந்து இங்கு குடியேறியவர்களின் தொகை 68,000 என்று கணக்கிடப்பட்டுள்ளது. முழுச் சனத்தொகையில் இது 1.3சதவீதம். ஆனால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள யூதக் குடியேற்றவாசிகளில் அமெரிக்கர்கள் 15 சதவீதத்தினர் என்பது அண்மைக்காலக் குடியியற் கணக்காகும். காலஞ்சென்ற மீயர் கஹானேயின் ஆதரவாளர்கள் பெரும்பாலும் அமெரிக்கர்கள் என்பதும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலேயே அவர்கள் காணப்படுகின்றனர் என்பதும் மறைக்க முடியாத உண்மைகளாகும். மிகச் சில அமெரிக்க இளைஞர்கள், தமக்கும், தீவிரவாத அமைப்புக்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லையென்று சொல்வதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவில் வாழும் யூதர்கள் மத்தியில் மதகுரு கஹானேயின் அரபு ஒழிப்புக் கொள்கைகள் நல்ல வரவேற்புப் பெறுகின்றன. தமது படிப்பு முடிந்ததும் இஸ்ரேலுக்குச் சென்று தமது கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதே இவர்களின் குறிக்கோள். ஆனால் சில யூதச் சிந்தனையாளர்களும், பத்திரிகையாளர்களும் இன்னுமொரு கருத்தை முன்வைக்கின்றனர். இவ்வாறான அமெரிக்க இளைஞர்களுக்கு நல்ல வரவேற்பு இருப்பதால்தான் அவர்கள் இங்கு வருகிறார்கள். அத்துடன் இஸ்ரேல் அரசு சமுதாயம் ஆகியவற்றின் சீர்கேடுகளுக்கும், குறைபாடுகளுக்கும் தனிப்பட்ட நாட்டவர்களைக் குறைகூறுவதிற் பயனில்லை. அமெரிக்காவிலிருந்து இங்கு குடியேறும் வலதுசாரிகளை மாத்திரம் தடைசெய்வது இயலாத காரியம். ஆகவே அமெரிக்காவிலிருந்து குடியேறுபவர்களைக் குறைகூறும் இப்போதைய வழக்கம் தற்காலிகமானதே. இஸ்ரேலிய நீதித்துறையும், இராணுவமும் அண்மைக்கால நிகழ்வுகளுக்குப் பொறுப்பேற்க வேண்டியுள்ளமை அவசியமாகப் படுகின்றது.

''ரைம்'' மார்ச் 28, 1994.

★ ★ ★

# அயர்லாந்துப் புதிர்

எழுதியது:
பெல்ஃபாஸ்ற் நகரிலிருந்து
— பாறி ஹில்லென்பிறான்ட் —

இம்சையை விளக்குவதைத் தட்டிக்கழித்து விடுவதில் கைதேர்ந்தவர் ஜெறி அடம்ஸ். அயர்லாந்தின் குடியரசுப் படையின் குண்டுகள், குற்றமற்ற குடிகளை அங்கவீனப்படுத்தும் போது குடியரசுப் படையின் அரசியற் பிரிவாகிய சின்ஃபெயினின் தலைவராக அடம்ஸ் ஒலிபெருக்கிகளுக்கு முன் அமர்ந்து அக்கிரமங்களை வருத்தத்துக்குரிய ஆனால் நியாயமான செயல்கள் என்றும் பிரித்தானியாவின் அடக்கு முறைக்கு எதிரான தர்மயுத்தத்தில் அவர்களது படை செய்யும் அழிவுகளுக்குச் சமாந்தரமாக இப்படியும் நிகழ்ந்து விடுவது உண்டு என்றும் சமாளித்து விடுவார். இப்பணியைச் செய்வதில் அமைதியும், நியாயமுமான போக்குடையவர் என்ற கணிப்பும் இனிக்கப் பேசும் ஆற்றலும் மிக்க அடம்ஸ் அசகாயசூரர்.



சின்ஃபெயின் தலைவர் அமெரிக்காவில் இருந்த சில நாள்களில், பல்வேறு நேர்காணலில் உலகம் அவரைச் சந்தித்தது. ஆனால், பிரிட்டனில் அவரது குரல் தொலைக்காட்சியில் தடைசெய்யப்பட்டுள்ளது.

மார்ச் மூன்றாம் வாரத்தில் சிக்கலான ஒரு பணியை விளக்குவதற்காக அவர் அழைக்கப்பட்டார். மூன்று வெவ்வேறு தாக்குதல்களில் அ.கு. படை 12 மோட்டார் எறிகணைகளை லண்டனின் பிரதான விமான நிலையமான ஹீத்றோவிற் போட்டது. புதிர் போல அவை ஒன்றுமே வெடிக்கவில்லை. ஆபத்துக்குள்ளாகியவை பிரித்தானியரின் நரம்புத் தொகுதிகளே; விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டன. காவற்றுறையினர் நுழைபாதைகளை மூடிப் பாதுகாப்பு வேலைகளைச் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெறி அடம்ஸ், சமாதானம் பற்றிப் பேசுகிறார். ஆனால். சின்.:பெயின் அமைப்பின் நாவலர், உண்மையில் அதைக் கருதுகிறாரா?

ஆனால் இவ் வெடியாக் குண்டுகள் 25 ஆண்டுகளாகத் தொடரும் பிரித்தானிய அயர்லாந்துப் பூசலை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்குப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் முயற்சிகளை நொறுக்கும் குண்டுகளாய் வெடித்தன. றோமன் கத்தோலிக்க - புரட்டஸ்தாந்துப் பூசலில் ஈடுபட்டோர் சென்ற டிசெம்பர் முதல் சமாதானம் பற்றிப் பேசி வந்தனர். பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேஜரும், அயர்லாந்துப் பிரதமர் அல்பேட் றெனோட்சும் லண்டன் டௌனிங் வீதியிலுள்ள பிரதமர் இல்லத்திலிருந்து வெளியிட்ட பிரகடனத்தில் வட, தென் அயர்லாந்து மக்கள் ஜனநாயக முறையிற் கொண்டுவரும் எந்த அமைதி ஏற்பாட்டையும் இரு நாடுகளும் ஏற்கும் எனத் தெரிவித்தனர்.

ஆனால் பிரச்சனைப் புள்ளி அ. கு. படையே அது தன் துப்பாக்கிகளைக் கீழே போட்டுவிட்டுப் பேச்சுவார்த்தைக்கு வருமா? பிரித்தானிய அரசாங்கம் மேற்படி பிரகடனத்துக்கு முன்னரே அ கு.படை சின்.:பெயின் பிரதிநிதிகள் ஆகியோருடன் இரகசியப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாக ஒப்புக் கொண்டது. சந்திப்புக்களின்போது எழுதிய குறிப்புப் பிரதிகளிலிருந்து நீண்டகாலம் புரையோடிய புண்கள்



ஹீத்றோ விமான நிலையத்தின் மீது நடந்த மூன்று தாக்குதல்களில் ஒன்றில், நான்கு மோட்டார் ஷெல்கள் வீசப்பட்டன. ஏவிய கார் தீப்பற்றி எரிந்து போயிற்று.

போன்ற வேற்றுமைகளைக் களைவதிலே இரு பகுதியினருக்கும் புது விருப்பு உண்டாகியுள்ளது என்பதைப் புலப்படுத்தின. முழு நீளப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கி நிரந்தரச் சமாதானத்துக்கு வழிகோல அ.கு. படை இம்சை நெறியை விலக்குவதாக அறிவிப்பதே நிகழ வேண்டியதொன்றாயிருந்தது.

இந்த நம்பிக்கைகளை ஹீத்றோ மோட்டார் எறிகணைகள் தகர்த்து விட்டனவா? அடம்ஸ் இல்லவே இல்லை என்கிறார். சமாதான முயற்சிகளிடையே ஒரு சோர்வான கட்டத்தில்தான் இக்குண்டுப் பிரச்சனை வந்தது என்றும், இதனால் பிரித்தானிய அரசு விரைவாகச் செயற்படக்கூடும் என்றும் கருதுகிறார். சின்.:பெயினும், அ. கு. படையும் தாம் பேச்சுவார்த்தைகளிற் கலந்து கொள்ளுமுன்பு பிரிட்டன் சில ''விளக்கங்'' களைத் தர வேண்டும் என்கின்றன. ''அதுவரையும் பிரச்சனை கொதிப்படைகிறது என உலகுக்கு நினைவூட்டத் தக்கவாறு ஏதாவது அற்புத நிகழ்ச்சி ஒன்று ஏற்பட்டே தீரும்'' என்கிறார் அடம்ஸ்.

வடஅயர்லாந்தில் பிரிவினைப் போக்குள்ள இரு பகுதியாரும் குண்டு வைப்பதும், கொலை புரிவதும் சர்வசாதாரணச் செய்தியாகி விட்டதால் இப் புதிய இம்சைத் தொடர் நிகழ்ச்சிகள் 1969 இல் எப்படி ஆரம்பித்தது? என்பதைப் பலர் மறந்திருக்கலாம். கத்தோலிக்கருக்கு உத்தியோகம், கல்வி, வீடமைப்பு ஆகியவற்றில் பாரபட்சம் காட்டப்படுவதை எதிர்த்து குடியுரிமைக்காக எதிர்ப்புத் தெரிவித்ததிலிருந்து தொடங்கியதைப் பலர் மறந்திருக்கலாம். ஆனால் அடம்ஸ் மறக்கவில்லை. இவைதான் அவரை அரசியல் உச்சிக்கு ஏற்றி வைத்தவை.

கத்தோலிக்க மேற்கு பெல்.:பாஸ்ற் நகரில் அவர் பெருமைக்குரிய மாவீரர். வயது 45. ஆனால் இப்பிரதேசத்துக்கு வெளியே அவரது படிமம் சற்றுத் தெளிவற்றது. அமெரிக்க மாட்டின் லூதர் கிங் சென்று காட்டிய சாத்விக வழியிற் குடியுரிமைகளுக்குப் போராடும் அறநெறியாளரா? அல்லது மூன்றாந் தலைமுறையாகப் பிரித்தானியரை எதிர்த்துப் போராடும் தேசியவாதியா? அவரது தந்தை ஆங்கிலேயராற் சிறைவைக்கப்பட்டவர்? பாட்டனார் ஜேம்ஸ் கொனொலியுடன் தோளோடு தோள் நின்று ஐரிஷ் சுதந்திரத்துக்குப் போரிட்டவர். தமது இம்சை வழிப் போராட்டக் கட்சியின் பலவந்த மேடைப் பேச்சை மெல்ல மெல்ல விட்டுச் சமாதானம் பேசுபவராக விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வாய்ந்தவராக மாறிவிட்டாரா? அல்லது, அ. கு. படையின் உச்சபையில் அங்கத்தவராயிருந்து அன்றும், இன்றும் குடிமக்களைக் குறிவைத்துத் தாக்கும் திட்டங்களை வகுக்கும் பயங்கரவாதியா? அடம்ஸ் இவை அனைத்தும் ஒன்று திரண்ட வடிவம் உடையவரே. அவரது வலு இப்படி எந்த ஒரு வரைவிலக்கணத்துக்கும் அகப்படாத தன்மையிலேயே தங்கியுள்ளது. ஒரே சமயத்தில் அவர் அ. கு. படையின் ஒலிபெருக்கியாயும், சமாதானத்தின் மென் குரலாயும் திகழ்கிறார்.

இளவயதிலேயே இந்த சின்.:பெயின் தலைவர் இரட்டை வேடங்களுக்கு வந்தார். 1972 இல் கத்தோலிக்கக் குடியரசுவாதிகளுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும், புரட்டஸ்தாந்து இணைப்புவாதிகளுக்குமிடையில் தெருச் சண்டைகள் பயங்கரமாக நிகழ்ந்தபோது பிரித்தானியப் படை அடம்ஸைக் கைது செய்து விசாரணையின்றிச் சிறையில் அடைத்தது. ''விசாரணை அறையில் இருக்கும்போதுதான் ஒருவன் தன் குறிக்கோளுடன் எவ்வளவுக்கு ஒன்றுபட்டிருக்கின்றான் என்பதை அறிய முடியும்'' என்கிறார் அடம்ஸ். அவர் சிறையில் உள்ளவர்களின் தலைவரானார். 23 ஆம் வயதில் அவரைச் சிறையிலிருந்து வெளியேற்றி, மீள அ. கு. படை முதியோருடன் லண்டனில் போர் ஓய்வு ஏற்பாடுகள் பற்றிப் பேசவைத்தனர். சமாதானம் சில காலமே நிலைத்திருந்தது. அடம்ஸ் மீண்டும் சிறை சென்றார். அங்கே மடங்களிலுள்ளது போன்ற கட்டுப்பாடான வாழ்க்கையை மேற்கொண்டு படிப்பு, ஆராய்ச்சி, எழுத்துப் பணிகளில் தீவிரமாக இறங்கினார். சிறையிலிருந்து திரும்பியபோது அவர் திறமை வாய்ந்த எழுத்தாளரானார். தமது அரசியல் நம்பிக்கைகளுக்கான வலிமைமிக்க அறிவுசார் அத்திவாரத்துடன் திகழ்ந்தார்.

பெல்ஃபாஸ்ற் நகர வீதிகளுக்கு வந்ததும், மீண்டும் சின்ஃபெயின் கட்சியைத் தீவிரமாகப் பலப்படுத்தும் முயற்சியில் முற்றிலுந் தம்மை ஈடுபடுத்தினார். 1970 களில் அனலக்கும் தீவிரக் குடியரசுவாதியாகத் திகழ்ந்த பெணாடெற்ரெடெல்வின் மக்அலிஸ்கி கூறுகிறார்:–''அவர் ஓர் அரசியல் மாமேதை. பெரும் பொறுமைசாலி. கடும் வேலைப்பளு, பிற தாக்கங்களுக்குட்பட்டபோதும் அவரைக் கவனித்தேன்; தன்நிலை தளரமாட்டார். கோபம் வராது. விவாதத்துக்கு நல்ல வாய்ப்பளித்து சகலரதும் ஒருங்கிணைந்த கருத்துக்களைத் திரட்டி எடுத்து அதன் மூலம் இயக்கத்தைத் தொடர்ந்து முன் எடுத்துச் செல்லும் தலைமைத்துவம் அவரது தனிச் சிறப்பு''என்று.

அடம்ஸ் படிப்படியாகச் சின்ஃபெயினைத் தேர்தல் அரசியலுக்கு இட்டுச் சென்றார். கட்சி, சில உள்ளூர் ஆட்சி மன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்றது. 1983 இல் ''பிரித்தானியப் பொதுமக்கள் அவை'' என்னும் பாராளுமன்றத்தின் மேற்கு பெல்ஃபாஸ்ற் உறுப்பினராக அடம்ஸ் தேர்வுற்றார். அவர், இராணிக்கு விசுவாசம் தெரிவிக்கும் சத்தியம் எடுக்க விரும்பாமையால், தமது பாராளுமன்ற ஆசனத்தில் அமரவில்லை. ஆனால் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் (எம். பி.) என்ற கௌரவத்தைச் சுவைத்தார். 1992 இல் அவர் அத்தேர்தல் தொகுதியில் தோல்வி கண்டு, பெரிதும் கவன்றார்.

அடம்ஸ் தேர்தல் அரசியல் மூலம் மரியாதைக்குரியவர் என்று சிறிதளவு கணிப்பைப் பெற்றாலும், அவரும், அவரது சீடர்களும் அ. கு. படைத் தொடர்பாலேயே கவனம் பெறுகின்றனர். தாம், அதில் அங்கத்தவர் இல்லை என்றே, அவர் மறுக்கிறார். ''அது சட்டவிரோதமானது; எனக்கு 10 வருட மறியல் தீர்க்கப்படமுடியும், ஆனால், நான் அதற்கு தூரத்தே, விலகாமல் இருந்து வருகிறேன். அப்படி நான் தூர விலகினாலும், யாரும் என்னை நம்பமாட்டார்கள். மேலும், நான் அதே தொகுதிக்குக் கடமைகள் செய்ய வேண்டியவன் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். பெல்ஃபாஸ்ற் கத்தோலிக்கர் பாதுகாப்பும், ஆதரவும் நாடி, நெருங்கிய உறவுடன் வாழ்கின்றார்கள். அடம்ஸ், முற்றுகைக்குள்ளாகிய ஓர் இனத்தின் மனோநிலையினால் உருவாக்கப்பட்டார். அவரது நான்கு சகோதரர்களும், சிறை சென்றவர்கள். அவர் சுடப்பட்டார். அவரது இல்லம் தீக்குண்டினாலே தாக்குதலுக்கு உள்ளானது.

சின்ஃபெயின், அ, கு. படை, பிறகுடியாசு நிறுவனங்கள், தம்முள் குறிக்கோள்கள், தந்திரோபாயங்கள் பற்றிப் பூசல் இடுவதுண்டு. ஆனால், அவலம் வரும்போது, மரணவைபவங்களில் கலந்து கொள்ளும்போது அனைவரும் ஒன்றுபடுவர் அ. கு. படை அங்கத்தவரான தோமஸ் பெக்ளி, சென்ற ஒக்ரோபரில், புரட்டஸ்தாந்துப் பகுதியில் உள்ள மீன்கடைக்குப் பக்கத்திற் குண்டு வைக்கும்போது, திடீர் விபத்தில் 9 பேருடன் இறந்தபோது, அடம்ஸ் மரணச் சடங்கிற் கலந்து கொண்டார். ஐரிஷ் மரணச் சடங்குகளில் உள்ள வழக்கப்படி, அடம்ஸ் சவப்பெட்டியைச் சிறிது தூரம் காவிக்கொண்டு போனார். அது, பிரிட்டனில் ஆத்திரத்தைக் கிளப்பியது. அவர் அ.கு. படைத் தளபதிகளில் ஒருவர் என்பது நிரூபணமாயிற்று என்றனர் ஆங்கிலேயர், அடம்ஸ் சொன்னார்:- ''நான் மரணவீட்டுக்குப் போகாவிட்டால், அது ஓர் அரசியற் சூழ்ச்சி என, அங்கு பேசப்படும். இறந்தவர்களின் குடும்பங்களின் விமர்சனத்தை நான் ஏற்கிறேன். அந்தச் செயற்றிட்டம் முழுவதும் பிழை என்பதே, என் கருத்து'',

சமீபக் காலத்தில், இம்சை குறித்துக் கடும் பதங்களில் அவர் குற்றம் சொல்கிறார். ''ஆயுதப் போராட்டத்தை நான் இன்று ஆதரிக்கவில்லை; முன்னர் ஆதரித்தேன். ஆனால், இப்போது காலம் மாறி விட்டது. இன்று நம் பணி, ஆயுதப் போராட்டத்தை ஆதரிப்பது அன்று; சகல வித போராட்டங்களையும் ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டியதே. நம்மை எதிர்நோக்கி நிற்கும் பணி! அவர் கருத்துப் படி, தாம் சமாதான வழியைக் கடும் வேகத்தில் வற்புறுத்தினால், ஆயுதத்தாற் சீவிப்போர் சிலர் தம் துப்பாக்கிகளையும் தூக்கிக்கொண்டு பிரிந்து செல்வர். இது ஐரிஷ் குடியரசு இயக்கத்திற் பலமுறை நிகழ்ந்த விடயம். ''இங்கே, நாம் பல நூற்றாண்டு வரலாற்றின் வழி வந்த சிக்கல்களை அவிழ்க்க முயல்கிறோம்; நாம் கவனமாக இயங்கி எவர் ஒருவரையும் பின்னே தக்க விட்டுச் செல்லக்கூடாது'' என்கிறார் அடம்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மனிதனைக் குறித்து மீண்டும் மீண்டும் எழுப்பப்படும் வினா:- "இவர் உண்மையில் சமாதானத்தை நோக்கி இயங்குகிறாரா" என்பதே. அவரது நாவன்மையும் மிதமானபோக்கும், சமீபத்தில் நியூயோர்க் நகரில் அவர் இரு நாள்கள் நின்ற போது, அமெரிக்கரைக் கவர்ந்தன. அவர், மாறுந் தன்மை வாய்ந்தவர்என்பதை வலியுறுத்தின. அவர் கூறினார்:- "நான் விட்டுக் கொடுக்க, சந்து செய்ய ஆயத்தமாகிறேன்; பிரித்தானியருடன் மட்டுமன்றி, இணைப்பு வாதிகளுடனும் தான். நான், ஓர் ஒன்றிணைந்த ஐரிஷ் அரசு தோன்றவும், பிரித்தானியர் விலகிப் போகவும் விரும்புகிறேன். நான் விரும்புகிற வேகத்தில் அது நிகழாமல், காலந் தாழ்த்துமானால், நாம் சற்று விட்டுக் கொடுக்கும் - ஈய்ந்து கொடுக்கும் போக்கை மேற்கொள்ளத்தானே வேண்டும்".

இவ்வாறு சொற்களில் ஈய்ந்து கொடுக்கும் பண்பு, அவரது இலட்சியத்துக்கு வெகு நல்ல பயனை அளித்துள்ளது, அவர் எல்லோருக்கும் எல்லாமாய் நின்று காட்டுவது, பலருக்கு ஐயத்தைத் தோற்றுவித்துள்ளது; உண்மையில், ஜெறி அடம்ஸ் நிற்கும் தானம் எது? சமாதானம் செய்து வைப்பது என்ற கடின பணியைச் செய்யும் கணம் வரும்போது, அவர் எங்கே நிற்கிறார்? அவர், திட்டமிட்டே தெளிவின்றிக் காட்டும் முகம், சமாதான முன்னேற்ற நம்பிக்கையைப் பாழ்படுத்தக்கூடும். ஹீத்றோவில் வெடிக்காத குண்டு போலவே, அவரது தெளிவில்லாமையும் மாறுபட்ட செய்தியை வெளிப்படுத்தலாம்.

ரைம், மார்ச் 28, 1994

# உள் இருந்து ஒரு பார்வை

சரஜீவோவிலிருந்து:
ஸ்லாற்கோ டிஸ்டாறெவிக்
எழுதியதை
மொழிபெயர்த்தவர்:
அம்மியேல் அல்கலே.

**சரஜீவோ பத்திரிகையாளர், "நகர் திறக்கப்பட்டு விட்டது" எனப் பிரமாதமாகப் பேசப்படுவது பற்றி ஐயந் தெரிவிக்கிறார்.**

சரஜீவோவினிருந்து முதலில் வந்த செய்திகள், வீதிகளில் வெறும் ட்றாம்கள் ஓடுவதைப் பிரமாதப்படுத்தின. பின், செய்திகளைக் கொட்டை எழுத்துகளில் போடுவதில், திறமைமிக்க பத்திரிகையாளர், சரஜீவோ முற்றுகை முடியுந் தறுவாயில் உள்ளதுவெனப் புளுகினர். அவதானமாக எழுதும் ஓரிருவர் மட்டும், பொதுமக்களும், மனிதநேய உதவி வழங்குவோரும் போய் வர, சில குறுக்குப் பாதைகள் திறக்கப்பட்டன என்று எழுதினர். 'அவசரம்', 'முக்கியமானது' என்று பேசுவதற்கு, இது தகுதியானதோ?

எமது கதையை அறிந்தவர்க்கே, இந்த நகர்த்திறப்புப் பற்றிய செய்தியிலுள்ள அங்கதச் சுவை விளங்கும். இதைப் பெரிதுபடுத்துவதால் இலாபம் பெறத்தக்க இயந்திரம், நன்றாகவே இயங்குகிறது. உண்மை நிலையை விளங்க, சரஜீவோவின் புவியியலமைப்பை நன்கு கவனிக்க வேண்டும். முன்னர், ஒன்றில் ஐ. நா சேர்பியப்படை பாதுகாப்பிலுள்ள விமான நிலையத்தின் ஓடுபாதை வழியே இரவிற் போகலாம்; அல்லது, அதன் கீழ், நிலச்சுரங்கப் பாதை வழியமைத்து, பொஸ்னியர் போக முயலலாம். உணவும், இவ்வழியே தான் வந்தது. அப்பாதை உண்டு என்பது, பலர் அறிந்த இரகசியம். மக்கள், படையில்லாத இடங்களுக்கு இவ்வழியே சென்றனர். பொஸ்னிய வெடிமருந்து உற்பத்தி ஸ்தாபனங்களிலிருந்து, இதற்கூடாகவே சரஜீவோவுக்கு ஆயுதங்கள் வந்தன.

மிக முக்கியமான வேலையிருந்தால் மட்டுமே, சிலர் இந்த சுரங்கப் பாதையால் 30 கி. மீ. சென்று விசோகோ என்ற இடத்தை அடைவர். அங்கும், சரஜீவோ போலவே வாழ்க்கை நிலை. ஆகவே, அங்கு சென்றாலும் பெரும் பயன் ஏதும் கிடையாது. அது போலவே, இப்போது ட்றாம் கார் ஓடினாலும், நாம் ஒரு சிறைக் கூடத்திலிருந்து மற்றொன்றுக்குப் போக உத்தரவு கிடைத்துள்ளது என்ற திருப்தி மட்டுமே. ஆனால் பயன் என்ன? நாம் இன்னும் சிறைக் கைதிகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முஸ்லீம் சிறைக்காவலாளி மாறிய போது!!!

ஒன்று மட்டும் நிச்சயம். ஆயிரக் கணக்கான சரஜீவோ மக்கள்-முக்கியமாகப் பெண்களும், குழந்தைகளும்—காசும், பிரயாண ஆவணங்களும் இன்றி, உலகெங்கும் அலைந்து திரிகிறார்கள். குழந்தைகள் படிக்கப் பாடசாலைகள் இல்லை. அவர்கள் திரும்பிவர நினைக்க மாட்டார்கள். நகரம் வெளியுலகத் தொடர்புக்குத் திறந்து விடப்பட்டது எனப் பெரிதாகப் பேசுவோர், அகதிகள் மீண்டு வருவதைப் பற்றி ஏதும் சொல்லக் காணோம். சரஜீவோ வாசிகளுக்கு, சுதந்திரமாகப் போய்வரக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதா? இல்லவே இல்லை.

யுத்தம் தொடங்கிய போது, காபாவிகா என்ற பகுதியைச் சேர்பியர் கைப்பற்றினர். அதனைச் சரஜீவோவுடன் இணைக்கும் பாலம், சகோதர ஐக்கியப் பாலம் என்று பெயர் பெறும் அதனை மீண்டும் ''திறந்'' தாயிற்று என்று புளுகப் படுகிறது. டசின் கணக்கான சரஜீவோ வாசிகள் அங்கு குழுமி, நாட்கணக்கில் காத்து நின்று, பாலத்துக்கு அப்பால் உள்ள தம் இல்லங்களுக்குப் போக முயன்றனர். முன்னர், அங்கு புதிதாக வந்த சேர்பியர், தம்மைக் கத்தி, துப்பாக்கி முனையில் துரத்தி விட்டாலும், தம் வீடுகளைப் பார்ப்பதற்காகவே, ஆசை அவ்வளவு கொண்டு வந்து கூடினவர்கள். கண்முன்னே தமது இல்லங்களிற் புதிதாக இடம் பிடித்துக் கொண்டவர்களின் முகங்களைக் கூட, இங்கிருந்து பார்க்கிறார்கள். வேலிப்பாய்ச்சல்களை நோக்குகிறார்கள். அவ்வளவு அருகிலே இருந்தும், பாலத்தைத் தாண்டிச் செல்ல அனுமதி கிடைக்கவில்லையே!

பாலம் ஆயத்தப்படுகிறது. விரைவில், இப்பாலிருந்து அப்பாற் போகலாம் என்று சொல்லிக் கொள்கிறார்கள். இன்னும் ஆயத்தமாக வில்லையோ!? பஸ்ஸில் போனோரினதும், பாலத்தைக் கடப்போரினதும் பெயர் அட்டவணை, இருபக்கத்து அதிகாரிகளுடைய அங்கீகாரத்தை முன் கூட்டியே பெற வேண்டும் என்கிறார்கள். இரு பகுதியாருக்கும் இடைஞ்சல் இல்லாத சிலர் மட்டுமே, போய்வர அநுமதி கிடைக்கலாம். தமது வீடுகளை விட்டுத் துரத்தப்பட்டவர்கள் மீண்டும் மீண்டும் சென்றால், தமது சொந்த இல்லங்களைத் திரும்பப் பெற முயல்வார்கள். அப்போது, அந்த வீடுகளில் இடம் பிடித்துக் கொண்டவர்களை அதிகாரிகள் வெளியேற்ற வேண்டிவரும். அதற்கு, அவர்கள் ஆயத்தமில்லை எனவே, உரிமை கோராத மனிதருக்கு மட்டும் போய் வர வாய்ப்புக் கிடைக்கலாம். சேர்பியர் போருக்குப் போனது, கொள்ளை யடிக்கவே (தேசாபிமானத்தால் அன்று) என்பதை நாம் அறிவோம்,

விமான நிலையத் திறப்பு உடன்படிக்கை அவசரமாகக் கையெழுத்திடப்பட்டதற்குக் காரணம் இருக்கலாம். இரு பக்கங்களிலும் சில பெரிய மனிதர்கள், தேசியத் தூய்மையைக் காக்கும் மக்கள் சிலரைப் பாலத்தின் வழியே போய் வர அநுமதித்தால். ''சுத்தப்படுத்தும்'' பணி (வேண்டாத இன மக்களை அகற்றி விடுதல்) சுலபமாக நடக்கலாம். வருங்காலத்தில் தோன்ற இருக்கும் அரசுகளுக்கு, அப்பணி சுலபமாகும் என்று நினைக்கிறார்கள் போலும், சரஜீவோ பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவருடைய பெயரின்படி, அவர் பாலத்துக்கு அப்பால் இருந்திருக்க வேண்டியவர். அவர் சொல்கிறார்:- '' நாங்கள் சிலர், எமது பெயர், குடும்ப உறவுகள் காரணமாக, இருக்க வேண்டிய இடத்தை, விட்டு, இப்பொழுது இருக்கும் இடத்தில் வேண்டுமென்றே இருக்கிறோம் (இப்படியான சதித்திட்டங்களுக்கு இடம் கொடாமல்) என்பதை, அந்த மடையர்கள் அறியார்களே''!

செய்தித் தொடர்புச் சாதனங்களின் விளையாட்டு வேகம் கூடியுள்ளது. நிலைமை சீர் திருந்திவிட்டது எனத் தம்பட்டமடிக்க ஓர் உதாரணம்:– சரஜீவோ காற்பந்து விளையாட்டுக் குழு '' நேச நாடுகளில் '' விளையாடிவிட்டு, மீண்டும் தம் இருப்பிடம் திரும்ப எவ்வித சிரமமும் இருக்கவில்லை. ஆனால், நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள், தொழிற்றிறன் மிக்கோர்' நிபுணர்கள், நகரத்தின் பிரதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைகளுக்கு வெளியே செல்ல முயல்கிறவர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. ஆயிரக்கணக்கான காயம் பட்டோர், நோயாளிகள் தாங்கள் சுகம் பெறக்கூடிய இடங்களுக்குப்போக இயலவில்லை. பதினாயிரக் கணக்கான சரஜீவோ அகதிகள், தம் நகருக்குத் திரும்ப முடியவில்லை.

ஆயினும், காற்பந்துக்குழு, அதிகாரிகள் மார்க்கத்திற் சுலபமாக உள்ளே வர எப்படி முடிந்தது? ஒருவேளை, சரஜீவோவின் துயரங்கள் எல்லாம் தீர்ந்தன. மக்கள் காற்பந்து விளையாட்டுப் பார்க்கப் போகிறார்கள் என்ற பிரச்சாரத்துக்கு, நூற்றுக் கணக்கான பத்திரிகை நிபுணர்களை அழைத்து நாடகமாட, ஒரு திட்டம் போட்டு விட்டார்களோ? கடந்த இரண்டு ஆண்டுகளாக, அந்த விளையாட்டரங்கின் பயிற்சி மைதானங்கள் சவக்காலைகளாக, ஆயிரக்கணக்கான புதை குழிகளுடன் காணப்படுகின்றனவே! நிச்சயமாக அப்பகுதி, பத்திரிகையாளர்களுக்குக் காட்டப்பட மாட்டாது என்பதை, நான் உறுதியாகச் சொல்வேன்.

''சரஜீவோ திறந்து விடப்பட்டு விட்டது'' என்ற கட்டுக் கதையால், யாருக்கு இலாபம் கிடைக்கும்? சர்வதேச இராஜதந்திரம், தீமையின் சக்திகளை அழித்து விட்டது என்று நிரூபிக்க ஆசைப்படுவோருக்கு நன்மை கிடைக்கும். உலகம், சரஜீவோவில் எல்லாம் நன்றாக நடக்கின்றன என நினைக்கலாம். நகரைப் பிரிக்கத் தீர்மானித்து விட்டவர்களும், பொஸ்னியாவும், ஹெர்ஸ கோவினாவும், தாம் எதிர்பார்த்த பயன் புலத்தில் விளையக் காண்கிற படியால் மகிழலாம். ''அவர்களுடைய மண்ணில்'', சேர்பிய அதிகாரம் ஏற்கனவே உறுதியாகிவிட்டது. சேர்பியக் குடியரசு என, தன்னைத் தானே பிரகடனம் செய்து கொண்ட பிரதேசமும், பொஸ்னியா, ஹெர்ஸகோவினாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமும் சம அந்தஸ்து உடையனவாகக் கணிக்கப்படுகின்றன.



நகரைப் பார்வையிடல்;- தலைநகரை நிமிர்ந்து நோக்கும் குன்றுகளில் இருந்து, சேர்பிய வீரர் காவல் புரிகிறார்கள்.

அவல நாடகத்தின் அதிக மோசமான பகுதி, ஐரோப்பாவின் இதய ஸ்தானத்தில் மீண்டும் போர்க் குற்றங்கள், மனிதப் படுகொலைகள், பாசிஸம் ஆகியன ட்ட பூர்வமாக்கப்பட்டுள்ளன என்பதாகும்.

பாவம், சாதாரண சரஜீவோ நகரவாசி, அந்தக் காற்பந்து விளையாட்டைப் பார்க்கப் போய், யார் உயர்ந்த இடம் பெறுவான் என்று காண்பதைத் தவிர, வேறு வழியில்லை. பிறகு, ஆறுதலாகப் பாலத்தடிக்குப் போய், அப்பால் நிற்கிறவர்களோடு, ''ஆகா! எவ்வளவு பெரிய வரலாற்று முக்கியமான விளையாட்டு'' என்று பேசிவிட்டு வரலாம்.

எமது விளையாட்டுக்குழு, ஐ. நா. பாதுகாப்புப் படைக்கு எதிராக விளையாடியது -அதாவது, உலகுக்கு எதிராக, ''நாம்'' பரவாயில்லை. ஆனால், என்ன செய்வது? சரஜீவோ, செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் பண்புக்குத் தொன்று தொட்டுப் போர் போனது. அதுதான் அதன் பலவீனம், இன்றும், வந்த விருந்தாளிகளுக்கு உற்சாகம் ஊட்ட, சரஜீவோ பணம் செலவிடுகிறது போலும்.

ரைம், மார்ச் 28, 1994.

## பத்திரிகையாளர்கள் மாநாடு தடைப்பட்டது:

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் உள்நாட்டுச் செய்தித் துறையில் கடமையாற்றுபவர்களும் கூட்டாக வியட்நாம் தலை நகரில் நடத்தவிருந்த மாநாடு இறுதிநேரத்தில் கைவிடப்பட்டுள்ளது. வியட்நாம் அரசு முட்டுக்கட்டை போட்டதே இதன் காரணம். மேற்கு நாட்டுப் பத்திரிகையாளர்களின் வருகையால் இரு கட்சி ஜனநாயகம், தணிக்கையற்ற விமர்சனம் போன்றவை நாட்டில் பரவிவிடும் என்று அரசு அஞ்சுகிறது. நாட்டில் தனது பிடியை இறுக்கிப்பிடிக்கும் வியட்நாமிய அரசு மாற்றங்களை அனுமதிக்கப் போவதில்லை என்பது வெளிப்படை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜதந்திரம் :

# மீண்டும், நிழல்களின் இருட்டிலே

**ருஷ்ய உளவாளி ஒருவனை அமெரிக்கா நாடு கடத்தியதுடன், மீண்டும் பழைய தீய கெடுபிடிச் சமாதான நிலை தோன்றும் அவலம் எழுகிறது.**

1994 மார்ச் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வோஷிங்ரனிலிருந்து புறப்பட்ட ஒரு விமானத்தில் மத்திய உளவு நிறுவனத்தின் (சீ. ஐ. ஏ) இரு உயர் தர அதிகாரிகள் மொஸ்கோ சென்றனர். அவர்களது பயணத்தின் நோக்கம், மொஸ்கோவுக்காக உளவு பார்த்த குற்றம் புரிந்தவரான அல்ட்றிச் அமிஸ் என்ற அமெரிக்கனைக் கைது செய்த பின்னர், ஏற்படும் இராஜதந்திரச் சிக்கல்களைக் குறைப்பதே. ருஷ்யரிடம் முன் ஒருமுறை, அவர்களுக்காக அமெரிக்காவில் உளவு பார்ப்போர் தொகையை அரைவாசியாகக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்கப்பட்டபோது, ருஷ்யர் இணக்கம் தெரிவித்திருந்தனர் என்பதை நினைவூட்டி, அந்த வாக்குறுதியை நிறைவேற்றும்படி கேட்டனர். நியூயோர்க் நகரிலும், சான்பிரான்சிஸ்கோவிலும் இயங்கும் ஒற்றர்களை இனங்காண உதவவேண்டும் என்பதும், பழைய வாக்குறுதியின் ஓர் அம்சம். எல்லாவற்றுக்கும் மேலாக, அலெக்சாந்தர் லைசெங்கோ என்ற ருஷ்யப் பிரதம உளவாளியை ருஷ்யா தானாகவேஅழைத்துக்கொள்ள வேண்டும்.



பில் கிளின்ரனும் பொறிஸ் யெல்சினும் பள்ளிச் சிறார்களின் மத்தியில்.

சென்ற குழு, வெறுங்கையுடன் திரும்பியது. ருஷ்யா ஒத்துழைக்க மறுத்தது. நேரிய வழியில், கிளின்ரன் நிர்வாகம் செயற்பட்டது. மார்ச் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ருஷ்ய உளவாளி லைசெங்கோவை விரும்பத்தகாதவன் எனக் குறிப்பிட்டு, ஏழு நாள்களில் அமெரிக்காவை விட்டுப் புறப்பட வேண்டும் என அறிவித்தது.

கடந்த 45 ஆண்டுகளாக ருஷ்யாவையும், அமெரிக்காவையும் பிரித்து வைத்த பரஸ்பரக் குற்றச்சாட்டு, சந்தேகம், போட்டி என்பன, மீண்டும் தலைதூக்குகின்றன என்பதற்கு, இந்த இராஜதந்திர நாடகம் அடையாளமா? முந்திய ''கெடுபிடிப்போர்'' யுகத்து இருகட்சியாரும், இன்னும் முறையான நட்புறவு வழிக்குத் திரும்பவில்லை என்பதைச் சுட்டுகிறது இச்சம்பவம். ருஷ்யச் சீர்திருத்தங்களை முற்றாக ஆதரிக்கும் கிளின்ரனின் அயல்நாட்டுக் கொள்கை, ருஷ்யாவில் யெல்சினின் சீர்திருத்தங்களுக்கு முட்டுக்கட்டையிடும் பழைய கடும்போக்குடையவர்களது செயற்பாடுகளால் ருஷ்யா, ஜனநாயகத் தாராளக் கொள்கைக்கு வரும் என்ற நம்பிக்கை தளர்கிறதா?

கிளின்ரன், தன் உறவை அதிகக் காயப்படுத்தாமல், ஒரு ருஷ்யனை நாடுகடத்திய காரியம், அமெரிக்கக் காங்கிரஸ் பாராளு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றத்தில் உள்ள கிளின்ரன் விமர்சகர்களைத் திருப்திப்படுத்தப் போதாது. ஆயினும், ருஷ்யா ஜனநாயகப் பாதைக்கு வருவதற்கு, தான் பூரண ஆதரவு தருவதில் மாற்றம் எதுவும் இல்லை என அறிக்கை விட்டார் கிளின்ரன். ''யெல்சினின் மாற்றம் நாடும் போக்குக்கு, நமது ஆதரவு இச் சிறு சம்பவத்தாற் குறைந்து விடாது'' என்றார்.

யெல்சினுக்கு இந்தச் சம்பவம், ஓர் அபாயகரமான சந்தர்ப்பத்திற் தலையிடி கொடுக்கிறது. கடும் தேசியப் போக்குடைய விளாடிமீர் ஸிரினோவ்ஸ்கியும், பாராளுமன்றத்தில் அவரது ஆதரவாளர்களான பழைமை பேணுவோரும், பொதுவுடைமைவாதிகளும் யெல்சினுக்கு இடைவிடாத எதிர்ப்பை உருவாக்கி வருகிறார்கள். அதனால், கிளின்ரனுக்குச் சென்ற ஜனவரி மாதம் அளித்த பெரிய வாக்குறுதிகளைப் பேண முடியாமற் பின் வாங்குகிறார் யெல்சின். 1993 இல் யெல்சினுக்கு எதிராகக் கிளம்பிய எழுச்சியின் தலைவர்களான ருஸ்லன் கஸ்புலற்றோவ், அலெக்சாந்தர் ருட்ஸ்கோய் ஆகிய இருவரையும் மன்னித்துவிடும்படி, பெருவாரியான வாக்குகளாற் பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. அதேபோல, 1991 இல் கோர்ப்பச்சேவுக்கு எதிராகச் சதி செய்தவர்களையும் விடுவிக்கும் தீர்மானமும் நிறைவேறியுள்ளது. யெல்சின் ஆதரவாளர், பாராளுமன்றம் தன் அதிகார எல்லையை மீறியதாகக் கருதினாலும், மேற்படி எதிர்ப்பாளர் மார்ச் மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை விடுதலை பெற்றனர். எனவே, ஜனாதிபதி மீது ருஷ்யப் பாராளுமன்றம் முன்னணித் தாக்குதலை நடத்த ஆயத்தமாயுள்ளது என்பது தெளிவாகிறது.

இந்த உளவு விவகாரம், ருஷ்யா திருந்திவிட்டது என கிளின்ரன் நிர்வாகம் நம்புவது, வெறும் பகற்கனவே என்று நிரூபித்துவிட்டது என்று வோஷிங்ரனில்சில அவதானிகள் கருதுகிறார்கள். சர்வதேசச் சமாதானத்துக்கான கா(ர்)ணேஜீ அமைப்பிற் பணிபுரியும் முதுநிலைஅறிஞர் போல் கொபிள் கூறுகிறார்:-''யெல்சின் நல்ல மனிதன் என்று', அப்பாவி அமெரிக்கன் நினைப்பது பிழை'' என்று.

அமெரிக்கச் சட்ட ஆக்கத் துறையினர், கிளின்ரனது வெளியுறவுக் கொள்கையிலிருந்து தாம் மேலும் விலகிச் செல்கின்றனர். (வலு வேறாக்கக் கொள்கைப்படி அமைந்த அமெரிக்க அரசியலில், சட்டசபை அங்கத்தவருக்கும், நிர்வாகத்தினருக்குமிடையே இடைவெளி கூடுவது வழக்கம்.) அமெரிக்க மேற்சபையான செனெற்றில் (மூதவை) . குடியரசுக் கட்சித் தலைவரான பெஸ்டோல் கூறுகிறார்:– ''இவ்விவகாரத்தால், எமக்கும் புதிய ருஷ்யக் குடியரசுக்குமிடையில் ஏற்பட்டுள்ள தொடர்பு பாதிக்கப்படும்; ருஷ்யாவில் நிகழ்ந்தவை, சர்வதேச விவகாரப் புவித்தோற்றத்தை நிரந்தரமாகவே மாற்றி விட்டன என நம்பியது பிழை; நாம் அவசர முடிவுக்கு வந்துவிட்டோம். ருஷ்ய அரசாங்கம், அமெரிக்க உளவு முயற்சிகளை ஊடுருவ முயல்வதை நிறுத்தவேண்டும். மீண்டும் இப்படியான உளவு முயற்சிகள் கண்டு பிடிக்கப்பட்டால், கிளின்ரன் நிர்வாகம் அடுத்த ஆண்டு ருஷ்யாவுக்கு வழங்க இருக்கும் 900 மில்லியன் டொலர் உதவியை நிறுத்த வேண்டும்'' என. நிர்வாகத்தின் புதியவெளிவிவகார உதவிச் செயலர் ஸ்ற்றோப் ரல்போற்றின் நியமனத்தை எதிர்த்து, செனற் சபையிலுள்ள குடியரசுக் கட்சியினர் 32 பேர் வாக்களித்து உள்ளனர்.

மேற்கூறிய டோலின் அறிக்கை போன்றவை, ருஷ்ய ஜனநாயகத்தை ஆதரிப்பதனாற் கிடைக்கும் எல்லையற்ற இலாபத்தைக் கருத்திற்கொள்ளாது, அமிஸ் விவகாரம் போன்ற சிறு நிகழ்ச்சியைப் பெரிதுபடுத்துகின்றன என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது. பிரதிநிதிகள் சபை உளவுத்துறை ஆலோசனைக் குழுவின் தலைவரான, கன்சாஸ் மாநிலப்பிரதிநிதி கூறுகிறார்:- ''2 நாள், கெட்ட சம்பவங்களை வைத்துக் கொண்டு, ருஷ்ய உதவியை நிறுத்துவது, பிழையான வழியிற் செல்வதாகும். அமிஸ் செய்த நட்டத்திலும் மிகப் பெரிய நட்டம், இந்த வழியால் நமக்குக் கிடைக்கும். மயிரிழையில் நிற்கும் ருஷ்ய அமெரிக்க உறவு, இந்தப் போக்கினால் மேலும் பாதிக்கப்படும்'' என.

மொஸ்கோவில் ருஷ்ய உளவு அதிகாரிகள், அமெரிக்காவின், ''உன்னிலும் நான் சுத்தமானவன்'' என்ற உருத்திராட்சப் பூனைப் போக்குக் குறித்து, கண்ணை உருட்டி விழிக்கின்றனர். பொஸ்னியாவில் மேற்கொண்ட ருஷ்ய இராஜதந்திர வெற்றியிற் பொறாமை கொண்டே, அமிஸைக் கைது செய்ய, அமெரிக்கர் இந்த நேரத்தைத் தேர்ந்தெடுத்தனர் என்கின்றனர். ருஷ்யர், அமிசுக்குப் பணம் கொடுத்து, அமெரிக்காவில் இரு பக்கங்களிலும் உளவு பார்ப்போரின் பெயர்ப்பட்டியலைப் பெறமுயன்றதைப் பகிரங்கப்படுத்தியதால், தானும், உளவு பார்த்தல் விடயத்திற் குற்றமற்ற, சும்மா நிற்கும் மனிதன் அல்லன் என்பதை, அமெரிக்கா வெளிப்படுத்தி விட்டது. யெல்சினின் பேச்சாளர், அமெரிக்கா மீண்டும் பழைய 'பனிப்' போர்க்கால உளவியல் முறைகளைக் கடைப்பிடித்து, அவநம்பிக்கையைப் பெருக்கி, மீண்டும் உளவு பார்த்தல் எனும் விசரை அதிகரிப்பதைக் கடுமையாகக் கண்டித்தார்.

அணுக்கதிர் வீச்சுப்போல, அமிஸ் விவகாரச் சாம்பற் படிவு சிலநாள்களில் அடங்கி விடலாம். ஆனால், வருகிற பல மாதங்கள் நிலைத்திருக்கக் கூடிய ஐயம் யாதெனில்,யெல்சினின் வலுத்தளம் மெல்ல அரிக்கப்பட்டு, நீரோட்டத்தில் கரைகிறதா என்பதே. புதிய யாப்பு, அவரது கரங்களுக்கு வலு ஊட்டுவதுபோல் அமைந்தாலும், உண்மையில், ஒவ்வொரு புதிய வாரத்திலும் புதுப்புதுச் சிக்கல்களால் அவர் சூழப்படுகிறார். மார்ச் 3ஆம் திகதி, ருஷ்ய

PUBLIC LIBRARY JAFFNA
CHUNDIKULI BRANCH LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஷ்டியின் ஆண்டு அறிக்கை உரையில், சிக்கலும், கடினப் போக்குமுள்ள தம் எதிர்க்கட்சியினரைத் திருப்திப்படுத்தும் போக்கும் வெளிப்படாவிட்டாலும், உள்நாட்டில் பொருளாதாரச் சீர்திருத்தங்களில் மிதமான போக்கையும், வெளியுறவில் வலிமையைக் காட்டும் போக்கையும் அவர் கடைப்பிடிக்கவேண்டும் என்ற தொனி காணப்பட்டது. ஜனநாயகம், மனித உரிமைகள் பற்றிய விடயங்களை இறுக்கிப் பேசுவது தவிர்க்கப்பட்டது. முன்போல, சுதந்திரச் சந்தைக்கு கொள்கைகளை வலியுறுத்தாது, '' பலமான அரசுக்கருவி '' மூலம் பொருளாதாரத் திறமையைக் கொண்டுவர வேண்டும் என வற்புறுத்தினார். சீர்திருத்தவாதிகள், மத்திய அரசின் கட்டுப்பாட்டைக் குறைக்கும்படி குரல் எழுப்புவதற்கு மாறான போக்கு இது.

அவர் பேச்சு, மிகப் பழைமை பேணும் போக்கில் அமைந்திருந்ததால், கிரெம்ளின் பளிங்கு மண்டபத்துக்கு வெளியே நின்ற பொதுவுடைமைவாதிகள் பலர் கேலியாகச் சொன்னார்கள்:–' யெல்சின், தமது மேடைப் பேச்சுக்களிலிருந்து பல விடயங்களைத் திருடி, தமது கொள்கை உரையைப் படைத்துள்ளார்'' என்று. ஆனால், பாராளுமன்றத்தின் உள்ளே, மிக மெதுவான கை தட்டல் மட்டுமே கிடைத்தது. எனவே, யெல்சின் மூச்சுவிட்டு ஆறுதல் பெறத்தக்க அளவு ஆதரவு, அவருக்கு இல்லை என்பது தெரிகிறது. கோர்பச்சேவ் போல, இவரும் வலதுசாரிகள் பக்கம் தலைசாய்ப்பது, மேற்கு உலகுக்கு மன உளைவை உண்டாக்கியுள்ளது. எனவே, கிளின்ரன் தொடர்ந்து அவரை ஆதரிக்க முடியுமா? என்பது கேள்விக் குறியே. யெல்சின், எதிர்ப்பாளரைத் திருப்திப்படுத்த அளிக்கும் பெருவிலை போலும், இத்தலைசாய்ப்பு. ஆனால், அந்த எதிர்ப்பாளரோ, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை சிறிதும் இன்றி, ருஷ்யாவைச் சீர்திருத்தப்பாதையிற் செல்லவிடாமல், இழுத்து நிறுத்தி விடவே ஆசைப்படுகின்றனர்.

*ஜேம்ஸ் கார்னே, ஆன். எம். சைமன்ஸ், மார்க் தொம்சன் ஆகியோர் வோஷிங்ரனிலிருந்தும், யூரீஸறக் கோவிச் மொஸ்கோவிலிருந்தும் எழுதியவற்றைத் தொகுத்து, கெவின் :பெடாக்கோ எழுதிய கட்டுரையின் சாரம்.*

*'' ரைம் '' - மார்ச், 7, 1994*

---

# பழைய தலைமுறையின் சமூகத் தூண்களுக்குத் துரோகம் இழைக்கப் படுகின்றது.

கலீனா லியோனோவா ஒட்டி வைத்த பழைய நினைவுப் புத்தகத்தின் இடையிற் கரப்பான் பூச்சிகள் ஊர்கின்றன. புகைப்படங்கள் வெளிறி விட்டன. 1955 இல், புதுமணத் தம்பதிகளான அவளும், கணவரும் கருங்கடல் ஓரத்தில், ஒடெஸ்ஸாவுக்கு அருகில் உல்லாசமாகப் பொழுது போக்கினர் உணவு விடுதியில் உணடு, இசைகேட்டு மகிழ்ந்தனர். உலகப்போரின் துன்பத்தினின்றும் ருஷ்யா மீண்டு விட்டது. இனி உன்னதமான எதிர்காலந்தான் என்ற நம்பிக்கை சுடர்விட்டது. இப்பொழுது கலீனா 72 வயதினள்; கனவுகள் சிதைந்துவிட்டன. இரண்டு அறைகளை உடைய வீட்டில் மகன், மருமகள், பேத்திமாருடன் வசிக்கிறாள். அவர்கள், ஏசியும், பேசியும், தாங்கள் இல்லாத போது சமயலறையை உபயோகிக்க அநுமதித்தும், அவளது சோகத்தை அதிகரிக்கச் செய்கின்றனர்.

ஸ்ராலினின் கொடூர ஆட்சிக் காலத்திலும் சலியாத விவசாயிகள்— உலகியல் ஞானமும், சோஷலிச இலட்சிய வாதமும் ஒன்று திரண்டு, ருஷ்ய சமுதாயம் என்ற கப்பலுக்கு நங்கூரமாய்த் திகழ்ந்த அரிய தலைமுறையினர், தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுக்கு, '' அயராது உழை; அதிகாரத்தில் உள்ளோரை மதி; உன்னை நீ கவனி; முதியோரைக் கனம் பண்ணு '' என்று போதித்து, புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்பியவர்கள். பொருள் வாங்கும் கியூ வரிசையிலும், வீட்டுக் கருமங்களிலும் முன்னின்று உழைத்தவர்கள், சந்தை விழுமியங்களின் தாக்குதல்களுக்கு ஆளாகிய ருஷ்யாவில், இன்று அவர்கள் புதிய, இதயமற்ற உலகிற் சஞ்சரிக்கிறார்கள். 15 ஆண்டுகள், கலீனாவின் ஓய்வுக் காலம் சுபீட்சத்துடன் விளங்கியது. மாதம் 111 றூபிள் பணம், நிறைய உணவு, உடை எல்லா வசதியும் கிடைத்தன.

இப்போது 53,000 றூபிள்– முன்னைய தொகையிலும் 500 மடங்கு– பெற்றுங்கூட, உணவு வாங்கியபின் ஒரு காசும் மிச்சமில்லை. இறக்குமதி செய்த இனிப்பு வகைகள் பக்கத்துக் கடையில் விற்றாலும், வாங்க இயலாது. பண்டங்களை அநியாய விலைக்கு விற்போர் ஆடம்பரமாக உலாவரும் அதே வேளையில், தொழிலாளிகள் தங்களது சம்பளத்தைப் பெற மாதக் கணக்கிற் காத்திருக்க வேண்டியிருக்கிறது. சம்பளம் குறைந்து கொண்டே வருகிறது. ஒரு தையற்காரி, ஸ்ராலின் காலத்தில் எல்லாம் வசதியாயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தன என்கிறாள். பொருளியல் அறிஞரும், பெண் பாராளுமன்ற உறுப்பினருமான ஒலெக்பொகொமொலோவ் என்பவர் கூறுகிறார்:— ''அரசாங்கத்தில் இரக்கமற்ற இளையவர்கள் இருக்கிறார்கள்; கற்பனைக் கதைகளைப் படிக்கிறார்கள்; நிஜ வாழ்வுபற்றி ஏதும் அறியார் என்று.''

கலீனாவின் வாழ்வை, மாதிரிக்கு எடுத்துக் கொள்ளலாம், தந்தை உக்ரேன் பஞ்சத்தில் மடிந்தார். அவளுக்கு அப்போது வயது 11. தாய் இறந்து, 6 ஆண்டுகளுக்குப் பின் இது நிகழ்ந்தது. ''அப்பா, புல்லைத் தின்றால் உயிர் தப்பி இருப்பார். ஆனால், வயிறு சரியில்லை. எனவே இறந்துவிட்டார்'' என்கிறாள் அவள். கலீனாவின் கணவன் ஏற்கனவே 2 குழந்தைகளுக்குத் தந்தையாகி முதல் மனைவியை இழந்தவர். அவள் அவனை, காதலித்து மணக்கவில்லை. இரும்புத்தகடு விழுந்து, விமான உற்பத்தித் தொழிற்சாலையிற் காலை இழந்து விட்டதால், உயிர்வாழ ஓர் இடம் தேவைப்பட்டு, மணம் செய்தாள். தனியுடைமை வந்தபின், வீடுகள் பெறுவது பொன்விலை ஆகிவிட்டது. இளவயதினரின் வீடுகளை 20,000 டொலர் கொடுத்தும், வீடு சட்டும் கம்பனிகள் வாங்குகின்றன. முதியோரை, இறுதிவரை பராமரிப்பதாகக் கூறி, சந்தை விலையிலும் மிகக் குறைவாகக் கொடுத்து வாங்கியபின், மெல்ல அவர்களைக் கைவிட்டு விடுவர். ஒரு சட்டத்தரணி சொல்கிறார்:- ''அவள் காட்டில் ஓநாய் போலத் தன்னந்தனியே வாழ்கிறாள். கோடிபொன் கொடுப்பதாக நடித்து ஏமாற்றி, ஆளை அகற்றி விட்டார்கள். பாவம் ஏமாந்துவிட்டாள் என.''

கலீனா சற்று அதிர்ஷ்டசாலி. சில ஆண்டுகளுக்கு முன் கணவன் இறக்க, அவள் தன் மகனின் ஓர் அறை இல்லத்தைவிட்டு வந்து, தன் இரண்டு அறை வீட்டில் இருக்கச் சம்மதித்தாள். மகன், இறுதிவரை அவளைக் காப்பாற்றுவதாக வாக்களித்தான். ஆனால், அவன் எதிர்பார்த்தபடி, அவள் விரைவில் இறக்கவில்லை. இப்போது, அவளிருக்கும் பகுதியையும் கேட்கிறான். அவள் குடியிருப்பது, உடை உலர்த்தும் அறை. அதில், ஒரு சமயப் பிரதினம் தொங்குகிறது. பாண் பெட்டியில் ஈக்கள் மொய்க்கின்றன. மகனும் இவளுடைய அறையில்தான் வசிக்கிறான். மருமகளும், இருபெண்களும் மற்ற அறையில். மாமியை மருமகள் அடிப்பாள். வீடு கிடைப்பது நகர்ப்புறங்களில் அரிது. மணஞ்செய்த சோடிகள், தத்தம் பெற்றோருடன் பத்து ஆண்டுகள் வசிப்பதும் சாதாரணம். இளைஞர்கள் வெறுப்புணர்ச்சியால் பாட்டன், பேத்தியை நிந்திக்கின்றனர். ஒரு சமூகவியலாளர் கூறுகிறார்:- ''குடும்பம் என்று கட்டு உடையும் அளவுக்குச் சமூகப் பிரச்சனை வளர்ந்துவிட்டது. பெற்றோரைப் பேணல் முதலிய, சமூக நல விழுமியங்களை இழந்து வருகிறோம்'' என்பதாக.

கலீனா, பொதுவுடைமைக் கட்சி அங்கத்தவராய் இருக்கவில்லை. ஆனால், ஏதோ ஒரு பெரிய பொருளின் சிறு கூறாய். அதை உணர்ந்தாள். அவள் பணியாற்றிய விமானக் கம்பனி மொஸ்கோவிலிருந்து ஸ்ராலின் கிறாட்டுக்குப் போர்க்காலத்தில் மாற்றப்பட்டபோது, அவள் அரச கட்டளைக்கு அமைந்து சென்றாள். ''முன்னர், ஒரு சமூகம் இருந்தது. இப்போது நான் ஒண்டிக்கட்டை. ஒடெஸ்ஸாவுக்குப் போக இயலாது. சகோதரன் இறந்து விட்டான். மேலும், ஒடெஸ்ஸா உக்ரேனில் உள்ளது. இன்று, உக்ரேன் வேறு தேசம்.'' கலீனா, மகனைவிட்டு விலகி விட விரும்புகிறாள். அயலவன் ஒருவன், அவள் தன் இல்ல உரிமையை எழுதித் தந்தால், தான் அவளைப் பராமரிப்பதாகக் கூறுகிறான்.

> **ருஷ்யா: "என் வாழ்வில், எல்லோரும் என்னைத் துன்புறுத்துகின்றனர்."**

கலீனாவை ஒத்த முதிய தலைமுறையினர் - முன்னொரு காலத்தில் ருஷ்யாவின் மனச்சாட்சி என மதிக்கப்பட்டோர் - இன்று குரல் இல்லாதவர்கள். ருஷ்யா, தன் நிலையில் அசையாதிருக்கத் தக்க அற நங்கூரம் போன்றிருந்த அவர்களின் குரல் தேய்ந்து போவதால் இனி ருஷ்யா நங்கூரம் அற்ற கப்பலாய் அலைக்கழியும். அறம் நீங்கி, அல்லவை செய்தார் என்ற அத்திவாரத்தில், நாடு நாடாகுமோ? சமூக அறவிழுமியங்கள் அற்ற இடத்தில், ஈரமில்லாத, வர்த்தகப் போட்டி நிறைந்த திறந்த பொருளாதாரம் என்ற நச்சு மரம் வளருமாயின், பலன் ஏது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்பாட்டிஸ்ரா இயக்கம், மெக்சிக்கோ அரசுடன்
# பேச்சுக்கள் நடத்துகின்றது

ஜனாதிபதி சலினாஸ் கோர்தாரியின் பணிப்புரையின்படி, மெக்சிக்கோ இராணுவம் தனது பதில் தாக்குதல்களை நிறுத்திக் கொண்டதும், நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு அரசு தயாரென்று பிரகடனஞ் செய்ததும் நாம் அறிந்தவை. பெப்ரவரி 21 ஆம் திகதி, சான் கிறிஸ்ரோபெல் டீ லஸ் கசாஸ் நகரில் இரு பகுதிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பமாகின. அரசு சார்பில், விசேஷத் தூதுவர் மனுவல் கமாச்சோ சொலிஸ் பேச்சுக்களிற் கலந்து கொண்டார். சியாப்பாஸ் மலைகளிலுள்ள தங்கள் மறைவிடங்களைவிட்டு, சப்பாட்டிஸ்ரா தேசிய விடுதலை இராணுவத்தின் இருபது தலைவர்கள் கசாஸ் நகருக்கு வருகை தந்திருந்தனர். இவர்கள் சார்பில், தளபதி மார்க்கோஸ் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டார். இருபது பேரும் பூரண ஆயுததாரிகளாகவும், கண் மாத்திரம் வெளியில் தெரியும் வகையில் முகமூடி அணிந்தவர்களாகவும், இருந்தனர். சீர்திருத்தவாதிகள், பிரிவினைவாதிகள் அல்லர் என்பதைக் காட்டுவதற்காக, சம்பிரதாயபூர்வமாக நாட்டின் தேசியக் கொடியை அவர்கள் கைகளில் ஏந்தி இருந்தனர்.

பேச்சுக்களைத் தொடக்கி வைத்த மார்க்கோஸ், நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் அரசமைப்பு மாற்றங்கள் செய்யப்படாவிடின், தமது போராட்டம் மீண்டுந் தொடரும் என்றார்.

தேசிய ஜனநாயக மாற்றங்கள் அத்தியாவசியம் என்று அவர் கூறியதை, அரசப் பிரதிநிதி சொலிஸ் ஆமோதித்தார். "அதிகாரப் பங்கீடும், ஜனநாயகமும் எமக்குத் தேவை. சியாப்பாஸ் சம்பவங்கள் விடுத்த சவால்கள் இதுதான்" என்றார் சொலிஸ். பார்வையாளராக இருந்த பத்திரிகையாளர், இரண்டாம் நாள் பேச்சுக்களின் பின், "சியாப்பாஸ்



பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கும் இருபகுதியினரில், போராளிகளின் படம்.

"எமக்காக மாத்திரமல்ல; இந்நாட்டின் ஒடுக்கப்பட்ட எல்லோருக்குமாக நாம் குரல் கொடுக்கின்றோம்".
—தளபதி மா(ர்)கோஸ்

எல்லாவற்றையும் மாற்றி விட்டது. மெக்சிக்கோவில் பாரிய மாற்றங்கள் ஆரம்பித்துள்ளன" என்றார். சகல அதிகாரங்களும் குவிந்த ஜனாதிபதி ஆட்சி முறையும், 65 வருட காலமாக நடக்கும் ஒரு கட்சி ஆட்சியும், ஜனநாயக விரிவாக்கத்தால் மறைய வாய்ப்புண்டு. பொருளாதார மேம்பாடு ஒன்றே நாட்டுக்குப் போதுமானது என்று எண்ணிய அரசுக்கு இது பெரும் ஏமாற்றமே. அரசியல் மாற்றங்களைத் தொடங்கினால், அது எங்குபோய்நிற்கும் என்ற நியாயமான அச்சமும் அரசுக்கு உண்டு.

வெளிநாட்டு வர்த்தகமும் பெருந்தொகையில் வெளியார் முதலீடும், சலினாஸ் கோர்தாரி ஆட்சியில் மெக்சிக்கோவுக்குக் கிடைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளன. இவை, நாட்டில் ஏழைக்கும், பணக்காரனுக்கும் இடையிலுள்ள வித்தியாசங்களைப் பெரிதாக்கியதுடன், நாட்டின் வடக்கிற்கும் தெற்கிற்கும் உள்ள முரண்பாடுகளையும் வெளியாக்கியுள்ளது. பெரும் முதலீடுகளும், தொழிற்சாலைகளும் வடக்கிற் காணப்படுகின்றன. தெற்கு சுரண்டலுக்கும், இன ஒதுக்கலுக்கும் ஒரு களமாகவே இருந்து வருகின்றது. சியாப்பாஸ் மாகாணம், இந்த வகையில் வடக்கு மாகாணங்களுடன் ஒப்பு நோக்கும்போது, மிகவும் பின்தங்கிய பிரதேசம் என்பதில் ஐயமில்லை. செல்வந்த நாடுகளுக்குச் சமமாகக் கருதப்பட்ட இந்தநாடு, மிகக் குறுகிய காலத்தில் கலவரம், கடத்தல், கொலைகள் போன்றவற்றாற் பாதிக்கப்பட்டதற்குத் தகுந்த காரணம் உண்டு. அண்மையில், மெக்சிக்கோ ஈட்டிய செல்வம் மேல் மட்டத்துடன் நின்று விட்டது. அடிமட்டம் வரையும் செறியும் வாய்ப்புக் கிடைக்கவேயில்லை.

சலினாஸ் கோர்தாரி, ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவென, சொலிடாறிற்றி ( Solidarity ) எனப்படும் நிதியத்தை ஆரம்பித்து, தெற்கிற் பெருஞ் செலவுகளைச் செய்துள்ளார். இந்தப் பணத்தின் பெரும் பகுதியை இடைத்தரகர்கள் கைப்பற்றியுள்ளனர். மிகுதிப்பணம், பாரிய நெடுஞ்சாலைகள் போடுவதற்கு விடப்பட்டுள்ளது. இதனால், மக்களின் வறுமை மாறவில்லை. தெற்கில், நிர்வாகமும் நீதி அமைப்புக்களும் மிகவுஞ் சீர்கேடான, ஊழல் நிலையில் உள்ளன. இதை மாற்றுவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வரலாற்று ரீதியாக வடக்கும், தெற்கும் மிகவும் வேறுபட்டவை. 1910-க்கும், 1920-க்கும் இடைப்பட்ட காலத்தில், இரு பகுதிகளும் நெடியதொரு உள்நாட்டுப் போர் நடத்தியுள்ளன. இதன் பயனாகவே, நாட்டின் கட்டுக்கோப்பைப் பாதுகாப்பதற்காக, சர்வாதிகார முறைக்கு நிகரான ஜனாதிபதி ஆட்சி கொண்டுவரப்பட்டுள்ளது. முதலாம் உலக நாடுகள் சபைகளில் மெக்சிக்கோ அங்கத்து

# பொருளாதார மாற்றங்கள் மட்டும் போதுமா?

## வளர்முக நாடுகளுக்கு மெக்சிக்கோ கற்றுத்தரும் பாடம்.

*இவ்வருட ஜனவரியிலிருந்து மார்ச் மாதத்திற்கிடையில், ஒரு பாரிய கிளர்ச்சி. ஒரு வங்கி முதல்வரை ஆட்கடத்தல், இறுதியாக ஒரு படுகொலை என்பன மெக்சிக்கோவில் நடந்து விட்டன. இந்த நிகழ்ச்சிகளுக்கு முன், சர்வதேசப் பொருளியல் நிபுணர்களின் பார்வையில் இந்த நாடு ஒரு கலங்கரை விளக்காகவே தோன்றியுள்ளது. பின்தங்கிய ஆபிரிக்க, ஆசிய நாடுகள் மெக்சிக்கோவின் உதாரணத்தைப் பின்பற்றலாம் என்று அவர்கள் உரைத்துள்ளனர். ஆனால், இன்றைய பார்வையில், பொருளாதார மாற்றங்கள் எவ்வளவு முற்போக்காக இருந்தாலுங் கூட, அடிமட்ட மக்களுடன் அதிகாரப் பங்கீடு செய்யாதிருப்பின், குழப்பம் நிகழ வாய்ப்புண்டு என்பது அறிவியலாளர்களின் கணிப்பு.*



*சியாப்பாஸ் மாகாணத்தில், அரச அதிகாரிகளுடன் வாதிடும் விவசாயிகள். அதிகாரிகள் மீது ஊழற் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது.*

வம் பெற்றபின், ஆட்சி அமைப்புக்களில் மாற்றங்கள் வருமென எதிர்பார்த்தவர்கள் ஏமாந்தனர். ஜனாதிபதி, பழைய முறையில் தனது அரசியல் வாரிசைத் தெரிவு செய்ததே, இதைக்காட்டுகின்றது. நாட்டில் அமைதியின்மை, சியாப்பாசுடன் தொடங்கினாலும், அது சியாப்பாசுடன் முடியப்போவதில்லை.

மக்கள், பி. ஆர். ஐ. கட்சியின் செயற்பாடுகளைச் சந்தேகக் கண்கொண்டு நோக்கத் தொடங்கியுள்ளனர். கட்சி வேறு, அரசு வேறு என்ற நிலையை மக்கள் விரும்புகின்றனர். பி.ஆர்.ஐ.கட்சி தோற்கடிக்கப்பட்டால்தான், ஜனநாயகம் வென்றமைக்குச் சரி என்று, பலரும் எண்ணுகின்றனர். சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்படவேண்டிய அவசியத்தையும், தொலைக்காட்சி போன்ற பிரச்சாரச் சாதனங்கள், கட்சியின் பிடியிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்கிற கோரிக்கையையும் மக்கள் வலியுறுத்தியுள்ளனர். அரசின் சார்பில் பேச்சுக்களில் ஈடுபடும் கமாச்சோ சொலிஸ் ஒரு சந்தர்ப்பவாதி என்றும், இப்பேச்சுக்களைத் தனது சொந்த அரசியல் நலனுக்காகப் பயன்படுத்துவதாகவும், அவர்மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. இவர், ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட கொலோசியோவைப் பகிரங்கமாக விமர்சனம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, மெக்சிக்கோவும், இவ்வுலகும், மார்க்கோஸ் பற்றிய வாழ்க்கை விபரங்களை அறிய விரும்புவது இயற்கையே. இவர் ஒரு வெள்ளை இனத்தவர் என்றும், கவர்ச்சி மிகுந்த கட்டழகன் என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன. பேச்சுக்களின்போது, அவர் நீண்ட நேரம் பிரசங்கப் பாணியில் உரையாற்றும் வழக்கமுள்ளவர் என்பது, இப்போது தெரிய வருகின்றது. சப்பாட்டிஸ்ரா இயக்கத்தினரிற் பெரும்பான்மையானவர்கள் மாயா இந்தியர்கள். இவர்கள், ஒரு திட்டத்தின்படியே மார்க்கோசை மேடை ஏற்றியுள்ளனரென்பது வெளிப்படை. உண்மையான தலைவர்கள், இன்னும் திரைமறைவில் இருக்கின்றனர். திட்டம் நன்றாகச் செயற்படுகின்றது. தனது வசீகரமான உருவத்தாலும், பேச்சாலும், எதிரிகளை வெல்லும் சாமர்த்தியத்துடன் அவர் திகழ்கின்றார். மார்க்கோஸ் என்பது, அவருடைய இயற்பெயரல்ல. இயக்கம் சூட்டிய பெயரென்றே சொல்லலாம். பத்திரிகையாளர்கள் அவரைப் பேட்டி கண்டபோது, அவர் தமது சுயசரிதத்தை இட்டுக் கட்டிச் சொல்வதுபோலத் தோன்றுகிறது. தான் வேறு மாகாணத்தவனென்றும், பட்டதாரி மாணவனாக இருக்கும்போது, இந்தியர்களின் அவலத்தைப் போக்க, அவர்களுடன் இணைந்து கொண்டதாகவும் அவர் சொல்கிறார். இன்று அவர் உச்ச நிலையில் இருப்பது உண்மைதான். சியாப்பாஸ் மாகாண ஆளுநர் பதவி அவருக்குக் காத்திருக்கின்றது. சிலர், அவரை வருங்கால மெக்சிக்கோ ஜனாதிபதியாகவே கணிக்கத் தொடங்கியுள்ளனர். இப்படியாக அவருக்குப் பல பொறிகள் தேடி வருகின்றன. இப்போது, மெக்சிக்கோ நாட்டிற் பெருங்குழப்ப நிலை நிலவுகின்றது. மேற்படி பேச்சுக்கள், இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளன. ஆனால், மெக்சிக்கோ நாடு சீர்பெற வேண்டுமென்றால், சியாப்பாஸ் மாகாணப் பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டியது மிகவும் அவசியம்.

'' நியூஸ் வீக் '', மார்ச் 07, 1994.

# அமெரிக்கப் பெண் பாடகர்கள்

புதிய பாணிகள், குரல்கள், இசைமுறைகள் ஆகியவற்றைப் புகுத்துவதில் பெண்கள் முன்னணியில் நிற்கின்றனர். நாலு முன்னணிப் பாடகர்களின் சுருக்க வரலாற்றை இங்கு கவனிப்போம். லிஸ் (F) பேயர் மாறுபட்ட இசைக் கோவைகளைப் புகுத்திய இவர், தான் பாடும் பாடல்களில் காதல், ஆண்கள் ஆகிய விஷயங்களைப்பற்றி மிகவும் தீவிரமான கருத்துக்களைக் கொண்டுள்ளார். இவருடைய இசையிலும், இவருடைய கருத்துக்களிலும் பொறுமையின்மையும், கடுஞ்சினமும் மேலிட்டு நிற்கின்றன. கிரான்பெரி இசைக்குழு. இக்குழுவில் பாடகராக டொலோறிஸ் ஓறியோர்டன் என்ற பெண்மணி இருக்கின்றார். ஐரிஷ் இனத்தவர்களான இவர்கள் மென்மையான காதுக்கினிய இசையைப் பரிமாறுகிறார்கள். காதற் கவிதைகள் இயற்றிப் பாடுவதில் டொலோறிஸ் அண்மைக் காலத்தில் பிரபலமாகியுள்ளார். ஜோர்க் என்ற முதற் பெயர் கொண்ட வடதுருவ ஐஸ்லாந்து நாட்டைச் சேர்ந்த இந்த அமெரிக்கப் பெண்மணி, ஆண்களைப்போன்ற தடித்த குரலில் பாடி அநேகமானோரை மகிழ்வித்து வருகிறார். இவர் கீழிருந்து மேல் தொனிக்கு மிகவும் சாவகாசமாகச் சஞ்சாரம் செய்யும் வல்லமையுள்ளவர். இவர் நடன மண்டபங்களில் பாடி வருகிறார். மேஷில் ஒசெல்லோ, இவர் கறுப்பினப்பெண் தான், தன் இனச் சேர்க்கையில் ஈடுபடுவதாக வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். அதே சமயத்தில் தான் திருமணம் செய்யாமலே தாயாகியுள்ளதையும் செய்தியாக்கியுள்ளார். இவருக்கு தலையில் முடியில்லை, செயற்கைமுடி தரித்துள்ளார். இப்படிப் பல முரண்பாடுகள் கொண்ட இவர், இசைக்கருவிகளை இயக்குவதிலும் ஏற்ற இறக்கம் நிறைந்த குரலில் பாடுவதிலும் கைதேர்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெயிற்றி

# கேலிக்கூத்தாகிவிட்ட தடுப்பாணை

ஹெயிற்றி மக்கள் 4 எல் பிளாஸ்ரிக் கலங்களோடு துகள் படிந்த மசக்கர் ஆற்றின் கரையோரங்களில் எறும்புச் சாரிகள் போல ஓடிய வண்ணம் காணப்படுகிறார்கள். இவர்களில் அதிர்ஷ்டசாலிகள் அன்றைய வேலை முடிவடைந்ததும் பெறுமதி வாய்ந்த பொதிகளுடன் வீடு திரும்புகிறார்கள். டொமினிக்கன் குடியரசிலிருந்து மசக்கர் நதி மூலம் கடத்தி வரப்படும் ஒரு சாடி கசோலின் ஹெயிற்றியின் தலைநகரான போட்–ஒள-பிறின்ஸில் 10 டொலருக்கு விலை போகிறது. வடக்கு ஹெயிற்றியின் ஒளனமந்திப் பிரதேச மக்கள் நாள்தோறும் இந்த நதிப் பயணத்தை நடத்துவதென்பது பொருளாதார ரீதியில் அவர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஐ. நா. சபை இராணுவ ஆட்சியைத் தண்டிப்பதற்கென்று கசோலின் தடுப்பாணைச் சட்டத்தினை மீண்டும் நடைமுறைப் படுத்தியதனால் உண்டான முக்கியத்துவமே இது.

கடந்த ஒக்ரோபரிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தத் தடுப்பாணையானது–கரையொதுக்கப்பட்ட கசோலினதும், அதனால் கிடைக்கும் இலாபத்தினதும் தடையினை டொமினிக்கன் குடியரசின் ஊடாக அநுமதியோடு நடக்கும் வர்த்தகமாக மீளுருவாக்கம் செய்ததற்கு நன்றி செலுத்த வேண்டும். இந்தச் சூழ்நிலையின் அபத்தத்தினை வாகனப் போக்கு வரத்து நிறைந்த போட்–ஒள பிறின்சில் துலாம்பரமாக(வேறு எவ்விடத்திலும் பார்க்க) காணக் கூடியதாய் உள்ளது. ஏழை மக்களின் 'யிட்னி' வாகனங்கள் மெதுவாக மறைந்து கொண்டிருக்கின்றன. காரணம் வாயுப் பொருளின் உச்ச விலையேற்றந்தான். ஆனால் இராணுவத்தினரும், பணம் படைத்தவர்களுமோ 150 டொலர் விலைக்குக் கடத்தல் மூலம் பெறப்படும் எரிபொருளைப் பயன்படுத்தி றேஞ்ச் றோவர்களிலும், டொயோட் டாங்கிகளிலும் வீதிகளை வலம் வருகிறார்கள். இன்று கடத்தல் மூலங் கிடைக்கும் கசோலின் மிக அதிகமாகக் கள்ளச் சந்தையிலே கிடைப்பதால் அதன் முன்னைய விலை 50சத வீதத்தால் வீழச்சியடைந்துள்ளது. போட்-ஒள-பிறின்சில் ஏற்பட்ட வெடி விபத்தினால் ஆயிரமாயிரம் லீற்றர் கசோலின் – (கடத்தி வந்தது) அழிந்த பின்னரும் இந்த நிலை–பெருக்க நிலை–தொடர்கிறது, இராணுவத்தினரையும், அவர்களின் பின்னணியில் நின்று உதவி புரிவோரையும் தண்டிக்க என்று ஐ. நா. சபை எடுத்த நடவடிக்கையால் பணம் படைத்தவர்கள் எவ்வித பாதிப்பையும் அடையாது தங்களின் உல்லாச வாழ்க்கையை நடத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள்.



**இராணுவத்தினருக்கும், பணம் படைத்தோருக்கும் சிரிப்புக்கிடமான எரிபொருள் அனுமதி வறியவர்களைக் கசக்கிப் பிழிகிறது.**

ஜனாதிபதி ஜீன-பேட்றன்டின் பதவிக் கவிழ்ப்புக்காக 1991 செப்ரெம்பரில் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை உண்மையில் பாதித்திருப்பது ஏழை மக்களைத்தான். அவர்கள் முன்பே பெருமளவு பாதிப்புக்கு உள்ளானவர்கள். இப்பொழுதோ மேற்குக் கோளார்த்தத்தில் அவர்கள் நிலை மிகவும் மோசமாகியுள்ளது. இதற்குக் காரணம் போக்கு வரத்துக் கட்டணம் உச்சாணிக் கொம்புக்கு ஏறியுள்ளமையே. இதனால் உணவுப் பொருள்களின் விலையும் ஏறிவிட்டது. அவசிய உணவுப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்களான அரிசி, அவரை எண்ணெய் என்பன பெரும்பாலானவர்களுக்கு எட்ட முடியாதவையாகி விட்டன. ''நாங்கள் மிகவும் ஏழைகள். நாங்கள் வேண்டுவது எங்கள் பிள்ளைகளுக்கான உணவு ஒன்றே. அரசியலில் எங்களுக்கு அக்கறை இல்லை'' என்று நான்கு பிள்ளைகளின் தாயான கிறிஸ்ரியானான டொமெஸ்றொயின் கூறுகின்றாள்.

ஹெயிற்றியின் சனத்தொகை 6.7 மில்லியன். இதில் 15 சதவீதம் ஆனவர்கள் நிவாரண உதவியை வழமையாகப் பெற்று வந்தவர்கள். இன்று எரிபொருள் சிக்கல் காரணமாகக் கெயர் தாபனம் போன்றவை தமது நிவாரண உதவியில் அரைவாசியை வெட்டிக் குறைத்து விட்டன. 1950 இற்குப் பிறகு ஏற்பட்ட மிக மோசமான தட்டுப்பாடு இது தான் என்று கெயர் தாபன அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். பாடசாலை புகாப் பருவப் பாலர்களில் 20 சதவீதம் ஆனவர் ஊட்டச் சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும், கசரோக நோயாளிகள் நாடு முழுவதும் பெருகியுள்ளனர் என்பதும், அந்திராக்ஸ் நோய்ப் பரம்பல் பெருமளவு ஏற்பட்டுள்ளது என்பதும் இவர்களின் கணிப்பீடு. ''எமது தடுப்பாணை மூலம் இந்த நாட்டின் துணிவையும், உறுதிப்பாட்டையும் சிதைக்கின்றோம்'' என்று லிம்பி பள்ளத்தாக்கில் பணி புரியும் அமெரிக்க டாக்டர் ஒருவர் கூறுகிறார்.

மூலப்பொருள்களையும், உதிரிப் பாகங்களையும் இறக்குமதி செய்து துணி முதலான பொருள்களை உற்பத்தி செய்து மீள ஐக்கிய அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலும் மின்சார விநியோகத் தடையினால் வீழ்ச்சி கண்டுள்ளது. இந்தத் தொழிலில் ஈடுபட்டு வந்த 60,000 மக்கள் இன்று சுமார் 8,000 பேர்களாகக் குறைந்துவிட்டனர். போட்-ஔ-பிறின்சின் பெருமைக்கு அடிப்படையாய் இருந்த துறைமுகக் கைத்தொழிற்பாக்கம் இன்று ஆவி உலவும் நகரமாகத் தனிமையடைந்து காட்சி தருகிறது. ''தடையாணையானது. நஞ்சுபோல முதலில் அப்பாவி மக்களையும் இப்பொழுது என்போன்ற தொழிற்சாலை உரிமையாளரையும் கொல்கிறது'' என்கிறார் துணி உற்பத்தியாளரான ஜோர்ஜ் பேரவ்சசைன்.

இராணுவந்தான் இன்று ஹெயிற்றியில் பணத்தில் மிதக்கிறது. அரசின் ஏகபோகமான மின்சாரசேவை, தொலைபேசிச் சேவை, துறைமுக வசதிகள் என்பன அதன் கட்டுப்பாட்டில் அடங்கியுள்ளன. ''குடல்வால் முறைத்த இராணுவத்தின் தடையாணையைப் பார்த்துச் சிரிப்பாய்ச் சிரிக்கிறது'' என்று நிவாரண அதிகாரி ஒருவர் குறிப்பிடுகின்றார்.

கடல்வழித் தடுப்பை ஐ. நா. சபை ஏற்படுத்தியிருந்தும். தடையாணைக்கு முன்னர் விநியோகமான கசோலினின் 35%. இன்னமும் ஹெயிற்றியில் உள்ளதாக ஐக்கிய அமெரிக்கா கணித்துள்ளது. இதுபோதாதென்று மசக்கர் நதியூடாக டொமினிக்கன் குடியரசிலிருந்து கசோலின் பெருமளவில் வந்துகொண்டேயிருக்கின்றது. இவற்றையெல்லாம் அவதானிப்பவர்கள் ஹெயிற்றியை எண்ணெய் வளம் மிக்க 'குவைத்'' என்று கேலியாக அழைக்கின்றார்கள். டொமினிக்கன் படையினர் ஆழங்குறைந்த மசக்கர் நதிப் பயணிகளைப் பொறுத்தவரையில் கண் மூடிகளாக, குருடர்களாகவே நடந்து கொள்கின்றார்கள்.

ஹெயிற்றியின் கடலைச் சூழ்ந்து வரிசையாகக் கப்பல்களை நிறுத்தி வைத்துவிட்டு, முன்னணியில் அதைக் கடப்பவர் பற்றிக் கண் காணிக்காதிருக்கும் போலி வேஷதாரி என்று ஐ. நா சபையை மனித உரிமை அவதானிகள் கண்டிக்கிறார்கள். ''கரையோரப்பகுதி ஓர் அரிதட்டுப் போன்றது என்பதை ஐ. நா, சபையினர் அறிவார்கள். அறிந்திருந்தும் டொமினிக்கன் குடியரசு தடையாணையை மீறுவதை அவர்கள் அநுமதிப்பதன் மூலம் இராணுவத்தினரின் உயிர்த் துடிப்பான இயக்கத்திற்குத் துணை போகிறார்கள்'' என்று மனித உரிமை அதிகாரி ஒருவர் கூறினார். ஒருநாள் மட்டும் குவானமிந்தி, பிரதேசத்திலிருந்து 40 ட்ரக் நிறைய 250,000 லீற்றர் கசோலின் கடத்தப்பட்டதாகத் தெரிகிறது.

கடந்த டிசம்பரில் ஹெயிற்றியின் நண்பர்கள் என்று சொல்லப்படும், ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், கனடா வெனிசூலா, என்பன ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்பு அரிஸ்ரைட்டுக்கு உரிமை வழங்குவதில் முன்னேற்றம் காணப்படாவிட்டால் ஹெயிற்றியின் இராணுவ ஆட்சிக்கு வெளிநாடுகளிலிருந்து எவ்வகையான வர்த்தகப் பொருள்களும் பெற முடியாதவாறு தடையாணை விதிக்கப்படும் என்று எச்சரித்திருந்தன. ஆனால் எந்தவகையிலும் அந்த எச்சரிக்கை பயன் அளிக்கவில்லை. இந்நிலையில் ஐ. நா. சபை ஹெயிற்றிய சட்ட சபையினர் மூலம் மீண்டும் அரிஸ்ரைட்டை ஜனாதிபதி ஆக்க அவர்களோடு இரகசிய உடன்படிக்கை மேற்கொண்டது. இவ்வுடன்படிக்கை ''தேசிய மீளொழுங்காக்கம்'' என்னப்பட்டது. பொதுமக்களின் செல்வாக்குப் பெற்ற இம்மதகுருவின் மீள் பதவி ஏற்புக்கு பிரான்சும், கனடாவும் ஆதரவு வழங்கின. இத்திட்டம் பற்றி இராணுவ மேலாண்மைக்கு அறிவிக்கப்பட்டதோடு, பிறிகேடியர் ஜெனரல் றவுல் செட்ராஜின் இராஜினாமாவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்தத் திட்டத்தால் சீற்றமடைந்த தளபதிகளில் ஒருவர் சட்டசபை உறுப்பினர் அனைவரையுமே கொலை புரியப்போவதாகப் பயமுறுத்தினார்.

தடையாணை மூலம் இராணுவ ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கலாம் என்று அதன் ஆதரவாளர்கள் வாதித்த போதிலும் நடைமுறையில் அது சாத்தியமாகவில்லை, மக்களின் துயரக் கண்ணீர் துடைக்கப்படவுமில்லை. ஆனால் சோமாலியாவிற் போலப் பட்டினிச் சாவுகள் ஏற்படுமளவிற்கு ஹெயிற்றியின் நிலை மோச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையர் எண்ணம்!
வித்யாவின் கைவண்ணம்!!

மென்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும் இரகசியம்.

# வித்யா




உன்னத கலை
நயம்மிக்க நகைகளை —
உங்கள் எழில் மிகு
கேசத்திற்கேற்ற, அதி
நவீன வடிவங்களில்
தரங் குன்றா நகைகளைச்
செய்து பெற்றிட வாரீர் . . . .

குறித்த தவணையில் சிறந்த
முறையில் திருப்தியாகப்
பெற்றுக் கொள்ளலாம் . . .

வி. என். 177 / B சந்தோஷம் தெரு
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

PUBLIC LIBRARY JAFFNA
CHUNDIKULI BRANCH LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுகமான வாழ்விற்கு ஒரு பலமான அடித்தளம்"

*சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியாதது எதுவுமில்லை . . . !*

# "த மெடிக்கல் சென்ரர்"



சிறுகுழந்தைகளுக்கான நோய்கள், வாதம், பிடிசுரம், இருதயநோய்கள், ஆஸ்துமா, எதுவானாலும் குணமாகலாம்.

நீரிழிவு,
மன நோய்கள்,
இரத்த அழுத்தம்,
சரும நோய்கள்,
கர்ப்பிணி,
மாதர் நோய்கள்,
குடும்பக் கட்டுப்பாட்டு ஆலோசனைகள்,
சிறு சத்திர சிகிச்சைகள்

அனைத்து சிகிச்சைகளுக்கும்
ஆலோசனைகளுக்கும்

# 'த மெடிக்கல் சென்ரர்'

மருதடிச் சந்தி — மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடைந்துள்ளது என்றும் கூறமுடியாது. சோமாலியாவின் பட்டறிவிற்குப் பின்பு ஹெயிற்றியின் பிரச்னை கிளின்ரன் அரசிற்குப் பலத்த தலையிடியாகவும் அதிலிருந்து விடுபடமுடியாதவாறும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ''இராணுவத்திற்கு எதிராகச் சிறிதளவாவது போராட முடியாத மக்களை நீண்ட காலத்திற்குப் பிரச்சினைகளால் இடர்ப்பட வைப்பது கிளின்ரனின் அரசாங்கத்தின் அடாத செயலாகும்'' என்று நிர்வாகத்தின் உள்ளேயே பெருங்குரலெடுத்துக் கண்டிப்போர் பலவாயுள்ளனர். ஹெயிற்றியின் பொருளாதார நிபுணர் ஒருவர், ''ஹெயிற்றி வாழ் மக்களின் உணவுத் தேவை எந்த அளவிற்கு அரிதாகிச் சுருங்குகின்றதோ அதுவரை இராணுவத்தின் கை ஓங்கியே நிற்கும்'' என்கிறது.

தடையாணை நீடிக்க, நீடிக்க ஹெயிற்றியின் வறியவரும், செல்வரும் ஒரு சேரக் கைவிடப்பட்டவர்களாய் அகதிகளாய் மாறிக் கொண்டிருக்கிறார்கள் அரிஸ்ரைட்டின் ஜனாதிபதிப் பதவிக்காலம் 1996 இல் காலாவதியாகும் வரை இந்தத் தடையாணை தொடர்வதை வாஷிங்ரனும், போட்-ஔ-பிறின்சும் அநுமதிக்கும் என்றே தோன்றுகிறது. ஹெயிற்றிய அலுவலகம் ஒன்றிலே பணி புரியும் பெண்மணி ஒருத்தி தமக்கு முன்னால் தூங்கும் நாட்காட்டியில் ஒவ்வொரு நாட் கழிவையும் x என்று பெரிய அடையாளம் இட்டு வருகிறார். அவரின் கணிப்பில் அரிஸ்ரைட்டின் பதவி காலாவதியாக இன்னும் 687 நாள்கள் உள்ளன.

*ரைம் மார்ச் 21, 1994*

## மனிதரில் முளை வகை

பிறப்புரிமையியலில் (Genetics) முளைவகை Clones) எனப்படுவது, இலிங்கமில் முறையில் இனம் பெருக்கிப் பெறப்படுவதும், எல்லாவகையிலும் ஒத்த இயல்புகளைக் கொண்டதுமான தனியன்கள் ஆகும். விவசாயத்தில் வாய்ப்பான இயல்புடைய தாவரங்களைப் பெரும் எண்ணிக்கையில் பெறுவதற்கு, முளைவகைகளை உருவாக்கும் ''செயன்முறை'' பயன்படுத்தப்படுகிறது. மனிதரில் முளைவகைகளை உருவாக்குதலானது, இதுவரையில் விஞ்ஞானக் கற்பனைக் கதைகளிற் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டு வந்த எண்ணக்கரு. இப்போது, இது நடைமுறையிற் சாத்தியமாகி உள்ளது. வோஷிங்ரனில் உள்ள ஜோர்ஜ் வோஷிங்ரன் பல்கலைக்கழகத்தில், உடற்புறக்கருக்கட்டல் நிபுணரான (In Vitro Fertilization) ஜெறிஹால், 17 நுண்ணிய மனித முளையங்களைப் பிரித்து, 48 முளையங்களை வெற்றிகரமாகத் தோற்றுவித்துள்ளதாக அறிவித்தார். எது எவ்வாறு இருப்பினும், இவ் விஞ்ஞானியின் முளையங்கள் மிக விரைவில் மரணத்தைச் சந்திக்கும். ஹால் இதனைச் சாதித்த விதத்தை மிக இலகுவாக்கிக் கூறுவதானால்:- ஒரு தனிக்கல முளையம், ஒரே விதமான சீன்களைக் கொண்ட இருகல நிலையைத் தானாகவே அடைந்த பின்னர், அவர் முளையத்தின் வெளிப்புறக் கவசமாகிய ''ஸோனா பெலுஸிடாவை'' (Zona pellucida) நீக்கி, இரு கலங்களையும் வேறாக்கினார். அக்கவசத்திற்குப் பதிலாக,இரு கலங்களையும்கடற்தாவரங்களிலிருந்து பெறப்பட்ட ''ஜெல்'' இனால் மூடினார். இந்தச் செயற்கை ஜெல்லில் முளையம் வளரத் தொடங்கியது. இவ்வாறு, அவரது மனித முளைவகையை உருவாக்கும் முயற்சி வெற்றி அடைந்தது.

இதன் மூலம், எல்லா வகையிலும் ஒத்த மனிதர்களை உருவாக்கும் முறையைக் காட்டியுள்ளார் ஹால். இக்கண்டுபிடிப்பு, அநேகமான கண்டுபிடிப்புக்களைப் போல, தற்செயலாக நிகழ்ந்தது. மனிதரில், சிலவகை மலட்டுத் தன்மைகளை வெற்றி கொள்வதற்காக ஹால் மேற்கொண்ட பரிசோதனைகளின் போது இது நிகழ்ந்தது.

இதனால் எதிர்காலத்திற் குழந்தைப் பண்ணைகளை ஏற்படுத்தல், உடல் உதிரிப்பாகங்களுக்கான முளைவகைகளை வளர்த்தல் ஆகிய நடைமுறைகள் ஏற்படலாம் என்பதை நினைத்து மக்கள் திகைப்படைந்துள்ளனர், சமீபத்தில் நடத்திய வாக்கெடுப்பு ஒன்றின் போது, 14சதவீதமான அமெரிக்கர்களே மனித முளைவகை உருவாக்கம் ஒரு நல்ல யோசனை என்றும், 16சத வீதமானவர்களே இம் முயற்சிகளுக்குத் தொடர்ந்தும் அநுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் வாக்களித்துள்ளனர். இப்போது மதத் தத்துவவியலாளர்கள், விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு வரையறைகள் வகுக்கப்பட வேண்டுமா? என்ற, தீர்வு காணப்படாத கேள்வியை எதிர்கொள்ளத்தான் வேண்டும்.

வெற்றியின் சிகரத்தை நோக்கி, விரைந்து பாய்கிறது விஞ்ஞானம்! அதை வீண் என்று சொல்லி, வெதும்பிப் புலம்புகிறது வேதாந்திகளின் அஞ்ஞானம்!!

*''ஃபோர்ச்சூன்,'' டிசம்பர் 27, 1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடங்கிய இடத்திலிருந்து திரும்புகிறார்கள்.

*மொகடிசுவிலிருந்து ஜோஷ்ஆ ஹமர் அனுப்பிய செய்தியறிக்கை*

## சோமாலியா:- அமெரிக்கர்கள் வெளியேற குலக்குழுவினர் உள் நுழைகிறார்கள்.

பதினைந்து மாதங்களின் முன்பு ஐ. அமெரிக்கக் கடற்படை, மொகடிசு கரையிலே, துணிவான செயல் ஒன்றினை மேற்கொள்வதற்காக, மிகச் சிரமத்துடன் நிலைகொண்டு, அதனோடு வந்த ஐரோப்பியப் படை தனது நாடு திரும்பிய பின்பும், மார்ச் 31 ஆம் திகதியை எதிர்நோக்கி, அங்கிருந்து முற்றாக நீங்கக் காத்துக்கொண்டிருக்கிறது. சென்றவர்களைத்தவிர, எஞ்சியுள்ள 3,000 அமெரிக்கப் படையினர் நாள்களை எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். முள்ளுக்கம்பித் தடைகளுக்குப் பின்னால், இந்துசமுத்திரத் துறைமுகமொன்றிலும், விமான இறங்கிடத்திலும், தரை, கடலிரண்டிலும் தாக்கக்கூடிய நான்கு போர்க்கப்பல்களிலும் இவர்கள் தங்கியுள்ளார்கள். இவர்களின் தங்கிடங்களுக்கு அருகில், போரிடும் எட்டு உலங்கு வானூர்திகள் நிறுத்தப்பட்டுள்ளன. வெள்ளைப் பிளாஸ்ரிக் போர்வையாற் பாதுகாப்பாகப் போர்த்து மூடப்பட்ட இவைதாம், மொகடிசு வீதிகளிற் சாவுமழை பொழிந்தவை. இன்று, அச்சுறுத்தல் எதனையும் தராது, இவை அமைதியோடு காணப்படுவது ஆச்சரியந்தான். ஐ. அமெரிக்காவின் சமாதானத்தூது, மனிதாபிமானச் சிலுவைப் போராகத் தொடங்கியது. போராளித் தலைவர் மொகமட் ஃபாற அய்டிட்டை வேட்டையாடுவதான, நினைக்கவே முடியாத அவமுயற்சியாய் அது மாறியது. இந்தச் சோக முடிவை நினைவுகூரும் சடங்காக, அமெரிக்கக் கொடியினைத் தாழப் பறக்க விடுவது இடம்பெறவில்லை. தனது 15 உப குழுக்களிடையே நிகழ்ந்த உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர, சோமாலியா இன்னமும் திணறிக் கொண்டிருக்கும் வேளையில், ஐ. அ. படைகள் வெளியேறுகின்றன. நாட்டிற் குழப்பமும், வறுமையுமே தொடர்ந்து நிலவுகின்றன. "இது, மிகுந்த சோதனைக் காலம், அமெரிக்க இயந்திரம் போய்விட்டது. இனி, அதன் இடத்தை எந்தச்சக்தி ஏற்கப் போகிறது?'' என்ற கேள்வியை, மொகடிசுவில் தங்கியுள்ள மேற்கத்தைய இராஜதந்திரி ஒருவர் கிளப்புகிறார். இந்த வேளையில், இது யாராலும் சொல்ல முடியாத ஒரு பதில்தான்.

ஐ. நா. வினாலோ, சோமாலியராலோ, கடந்த ஆண்டில் அரசை அமைக்கவோ, திறமைவாய்ந்த காவல்துறை ஒன்றை உருவாக்கவோ முடியவில்லை. இந்த வெற்றிடத்தில், இன்று சுதந்திரமான கொள்ளைகள் தலைதூக்கி, நாளந்தம் அவை அதிகரித்து வருகின்றன. சிறப்பாக, மொகடிசுவிலும் பிறநகரங்களிலுமே இந்தக் கொடூரக் கொள்ளைகள் அதிகமாக இடம்பெறுகின்றன.



*நிறைவேற்றப்படாத குறிக்கோள்: சோமாலியப் பிரச்சனையை எதிர்த்துச் சமாளிக்க முடியாத அமெரிக்கர்கள் சிறிது சிறிதாக வெளியேறுகின்றனர்.*

கடந்த ஒக்ரோபரில் தொடங்கப்பட்ட இந்தக் கொள்ளைகளால், துப்பாக்கிச் சன்னம் துளைக்காத காப்பு ஜன்னல் ஒன்றைக்கூட வீதியில் ஓடும் வாகனங்களிலே காணக்கூடவில்லை. இந்த இளங் கொள்ளைக்காரரை அடக்கும் சக்தியும், எந்தப் பிரிவுத் தலைவருக்கும் இல்லை, ''ஐ. நா அளிக்காத சந்தர்ப்பங்கள், இன்று அவர்களால் தெரிவுபெற்றுக் கையாளப்படுகின்றன'' என்று, சோமாலிய அறக்குழுவைச் சார்ந்த ஸ்ரா(ர்)லின் அறுஷ் என்னும் பெண்மணி கூறுகிறார். வலுவற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொரு போர் நிறுத்தம் தலை நகரில் இடம்பெற்ற போதிலும், குலக்குழுக்களின் வன்முறையானது சோமாலியாவின் பிற பகுதிகளில் வெடிக்கக்கூடிய அச்சம் நிலவுகின்றது. தென்பகுதியான கிஸ்மாயுவில் ஐ. நா சபை தலையிட்டு ஏற்படுத்திய சமாதான உடன்படிக்கை, அய்டிட்டின் சார்பினரான கேணல் ஓமர் ஜெஸ் இனால் முறியடிக்கப்பட்டது. பகைக் குலக்குழு ஒன்று கைப்பற்றி வைத்திருந்த (1993 மார்ச் தொடக்கம்) துறைமுகத்தில் இவர் நடத்திய போரில் 70 மரணங்கள் நேர்ந்தன. கனரக ஆயுதங்களும், ''தொழில்நுட்பச் சாதனங்களும்'' கிஸ்மாயுவை மீட்டெடுக்கும் தாக்குதலுக்கென்று, அங்கிருந்து நகர்த்தப்பட்டதாகச் செய்தியறிக்கை கூறுகிறது.

மலேசியா, பாகிஸ்தான், இந்தியா ஆகிய மூன்றாம் உலக நாடுகளிலிருந்து, அமைதிகாக்க என்று வந்துள்ள படையினர் ஐ. நா படைகளுடன் இணைந்து, எல்லாமாகப் 19,000 பேர் அம்முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். ஐ. நா படையானது துறைமுகங்களையும், விமானத்தளங்களையும், பாதுகாப்புப் பிரதேசங்களையும் பாதுகாப்பதாகிய முயற்சியில் ஈடுபட்டு, வீடு வீடாகச் சென்று ஆயுதந் தேடும் பரிசோதனையைத் தவிர்த்து வருகிறது. இருப்பினும், அய்டிட்டினுடைய படையினரின் குருதிப் பரீட்சைபற்றி ஐ. நா. அதிகாரிகள் கவலை கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டு ஜூன் 5 ஆம் தேதியன்று, கரந்தடிப்போரில் 35 பாகிஸ்தானியப் படையினர் கொல்லப்பட்டதை இவர்கள் மறந்துவிடவில்லை. பாகிஸ்தானியப்படையினருக்கும், சோமாலியக் குடிமக்களுக்குமிடையே முறுகல் நிலை உருவாகி வருவதும், கலவரம் அடைந்துள்ள பாகிஸ்தானியப் படையினரால் மொகடிசுவில் 15 படுகொலைகள் இடம்பெற்றதும், இவர்களுக்கு மேலும் கவலை அளிப்பதாய் உள்ளன.

சோமாலியாவின் எதிர்காலத்தின் முதன்மைக் கதாபாத்திரமாய் விளங்கும் அய்டிட்டின் கைகளிலேயே, மீண்டும் இணக்கம் உண்டாவது தங்கியுள்ளது. ஆனால் அவரோ, தம்மை மேலாண்மையின் உன்னத நிலையில் இருத்திக் கொள்வது ஒன்றே, குறியாக இருக்கின்றார். நவம்பர் மாதத்திலிருந்து, நைறோபியில் உள்ள ஐந்து நட்சத்திர உணவு விடுதியான சேறனாவில் தங்கியிருந்து, ஐ. நாவின் அழுத்தத்திலிருந்து வெகு தொலைவிலே தமக்குப் பாதுகாப்பு அமைத்துக் கொண்டு, ஆபிரிக்கத் தலைவர்களுடனும் ஐ. அ. இராஜதந்திரிகளுடனும், தமக்கு எதிராகத் திரண்டுள்ள 12 குலக்குழுக்களுடனும் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். இவரின் எதிர்ப்பாளர்களிற் பலர், இவரின் பரம வைரியும், போராளித் தலைவருமான மொகமட் அலிமஹ்டியினுடன் உறவு வைத்திருப்பவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. சர்வதேச முக்கியத்துவம் பெறுவதே, அய்டிட்டின் முதன்மைக் குறிக்கோள். சோமாலியாவின் ஜனாதிபதி ஆவதே, அவர் கனவு. ''அய்டிட், தான் வெல்வதற்காகவே உடன்பாட்டுக்கு வருவார். அதிகாரப் பகிர்வுக்கு அல்ல. தமது குறிக்கோள் வெற்றி தராவிடின், அவர் போரில் இறங்குவார்.''

அய்டிட்டின் ஆதரவாளர்கள் அவர் நைறோபியிலிருந்து வெற்றியுடன் தான் நாடு திரும்புவார் என்று, மிகவும் தெளிவாக எதிர்பார்க்கிறார்கள். அவரின் தங்குகைக்காக, முன்பு அவர் வசித்த வீட்டைத் திருத்தியமைப்பதில் அவர்கள் ஈடுபட்டுவருகிறார்கள். இந்த வீடு, ஜூன் 17 இல் ஐ. அமெரிக்க விமானப்படையின் குண்டுவீச்சினால் இடிபாட்டுக்கு உள்ளானது. அய்டிட்டின் சோமாலியத் தேசியக் நட்பிணைப்புக் கட்சியின் உயர் தலைவர் அப்டி கறீம் அஹ்மட் அலி என்பவர்:– ''அவர் இங்கு வரும்பொழுது, வீரக்கதாநாயகருக்கான மகோன்னத வரவேற்பு அளிப்போம்'' என்கிறார். போராளித் தலைவரான அய்டிட்டைத் தேடும் வேட்டையில் உயிரிழந்த தமது தோழர்களுக்கு, அய்டிட்டின் புத்தெழுச்சி சீரணிக்க முடியாததாய் உள்ளது என்பதை, அவர்கள் அங்கீகரிக்கிறார்கள். எனினும், அந்த விஷயத்தில் இருந்து விடுபட்டிருக்கவே விரும்புகிறார்கள். ''சோமாலியருக்கு ஆதரவு தருவதையும், அவர்கள் மீது மேலாதிக்கம் செலுத்துவதையும் தவிர்ப்போம். அவர்களே, தங்கள் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள விடுவோம்'' என்று, ஐ. அமெரிக்க இராணுவ மேலதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கிறார். சோமாலியர், பேச்சுவார்த்தை மூலமாகத் தமது பிரச்சினையைத் தீர்க்கப் போகிறார்களா? அல்லது, மீண்டும் ஆயுதங்களை ஏந்தப் போகிறார்களா? என்பது, இனிவரும் மாதத்திலேதான் தீர்மானிக்கப் படும்.

(நியூஸ் வீக், மார்ச் 21, 1994)

✶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த ஒரு விடுதலைப் போராட்டமும் வெல்லும் என நிரூபித்த மண்டேலா



தென்னாபிரிக்காவில் கறுப்பினத் தலைவர், இந்த நூற்றாண்டின் மாபெரும் விடுதலைப் போராட்ட வீரர் நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாகப் பதவியேற்கும் நிகழ்ச்சியை மனக்கண் முன் கொண்டு வருகையில் தேகம் சிலிர்க்கின்றது. இந்நாளைத் தரிசிக்க தென்னாபிரிக்க நாடு ஒரு நூற்றாண்டு காலம் போராட வேண்டியிருந்தது. எந்த ஒரு விடுதலைப் போராட்டமும் வென்றே தீரும் என்பதைத் தனது சிறை அனுபவம் மூலம் நிரூபித்தவர் நெல்சன் மண்டேலா.

மண்டேலா அறிவித்திருக்கும் புதிய அரசியல் அவருடன் சிறை சென்றவர்கள், உரிமை கோரி முன்னெடுத்துச் சென்றவர்கள், என பலருக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரிய அம்சம். இந்திய வம்சாவழி மக்களைச் சார்ந்த ஐந்துபேரை 17 பேர் கொண்ட தனது அமைச்சரவையில் இடம் பெறச் செய்துள்ளார், இதன் மூலம் தான் கறுப்பின நிறவெறியன் அல்ல என்பதையும் நிறவெறி களைய பாடுபடுபவர் யாராயினும் அவர்களுக்குரிய மதிப்பும், மரியாதையும் வழங்கப்படும் என்பதையும் மண்டேலா வெளிப்படுத்தியுள்ளார்.

வெள்ளையினத் தீவிரக் கம்யூனிசவாதி ஜோஸ்லோவை நெல்சன் மண்டேலா தமது அமைச்சரவையில் இணைத்திருப்பது மண்டேலாவின் கொள்கைத் தெளிவைக் காட்டுகிறது. தமது கட்சியைக் கடுமையாக எதிர்க்கும் சூலு இனத்தவர்களில் மூவரை மண்டேலா தனது புதிய அரசில் இணைத்துப் புதிய அமைச்சரவை நிறங்களை, இனங்களை, சமயங்களைக் கடந்த ஒன்று என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். அமைச்சரவையில் ஒரேயொரு பெண் இடம் பெற்றுள்ளார். இது அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரான டோபோபேகி ( 51 ) முதல் உதவி ஜனாதிபதியாகிறார். இதன் மூலம் மண்டேலாவிற்குப் பின் ஜனாதிபதியாகவோ அல்லது கட்சியின் உயர் தலைவராகவோ இவர் இருப்பார் என்பதை மண்டேலா உறுதி செய்துள்ளார்.

இதே வேளை வெள்ளையின அரசுடன் கடுமையான பேச்சுவார்த்தை நடத்திய ஆபிரிக்கதேசிய காங்கிரசின் தற்போதைய பொதுச் செயலர் ரமோபோசோ அமைச்சராக்கப்படாமல் இருப்பது கேள்விகளை எழுப்பியுள்ளது. ஏனெனில் வரும் நாள்களில் மண்டேலாவின் பின் யார் தலைவர் என்ற போட்டி நடக்கும் பட்சத்தில் டோபோவிற்கு உயர் பதவியும், ரமோவிற்குப் பதவியின்மையும் கட்சியில் குழப்பத்தை உண்டு பண்ணலாம். இதன் மூலம் மண்டேலாவின் பின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஒரே தலைமையின் கீழ் உறுதியாக செயற்படுமா என்ற கேள்விகளை இது தோற்றுவித்துள்ளது.

நாட்டின் மொத்தம் 9 மாநிலங்களில் ஒரு மாநிலத்தில் வெள்ளையினத்தவரின் தேசிய கட்சி அரசு அமைக்கவிருப்பதும், கோசுலு பிராந்தியத்தில் இன்காட்டா கட்சி ஆட்சியை பிடித்திருப்பதும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் சந்தித்த ஆரம்பகால பின்னடைவுகள். பிற ஏழு மாநிலங்களிலும், தேசிய அளவிலும் அரசு அமைக்கும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் கறுப்பினத்தவர்கள் சுமந்து நிற்கும் கனவுகளைச் செயற்படுத்தத் தவறினால் 1999 இல் நடைபெறப் போகும் அடுத்த தேர்தலில் ஆபிரிக்க தேசி ் க் காங்கிரஸ் தோல்வி கண்டாலும் ஆச்சரியப்பட முடியாது. எனவே இக்கட்சி கவனமாகச் செயற்பட வேண்டிய நிலை உள்ளது.

நெல்சன் மண்டேலா தலைமையிலான புதிய அரசுக்கு முன் குவிந்த பிரச்சினைசுள் ஒன்று இரண்டல்ல, ஏராளம். காலங் காலமாக நூற்றாண்டு நூற்றாண்டுகளாக வெள்ளையின வாதிகள் கறுப்பினத்தவர்களை அடிமைப்படுத்தியதால் தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் தற்போது கல்வியின்மை, அறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமை, வீடின்மை, தொழிலின்மை, வறுமை, நோய், குக்கிராம வாழ்க்கை என்பனவற்றைக் கொண்டுள்ளனர். வறுமைக் கோட்டின் கீழ் கறுப்பின மக்கள் அநேகர் உள்ளனர். எங்கிருந்தோ வந்து குடியேறிய வெள்ளையினத்தவர் நமது நாட்டில் சொகுசாக வாழ நமக்கு மட்டும் ஏன் இந்த நிலை எனத்தென்னாபிரிக்க கறுப்பினம் கேட்பது நியாயம். எனவே வெள்ளையின மக்கள் போல் உணவு, உடை, உறையுள், சுகாதாரம் எனப் பல துறைகளில் கறுப்பின மக்களின் நியாயமான சமூக நீதியுடன் கூடிய அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டிய மாபெருங் கடமையும், பணியும் மண்டேலா முன் குவிந்துள்ளன. இந்த ஆசைகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் மண்டேலா அரசையே சேரும். வந்து குவியும் வெளிநாட்டுதவிகள், வெள்ளையின மக்கள் ஆதரவு, கறுப்பின மக்களின் ஒத்துழைப்பு, நாட்டில் அமையும் தேசிய அரசு என்ற நான்கு அம்சங்களையும் மண்டேலா சரியாகப் பயன்படுத்திப் புதிய தென்னாபிரிக்காவை மலரச் செய்ய அவரால் முடியும் என நம்புவோம்.

கறுப்பின மக்களின் கனவுகள் கருகினால் மண்டேலாவின் புதிய அரசு கறுப்பின மக்களாலேயே புறக்கணிக்கப்படும் என்பது உறுதி. விடுதலைப் போராட்டம் என்பது வேறு, நீதியான நிர்வாகம் சுபீட்சமான எதிர்காலத்தை உறுதி செய்யும் அரசு என்பது வேறு. விடுதலைப் போராட்டத்தில் சாதனை படைத்த மண்டேலா தென்னாபிரிக்க அரச நிர்வாகத்திலும் சாதனை படைக்கட்டும்!

தொகுப்பு: உலக உலா.

*

# உலகின் மிக ஆழமான மலையிடுக்கு வழி

## விஞ்ஞானிகள், திபெத்தின் அதிசயத்தை ஆராய்கின்றனர்,

அரிசோனாவைச் சேர்ந்த றிச்சாட் ஃபிஷர் என்ற விஞ்ஞானி, உலகின் பல் வேறு மலையிடுக்கு வழிகளை (Canyon / Gorge) பல வருடங்களாக ஆராய்ந்து வருபவர். இவர், 93 ஒக்ரோபரில் விஞ்ஞானிகள் குழுவுடன், திபெத்தின் நம்ஜாக் பார்வா (Namjag Barwa) மலையிடுக்கு வழிக்குச் சென்றார். உலகில் ஆராயப்படாது எஞ்சியிருக்கும் மிகச் சில பிரதேசங்களுள் இதுவும் ஒன்று. ஃபிஷரின் அநுபவம் மறக்கவே முடியாதது. இரவில், இரத்தம் குடிக்கும் லீச் அட்டைகள் அலையலையாக எமது கூடாரங்களுள் புக முயலும். கடும் பருவமழை எங்களை ஏறக்குறையத் தோற்கடித்து விட்டது என்றும், ''இரவில் நிலச்சரிவுகள் எங்களை நோக்கி வரும்போது, நாம் உயிர் தப்பமாட்டோம் என்று நினைப்பதுண்டு'' என்றும், அவர் தனது அநுபவத்தை விபரிக்கிறார். இப்பயணத்தின் முடிவில், அவர் பெருவியப்புக்குரிய ஒரு தகவலை வெளியிட்டார். அது, நம்ஜாக்பார்வா தான், உலகின் மிகப் பிரமாண்டமான மலையிடுக்குவழி என்பதாகும். அவரது கூற்றுப்படி, ஏனைய மலையிடுக்கு வழிகள் இதற்கு அருகிற் கூட வர முடியாது.

சென்ற வருடம் ஜனவரியில், ''நஷனல் ஜியோகிறஃபிக்'' சஞ்சிகை பெரு நாட்டின் ''கொல்கா'' மலையிடுக்கு வழியை, உலகின் மிகப் பெரியதாக நிரற்படுத்தியது. ''கொல்லாவின்'' ஆழம் (கீழ் விளிம்பிலிருந்து. - Lower Rim – மிகத் தாழ்ந்த புள்ளிவரை) 1,052 மீற்றர். ஃபிஷரின் கூற்றுப்படி, நம்ஜாக் பார்வாவின் ஆழம் 5,909 மீற்றர் ஆகும். அத்துடன், ''நஷனல் ஜியோகிறஃபிக்'' சஞ்சிகை நேபாளத்தின் ''காளிகாண்டகி'' பள்ளத்தாக்கை, உலகின் மிக ஆழமான பள்ளத்தாக்காக அடையாளங் காணத் திட்டமிட்டிருந்தது. இதன் ஆழம் 4,403 மீற்றர். பள்ளத்தாக்குகளுக்கும், மலையிடுக்கு வழிகளுக்குமிடையே வரையறுக்கப்பட்ட வேறுபாடுகள் எதுவும் இல்லை. ஆனால் மலையிடுக்கு வழிகள் அதிக செங்குத்தான பக்கங்களையுடையவை என, சில பூமிசாஸ்திர அறிஞர்கள் கூறுகின்றனர். இத்திட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது என, இச்சஞ்சிகையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். மே மாதம், தான் மீண்டும் திபெத்திற்குச் செல்லும் போது, தன்னுடன் ஓர் எழுத்தாளரையும், ஒரு நிலவரைபடவியலாளரையும் அனுப்புமாறு, இச்சஞ்சிகைச் செயலகத்திடம் ஃபிஷர் கேட்டுள்ளார்.

கடும் பருவமழையினால் வெளியுலகத்தோடு தொடர்பு துண்டிக்கப்பட்ட ''நம்ஜாக்பார்வா'' மலையிடுக்கு வழியானது, திபெத்திய நிலவமைகளோடு பார்க்கும் போது கூட, மிகவும் பழைமையானது. இது, மிடொக் இராணுவ வலயத்திற்கு அருகாக உள்ளது. இவ்வலயம், சர்ச்சைக்குரிய இந்திய - சீன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைக்கு வடக்கே இருக்கிறது. ஒரு கட்டத்தில், இப்பிரதேசத்தினுள் வெளிநாட்டவர்களின் பிரவேசத்தை பீக்கிங் தடை செய்தது. 1980 களில், இப்பிரதேசத்தை ஆராய்வதற்கு ஃபிஷர் அனுமதி கோரினார். 10 ஆண்டுகளுக்குப் பின்னரே, சீன அதிகாரபீடம் இதற்கு அனுமதி வழங்கியது. 92 ஒக்ரோபரில் மேற்கொண்ட ஆய்வுப் பயணத்தின் போது, வியத்தகு வகையான காட்டு உயிரினங்களையும், ஒரு போதும் மனிதத்தலையீடு நிகழாத கன்னிக் காடுகளையும் Vergin Forests), பழங்குடிகளையும், அத்துடன் பிரமாண்டமான ஒரு மலையிடுக்கு வழியையும் ஃபிஷர் கண்டறிந்தார். மீண்டும், சென்ற வருடம் ஏப்ரலிலும், ஒக்ரோபரிலும் அவர் அமெரிக்க, சீன, திபெத்திய ஆய்வாளர்களுடனும், மிக நவீன ஆய்கருவிகளுடனும் இப்பிரதேசத்துக்குச் சென்றார்.

இம்மலையிடுக்கு வழியின் ஆழத்தைக் கணிப்பிடுவதற்காக, ஸ்தல விபர வரைபடங்களையும் (Topographical Maps) குத்துயரமானிகளையும் (Altimeters) ஆய்வுக் குழுவினர் பயன்படுத்தினர், ''ஒரு மாத காலம் நீடித்த மூன்றாவது பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனென்றால் வெவ்வேறு ஆள்களால், வெவ்வேறு நாள்களில் குத்துயரமானி அளவீடுகள் எடுக்கப்பட்டதால், உயர அளவீடுகளை 60 மீற்றர் கூட்டும் அல்லது, கழிக்கும் அளவு, திருத்தமாக எடுக்க முடிந்தது'' என ஃபிஷர் தெரிவித்தார். ஜலபெறி (Jala Peri) சிகரத்திற்கும், நம்ஜாக்பார்வா சிகரத்திற்கும் இடையில் மிகத் தாழ்ந்த புள்ளி 2'438 மீற்றர் உயரத்தில் உள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, அங்கு மலையிடுக்கு வழியின் ஆழம் (கீழ் விளிம்பிலிருந்து கணிக்கும் போது) 4,844 மீற்றராகும். நம்ஜாக்பார்வா சிகரத்துக்கும், நைஸென் கங்கிறி சிகரத்துக்கும் (Nychen Kangri) இடையில், இடுக்கு வழியின் ஆழம் 1,000 மீற்றர் அதிகமாகும். நம்ஜாக்பார்வா மலையிடுக்கு வழியில் மொத்த நீளம் ஏறக்குறைய 560 கிலோ மீற்றர். இதன் நீளத்தின் பத்திலொரு பங்கிற்கு மேற்பட்ட பகுதி, 4,570 மீற்றர், அல்லது அதைவிட அதிக ஆழமானது.




A யியோங் ஸாங்போ நதி
B யா(ர்)லர் ஸாங்போ நதி
C பிரமபுத்ரா நதி
1. ஸாச்சு
2. பாயு
3. காண்டன்
4. பொமி
5. பீ
6. மீடொக்
a ஜல பெறி
b நம்ஜாக்பார்வா
c நைசென் கங்கிறி
d சர்ச்சைக்குரிய வலயம்

ஃபிஷர், இம் மலையிடுக்கு வழியைப் பார்த்துப் பிரமித்ததற்கு வேறு காரணங்களும் உண்டு. திபெத்தியப் பழங்குடியினர் இச் செழிப்பான காட்டுப்பகுதிகளில் ஆகக் குறைந்தது 2,000 ஆண்டுக் காலம் வாழ்ந்து வருகிறார்கள். இப்பிரதேசத்தின் சரித்திரத்தில் நிகழ்ந்த அரசியல், சமயக் கொந்தளிப்புக்களின் போது, தப்பியோடுபவர்களுக்கு இக்காடுகள் சிறந்த புகலிடமாக விளங்கின. இந்தப் பழங்குடி மக்கள் இதற்கு முன்னர் வெளியாரைக் கண்டதில்லை என்று, ஃபிஷர் தெரிவிக்கிறார். ஆய்வுக் குழுவிற்குச் சுவாரஸ்யம் அளித்த வேறு ஒரு விடயம், இம்மலையிடுக்கு வழியின் சூழலியல் இயல்புகளாகும். ''இமாலயத்திலேயே, மிகக் கூடிய பன்மைத்துவங் கொண்ட உயிரினக் கூட்டங்களையும், காடுகளையுங் கொண்ட பகுதி இதுவாகும்'' என, ஃபிஷர் தெரிவித்தார். மற்றைய எல்லா இடங்களிலும் அழிந்தொழிந்து போய்விட்ட சில பிராணிகள் இங்கு காணப்படுகின்றன. பனிச் சிறுத்தை, புலி, அலரிலோப் என்கிற மானைப் போன்ற ஒருவகை ஆடு, பல்வேறு வகை மலைச் செம்மறிகள் ஆகியவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுட் சில. ஆசியாவிலேயே மிகப் பெரியவை என்று கருதப்படக் கூடிய சிலவும் இங்கு உள்ளன.

இப்பிரதேசத்தை ஆராய முற்பட்டது ஃபிஷர் மட்டுமல்ல; பிரிட்டனின் தாவரவியலாளர் ஃபிரான்சிஸ் கிங்டொன் வோர்(ர்)ட் தான், இம் மலையிடுக்கு வழியினுள்ளே நுழைந்த முதல் வெள்ளையர். இவர், 70 வருடங்களுக்கு முன் இங்கு வந்தார். சென்ற வருடம் ஜப்பானியக்குழு ஒன்றும், வேறோர் அமெரிக்கக்குழு ஒன்றும் நம்ஜாக் பார்வாவை ஆராய முயற்சி செய்தன. அவர்கள், இம்மலையிடுக்கு வழியின் நுழைவாயிலைக் கடந்து உள்ளே சென்றாலும், சிறிது தூரத்தின் பின் திரும்ப வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர் என, ஃபிஷர் தெரிவித்தார். சீன, திபெத்திய ஆய்வாளர்கள் சிலர் கூட, இம்மலையிடுக்கு வழியின் சில பகுதிகளை ஆராய்ந்துள்ளனர். மே மாதத்தில் திரும்பவும் போகும் போது, நம்ஜாக்பார்வா மலையிடுக்கு வழியை முற்றுமுழுமையாக ஆராய, ஃபிஷர் திட்டமிட்டுள்ளார். உண்மையிலேயே அவரால் அறியப்படுவதற்கு, புதிய உலகங்கள் பல அங்கே இருக்கின்றன.

''ஏசியா வீக்'' ஜனவரி, 26, 1994

❋ ★ ❋

# விமானக் கடத்தல்

## வரலாற்றுக் கண்ணோட்டம்



ஈரான் நாட்டு விமான மொன்றைக் கடத்தியவன், விமானத்தின் மீது நடனம் ஆடும் காட்சி.

பல்வேறு காரணங்களுக்காக, விமானக் கடத்தல்கள் நடத்தப்படுகின்றன. அதே போன்று பாதிக்கப்பட்ட அரசுகளும், விமான நிறுவனங்களும் வித்தியாசப்பட்ட பதில் நடவடிக்கைகளை எடுக்கின்றன. இந்த நூற்றாண்டின் இருபதில், விமானங்கள் வர்த்தக ரீதியிலே முதன் முறையாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதன்பின்தான், விமானக் கடத்தல்களும் ஆரம்பமாகியுள்ளன. ஆகவே, இந்தக் குற்றச் செயல் மிகவும் இளமை வாய்ந்ததாகும். முப்பதுகளுக்குப்பின், ஆயிரத்திற்கு மேற்பட்ட விமானங்கள் கடத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக, இன்று சகல விமான நிலையங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகவுந் தீவிரமாக அமுல் செய்யப்படுகின்றன.

'ஹைஜாக்' என்று ஆங்கிலத்தில் (HIJACK) குறிக்கப்படும் விமானக் கடத்தல், 1931 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி முதன்முறையாக நடைபெற்றுள்ளது. தென்– அமெரிக்க நாடான பேரு (PERU) வில், உள்நாட்டுச் சேவை ஒன்றில் இது சம்பவித்துள்ளது. தலைநகர் லிமா (LIMA) விலிருந்து, தென்பகுதி நகரமான அறிகுயிப்பா (AREQUIPA) வுக்கு, பைறொன் றிக்காட்ஸ் (BYRON RICKARDS) செலுத்திய விமானம் ஓடுபாதையிற் தரித்துநின்ற போது, அது புரட்சிக்காரர்களாற் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. புரட்சி வெற்றி பெறும்வரை, தங்கள் கட்டளைப்படியே விமானத்தை ஓட்டவேண்டுமென அவர் மிரட்டப்பட்டார். பைறொன் றிக்காட்ஸ் இதற்கு மறுத்துள்ளார். மார்ச் 2ஆம் திகதி புரட்சி வெற்றியளித்த படியால், இவர் விடுதலைசெய்யப்பட்டார். பேருவில், இரண்டாவது விமானக் கடத்தல் 1931 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி நடந்துள்ளது. இதுவும் புரட்சிக்காரர்களால் நடத்தப்பட்டுள்ளது. உயிர்ச்சேதம் ஒன்றுமே ஏற்படவில்லை.

1947 ஆம் ஆண்டு வரை, வேறு எந்த விமானக் கடத்தல்களும், உலகின் எப்பாகத்திலும் நடைபெறவில்லை. பின்பு, புதிய கிழக்கு ஐரோப்பியப் பொதுவுடைமை நாடுகளிலிருந்து மக்கள் மேற்கு நாடுகளுக்குத் தப்பும் வழியாக, விமானக் கடத்தல் பயன்படுத்தப்பட்டுள்ளது. விமானக் கடத்தலின் போது முதலாவது உயிர்க் கொலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் 1974 ஆம் ஆண்டில் நடைபெற்றுள்ளது. 25 ஜூலை 1947 இல் மூன்று இராணுவ அதிகாரிகளும், ஏழு பொதுமக்களும் கூட்டாக, ஒரு வர்த்தக சேவை விமானத்தை ருமேனியாவிலிருந்து துருக்கிக்குக் கடத்தியுள்ளனர். கடத்தலை முறியடிக்க எத்தனித்தார் என்ற காரணத்திற்காக, விமானத்திலிருந்த பொறியியலாளர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

1948 ஆம் ஆண்டில் 7 விமானக் கடத்தல்கள் நடந்துள்ளன. இவற்றிலே 6 கடத்தல்கள், கிழக்கு ஐரோப்பியக் கொம்யூனிஸ்ற் நாடுகளிலிருந்து தப்புவதற்காக நடந்தது. மிகுதியான ஒன்று சீனாவின் மக்கௌவிலிருந்து ஹொங் கொங் தீவுகளுக்குச் செல்லும் விமானத்தில் ஏறிய சீனக் கொள்ளைக் கோஷ்டியால் நடத்தப்பட்டுள்ளது. இக் கோஷ்டியின் நோக்கம், பயணிகளிடம் உள்ள பெறுமதி வாய்ந்தவற்றைக் கொள்ளையிடுவதும், பின்பு அவர்களைப் பிடித்துப் பணயம் வைத்துக்கொண்டு, அவர்களின் உறவினரிடம் இருந்து மேலதிகப் பணம் பறிப்பதும் ஆகும்.

ஆனால், விமானத்திலே பயணிகளுக்கும், கொள்ளைக் கோஷ்டிக்குமிடையில் நடந்த சண்டையில், விமானம் சேதமுற்றுக் கடலில் வீழ்ந்தது. ஒருவரைத் தவிர மற்ற யாவரும் உயிர் இழந்தனர். அடுத்து 1949 ஆம் ஆண்டிலும், மேற்கூறியதுபோல் அரசியற் காரணங்களுக்காக, ஆறு விமானக் கடத்தல்கள் நடந்துள்ளன. யாவும் கிழக்கு ஐரோப்பா சம்பந்தப்பட்டவையே. ஒன்று மாத்திரம், தாய்வானிலிருந்து சீனாவுக்குத் தப்புவதற்காகச் செய்யப்பட்டுள்ளது, இதுவழமைக்கு மாறானது. பொதுவுடைமை நாடுகளிலிருந்து தப்பி ஓடுவதுதான், இதுவரை காலமும் நாம் கண்ட கடத்தல்கள் ஆகும்.

1950 ஆம் ஆண்டில், நான்கு கடத்தல்கள் மாத்திரம் நடைபெற்றுள்ளன. இவற்றில் மூன்று செக்கோஸ்லோவாக்கியா நாட்டிலிருந்து மேற்கு ஜேர்மனிக்கு விமானச் சேவையில் ஈடுபடுபவர்களாற் செய்யப்பட்டுள்ளது. இந்த மூன்று



மே மாதம் 9 ஆந் திகதி, 1972 ஆம் ஆண்டு இஸ்ரேலிய விமான நிலையத்தில், கடத்தப்பட்ட பெல்ஜிய நாட்டு விமானத்தை, ஒரு பயணியின் உயிர் இழப்புடன் இஸ்ரேலிய இராணுவத்தினர் மீட்டனர். கடத்தற்காரர் தப்பியோடுகின்றனர். ஆனால், யாவரும் சிறிது நேரத்திற் பிடிபட்டனர்.

கடத்தல்களும், ஒரே நாளில் நன்கு திட்டமிட்டுச் செய்யப்பட்டுள்ளன. மேலும் 1951 இல் தொடங்கி, 1956 ஆண்டில் முடியும் ஆறு வருடகாலத்தில், ஐந்து விமானங்கள் மாத்திரம் கடத்தப்பட்டுள்ளன. இவற்றிலே நான்கு, அரசியற் காரணங்களுக்காகத் தப்பியோடும் முயற்சிகள் ஐந்தாவது கடத்தல் ஒரு கடும் மனநோயாளியின் வேலை என்பது குறிப்பிடத்தக்கது. இத்துடன் 1957, ஒரு விமானக் கடத்தலும் நடைபெறாத ஆண்டு என்ற காரணத்திற்காக, எமது கவனத்தைப் பெறுகின்றது. இதன் பின், எழுபதுகள் முடியும்வரை நடந்த வகை தொகையான விமானக் கடத்தல்களுக்கு முன், ஓர் இடைவேளை போன்று 1957 தோற்றந் தருகின்றது.

அமெரிக்காவின் அடிவயிற்றுப் பகுதியிலிருந்து 60 மைல்களுக்கு அப்பால் உள்ள கியூபாத்தீவில் கொடுங்கோல் நடத்திய சர்வாதிகாரி பப்ரிஸ்ரா ( BAPTISTA ) வுக்கு எதிராக, டொக்ரர் ஃபிடல் கஸ்ற்றோ நடாத்திய போராட்டத்தில் அவர் வெற்றி கண்டது நாம் அறிந்ததே. விமானக் கடத்தல் வரலாற்றுக்கும் இந்தச் சரித்திர உண்மைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. 1958 ஆம் ஆண்டில் நடந்த ஏழு கடத்தல்களில் ஐந்து, கியூபாவிலிருந்து கிளம்பியுள்ளன. அடுத்த 1959 ஆம் ஆண்டிலும் ஏழு கடத்தல்கள் நடந்துள்ளன. மீண்டும், ஐந்து விமானக் கடத்தல்கள் கியூபாவுடன் தொடர்பு பட்டவையாகின. ஒன்று மாத்திரம், அமெரிக்காவில் தொடங்கி, கியூபாவை நோக்கித் தரையை விட்டு மேலெழும்ப முன்பே முறியடிக்கப்பட்டுள்ளது. 1959 ஆம் ஆண்டில் ஃபிடல் கஸ்ற்றோ கருபியன் கடற் பிரதேசத்திலான முதலும் இறுதியுமான பொதுவுடைமை அரசை கியூபாத் தீவிலே நிறுவினார். அப்போது அமெரிக்க அதிபராக இருந்த கெனடியையும் அவருடைய நிர்வாகத்தினரையும், விமானக் கடத்தல் சம்பந்தமாக மிகவும் அபாயகரமான கொள்கையை முன்னெடுக்க இது தூண்டியுள்ளது.

கியூபாவில் அமெரிக்கர்கள் செய்த பெரும் முதலீடுகள் யாவற்றையும், கஸ்ற்றோ தேசிய உடைமை ஆக்கியுள்ளார். இதனால் சினங் கொண்ட கெனடி அரசு, கியூபாவிலிருந்து அமெரிக்காவுக்குக் கடத்தி வரப்படும் விமானங்களை, தமக்குச் சேர வேண்டிய கொடுப்பனவு என்றே கணக்கெடுத்துள்ளது. இத்துடன், கடத்தற்காரர்களையும் தண்டிக்காது, பெரும் வரவேற்பும் கொடுத்துள்ளது. பிற்காலத்தில் நடந்த பெரும் விமானக் கடத்தல்கள் நியாயப் படுத்தப்படுவதற்கு, ''அமெரிக்க நீதியின்'' தவறே காரணம். அமெரிக்கா முறையான நடவடிக்கை எடுத்திருப்பின், கடத்தல் வரலாறு வித்தியாசமாக இருக்கும் என்று அறிவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

1960 ஆம் ஆண்டிலும், கியூபாவிலிருந்து அமெரிக்காவுக்கு, ஆறு விமானக் கடத்தல்கள் நடைபெற்றுள்ளன. இன்னும் இரண்டு விமானக் கடத்தல்கள், முறையே சோவியத் ருஷ்யாவிலும், அவுஸ்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேலியாவிலும் உள்நாட்டுச் சேவையின்போது நடைபெற்றுள்ளன. இவற்றிலே கியூபாவிலிருந்தான கடத்தல்களே, உலகின் கவனத்தைக் கவர்ந்தவையாகும். 1961 இல் ஒன்பது விமானக் கடத்தல்கள் நடைபெற்றுள்ளன. அவற்றில் ஆறு, கியூபாவுடன் சம்பந்தப்பட்டவையாகும். ஒவ்வொரு நாட்டுக்கும் ஒன்று விகிதத்தில், சோவியத் ருஷ்யா, போர்த்துக்கால், தென் அமெரிக்கா, வெனிஸுவெலா ஆகியவற்றிற் கடத்தல்கள் ஒப்பேறியுள்ளன. 1962 இல் தொடங்கி, 1967 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட ஆறு வருடகாலப்பகுதியில் 24 விமானக் கடத்தல்கள் நடந்துள்ளன. இவற்றிலே பத்து, கியூபாவுடன் தொடர்புபட்டவை; நான்கு, சோவியத் ருஷ்யாவில் தொடங்கியவை. மூன்று, ஆபிரிக்காக் கண்டத்தில் நடந்துள்ளன. இரண்டு, ஹவாய் தீவுகளைச் சுற்றி நடைபெற்றவை. மிகுதி மூன்றும், தென் அமெரிக்கக் கண்டத்தில் நடைபெற்றவையாகும்.

1968 ஆம் ஆண்டில், கியூபா சம்பந்தமான விமானக் கடத்தல்கள் உச்சநிலையை அடைந்தன. அவ்வருடம் உலகில் நடந்த 35 விமானக் கடத்தல்களில், 29 கியூபா சம்பந்தப்பட்டவை. மிகுதி ஆறும், ஆறு நாடுகளுக்கிடையில் தலைக்கு ஒன்றாகப் பிரிக்கப்படல் வேண்டும். வியட்நாம், பிலிப்பைன்ஸ், இத்தாலி, டொமினிக்கன் குடியரசு, பிரான்ஸ், அமெரிக்கா என்பவையே அந்த ஆறு நாடுகளாகும். இவ்வளவு எண்ணிக்கையிற் கடத்தல்கள் நடப்பதற்கு, இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று, உலகில் அவ்வருடம் வீசிய புரட்சி அலை; அது விமானக் கடத்தலில் வெளிக்காட்டப்பட்டுள்ளது. இரண்டு, விமானச் சேவையிற் பாதுகாப்பின்மை. விமான நிலையத்திலும், விமானத்திலும் பாதுகாப்பு ஒழுங்குகள் சீராக இல்லாதபடியால், கடத்தல்கள் எளிதாக நடந்துள்ளன. கியூபாவை நோக்கியும் கடத்தல்கள் ஆரம்பித்துள்ளமை, புதிய திருப்பத்தைக் காண்பிக்கின்றது. அடுத்த வருடம் (1969), கியூபா அதிபர் கஸ்ற்றோ வெறுப்படையும் அளவுக்குப் பெருந்தொகையான கடத்தல்கள் கியூபாவை நோக்கி நகர்ந்துள்ளன. விமானத்தைக் கடத்துபவன் எவனுமே, கியூபாவுக்குத் திருப்பு எனச் சொல்லுகிற அளவுக்குச் சம்பவங்கள் அடுக்காக நடந்துள்ளன. இவை முழுவதுமே கியூபாவை நோக்கிச் சென்றுள்ளன. இதற்கிடையில், கடத்தப்பட்ட விமானங்களைத் தடுத்து வைக்கவும், கடத்தற்காரர்களைத் தண்டிக்கவும், தடுத்து வைக்கப்பட்ட விமானத்தை உரியவர்களுக்கு மீள ஒப்படைக்கவும் வகை செய்யும் சர்வதேச ஒப்பந்தம் ஒன்றிற் கியூபா கைச்சாத்திட்டுள்ளது. வாரத்திலே ஒன்றிரண்டு விமானங்கள் கடத்தப்பட்டு, கியூபாவில் தரையிறங்க, கியூபா அதிகாரிகளுக்கு நிறைய வேலை கிடைத்துள்ளது.

இது இவ்வாறு இருக்க, 1969 ஆம் ஆண்டு பாலஸ்தீனியர்கள் விமானக்கடத்தலில் முதன் முறையாகக் குதித்துள்ளனர். தமது பரிதாப நிலையை உலகின் மனச்சாட்சி முன் நிறுத்தவும், இஸ்ரேலின் கொடுமைகளுக்குப் பதில் அடி கொடுக்கவும், அவர்கள் இந்த மார்க்கத்தைத் தெரிவு செய்துள்ளனர். ஆனால், இது அவர்கள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்பது வேறு விஷயம். அரபு இனத்தவர்கள், 1969 இல் ஒரே ஒரு கடத்தல் மாத்திரம் செய்தார்கள். இதைச் செய்தவள், 25 வயது அரபுப்பெண் லெய்லா காலேத். காலப்போக்கில், இவள் விமானக் கடத்தலில் உலகப் புகழ் பெற்றாள் என்பது வரலாறு. 1970 இல் விமானக் கடத்தல் எண்ணிக்கைகள் மிகவும் குறைந்துள்ளன. கியூபா தொடர்ந்து நல்வரவு கொடுக்காததால், கியூபாவை நோக்கி விமானங்கள் திருப்பப்படுவது குறைந்தாலும், 32 விமானங்கள் கியூபாவின் ஹவானா விமான நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு நிறுத்தப்பட்டுள்ளன.

பாலஸ்தீனியர்களின் விடுதலைப் போரில், விமானக் கடத்தல் ஓர் ஆயுதமாக 1970 களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தொடர் நிகழ்ச்சியாக, அவர்கள் நான்கு பாரிய விமானங்களைக் கடத்தினார்கள். அவற்றிலே 2 விமானங்கள், அவர்கள் கட்டுப் பாட்டில் உள்ள ஜோர்தான் பாலைவனத்தின் டோர்சன் விமான இறங்கு துறையில் நிறுத்தப்பட்டன. இன்னுமொன்று, எகிப்தின் கெய்ரோ விமான நிலையத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது.

நான்காவது விமானக் கடத்தல், பெருந் தோல்வியில் முடிந்தது. இங்கிலாந்தின் ஹீத்றோ வியான நிலையத்தில் வைத்து, லெய்லா காலேத்தை இஸ்ரேலியப் பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்து பிரிட்டிசாரிடம் ஒப்படைத்தனர். இவளை மீட்பதற்குப் பணயமாக, மூன்று நாட்களின் பின் பிரிட்டிஷ் விமானமொன்று கடத்தப்பட்டு, டோர்சன் இறங்குதுறைக்குக் கொண்டு செல்லப்பட்டது. இங்கு பயணிகள் எல்லோரும் இறக்கப்பட்டபின், மூன்று விமானங்களும் தகர்க்கப்பட்டன. பயணிகளின் உயிரைக் காப்பதற்காக, லெய்லா காலேத்தும், இன்னும் ஏழு பாலஸ்தீனியப் போராளிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இத்துடன், இவை யாவும் முற்றுப் பெறவில்லை; ஜோர்தான் மன்னரின் படைகளுக்கும், போராளிகளுக்கும் பெரும் போர் மூண்டது. இதில், போராளிகள் பலர் உயிரிழந்தனர். இந்தப் போர் நினைவாக, 'கறுத்த செப்ரெம்பர்' (Black September) என்ற பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு, சில காலம் உலக அரங்கில் நிலை பெற்றுள்ளது. அடுத்த வருடம் 1971 இல் 60 விமானங்கள் கடத்தப்பட்டுள்ளன. இவற்றிலே பல, முன்போல் கியூபாவுக்குச் சென்றுள்ளன. ஒன்று மாத்திரம், மிகவும் விசித்திரமானது; கூப்பர் என்ற அமெரிக்கன், விமானத்தைக் கடத்திய பின் 200, 000, 000 டொலர் பணமும், நாலு இறங்கும் குடைகளும், பறாசூட்சும் (Pa rachutes) மிரட்டி வாங்கிக் கொண்டான். விமானம் பறந்தபடி இருக்கும் போதே, விமானக் கதவைத் திறந்து வெளியிற் குதித்து விட்டான். இதுவரையும், கூப்பர் எங்கு இருக்கிறான் என்று கண்டுபிடிக்கப்படவில்லை. அவன் வெளியேறிய இடமோ, வோஷிங்ரன் தலைநகருக்கு மேலாக! (தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவியல்

# இங்கிலாந்தில், அண்மையில் நடந்த படுகொலைகள்

சில தனிமனிதர்கள், சொந்தக் காரணங்களுக்காகச் செய்யும் வகை தொகையான படுகொலைச்சம்பவங்கள் காலத்திற்குக் காலம் இங்கிலாந்தில் நடைபெறுகின்றன. இன்றும், குற்றத் தடுப்புப் பிரிவினர்களும், மனநோய் சம்பந்தமான ஆய்வாளர்களும், இத்தகைய நிகழ்வுகளின் அடிப்படைக் காரணிகளை ஆராய்ந்தபடி இருக்கின்றனர். பெரும்பாலும் பணத்தாசையும், மனிதனின் அடிமனதிற் புதைந்திருக்கும் வக்கிரங்களும், இக்கொலைகளுக்குக் காரணமாக அமையலாம் என்று அவர்கள் கருதுகின்றனர். ஆனால், கொலை ஓர் அசாதாரண நிகழ்ச்சியானபடியால், பொதுவான விளக்கம் கூறுவது இயலாத காரியம். ஒவ்வொன்றும், தனித்தனியாக ஆராயப்பட வேண்டியது மிகவும் அவசியம்,



25 ஆம் இலக்கமுடைய அவன் வீட்டிலிருந்து மீட்கப்பட்ட சடலம் ஒன்றை பெட்டியில் இட்டு, பொலிசார் எடுத்துச் செல்கின்றனர்.

மூளைவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான விடுதியொன்றை, தனது வருமானத்திற்காக நடத்தி வந்த ஆங்கிலமாது, பலவருடங்களில் இச் சிறுவர்களிற் பலரைக் கொன்று, விடுதி நிலத்திற் புதைத்துள்ளாள். இச் சிறுவர்களின் பெற்றோர்கள், மாத முடிவில் இப் பெண்ணுக்குப் பணம் அனுப்பிவிட்டால், தமது தார்மிகப் பொறுப்பு திருப்திப்படும் என்று நினைத்தபடியால், பல வருடங்களாக இக் கொலைகள் வெளியே தெரியாமல் நடைபெற்றுள்ளன. இப்பெற்றோர், நேரில் வந்து தமது பிள்ளைகளைப் பார்வையிட்டுச் சென்றிருந்தால், கொலைகள் நடக்க வசதி ஏற்பட்டிருக்க மாட்டாது. பிள்ளைகள் இறந்த பின்பும், இவர்கள் பணம் அனுப்பிக் கொண்டேயிருந்தனர். அப்பெண்ணுக்குச் செலவுக்குச் சிரமமின்றிப் பணம் கிடைத்து வந்துள்ளது. இக் கொலைகளை, பணத்தாசைக் கொலைகள் என்று சொன்னாலும், அந்த மாதின் இரக்கமற்ற குரூரப் புத்தியை எந்த வகையிற் சேர்ப்பதென்று தெரியவில்லை.

இலண்டன் மாநகரின், விலைமாதுக்கள் நிறைந்த சோகோ (Soho) பகுதியில் சில வருடங்களுக்கு முன், பல விலை மாதர் வரிசைக் கிரமமாகக் கழுத்தைக் கயிற்றால் இறுக்கிக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களுடைய உடல்களும் வீதியோரம் காணப்பட்டுள்ளன. இறுதியில் கொலைஞன் பொலிசாரின் கையில் அகப்பட்டான். கொலைகளுக்குக் காரணமாக, அவன் கொடுத்த விளக்கம் விசித்திரமானது. எப்போது தனது காலஞ் சென்ற தாய் ஒரு விலைமாது என்று அறிந்தானோ, அன்று தொட்டு விலைமாதரைக் கொல்ல வேண்டுமென்ற வெறி தனக்கு வந்ததாக அவன் கூறியுள்ளான். இங்கே, பணத்தாசை பங்கேற்காத நிலை காணப்படுகின்றது. கொலைகாரனின் புத்தியிற் கோளாறு என்பது மாத்திரம், தெளிவாகத் தெரிகின்றது.

1975- க்கும், 1980- க்கும் இடைப்பட்ட காலத்தில் இங்கிலாந்தின் யோக்ஷயர் பகுதியில் பீற்றர் சற்கிளிப் என்பவன் 13 பெண்களைக் கொலை செய்துள்ளான். இவனை, யோக்ஷயர் றிப்பர் என்று அக்காலப் பத்திரிகைகள் பிரமாதப் படுத்தியதால், இவனுடைய பாணியில் வேறு பல கொலைகளும் நடக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1978 - க்கும், 1983 – க்குமிடைப்பட்ட காலத்தில் டெனிஸ் நில்சன் என்பவன் 15 ஆண்களைக் கழுத்தை நெரித்துக் கொன்ற பின், துண்டுகளாக வெட்டித் தள்ளியுள்ளான்.

ஆனால் மார்ச் மாதம் கிடைத்த பத்திரிகைத் தகவல்களின்படி, மேற்கூறிய சாதனைப் பட்டியல்களைத் தூக்கி எறியக் கூடிய கொலைகாரன், பிறெடெறிக் வெஸ்ட் (Frederick West) என்ற பெயருடன் அகப்பட்டுள்ளான். இவன், 1970 ஆம் ஆண்டு தொடக்கம் தனது விடுதியை மலிவான வாடகைக்குக் கொடுக்கும் வழக்கம் உள்ளவன். பணத்தட்டுப்பாடு உள்ளவர்களும், அநாமதேயங்களும் இவன் விடுதியில் வாழ்ந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிலௌஸ்ரா நகரில், குரோமவெல் வீதியில், இலக்கம் 25 இல் உள்ள கட்டடம் இவன் வாழும் மனையும், வாடகைக்கு விடும் விடுதியுமாகும். இரவு பகலென்று பாராது இவன் தனது வீட்டை எப்போதும் இடிப்பதும், திருத்த வேலை செய்வதுமாக இருப்பானென்று அயலில் வாழ்வோர் தெரிவிக்கின்றனர். ஆனால், தொலைபேசித் தகவல் ஒன்று கிடைத்த பின், பொலிசார் வீட்டின் நிலப் பகுதியிலும், உட்பகுதியிலும் அகழ்ந்து பார்த்தபோது, இதுவரை எட்டு உடல்கள் எடுக்கப்பட்டுள்ளன. 1970 இல் காணாமற்போன இவனுடைய மகளும், 1968 இல் காணாமற் போன இவனுடைய முதல் மனைவியும் இதில் அடங்குவர். பொலிசார், நவீனரக இலத்திரனியற் கருவிகளின் உதவியுடன் தேடுதல் நடத்துகின்றனர். இன்னும் பல எலும்புகளும், சடலங்களும் வரக் கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர். இக் கொலைகளுக்குரிய காரணங்களைக் கூறுவதற்கு, இதுவரை ஒருவரும் முன் வரவில்லை. நாடளாவிய ரீதியில், காணாமற் போவோரின் பெயர்ப்பட்டியல் ஒன்றை ஒழுங்கு செய்வதற்கான இயக்கமொன்று, இந்தக் கொலைகளுக்குப் பின் நிறுவப்பட்டுள்ளது. பல காலமாக மந்த கதியில் விற்பனையாகிக் கொண்டிருந்த இங்கிலாந்துப் பத்திரிகைகள், இப்போது பெருந் தொகையாகத் துரித கதியில் விற்பனை ஆவதாகத் தகவல் வந்துள்ளது. வேறு பொதுசனத் தொடர்புச் சாதனங்களும், இக் கொலைகளால் நன்மை பெற்றுள்ளன. ரைம், மார்ச் 21, 1994

---

## சிதைந்த சோவியத் ருஷ்யா

ஐந்து வருடங்களுக்கு முன் உடைந்த சோவியத் ருஷ்யா மீண்டும் கொண்டுவரும் முயற்சிகள், பல காலத்துக்குக் காலம் நடைபெற்றுள்ளன. ருஷ்ய ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்ட சிறினோவிஸ்கி இதில் முதன்மையானவர். இவரைப் போன்றவர்கள் வெறும் தீவிரவாதிகள் என்று ஒதுக்கப்பட்டுள்ளனர். ஆனால் அண்மையில் சில உயர் பதவி வகிப்போர், இது சம்பந்தமான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். சென்ற வாரம் ருஷ்ய பாராளு மன்றத்தின் மேற்சபை அங்கத்தவர் விளாடிமீர் சுமேய்கோ குடியரசுகளின் நெருக்கமான ஒன்றியம் நிறுவுவது பற்றிப் பேசியுள்ளார். இவருடைய கருத்துக்கள் ஒருகாலத்தில் மிக்கேல் கோர்பச்சேவ் கூறியவற்றுடன் ஒத்து இருக்கின்றன. எண்ணெய்வளம் உள்ள கசக்கஸ்தான் ஜனாதிபதி நூர்சுல்தான் நசார்பேயவ் ஐரோப்பிய - ஆசிய சோவியத் ஒன்றியம் ஒன்று தேவை என்றுள்ளார். பொதுப் பாராளுமன்றம், நாணயம், சுங்கம் ஆகியவை உண்டாகின் குடியரசுக் கிடையிலான பிரச்சனைகள் திருப்திகரமாகத் தீருமென்று இவர் கூறியுள்ளார். ருஷ்யப் பொது நலவாய மன்று கூட்டத்தில், இவர் தனது கருத்துக்களை வலியுறுத்தவுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரவுகள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல்

உமது வாழ்க்கையில் தகவல்கள் ஒரு பிரச்சனையாக இருக்கலாம் என்பதை, பின்வரும் நடத்தைகளால் அடையாளங் காணலாம். உம்முடைய சூழலில் என்ன நடக்கிறது என்பதை அறியாது காலக்கிரமமாகப் பேசுவது; ஒன்றைப்பற்றி நீர் விளங்கிக்கொண்டதை, எவ்வாறு எண்ணிக்கொண்டாய் என்பதை விபரிக்க இயலாமை; வீடியோ கசெற்றில் உள்ள பொத்தான்கள் எல்லாம் எதற்காக என்பதை அறியாது சோர்வுறுதல்; பங்குச்சந்தைச் சுட்டி 500புள்ளிகளால் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதற்கு உண்மையாகவே அதன் அர்த்தந் தெரியாத போதும், பீதி அடைதல்; சம்பவத் திரட்டுப் பதிவேட்டில் அதை, ஒருவரும் வாசிக்கார் என்பது தெரிந்தும், சரியான வரவைப் பதிதல் ''எனக்குத் தெரியாது'' என்ற சங்கடமான நிலை.

வேலைத் தலத்தில், அல்லது பொதுவாகச் சமூகத்தில் தப்பிப் பிழைக்க வேண்டுமாயின், நுணுக்கமாக விரிவடைந்து வருகிற அறிவுத் தொகுதியைக் கிரகித்துக் கொள்ளப் பலவந்தப் பட்டுள்ளோம். எமது வாழ்க்கையில் தகவல் ஓர் உந்து சக்தியாகிறது, கெடுதியினை அறிவிக்கும் மிரட்டல், நீண்டு கொண்டே போகும் குவியலை விளங்கிக்கொள்ள வற்புறுத்தல், எங்களில் அநேகரைக் கவலை கொள்ளச் செய்கிறது.

தகவல் தாகம், நாங்கள் என்ன விளங்கிக் கொள்கிறோம் என்பதற்கும், எதனை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோமோ என்பதற்குமிடையே, அகன்று கொண்டேபோகும் இடைவெளியால் தோற்றுவிக்கப்படுகிறது.

**தகவற் கவலையை எவ்வாறு தோற்கடிப்பது? நீங்கள் என்ன விளங்கிக் கொண்டீர்கள் என்பதற்கும், எதனை விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்கும் இடையே, அகன்று கொண்டு போகும் இடைவெளி.**

தகவல்கள், எங்களுக்கு எதுவேண்டும், அல்லது தேவை என்பதைச் சொல்லாமல் விடும் போது சம்பவிக்கிறது.

ஆனால், எமது தகவல்களுடனான தொடர்புமட்டும், தகவல் ஆவலுக்கான மூலம் அல்ல. தகவல்களை அடையும் வழிமுறைகள், அநேகமாக ஏனையோரால் கட்டுப்படுத்தப் படுதலும், எங்களைத் தகவற் கவலை உள்ளவராக்கும். புதினப் பத்திரிகை ஆசிரியர்கள், உற்பத்தியாளர்கள் எவ்வகைப் புதினங்களை நாங்கள் பெறலாம்? என்பதைத் தீர்மானிப்பர். அத்துடன், முடிவு எடுப்பவர்களும் தகவல் ஊற்றைத் தடுக்கலாம். மற்றவர்களுடைய எதிர்பார்ப்புக்களாலும், எங்களைச் செய்திக் கவலை உள்ளவர்களாக ஆக்குவர். அவர்கள், கம்பனி முகாமையாளர்களாகவோ, கூர்ந்து நோக்குபவர்களாகவோ, அல்லது பெற்றோர்களாகவோ இருக்கலாம்.

தகவல் உலகில் எங்களை, தகவல் உற்பத்தியாளர்களாகக் கருதலாம். செய்தி அறிக்கையைக் கேட்கும்போதும், சக வேலையாளருடன் கதைக்கும்போதும், சஞ்சிகையைப் படிக்கும்போதும், ஒரு மாநாட்டில் மக்களின் முகங்களைப் பார்க்கும் போதும், நாங்கள் தகவல்களைத் தெரிந்தும், உற்பத்தி பண்ணியும் கொள்கிறோம்.



அப்போது வாழ்வின் எல்லா மட்டங்களிலும் உற்பத்தியாளருக்கான திறனை விருத்திபண்ண முயலுவோம். இது புலமையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பாங்கதையும் மாற்றுவதற்கு வற்புறுத்தும். நாம் வாழும் சமூகத்தில் மேலதிகமான புரிந்துணர்வையும், (கலாசார தகவல்கள்) தகவல் பரிமாற்றத்தை அபிவிருத்தி செய்தலையும், (நேர் உரையாடல் தகவல்) கைவசமுள்ள தகவல்களிலிருந்து எமக்குத் தேவையானது எது என்பதை அறியவும், தகவல்களின் இயல்பை அபிவிருத்தி செய்யவும், (சான்றாதார தகவல்) செய்தி பரிவர்த்தனைச் சாதனங்களிலிருந்து கூடுதலாக அறியவும் (புதினத் தாள்களிலிருந்து தகவல்கள்) உதவும்.

## தகவல் தாகத்தைத் தணித்துக்கொள்ள, இதோ சில வைத்திய முறைகள்.

உமது வாழ்வில் குறுக்கிடும் தகவல்கள் சம்பந்தமாகக் குறைந்த வலுவுள்ளதும், புத்திசாலித்தனமானதுமான தீர்மானங்களை எடுப்பதற்கு இவை உதவும்.

(Robust Attitude) றோபஸ்ற் மனப்பாங்கு:- உம்மால் விளங்கிக் கொள்ள இயலாதவை அதிகம் உண்டு என்பதை ஏற்றுக்கொள். உமக்குத் தெரியாதவை, தெரிந்து கொள்ள வேண்டும் என்பதைத் தூண்டுவதற்கு வழி விடுவதாக. ஒன்றை அறிய விரும்பும் போது, அறிய முடியவில்லையே என்பதற்குச் சமமானது என்பதை ஞாபகப் படுத்து. இது மற்றவருக்குப் புரிய வைக்கும் போது, உமது திறமைக்கு அளவிடமுடியாதளவு, அநுகூலமாகும்,

முழுவதையும் வாசிக்க இயலாமை காரணமாக எழும் இந்த உணர்வை, தகவற் பரிமாணத்திற்கு சகலதையும் உம்மால் வாசிக்க முடியாது என்பதை அடையாளங் காணுதல் மூலம் குறைக்கலாம். ஒவ்வொரு முறையும் நீர் புதிய எண்ணக் கருவை எதிர்கொள்ளும் போது, அதை வேறு ஒன்றுக்குச் சம்பந்தப் படுத்துக. புதிய எண்ணக்கருவிலிருந்து, வேறு புதியனவற்றுக்குத் தொடர்பை ஏற்படுத்துக.

எதிரிடையானவற்றையும் எண்ணிப் பார்க்குக. உமக்கு ஒரு பிரச்சினை எழுமாயின், அதற்கான தீர்வையும் எண்ணுக. பிறகு, அதற்கு எதிரானதையும் எண்ணுக. நீர் ஒரு நோக்கத்தை தெரிவு செய்ததும், எதிராகப் போனால் என்ன நேரும் என்றும் எண்ணுக.

(Robust Actions) றோபஸ்ற் செயற்பாடுகள்:- தகவல் பரப்புதலோடு சம்பந்தமான பொறிகளோடும், ஆபத்துக்களோடும் பரிச்சயமாயிருக்கவும். ஏதாவது ஒன்றுக்கு இரையாகிவிடுவீரோ என்பதைத் தீர்மானிக்கவும்.

மிகச் சரியானது என்றுவரும் போது, உமது குறிப்பிட்ட நேரத்திற்கு ஒதுக்கி வைத்த மட்டத்தைப் பேணுக, அவ்வாறான தகவல் மிகச் சரியானது என்று காணப்பட்டாலும், அதைப்பயன் படுத்த வேண்டுமென்றில்லை. உதாரணமாக:- வேறொருவர் உம்மிடம், நேரம் என்ன? என்று கேட்கிறார். அப்போது, நிமிடங்களை எண்ணிப் பார்ப்பதிலும் பார்க்க, ''அநேகமாக மத்தியானம்'' என்று சொல்லலாம்.

தகவல்களைத் திட்டமிடுக, உமது தேவைக்கேற்ற தகவல்களை வகைப்படுத்திச்சுருக்கம் தயாரிக்குக. இவை பின்வரும் வினாக்களுக்குத் தளமிடப்பட்ட விடையாகலாம். உமது வேலைக்கு என்ன தேவை? எவ்வளவு அத்தியாவசியமானது? எவ்வளவு விரும்பத் தக்கது? எப்பாடல்கள் விறுவிறுப்பாக உள்ளன? எதைப்பற்றி நீர் கதைக்க விரும்புகிறீர்? உண்மையாகவே அவசியமில்லாததுடன் ஏன் நேரத்தைச் செலவிடுகிறீர்? அதைத் தவிர்ப்பதனால் உமது வாழ்வில் மாற்றம் எவ்வாறாகும்?

உமது விருப்பத்துக்குரிய கற்கை நெறியைத் தீர்மானித்துக் கொள்க. புத்தகத்தை வாசிப்பதாலோ, ஒரு பாடநெறியைப் படிப்பதனாலோ, அல்லது உம்மையே பரிசோதிப்பதனாலோ, நீர் திறமையாகப் படிக்க முடியும். பிறகு ஒரு பாடத்துக்கு வேண்டிய தகவல்கள் தேவைப்படும்போது ஈடுகொடுக்கக்கூடிய விருப்பமான முறையை அறிய ஒரு வழியைக் கண்டுகொள்ள முயலுவீர். அதிக ஆவல் தரக்கூடிய தகவற் பரப்பைத் தவிர்க்கவும். அவை மருத்துவம், பொருளாதாரம் அல்லது மின் அணு சம்பந்தமானதாய் இருக்கலாம். ஒரு பட்டியலைத் தயாரிப்பதனால் அநேகமாக ஆவலைக் குறைத்துக் கொள்ளலாம். ஆவலைக் குறைத்துக்கொள்ள ஓர் இடத்திடல் தொடங்க வேண்டும். ஒன்று தொடக்கம் பத்துவரை வகைப்படுத்துக. ஒவ்வொரு தகவற் பரப்பிலும் உமது ஆவலைக் குறைக்க நிகழவேண்டியதை முற்கோளாகக் கொள்க. அப்போது எது வெல்லக்கூடியது? எது வெல்ல முடியாதது? என்பதைத் தீர்மானிக்கலாம்.

வாசிக்க விரும்பும் விஷயங்கள் அடங்கிய குவியலைக் குறைப்பதற்குப் பருவகாலச் சஞ்சிகைகளில் வெளியாகும் உமக்கு விருப்பமான கட்டுரைகளை வெட்டி எடுத்துக்கொள்க. இவ்விதமான செயல் உமது குவியலைச் சிறுக்கச் செய்யும்.

**செய்திப் பரிவர்த்தனைத் திறன்:-**

''ரைம்'' அல்லது ''நியூஸ் வீக்'' அல்லது உலக உலா சஞ்சிகையில் வெளியான கட்டுரையை உமது தாயாருக்குத் தெளிவு படுத்துக. பிறகு 12 வயதுப் பிள்ளைக்குத் தெளிவு படுத்துக. ஒவ்வொருவரும் நீர் எவ்வாறு புரிந்து கொண்டீர் என்பதை உமக்குக் கற்பிப்பர். கதைக்கும்போதும், அனுஷ்டிக்கும் போதும் கவனத்தைக் கடைப்பிடிப்பது போன்று கேட்கும் போதும் கடைப்பிடிக்குக.

ஒரு விஷயம் தெரியாதவிடத்து தெரியும் என்று தலையாட்டாதே, ''தயவு செய்து தெளிவு படுத்துக'' அல்லது ''நீர் எதைப் பற்றிக் கூறினீர் என்பதை நான் விளங்கிக் கொண்டேன் என்று திடமாகக் கூறமுடியாது'' என்று சொல்லிப் பயிற்சி செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் அல்லது இல்லை என்று பதில் கொடுக்க இயலாதவாறு கேள்வி கேட்கவும். வேறு ஒருவருடன் உரையாடும்போது அவருடைய சூழல், அல்லது அலுவலகம் என்பனவற்றைப் பற்றிக் கற்பனை பண்ணிக் கொள்க. அவற்றைப் பிரத்தியட்சமான சூழ்நிலையில் வைத்து எண்ணும்போது அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை நினைவு படுத்திக்கொள்ள உதவும். நாம் எமது வாழ்விற் கணிசமான பகுதியைச் சந்திப்புக்களிற் செல விடுகிறோம். இது மேலும் பயன் உள்ளதாக ஆக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். சந்திப்புக்களின் இயல்பு மேலும் விருத்தியடையும்; பின்வருமாறு செய்யின்:–

★ மிகக் குறைந்த ஆட்களுடன் மிகக் குறைந்த சந்திப்புக்கள். இருவர் உத்தமம், மூன்று தொடக்கம் ஐந்து பேர் சமாளிக்கக் கூடியது.

★ பரிசீலிக்கப்பட்ட மிகக் குறைந்த எண்ணிக்கையான தலைப்புக்கள். மிகக் குறைந்த தலைப்புக்கள் என்றால் மிகக் குறைந்த தீர்மானங்கள்.

★ இன்னொரு சந்திப்புக்கு ஒழுங்கு செய்வதற்காக ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யப் படல்.

★ கூட்டத்தின் நோக்கம், நிகழ்ச்சி நிரல், பேச்சுக்கள் எடுக்கும் நேரம் என்பன பற்றி முன் கூட்டியே ஆரம்பத்தில் வரையறுக்கப்பட்டு விடும்.

★ கூட்டத்திற்கு பங்குபற்றுவோரின் மனதில் ஒவ்வொரு கூட்டத்தின் குறிக்கோளும் தெளிவாய் இருக்கும்.

★ சமுகமளிப்போருக்குத் தெரியும் யார் பொறுப்பாளி என்று. திறமையுள்ள தலைவன் ஒரு கூட்டத்தைத் தாக்க முடியாததாகச் செய்ய முடியும்.

★ பிந்தி வருவோர் விகிதாசாரப் படி தண்டம் செலுத்துவர்.

★ ஒரு புதிய கருப்பொருள் புகுத்தப்பட்டு ஆகக் குறைந்தது ஐந்து நிமிடங்கள் முடியும் வரை ஒருவரும் அதற்கெதிராகச் சொல்ல அனுமதிக்கப்படலாகாது. புதிய கருத்துக்கள் அவை எவ்வளவு பிரகாசமானவையாயினும் உடையத் தக்கன.

எல்லாவகையான செய்திப் பரிமாற்றங்களின் குறிக்கோள், அறிவுறுத்தல் பெறுவதும், அனுப்புவதும் சம்பந்தமானது என்பதை நீர் விவாதிக்கலாம். எல்லா அறிவுறுத்தல்களும் பின்வருவனவற்றை அடக்கியதாகும்:-

நேரம்:–

நாட்டிலுள்ள ஒரு சிற்றுண்டிச் சாலையை அடையும் மார்க்கம் பற்றியதாயின் அங்கு செல்ல எடுக்கும் நேரம், பாதை, பாதையிற் குறுக்கீடும் அடையாளங்கள் பற்றிக் கொண்டிருத்தல் வேண்டும்.

எதிர்பார்ப்புக்கள்:–

பாதையூடாகக் காணப்படும் காட்சிகள் நீர் சரியான பாதையிற் செல்கிறீர் என்பதை வலியுறுத்தும் தடை முகாம்களாக அமையும்.

தோல்வி:–

எல்லா அறிவுறுத்தல்களும் நீர் நீண்ட தூரம் போய்விட்டீர் என்பதை அறிவிக்குந் தன்மையை உள்ளடக்கித் திரும்புவதற்கான எச்சரிக்கையைச் செய்யும் வெளிச்சமாக இருக்க வேண்டும்.

சான்றாதார மூலப்பொருள்:-

ஏதாவது திட்டத்தில், செயலில் இறங்குமுன் ஒழுங்குகளுக்கு வழிகோலும் போது அவை மட்டுப்படுத்தப்பட்டதும், சமாளிக்கக் கூடியதுமானது என்பதை மனதிற் கொள்க. வகைப்படுத்துதல், பொருள்களை ஒழுங்கு செய்தலுடன் தொடர்புடையது. அது விதம் விதமான மாதிரி அமைப்புக்கள், வகைகள் என்பதைக் குறிக்கும். இந்த மாதிரி அமைப்பு ஒத்த நிகழ்வுகளை நன்றாக ஒழுங்குபடுத்திக் கொடுத்துதவும்.

மாநாடுகள் போன்ற வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சியைப் பொறுத்த மட்டில் நேரம் ஒழுங்குபடுத்தும் கோட்பாட்டில் மிகத் திறமையாகப் பணியாற்றும்.

வாழ்க்கைப் புத்தக வரிசை சம்பந்தமாக இடத்தை ஒழுங்கு செய்வதில் நேரம் சிருஷ்டியாகப் பயன்படுத்தப்படும். நாடுகள், கம்பனிகள் சார் கண்காட்சிகள், அரும்பொருட் சாலைகள், சரித்திரம் போன்றவற்றை ஒழுங்கு செய்யும் போது இது அனுசரித்துப் போகும். நேரம் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய கட்டமைப்பு. அதிலிருந்து மாற்றங்களை அவதானிக்கலாம்; ஒப்பீடுகள் செய்யலாம்.

இடம்:–

வேறுபட்ட மூலங்கள், அல்லது இடங்களிலிருந்து வருந் தகவல்களை ஒப்பீடு செய்து பரீட்சிக்க முனையும் போது இடம் தான் இயல்பான முறை.

அகரவரிசைக் கிரமம்:-

குறிப்பிடத்தக்க பெரிய தகவல் மையங்களை ஒழுங்குபடுத்தும் போது அகர வரிசைக் கிரமம் கைகொடுக்கும்.

தொடர்ச்சி முறை:-

தகவல்களுக்கு மதிப்பீடு வழங்க நினைக்கும் போது தொடர்ச்சி முறையே பயன்படும்.

நீர் பொறிவண்டித் தொழிற்சாலை சார்பாக அறிக்கை தயாரிக்கும்போது கார்களின் உரு மாதிரி காலம், உற்பத்தியான இடம், நுகர்வோரின் விகிதம் ஆகியன பற்றி ஒழுங்கு செய்யலாம். ஒவ்வொன்றையும் அகர வரிசைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப்படி அட்டவணைப் படுத்த லாம். எதனைப் பற்றிப் படிக்கப்போகிறீர்? அல்லது எந்தத் தொழிலைப் பற்றி எடுத்துச் சொல்லப் போகிறீர்? என்பதில் உமது விருப்புந் தங்கியுள்ளது. வகைப் படுத்தல் நிலைநாட்டப்பட்டதும் கார்களைப் பற்றிய தகவல்களைச் சுலபமாகச் சீர் செய்யலாம். ஒவ்வொன்றும் வித்தியாசமான விளக்கத்தை அங்கீகரிக்கும். ஒவ்வொன்றும் விதம் விதமான தகவல்களுக்கு வழிகோலும். ஒவ்வொன்றும் சில மட்டுப்படுத்தப்பட்ட மீள் உறுதியை உடையன. அது எவ்வாறு சுலபமாகத் தகவல்களை வெளிப்படுத்தலாம் என்ற தேர்வுக்கு உதவும்.

**புதினம் அறியும் பழக்கம்:-**

உமது புதினம் அறியும் பழக்கத்தை ஆராயவும், உமது வேலையுடன், அல்லது வாழ்க்கையுடன் சம்பந்தமில்லாத புதினங்களை வாசித்தலையும், அல்லது பார்த்தலையும் குறைத்துக் கொள்க. புதினங்களைப் பார்க்கும்போதும். வாசிக்கும்போதும், பின்வருமாறு உம்மைக் கேட்டுக் கொள்ளவும், செய்தி வாசிப்பவர் கதையின் குறிப்பிடத்தக்க விபரங்களை ஏன் சேர்த்துள்ளார்? இலக்கங்கள் எவற்றைக் குறிக்கின்றன? இச் சம்பவம் வேறெந்த நிகழ்வுடன் தொடர்பானது? செய்தியாளர் எமக்குச் சொல்லாமல் விடுவது என்ன? மற்றதிலும் பார்க்க இக் கதை முக்கியமானது ஏன்? முடிவான கேள்வி, இக்கதை எனது வாழ்வில் எவ்வாறு பொருந்துகிறது?

World Excutive Digest
பெப்ரவரி, 1994.

## பண்பாடு:-

# மணமாகாத தாய்மார்

— மறே ஹீபேர்ற் —

சிராண்டுகளுக்கு முன்பு, நகுயின் தி நிகி என்ற பெண் தான் தாண் காட்டுமரத் தொழில் நிறுவனத்தில் தொழில் புரிபவள். பல நூற்றாண்டுகளாக வியட்நாமில் நிலவி வந்த மணமாகாது பிள்ளைகளைப் பெறும் தொடக்குக்கு எதிராகச் செயலில் ஈடுபட முடிவு செய்தாள். 1970 களிலும், 1980 களிலும் தொலை தூரக் காடுகளில் வேலை செய்வதற்கென்று அனுப்பப்பட்ட பெண்களைப் போலவே, சமூக எதிர்ப்பாகிய அபாயத்தையும் எதிர்கொண்டு, தனது முதிய காலத்திலே தன்னைக் காப்பாற்றப் பிள்ளை ஒன்றைப் பெறவேண்டும் என்று தீர்மானித்தாள்.

அவளுக்கு அப்பொழுது வயது 37. சிவப்பு நதிப் படுக்கையைச் சேர்ந்த திருமணமான ஆடவன் ஒருவனோடு சிறிது காலந் தொடர்பு கொண்டிருந்ததன் பயனாக, 1992 இல் அவள் ஆண்பிள்ளை ஒன்றுக்குத் தாயானாள். '' எனது இந்த நிலையை வெறுக்கிறேன். கணவன் இல்லாமற் பிள்ளை பெற, எந்தப் பெண்ணும் விரும்பமாட்டாள். ஆனால், எனக்கு 30 வயதுக்கு மேலாகி விட்டது. என்னால் இனி என்றைக்கும் மணம் செய்து கொள்ள முடியாது. எனவே, வயதான காலத்தில் எனக்கு உதவும் பொருட்டு, ஒரு குழந்தையைப் பெற முடிவு செய்துவிட்டேன் '' என்கிறாள் அவள்.

நிகியின் இருநிலைப்பட்ட மனப்போராட்டம் அவளுக்கு மட்டுமே தனித்துவமான ஒன்றன்று. வியட்நாமின் தொலை தூரக் கிராமப்புறங்களில் வாழும் பெண்கள் பலருக்கும் உரித்தாகி விட்ட ஒன்றுதான் அது. ஏனெனில், ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாய்ப் பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு எதிராக வியட்நாம் நடத்திய போரில், ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் எண்ணிக்கையிலே அசமத்துவம் ஏற்படவேண்டிய ஒரு துயர நிலையை அது எதிர் கொள்ள நேர்ந்தது. 1989 இல் எடுக்கப்பட்ட வியட்நாம் குடிமக்கள் கணக்கெடுப் பின்படி, பெண்களின் நூற்றுவீதம் 52·5 ஆகவும், ஆண்களின் நூற்றுவீதம் 48·5 ஆகவும் காணப்பட்டது.

மணம் முடிக்கக் கூடிய நிலையிலிருந்த சனத் தொகைக் கணக்

**ஆண்கள் தொகை குறைந்து, பெண்கள் தொகை கூடியுள்ள வியட்நாமில், திருமணத் தளையிற் கட்டுப்படாமலே பெண்கள் பிள்ளைகளைப் பெறுகின்றார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெடுப்பில், இந்தவேறுபாடு மேலும் அதிகமாய் இருந்தது. 52·8% ஆன 29 — 39 வயது வந்த பெண்கள் மணம் முடிக்காதிருக்க, அதே பிரமசாரிய நிலையிலிருந்த ஆண்கள் 47·2% ஆக இருந்தார்கள். பெண்கள் மணம் முடித்தாக வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கும் சமூகம் ஒன்றிலே, பல்லாயிரக்கணக்கான பெண்கள் கணவரின்றித் தனித்து வாழ்கிறார்கள் என்பதே இதன் பொருள்.

கொன்பியூசிய மதத்தின் உயர் மதச்சம்பிரதாயங்கள் நிலவிய வட வியட்நாமில், இருபது வயது கடந்த பராயத்தில் வளர்ந்து கொண்டிருந்த பெண்களுக்கு இந்தநிலை அதிக கவலையை அளித்தது. அங்கு, பிள்ளைகள் பெறாது வாழ்வைக்கழிப்பதென்பது, கற்பனை செய்யவும் முடியாத ஒன்றாகும். ஒரு பெண்ணின் மிக உயர்ந்த கடமை, பிள்ளைகளை – சிறப்பாக ஆண் மக்களைப் பெறுவதாகும். ஏனெனில், ஆண்மக்களே தம் தந்தைமாரின் பரம்பரைக் கால்வழியை நிலைபேறடையச் செய்பவர்கள். அவர்களே, தமது மூதாதையரை வழிபட்டுக் கௌரவிக்க வேண்டியவர்கள்.

மேலும், சமூகப் பாதுகாப்புத் திட்டமோ, சட்டமோ எதுவும் இல்லாத நாடு வியட்நாம். எனவே, வயதானவர்கள் தங்கள் பிள்ளைகளின் பராமரிப்பிலேயே தம் முதுமைக் காலத்தில் தங்கியிருக்கவேண்டும்.

ருயான் குவாஸ் மாகாணத்தின் தான் தாண் காட்டுப் பிரதேசந்தான், மனைவியரைத் தேடுவதிலும் விட, கணவரைத் தேடுவதில் அதிகமான கஷ்டத்தை எதிர்நோக்குகிறது. 1960 இன் பிற்பகுதியில் ஐ. நாட்டின் பின்னணி உதவியோடு தெற்கில் நடந்து கொண்டிருந்த (ஹனோய்) போரிலே, அந்தப் படையினரை வெற்றி கொள்வதற்கென்று சிவப்பு நதிப் படுக்கையிலிருந்து பல்லாயிரக்கணக்கான பெண்கள் படையிற் சேர்க்கப்பட்டு, மலைப்



பகுதிக்கு அனுப்பப்பட்டனர். வட வியட்நாமின் சம உடைமைப் பொருளாதாரத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லவென நியமனமான பெண்படையினர், காட்டு மரத் தொழில் நிறுவனங்களிலே பணிபுரிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

1975 இல் ஹனோய் யுத்தத்தில் வெற்றி பெற்ற போதும், பெண்கள் காட்டு மரத் தொழில் நிறுவனங்களில் தொழில் புரிவதில் தொடர்ந்து பெரும்பான்மையினராய் விளங்கினர். நாட்டின் 52,000 காட்டுத் தொழிலாளர்கள் 70% பெண்களே என்று, வனபரிபாலன அமைச்சின் மகளிர் குழுத் தலைவி நிகுயென் திபாச் டுயெட் கூறுகிறார். "இதனால், பிரதான வீதிகளிலிருந்து விடுபட்ட காட்டுப் பகுதியிலிருந்து, பெண் தொழிலாளிகள் தமது கணவன்மாரைத் தேடி மற்றைய பகுதிகளுக்குச் செல்ல முடியாதுள்ளது.

வியட்நாமின் காட்டுப் பிரதேச ஊழியர்களில் 28% ஆனவர் பெண்கள். இவர்களில் 9/10 பகுதியினர் 30 வயது தாண்டியவர்கள். வியட்நாமில், சிறப்பாகக் கிராமப் புறங்களில் வாழும் பெண்களாயின், இந்த வயதில் மணம் செய்து கொள்வார்கள். தங்கள் உடற்கூற்று வட்டம் விரைவில் சீர்கெட்டு, பிள்ளைபெறும் தகுதியை இழந்துவிடும் என்ற பயத்தால், இப்பெண்களில் மாற்று வழிகளால் குழந்தை பெறுவோர் அதிகரித்து வருகின்றனர். தான் தாணில் தொழில் புரியும் 250 பெண்களில், 34 பேர் திருமணமின்றித் தனித்து வாழ்வோர். இவர்களில் 20 பேராவது ஒரு குழந்தைக்குத் தாயாகியுள்ளனர். தேசிய ரீதியில், விவாகமாகாத தாய்மார் பெற்ற பிள்ளைகளின் கணக்கெடுப்பு நிகழவில்லை. இருப்பினும், பிற பிரதேசங்களிலும் மணமாகாத தாய்மாரும்; பிள்ளைகளும் கணிசமான தொகையில் இருக்கலாம் என்பது பாச் டுயெட்டின் கணிப்பீடு.

ஆரம்பகாலத்தில், மணமாகாத தாய்மார் கடும் கண்டிப்புக்கு உள்ளாயினர். இவ்வாறு கண்டித்த வியட்நாமியரில், தூய்மைவாதிகளான பொதுவுடைமைவாதிகளும் அடங்குவர். இவர்கள், மணமாகாது கர்ப்பவதிகளான பெண்களின் தலைகளை மொட்டையடித்து, கிராம வீதிகளில் ஊர்வலமாகச் செல்ல வைக்கும் தண்டனை விதித்தனர்.

நிகுயென் திடுயெட் என்ற 52 வயதான, தான் தாணிலிருந்து ஓய்வு பெற்றபெண், கணவரின்றிப் பிள்ளை பெற்ற பிழையைச் செய்ததை ஒப்புக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம் எழுதும்படி கட்டளையிடப் பட்டாள். அப்பொழுது அவளின் மகளுக்கு வயது 21. சிறப்புக் கூட்டம் ஒன்றில், தனது சக தொழிலாளிக்கு முன்பு அவள் அந்தக்கடிதத்தை வாசிக்க வேண்டியதாயிற்று. கடிதம் வாசித்து முடிந்ததும், அவளுடைய சக தொழிலாளர் குழுத் தலைவி, எதிர்காலத்தில் அவள் இவ்வாறு குழந்தை பெறக்கூடாது என்று எச்சரித்தாள். இதே காலப் பிரிவில் கர்ப்பமடைந்த மணமாகாத பெண்கள் பலரும், தமக்குக் கொடுக்கப்பட்ட அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க முடியாது கருச்சிதைவு செய்து கொண்டனர். இவ்வாறு நிகுயென் தி என்பவள் தனது 42 ஆவது வயதில் கர்ப்பச் சிதைவுக்கு முயன்று தோற்றதன் பயனே, தனக்கு அடிக்கடி ஏற்படும் தலையிடியும், தனது 15 வயதான மகனின் அரைக் குருட்டு நிலையும் என்கிறாள்.

1986 இல் பொதுவுடைமைக் கட்சிகொண்டுவந்த பொருளாதாரச் சீர்திருத்தத்தினால், கர்ப்பவதியான மணமாகாத பெண்கள் மீது எடுக்கப்பட்டு வந்த கடும் நடவடிக்கைகள் வியக்கத்தக்க வகையில் நெகிழ்வடைந்தன ஹனோய் அரசின் கொள்கையிலும் மாற்றம் உண்டாயிற்று. "அரசின் இன்றைய கொள்கையின்படி, ஒரு பெண் விரும்பினால், மணமாகாது ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொள்ளலாம்" என்கிறார், வனபரிபாலன அமைச்சைச்சேர்ந்த பாச்டு வெய்ட்.

1992 இல் நிகி குழந்தை பெற்றுக் கொண்ட பொழுது, அவளுக்கு எதிரான கண்டனம் அவள் தாயிடமிருந்து தான் வந்தது. அந்தத் தாயும், இப்பொழுது மகளின் நிலைப்பாட்டை அங்கீகரிக்கிறாள். காரணம், தன் மகள் மணமாகும் வயதெல்லையைக் கடந்தமையும், அவளைப் பாதுகாக்கும் பிள்ளை வேறு யாரும் இல்லாமையுமே. அவளுடைய மேலதிகாரி, அவளுக்குச் சம்பளத்தோடு கூடிய ஆறுமாத லீவு வழங்கியுள்ளார். இதேயளவு லீவு தான், மணமான தாய்மாருக்கும் வழங்கப்படுகிறது. இதனோடு, வீடு ஒன்று வாங்க அவளுக்குக் கடனுதவியும் அளிக்கப்பட்டிருக்கின்றது.

மணமாகாது வாழும் பெண்கள், தங்களுக்குப் பிறக்கும் முதற் குழந்தை பெண்ணாயிருப்பின், மேலும் ஓர் ஆண் குழந்தையைப் பெறவிரும்புகிறார்கள். இவ்வாறு விரும்புவோர் தொகையும் அதிகரித்தே வருகிறது. "எனது முதல் இரு பிள்ளைகளும் பெண்கள். எனவே, நான் ஓர் ஆண் குழந்தையைப் பெறுவதற்கு, என்னால் இயன்ற அளவு முயன்று வருகிறேன்" என்று சொன்ன 39 வயதான நிகுயன் திதாட், 1991 இல் பிற்பகுதியிலே, இறுதியாக ஓர் ஆண்குழந்தையைப் பெற்றுவிட்டாள். (கடந்த ஆண்டின் பிற்பகுதியில், சிவப்பு நதிப் படுக்கையில் தனது குடும்பத்தைத் துறந்து வந்த ஒருவனை இவள் திருமணம் புரிந்து கொண்டாள்.).

ஹனோய் அரசு, ஆண், பெண் பிள்ளைகள் இருவருமே சமமானவர்கள் என்று நம்பவைக்கும் முயற்சியில் ஈடுபட்டாலும், பெண்களிற் பலர் – சிறப்பாகக் கிராமப்புறப் பெண்கள் – குடும்ப மரபு தொடரவும், மூதாதையரின் பலிபீடங்கள் பேணப்படவும், தமக்கு ஓர் ஆண்குழந்தையாவது வேண்டும் என்ற விருப்பத்தைக் கைவிடவில்லை. தசாப்தங்களாகப் பொதுவுடைமை அரசின் ஆட்சிக்குக் கீழிருந்தும், இவர்களின் பாரம்பரிய நம்பிக்கைகள் தொடர்வதற்கு, இது ஓர் எடுத்துக்காட்டு.

தங்கள் சொந்தக் கிராமங்களிலிருந்து நெடுந் தொலைவுக்கு உழைப்புக்காக வந்திருக்கும் இவர்கள், பாரம்பரியமான தங்கள் கூட்டுக் குடும்ப முறையில் தங்கியிருக்கவும் முடியாத நிலை. எனவே, தங்கள் தொழில்களோடு மட்டும் நின்றுவிடாது, பிள்ளைப் பராமரிப்பு, சமையல், உடைகள் வெளுத்தல், சுத்தஞ் செய்தல் எல்லாமே தனித்துச் செய்ய வேண்டியுள்ளது. நகரத்திலிருந்து வெகுதொலைவில் வாழ்வதால், தொலைக்காட்சி, செய்தித்தாள், திரைப்படம் போன்ற பொழுதுபோக்குச் சாதனங்களும் இவர்களுக்குக் கிடைப்பதில்லை.

இந்தக் கடினமான உழைப்பும், ஓய்வோ, பொழுதுபோக்கோ இல்லாமையும், இவர்களின் உடல் நலத்தைப் பெரிதும் பாதிக்கின்றன.

1989 இல் சுவீடன் சர்வதேச வளர்ச்சி நிறுவனம் பெண்களின் ஆரோக்கிய நிலையைக் கணிப்பெடுத்த பொழுது, தான் தாண் அமைந்துள்ள வனப்பிரதேசத்தில் 21 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட 40% ஆன பெண்களே உடல்நலம் பெற்றவர்களாகக் காணப்பட்டனர்.

மணமாகாத தாய்மார்களிற் பலர், தங்கள் பிள்ளைகளின் தந்தைமாரோடு எவ்விதத் தொடர்பும் கொள்ளமுடியாத நிலையில் உள்ளனர். ஏனெனில், அந்தத் தந்தைமார் இவர்களோடு தாங்கள் கொண்டுள்ள தொடர்பினை, தமது குடும்பத்திற்குத் தெரியாமல் இரகசியமாக வைத்திருக்கவே விரும்புகின்றனர். தந்தைமார் ஒரே பிரதேசத்தில் வாழ்ந்தபோதும், அவர்களைத் தெரிந்து கொள்ளாமலே பிள்ளைகள் வாழ்கிறார்கள் என்பதுதான் இதன்பொருள்.

மணமாகாத தாய்மார், தங்களின் அயலவர்கள் தங்களை ஏற்றுக் கொண்டாலும், மணமான பெண்களின் பொறாமைக்குத் தாங்கள் இலக்காக வேண்டியுள்ளதாகக் கூறுகிறார்கள். வியட்நாமில் ஆண்களிற் பலர் - இவர்களுட் பொதுவுடைமைவாதிகளும் அடங்குவார்கள் - கடந்த காலத்தில் காமக் கிழத்திகளை வைத்திருந்ததையும், மணவுறவுக்கப்பால், பிறபெண்களோடு உறவுகொண்டிருந்ததையும், அவர்களின் மனைவிமார் வெளிப்படையாகப் பேசுவதும், கண்டனம் வழங்குவதும் அதிகரித்து வருகின்றன.

ஆனால், பெரும்பாலான பெண்கள் தங்கள் கணவன்மாரைக் கண்டிக்கத் துணிவில்லாதவர்களாயும் இருக்கிறார்கள். தனது கணவனைக் கண்டித்துப்பேசினால், தம்மை அவர் விவாகரத்துச் செய்துவிடுவார் என்று, ஒரு பெண் சொன்னாள். காட்டு வணிக நிறுவனத்தில் மனைவிமாரின் நிலை பலவீனமடைந்து வருவதற்குக் காரணம், பெருந்தொகையான பெண்கள் கணவன்மார்களைத் தேடி அலைவதே என்றும், அவள் தொடர்ந்து கூறினாள்.

(F) பார் ஈஸ்ரேன் எக்கோனொமிக் றிவியூ,
பெப்ரவரி 24, 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயம் ஏற்படுத்திய பிரிவினை



## திபெத்தின் கக்யூ பௌத்தர்கள், தலைமைக்கான போராட்டத்திற்கு முகங் கொடுக்கிறார்கள்

மேற்கு வங்காளத்தின் சிலிகுறி என்ற பட்டினத்தின் தலைமைப் புகைவண்டி நிலையத்திலிருந்து, டார்ஜிலிங்கின் தேயிலை கல்கத்தாவுக்கு அனுப்பப்படுகிறது. ஏப்ரல் மாதத்தின் அதிகாலைப் பொழுதொன்றில், இந்தப் பட்டினத்தின் வெளியே அகன்ற சாலையூடாக B.M.W ரகப் புதிய மோட்டார்க் காரொன்று மிக விரைவாக ஓடிவந்து, பாதையிலிருந்து விலகி மரம் ஒன்றில் மோதியதால், அதன் சாரதியும், ஜம்கன் கொங்ற்றல் என்ற பெயருடைய உயர் லாமா ஒருவரும், மற்றுமொரு மத குருவும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். இந்த விபத்துப் பற்றிய முழுமையான புலனாய்வு காவல் துறையினரால் மேற்கொள்ளப்படாதது. அதற்கான காரணம் இன்றுவரை மர்மமாகவே இருந்து வருகிறது. விபத்து இடம்பெற்ற நாளுக்கு முன் இரவுதான், கார் பூரணமாகத் திருத்தப்பட்டது. அதன் இயந்திரத்தில் எவ்விதப் பழுதும் இல்லை. ஆனால், நிறுத்தும் கருவிதான் பழுதாயிருந்தது.

விபத்து நடந்தவேளை ஆவலைத் தூண்டுவதாய் உள்ளமையும் குறிப்பிடத் தக்கதே. 1981 இல், சிக்கிம் நகரின் முக்கியமான றம்ரெக் துறவகத்தின் அந்நாளையத் தலைவர் 16 ஆவது கியல்வா கர்மப்பா இறந்ததைத் தொடர்ந்து, அந்தத் துறவகத்தின் நிருவாகப் பொறுப்பாளர்களாய் இருந்துவந்த நால்வரில், கார் விபத்தில இறந்த ஜம்கன் கொங்ற்றலும் ஒருவர். இறந்து போன கர்மப்பா, தமது வாரிசாக மறுபிறப்பு எடுக்கவிருப்பவர் பற்றி எழுதிவைத்த இரகசியக் கடிதம் 1992 வரை வெளியிடப்படவில்லை. அந்தக் கடிதத்தின்படி மறுபிறப்பாளரைக் கண்டுபிடிக்க நியமனமான குழுவுக்குத் தலைவராய் விளங்கியவர் ஜம்கன் கொங்ற்றலேயாவர். பிரசித்தியும், கௌரவமும் பெற்றிருந்ததோடு, கர்மப்பாவிற்கு மிக நெருங்கியவராயும் றம்ரெக் துறவகத்தில் அவர் வாழ்ந்து வந்தார். அவரின் மரணத்தினால் உருக்கொண்ட கருத்து முரண்பாடு இன்றுவரை தொடர்கிறது.

தீபெத்தில் நிலவிவரும் பௌத்த சமயத்தின் ஒரு பிரிவான கக்யூப் பிரிவின் தலைவரான கர்மப்பா, சமயச் சடங்குகளின்போது 'கறுப்புத்' தொப்பி அணிவது வழக்கம். இதனால், கக்யூப் பிரிவுக்குக் 'கறுப்புத் தொப்பி' என்ற பெயர் பொதுவாக வழங்கி வருகிறது. தீபெத்திய லாமாக்களிலே, கர்மப்பா முக்கியத்துவம் வாய்ந்தவர். அவரும் அவருடைய குருபரம்பரையினருமே, தீபெத்திய மதபீடத் தலைவரான தலாய் லாமாவினதும், பஞ்சன்லாமாவினதும் மறுபிறப்பவதாரங்கள் பற்றிய முன்னறிவிப்புத் திகதியைத் தெரிவிக்கும் உரிமை படைத்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1959 இல் சீனா தீபெத்தைக் கைப்பற்றிய காலத்தில், அங்கிருந்து தப்பி வந்த கர்மப்பா, சிக்கிமில் குடியேறி, அங்கு துறவகம் ஒன்றைக் கட்டி, தீபெத்திய அகதிக்குருமாருக்குத் தஞ்சமளித்தார். தீபெத்திலிருந்து வெளியேறிய காலத்தில், அவருடைய உடைமைகளும் பொருளாதாரமும் மிகவுங் குறைவாகவே இருந்தன. எனினும், அவர் தமது புதிய துறவகத்தில் 100 மதகுருமார்களுக்கு இடம் அளித்தார். தமது மறுபிறப்புப்பற்றிய கடிதத்தினை எழுதி, தமது நெருங்கிய சீடர்களில் ஒருவரான தாய் சிதுப்பாவிடம் ஒளித்து வைத்திருக்குமாறு கையளித்தார் 1990 வரை இந்தக் கடிதம் வெளிப்படாமலே இருந்து வந்தது. இக்கால இடை வேளையில், 17 ஆவது கர்மப்பாவைத் தேடிக் காணவேண்டிய பொறுப்பாளர் நால்வரும், தமக்கு உண்மை வெளியாகவில்லை என்பதை மறைத்தே வந்தனர். கடைசியாக, தாய் சிதுப்பாவிடமிருந்த தாயத்து ஒன்றினுள்ளே கடிதம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் கடிதம், புதிர் வடிவில் எழுதப்பட்ட ஒரு கவிதை.

‘‘பனிபடிந்த கிழக்கு நிலத்திலே, இடைவிடாது முழங்கும் இடி நிறைந்த நாட்டில், பசுவின் அடையாளம் பொறித்த, நாடோடிகள் வாழ் அழகிய இடத்தில், ‘த்ந்திரபு’ லொலகலா ஞானமுமாம் முறை உள்ளது. அங்கு, இந்த ஆண்டில் பூமிக்குப் பயனாவார் பிறந்துள்ளார்.’’

என்பதே அந்தக் கவிதை வாசகங்கள். 1992 வரை, தாய் சிதுப்பா இந்தக் கடிதத்தை மற்ற மூவருக்கும் வெளிப்படுத்தவில்லை. லாமாக்கள் அனைவருமே, புதிய கர்மப்பாவைத் தேடும் பயணத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இவர்களில் ஒருவரான ஷமர்ப்பா என்பவர், தாய் சிதுப்பாவின் அவசர அழைப்பை ஏற்று அவரைக் காண்பதை விரும்பவில்லை. இவரின் ஒன்றுவிட்ட சகோதர உறவினரும், ரம்ரெக் துறவகத்தின் பொதுச்செயலாளருமான டொப்காயுக்வல் இவருக்கு உதவும் முகமாக, தேடற்காரியங்களில் தாமதம் செய்து வந்தார். ஷமர்ப்பாவும், டொப்காயுக்வலும் கர்மப்பாவின் மருமக்கள். றம்ரெக் துறவகத்தின் லௌகிக காரியங்களின் முகாமைத்துவம் இவர்களிடமே இருந்தது. 19 மார்ச 1992 இல் இறுதியாக லாமாக்கள் கூடிய பொழுது கர்மப்பாவின் கடிதம் வாசித்துப் பொருள் விளங்கிக் கொள்ளப்பட்டது. 16 ஆவது கர்மப்பாவின் மறு அவதாரம் கிழக்குத் தீபெத்திலே தேடிக் காணப்படும் என முடிவு செய்யப்பட்டது. ‘‘பசுவின் சின்னம்’’ ‘‘மெதட்’’ என்ற இடத்தின் பெயர். (‘‘மெதட்’’– எருதைக் குறிக்கும் பௌத்த சமயக் குறியீடு) அதனை அடிப்படையாகக் கொண்டு, மறு அவதாரத்தின் தந்தை பெயர் டொண்ட் றப், ‘‘ஞானம்’’ என்பது பசுவின் குறியீடு. அதன் மூலம், தாயின் பெயர் லொவகா என்று தெரிந்தது. இறுதியாக, ‘‘உலகுக்குப் பயனாயிருப்பவர்’’ ‘‘ஓர் எருது’’ எனவும் பொருள் கொள்ளப்பட்டது. (எருது என்பது, திபெத்திய பௌத்தர்களின் ஆண்டொன்றைக் குறிக்கும்.)

ஜம்கன் கொங்ற்றல், மறு அவதாரத்தைத் தேடும் குழுவுக்குத் தலைமை தாங்கிய நிலையில், 26 ஏப்ரலில் கார் விபத்தில் இறந்தார். இவரின் மரணம் நேர்ந்த 49 ஆம் நாளில் நடைபெறவிருந்த மரணச் சடங்கிற் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்பட்ட ஷமர்ப்பா, பௌத்த சமூகத்திடமிருந்து பெற்றுக் கொண்ட ஆதாரங்களின்படி, கொங்ற்றல் பெயரால் நிறுவவிருந்த நம்பிக்கை அற நிதியத்திற்கான கொடையாளர்களிடம் நிதி வழங்குறுதி ஒப்பம் பெற, ஐக்கிய அமெரிக்காவிற்குச் சென்றார் என்று தெரியவருகிறது.

அதேவேளை, புதிய கர்மப்பாவின் தேடற்குழுவில் இடம்பெற்ற மற்ற இருவர்களான தாய் சிதுப்பாவும், ஜியல்ட்சாப்பும் றம்ரெக் துறவகம் திரும்பி, அங்கிருந்து 800 ஆண்டுகளுக்கு முன் முதலாவது கர்மப்பா கிழக்குத் தீபெத்தில் நிறுவியிருந்த சுர்ப்புத் துறவகம் சென்றனர். அங்கு அவர்களின் தேடலில், 1985-க்கு முன்பே, (எருது ஆண்டில்), பிறந்த சிறுவன் சிக்கினான். புதிர்ப் பாடலிற் கூறப்பட்ட அனைத்தும் அவனுக்குப் பொருந்தியிருந்தன. அவனே கர்மப்பாவின் மறு அவதாரமாகக் கொள்ளப்பட்டு, உத்தியோக ரீதியாக ‘உக்யன் தின்லே’ என்று பெயர் சூட்டப்பட்டான். அடுத்த கட்டமாக, தாய் சிதுப்பாவும், ஜியலட்சாப்பும் விரைவாக டெல்லிக்குப் பயணமாகி, அங்கு தர்ம சாலையில் தங்கியிருந்த தலாய் லாமாவிடம் கர்மப்பாவின் எதிர்வு கூறற் கடிதத்தைக் காட்டினர் ஜூன் 7 இல், சிறுவன் 17 ஆவது கர்மப்பாவாக நிலைப்படுத்தப்பட்டான்.

புதிய கர்மப்பாவைக் கண்டுபிடித்ததொன்றே, சீனர்கள் தலாய் லாமாவுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொள்வதற்கான முதன்மைச் சமிக்ஞையாயிற்று. ஜூன் 27 இல் சீன அரசின் செய்தி முகவரகம்: ‘‘முதலாவது மறு அவதார ‘புத்தரை’ ஏற்று அங்கீகாரம் வழங்கியது. 1959 இல் தீபெத்தியச் சீர்திருத்தச் சட்டத்தைச் சீனா நிறைவேற்றியதன்பின், அது எடுத்த முதல் நடவடிக்கை இதுவாகும். இந்த அங்கீகாரம், றம்ரெக் துறவகத்திற் பேரானந்தக் கொண்டாட்டத்திற்கு வழிவகுத்திருக்க வேண்டும். ஆனால், அது இடம் பெறவில்லை. தாய் சிதுப்பாவும், ஜியலட் சாப்பும் டெல்லியில் இருந்த வேளை, ஷமர்ப்பா சிக்கிமுக்குத் திரும்பினார். அங்கு கொங்ற்றலின் மரணச் சடங்குக்கான ஒழுங்குகள் அப்பொழுதும் நடந்துகொண்டிருந்தன. ஷமர்ப்பா பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டி, மரணமடைந்த கர்மப்பாவின் கடிதம் பற்றிய நம்பகத்தன்மையிற் சந்தேகத்தைக் கிளப்பினார். அதனோடு நில்லாது, புதிய கர்மப்பாவை நிலைப்படுத்திய இருவர் மீதும் வசை பாடினார். கொங்ற்றலின் மரணத்திற்கு முன்பே படம் பிடிக்கப்பட்ட ஒளிப்பட நாடாவொன்றினை அவருக்குப் போட்டுக் காட்டி, கடிதத்தின் உண்மைத் தன்மை பற்றி அவர் கூறியிருந்ததைக் கேட்டபின்னரும், ஷர்மப்பாவின் சந்தேகம் தீரவில்லை. அவர், அந்தக் கடிதத்தினை நிபுணர்களின் பரிசீலனைக்கு விடவேண்டும்’’ என்று வாதிட்டார்.

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம் சம்பந்தமான சிக்கல் கிளம்பிய வேளையில், புதிய கர்மப்பா நியமனத்தில் ஈடுபட்ட இருவரும் மௌனம் சாதித்தமை, சில குருமாரிடமும், மக்களிடமும் ஷர்மப்பாவின் குற்றச்சாட்டை மேலும் வலிவு உடையதாக்கியது. அவர்கள், புதிய கர்மப்பாவின் நியமனம், குறித்த திகதிக்கு முன்பே செய்யப்பட்டது என்பதை நம்பினார்கள்.

ஜூன் 12 அன்று, தாய் சிதுப்பாவும் ஜியல்ட்சாப்பும், 17 ஆவது கர்மப்பாவை ஏற்று அங்கீகரிப்பது பற்றிய செய்தியை வெளிப்படுத்திக் கொண்டிருந்த வேளையில், சிதுப்பா தமது உரையை முடிக்குந் தருணத்தில், ஷர்மப்பா ஒரு டசின் இந்தியப் படையினரோடு ரம்ரெக் துறவகத்துக்கு வந்தார். அவர்கள் உள்ளே செல்ல முற்பட்டபொழுது கைகலப்பு ஏற்பட்டது. அன்றைய கூட்டம், லாமாக்கள் இருவரும் துறவகத்தினுள்ளே பின்வாங்கிச் செல்வதோடும், ஷர்மப்பா தமது இல்லந் திரும்புவதோடும் முடிவடைந்தது. இந்த நிகழ்ச்சிபற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்றும், படையினருக்கு எவ்வித உத்தரவும் தான் வழங்கவில்லை என்றும் இந்தியப் படைப்பிரிவு மறுப்புத் தெரிவித்தது. இதே போன்று பூட்டானிய அரசும், தனது அரசகுடும்பத்தவர் எவரும் படைக் கனிஷ்ட அதிகாரிக்குத் தொலைபேசியில் அழைப்பு அனுப்பவில்லை என்று தெரிவித்தது.

தீபெத்தின் சுர்ப்பு துறவகத்தில், செப்ரெம்பர் 27 இல் 17 ஆவது கர்மப்பா (சிறுவன்) வாக முடிசூட்டப்பட்டவர், படித்துக்கொண்டே சமயச் சடங்குகளை நடத்தியும், பக்தர்களுக்கு ஆசி வழங்கியும், தீபெத்துக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்குத் தரிசனம் வழங்கியும் வருகிறார். அவரை, சிக்கிமிக்கு அழைத்து வந்து இரண்டாவது முடிசூட்டல் நடத்தும் முயற்சி வெற்றியளிக்கவில்லை இதற்கான ஒரு காரணம், சீனா அவரை இந்தியாவிற்கு அனுப்பத் தயக்கங் காட்டி, பயண அனுமதிச் சீட்டு வழங்குவதில் தாமதம் செய்தமையே. மறுகாரணம், அவர் சிக்கிமிக்குச் சென்றால், தலாய் லாமாவை நிச்சயம் சந்திப்பார் என்ற அச்சமே. புதிய கர்மப்பாவைத் தலாய்லாமாவிற்கு எதிராகப் பயன்படுத்தவே சீனா விரும்புகிறது. அவரின் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படும் என்பதையும் அது கருத்திற் கொண்டுள்ளது.

ஷமர்ப்பாவின் எதிர்ப்புக்கான காரணங்கள் பலவாறு கூறப்படுகின்றன. முன்னைய கர்மப்பாவின் மரணம் 1981 நவம்பரில் நிகழ்ந்தது. அதைத் தொடர்ந்து, 1982 டிசம்பரில் ரம்ரெக் துறவகத்தின் நிர்வாகி டொப்காவின் திடீர் மரணம் ஏற்பட்டது. இறந்தவரின் நிர்வாகப் பணிகளை, ஷமர்ப்பாவின் ஒன்றுவிட்ட சகோதரரும், ஷமர்ப்பாவும் மேற்கொண்டனர். இவர்கள் பதவிக்கு வந்ததும், துறவகத்தின் சொத்துக்களின் கட்டுப்பாடு முழுவதும் இவர்களின் கைக்கு வந்தது. எனவே, புதியதொரு குடும்பத்திலிருந்து வரும் புதிய கர்மப்பாவின் நியமனம், தங்கள் அதிகார வரம்பைக் குறைத்துவிடும் என்று இவர்கள் கருதினார்கள். மரணமான கர்மப்பாவிற்குச் சொந்தமான தோட்டக்காணியை ஷமர்ப்பா கையாள்வது பற்றிய கேள்வியும், கர்மப்பாவின் ஆதரவாளர்களிடம் இருந்து எழுந்தது.

மரபுக்கு முரணான வகையில், கர்மப்பாவிற்குச் சொந்தமானவையும், பூட்டானிலிருந்தவையுமான மூன்று துறவகங்கள், அசாதாரணமான குறைந்த விலைக்கு விற்கப்பட்டதோடு, கர்மப்பாவிற்கு அவருடைய சீடரில் ஒருவரால் வழங்கப்பட்ட பழைய மேசிடெஸ் கார், திருத்தத்துக்கென்று டொபகாவால் பூட்டானுக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் திரும்பி வரவேயில்லை. டொபகாவினதும், ஷமர்ப்பாவினதும், இந்த நடவடிக்கைகள் பற்றி, ரம்ரெக் துறவகத்து மேலாளர் நால்வரிடையிலும் கருத்து வேறுபாடுகள் நிலவின. ஆனால், துறவகச் சொத்துக்களின் மேற்பார்வைப்பொறுப்பு மேற்குறித்த நால்வரிடத்திலும், சிக்கிம் உயர் அதிகாரிகளிடத்திலுமே இருப்பதாகவும், தாம் அவை பற்றி எந்த முடிவும் எடுக்கவில்லை என்றும், ஷமர்ப்பா மறுப்புத் தெரிவிக்கிறார். 17 ஆவது கர்மப்பா நியமனத்தினை முதலில் ஏற்றுக் கொண்டபின், தலாய்லாமா உட்பட நியமனப் பொறுப்பாளராயிருந்த மற்றைய லாமாக்களினதும் நடவடிக்கையை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதில் இறங்கினர், ஆனால் டெல்லியில் தலாய் லாமாவின் அலுவலகத்தின் வாயிலாகவும், பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிட்டதன் வாயிலாகவும், புதிய கர்மப்பாவின் நியமனம் மீண்டும் உறுதிசெய்யப்பட்டது. இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவுகாணத் தலாய்லாமா, மற்றைய மூன்று லாமாக்களையும் அந்தரங்கமான முறையில் பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோது, ஷமர்ப்பா அவ்வழைப்பினை ஏற்க மறுத்துவிட்டார்,

ஷமர்ப்பா, தம்மளவில் இரண்டாவதாக வேறொருவரை 17 ஆவது கர்மப்பாவாக நியமிக்கும் முடிவுக்கு வருவதற்காக, இந்தக் கர்மப்பாவின் பிறிதொரு கடிதம் தம்மிடமுள்ளதாகப் பிரகடனஞ் செய்தார். ஆனால் தலாய்லாமாவோ, உக்யென்தின்லேயைத் தவிர, வேறு புதிய கர்மப்பா எவரும் இல்லை என்றும், அவரே அப்பதவிக்கான பட்டத்தையும், வசதி வாய்ப்புக்களையும் பெற்றவர் என்றும் முடிவாகக் கூறியுள்ளார். எனவே, பெரும்பாலான தீபெத்தியர் தலாய் லாமாவின் தீர்மானத்தையே ஏற்றுள்ளதாகத் தோற்றுகிறது. அவர்கள் ஷமர்ப்பாவின் எதிர்ப்போராட்டம் பற்றி எவ்வித அதிர்ச்சியும் கொள்ளவில்லை. ஏனெனில், 500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கர்மப்பா ஒருவர், அயலவரின் ஆதிக்கத்திற்கு தீபெத்தில் இடம் உண்டென்றும், கர்மப்பா மரபுரிமையை உள் நாட்டவர் ஒருவரே தமது திரிபுபட்ட விருப்புக்களுக்கேற்ப, பிரச்சினைக்குரியதாய் ஆக்குவார் என்றும் எதிர்வு கூறி எச்சரித்திருந்தார்.

24 காவல்துறையினர் காவல் செய்யப் புதிய கர்மப்பா தமது பாரம்பரியச் சொத்துரிமையை அவர்களின் காவலில் விட்டு, அவற்றை அனுபவிக்க முடியாதிருப்பதும், தீபெத்திலேயே பிறந்து அங்கேயே வாழும் குடிமகனான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் நியமனத்தில் பெஜ்லிஸ் (சீனா) தலையிடுவதும், தீபெத்திய மக்களின் கேள்விக்குரியவையாகியுள்ளன. சிக்கிம் பற்றிய உரிமைச் சண்டையில் ஈடுபட்டு, தத்தம் பகுதிக்குள் அது அடங்கவேண்டுமென்று கருதிப் போட்டியில் இறங்கியுள்ள சீனா, சக்யூப் பௌத்தர்களின் உரிமைக்கு மதிப்பளிக்குமா? என்பதும், இந்தியா ஷமர்ப்பாவை ஆதரித்து, அவர் மூலம் தன்நோக்கத்தை நிறைவேற்றுமா? என்பதும், இளைய கர்மப்பாவிற்கும் தீபெத்தியருக்கும் ஊகநிலையிலேயே தொடருகின்றன.

ஷமர்ப்பாவோ, தாமே புதிய கர்மப்பாவைக் கண்டுபிடித்து விட்டதாக உரிமை பாராட்டுகிறார். உலகெங்கும் பரந்துள்ள அவரின் சீடர்களும், இந்தப் பிரச்சினையின் முரண் நிலையைப் பயன்படுத்தி, தீபெத்திற்கு புதிய மதத்தலைவரை நியமிப்பதில் அவருக்கு ஆதரவு தந்த வண்ணம் இருக்கிறார்கள். ஷமர்ப்பா,தம் கண்டு பிடிப்பை (புதிய கர்மப்பாவை) ச் சென்ற ஜனவரி மாதந்தான் 30,000 ஐநா டொலர் செலவு செய்து, பிரயாண ஆவணங்கள் பெற்று, கொங்கொங் ஊடாகத் தீபெத்திற்குக் கொண்டு வந்தார் என்று, பரவலாக ஊகங்கள் நிலவுகின்றன. ஷமர்ப்பாவோ, தமது தேடலில் தாம் கண்டுபிடித்த சிறுவன் தீபெத்திலிருந்தே வந்தவன் என்றும், (அவர் வரையில் தீபெத் என்பது நேபாளம், சிக்கிம், பூட்டான், அல்லது லடாக் பிரதேசம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்,) அவன் தற்பொழுது டெல்லிப் பகுதியிலே இருக்கின்றான் என்றும், அவனுடைய உயிருக்கே உலைவைக்கப் பலர் முயன்று வருகின்றனர் என்றும் கூறுகிறார். பௌத்த முக்கியஸ்தர்களால் 4ஆம் வயதுப் பராயத்திலே இனங்காணப்பட்ட அவன் டெல்லி அரசாங்கத்தின் பாதுகாப்பில் இருப்பதாகவும், பல பௌத்த சமய நூல்களை மனனஞ் செய்துள்ளதாகவும், தானே புதிய கர்மப்பா என்று பலருக்குக் கூறியுள்ளதாகவும் புத்தரின் போதனைகளை மிகத் தெளிவாக அவன் உபதேசிப்பதாகவும் ஷமர்ப்பா கருத்துத் தெரிவிக்கிறார். 41 வயதான அவர், தாம் றம்ரெக் துறவகச் சொத்துக்களுக்கு உரிமை பாராட்டுகிறார் என்பதை மறுக்கிறார். தாய்ஸ்துபா புனிதமற்ற முறையிற் சீனாவுடன், சிக்கிமின் முதலமைச்சர் நூற் பகதூர் பண்டாரியுடனும் நேச உறவுகொண்டிருப்பதாகக் குற்றஞ் சாட்டுகிறார். தலாய்லாமாவுக்குப் போட்டியாக, சமயத் தலைவர் ஒருவரைச் சீனா பதவியேற்ற முயல்வதும், பண்டாரி தமது நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க உதவி கோருவதும், இவ்விருசாராருக்குமிடையே ஷமர்ப்பா தூதுவராய்ச் செயற்படுவதும் ஷமர்ப்பாவின் கண்களுக்குப் புலனாகும் சூழ்ச்சிகள் இதனிடையே, தாய்வான் அரசின் கட்டுப்பாட்டுத் தலைவரும், முன்னாள் பாதுகாப்பமைச்சருமான சென்லியான் என்பவர் வெளிப்படுத்தாத வகையில் றம்ரெக் துறவகத்துக்கு வந்து சென்றதும், புலனாய்வாளருக்குச் சந்தேகத்தை விளைவித்துள்ளது. இவர் பிழையான ஆட்களால், தவறான முறையில் வழிகாட்டப்பட்டதாகக் குற்றஞ் சாட்டுகிறார்கள். ஆனால், சென் அவர்களோ ஓர் உண்மையான பௌத்த சமயி. அவர் தாம் றம்ரெக் துறவகம் (அது ஒரு பௌத்த கோயிலுங்கூட) வந்தது வழிபாட்டிற்கன்றி, வேறொன்றிற்குமல்ல என்று வலியுறுத்தி, ஷமர்ப்பாவினதும், இந்தியன் எக்ஸ்பிறஸ் பத்திரிகையினதும் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

தமது அபேட்சகரை (17 ஆவது கர்மப்பாவை) ஷமர்ப்பா வெளிப்படுத்தி விட்டு, சிக்கிமின் முதலமைச்சர் பண்டாரியைச் சிக்கிம் ஜனநாயக முன்னணிப் பதவியிலிருந்து கவிழ்க்கும் வரை,முடிசூட்டுதலுக்காகக்காத்திருக்கிறார். தலாய்லாமா உறுதி செய்த உக்யென்தின்லேயின் நியமனம்,தமக்கு மிகவும் திகைப்பை அளிப்பதாக அவர் கூறுகிறார். ஆனால், கர்மப்பா நியமனத்துக்கு தலாய்மாவின் அநுமதியைப் பெறவேண்டிய அவசியம் இல்லை என்பதிலும் அவர் கவனஞ் செல்கிறது. ''உடன்பாட்டிற்கு வருவது நன்மை தரலாம்''என்று கூறும் அவர், தொடர்ந்து சொல்கிறார்: ''தீபெத்தில் ஒரு கர்மப்பாவை நீங்கள் விரும்பினீர்கள்; அது சரிதான். ஆனால், அவர் நியமனத்தை நாம் எமது சொந்த வழிமுறையிற் செய்வோம்'' என்பதாக.

"(F)பார் ஈஸ்ரேன் எக்கோனொமிக் றிவியூ'', மார்ச் 24, 1994.

லியா ரெர்ஹியூன்- (புதுடில்லி)
ஹமிஸ் மக்டொனல்ட்- (புதுடில்லி)

## இங்கிதம் இல்லாத முரட்டு நீதிபதி

அமெரிக்காவின் உயர் நீதி மன்றத்தில் அங்கம் வகிக்கும் பெண் நீதிபதி றுத்பாடர், கின்ஸ்பேர்க் வழக்கறிஞர்களிடம்கெட்ட பெயர் வாங்கியுள்ளார். குறுக்கு விசாரணையின் போதும், தொகுப்புரையின் போதும் அவர் அநாகரிகமாகவும், பாரம்பரியங்களுக்கு முரணாகவும் நடப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. பெரும் எண்ணிக்கையில் குறுக்கீடு செய்து வழக்கறிஞர்களுக்குத் தொல்லை கொடுப்பதுதான், இவர் கடைப்பிடிக்கும் வழக்கம், உயர் நீதிமன்ற நீதியரசர் வில்லியம் றென்குவிஸ் வரை முறைப்பாடுகள் சென்றுள்ளன. முறை செய்தவர்கள் இவருடைய சக நீதிபதிகளே. முறைப்பாட்டின் சாரம்: இவரின் நடத்தையால் நீதிமன்ற மதிப்புக் குறைந்துள்ளது என்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுப் புதையல்

வாசகர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க, பொது அறிவுப் புதிர் மீண்டும் உலக உலாவில் பிரவேசிக்கிறது. உலகின் பல்வேறுபட்ட விடயங்களைச் சார்ந்த பொது அறிவு வினாக்களைக் கொண்டு பொது அறிவுப் புதிர் ஒன்றை நாம் தயாரித்துள்ளோம். உங்கள் அறிவுத் திறனையும், புத்திசாலித்தனத்தையும் வளர்த்திட இது உதவும் என நம்புகின்றோம், வாருங்கள் முதலாம் வினாவிலிருந்து ஆரம்பித்து பொது அறிவுப்புதையலைத் தேடிக்கண்டு பிடியுங்கள். எமது வாழ்த்துக்கள்!

01. நீங்கள் விமானத்திலேறி உலகிலேயே மிகச் சிறிய நாட்டிற்குப் போக வேண்டுமாயின் எங்கு செல்வீர்கள்?

(அ) சென் லூசியா எனில் வினா 10 – க்குச் செல்லுங்கள்.

(ஆ) வத்திக்கான் எனில் வினா 05 – க்குச் செல்லுங்கள்,

(இ) ஹொங்கொங் எனில் வினா 07 – க்குச் செல்லுங்கள்.

02. தவறான இடத்துக்கு வந்துவிட்டீர்கள். மத்திய தரைக்கடல் உலகின் மூன்றாவது பெரிய கடலாகும். எனவே சரியான விடை காண மீண்டும் வினா 07 – க்குச் சென்று முயற்சி செய்யுங்கள்.

03. துருக்கிப் பிரதமராகத் தான்சு சில்லர், பாகிஸ்தான் பிரதமராகப் பெனாசீர் பூட்டோ மற்றும் ருவாண்டாவைச் சேர்ந்த அகாதா விலுங்கி மானா ஆகிய மூன்று பெண் ஆட்சியாளருமே 1993 ஆம் ஆண்டு பதவியைக் கைப்பற்றியவர்களாவர். இந்தப் பொது அறிவுப் புதையலை நீங்கள் நன்கு பயன்படுத்தி இருப்பீர்கள் என நம்புகின்றோம். மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம், நன்றி; வணக்கம்.

04. முதன் முதலில் விண்வெளியைச் சுற்றி வந்த செயற்கைக் கோள் எந்த நாட்டைச் சேர்ந்தது?

(அ) சோவியத் யூனியன் எனில் வினா 25- க்குச் செல்லவும்.

(ஆ) அமெரிக்கா எனில் வினா 9 – க்குச் செல்லவும்.

05. கெட்டிக்காரன். உலகிலேயே மிகச் சிறிய நாடு வத்திக்கான் தான். இதன் பரப்பளவு 0.44 ச. கி. மீ. கத்தோலிக்க மத உயர் குருவான பாப்பாண்டவரே இந்நாட்டின் தலைவர் ஆவார். சரி; இனி வினா 06 - க்குச் செல்லுங்கள்.

06. உலகிலேயே மிகப் பெரிய கடலிற் பிரயாணஞ் செய்ய வேண்டுமானால் உங்கள் கப்பலை நீங்கள் எங்கு கொண்டு செல்வீர்கள்?

(அ) மத்தியதரைக்கடல் எனில் வினா 02-க்குச் செல்லுங்கள்.

(ஆ) தென் சீனக் கடல் எனில் வினா 14– க்குச் செல்லுங்கள்.

07. சரியான விடை இல்லை. ஹொங்கொங்கின் பரப்பளவு 1072 ச. கி. மீ. ஆகும். ஆகவே நீங்கள் சரியான விடை காண மீண்டும் வினா 01 –/க்குச் செல்லுங்கள்.

08. உங்களுக்குத் தெரியுமா? உலகிலேயே அதிகமானோர் பேசும் மொழி யாது?

(அ) ஆங்கிலம் எனில் வினா 27 – க்குச் செல்லுங்கள்.

(ஆ) ஸ்பானிஷ் எனில் வினா 13 – க்குச் செல்லுங்கள்.

(இ) சீனம் எனில், வினா 20 – க்குச் செல்லுங்கள்.

09. சோவியத் யூனியன் என்பது சரியான பதிலாகும். 04. 10. 1957 இல் சோவியத் யூனியனால் ஸ்புட்னிக் –1 என்னும் செயற்கைக் கோள் வெற்றிகரமாக விண்வெளிக்கு ஏவிவிடப்பட்டது. இதன் நிறை 83. 06 கிலோகிராம். 2285 கிலோ மீற்றர் உயரத்தில் மணிக்கு 28,565 கிலோ மீற்றர் வேகத்தில் புவியை ஸ்புட்னிக்-1 சுற்றி வந்தது. அண்மையில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் விண்வெளியில் வைத்துப் பழுது பார்த்த தொலை நோக்கியின் பெயர் என்ன? வாருங்கள்; வினா 16 - க்குச் செல்வோம்.

10. பிழையான பதில். சென் லூசியாவின் பரப்பளவு 614 ச. கி. மீ ஆகும். இதனுடன் ஒப்பிட்டால் உலகில் இன்னும் பல சிறிய நாடுகள் உள்ளன. எனவே சரியான விடை காண வினா 01 - க்குச் செல்லுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. விண்வெளி விவகாரத்தில் அமெரிக்கா ஆரம்ப காலகட்டத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. விண்வெளியில் ஆரம்பகால வெற்றிகள் அனைத்தும் சோவியத் யூனியனுக்கே கிடைத்தது. ஆகவே நீங்கள் வினா 22-க்குச் சென்று முயற்சித்துப் பாருங்கள்.

12. உலகில் உள்ள எரிமலைகளின் விபரங்கள் இதோ ——— ஈக்குவடோரில் உள்ள கொடபாக்ஸி எனும் எரிமலையே, உலகிலேயே மிகப் பெரிய எரிமலையாகும். இதன் உயரம் 19,347 அடி. மெக்சிக்கோவில் உள்ள ஆள்டி பிளானோ என்னும் எரிமலை இரண்டாம் இடத்தைப் பெறுகின்றது. இதன் உயரம் 17,887 அடி. 15,584 அடி உயரமுள்ள ஃக்லிவு செவ்ஸ்கியா என்ற எரிமலையே மூன்றாம் இடத்தை வகிக்கிறது. இது ருஷ்யாவில் உள்ளது. இனி வினா 22-க்குச் செல்லுங்கள்.

13. ஸ்பெயினிலும், லத்தின் அமெரிக்க நாடுகளிலும் உள்ள 352 மில்லியன் மக்கள் ஸ்பானிஷ் மொழி பேசுகிறார்கள். ஆனால் அதிக மக்கள் பேசும் மொழி இதுவல்ல. எனவே திரும்பவும் ஒரு முறை சரியான விடை காண முயற்சி செய்து பாருங்கள்.

14. சரியான பதில் உலகிலேயே மிகப் பெரிய கடல் தென் சீனக் கடல்தான். இதன் பரப்பளவு 1,14,850 சதுர மைல். இக்கடலின் சராசரி ஆழம் 4802 அடி. இனி மொழிகள் சம்பந்தமான வினா 08-க்குச் செல்லுங்கள்.

15. உலகிலேயே மிகப் பெரிய பணக்காரர் யார்?

(அ) எலிசபெத் மகாராணியார் எனில், வினா 26-க்குச் செல்லுங்கள்.

(ஆ) புரூனை சுல்தான் எனில், 21-க்குச் செல்லுங்கள்.

(இ) கெலன் வோல்ற்றன் எனில், வினா 17-க்குச் செல்லுங்கள்.

16. உலகிலேயே அதிகமான மக்கள் கடைப்பிடிக்கும் மதம் எது?

(அ) பௌத்த மதம் எனில், வினா 19-க்குச் செல்லுங்கள்.

(ஆ) கிறிஸ்தவம் எனில், வினா 24-க்குச் செல்லுங்கள்.

17. மிகவும் அண்மையில் வந்து விட்டீர்கள். உலகிலேயே இரண்டாவது மிகப் பெரிய பணக்காரர் இவரே. அமெரிககாவில் உள்ள ஆர்கன் ஸாஸ் மாநிலத்தில் வசிக்கும் இவரின் சொத்துக்களின் பெறுமதி 23.5 பில்லியன் டொலர்கள் ஆகும்.

18. உலகிலேயே நிலப்பரப்பில் மிகச் சிறிய நாடு வத்திக்கான் ஆகும். அதேபோல சனத் தொகையில் மிகச் சிறிய நாடும் வத்திக்கான் தான். போதுமா? இனி, வினா 30-க்குச் செல்வோமா?

19. சரியான விடை இல்லை. பௌத்த மதத்தைக் கடைப்பிடிப்போர் கிட்டத்தட்ட 25 கோடி மக்களே உள்ளனர். சரியான விடை காண மீண்டும் வினா 16-க்குச் செல்லுங்கள்.

20. புத்திசாலி! சீன மொழியையே உலகில் அதிகம் பேர் இன்று பேசுகிறார்கள். 1193 மில்லியன் மக்கள் இன்று சீன மொழியிற் பேசுகிறார்கள். இனி, வினா 15 க்குச் செல்லுங்கள்.

21. கெட்டிக்காரன்! உலகிலேயே பெரும் பணக்காரர் புரூனை சுல்தானே. இவருக்கு வயது 46 . இவரது சொத்துக்களின் பெறுமதி 37 பில்லியன் டொலர்கள் ஆகும். சரி; இனி மிகப் பெரிய நாடுகள் சம்பந்தமான வினாவான 23-க்குச் செல்வோமா?

22. இதுவரை உலகிலேயே மிகப் பெரிய நாடாக சோவியத் யூனியன் இருந்து வந்தது. சோவியத் யூனியன் 15 நாடுகளாகச் சிதறிய பின்பு உலகிலேயே மிகப் பெரிய நாடு எது?

(அ) ருஷ்யா எனில், வினா 25-க்குச் செல்லுங்கள்.

(ஆ) கனடா எனில், வினா 31–க்குச் செல்லுங்கள்.

(இ) சீனா எனில், வினா 11-க்குச் செல்லுங்கள்.

23. உலகிலேயே மிகப் பெரிய எரிமலை எங்கே உள்ளது? என்ற விபரங்கள் உங்களுக்குத் தெரியுமா? அறிய விரும்பின் வினா 12-க்குச் செல்லுங்கள்.

24. புத்திசாலி! கிறிஸ்தவ மதத்தையும், அதன் உப பிரிவுகளையும் 105 கோடிக்கும் அதிக மக்கள் கடைப் பிடிக்கிறார்கள். இனி எரிமலை சம்பந்தமான கேள்வி 30-க்குச் செல்வோமா?

25. சரியான விடை சோவியத் யூனியன் சிதறிய பின்பும் உலகிலேயே மிகப் பெரிய நாடாக இருப்பது ருஷ்யாதான். இதன் பரப்பளவு 17,075,000 ச.கி.மீ ஆகும். இனி நீங்கள் வினா 29-க்குச் செல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. ______ சரியில்லை. எலிசபெத் மகாராணியார் உலகப் பணக்காரர்களின் வரிசையில் 09 ஆவது இடத்தில் இருக்கிறார், இவரது சொத்துக்களின் பெறுமதி 7,8 மில்லியன் டொலர்கள் ஆகும். சரியான விடை காணவேண்டுமாயின் நீங்கள் வினா 15-க்குத் திரும்பிச் செல்லுங்கள்.

27. உலகம் முழுவதிலும் 450 மில்லியன் மக்களுக்கு அதிகமானோர் ஆங்கிலம் பேசுவோர் என்பது உண்மைதான். ஆனால் இதுவே பெரும்பான்மையோர் பேசும் மொழி அல்ல. எனவே சரியான விடை காண மீண்டும் வினா 08-க்குச் செல்லுங்கள்.

28. மீண்டும் வலியுறுத்துகின்றோம். மிகவும் குறைந்த சனத்தொகை கொண்ட நாடு வத்திக்கான் ஆகும். சந்தேகமாக உள்ளதா? வாருங்கள்; வினா 18-க்குப் போவோம்.

29. கடந்த டிசம்பர் மாதம் அமெரிக்காவைச் சேர்ந்த 7 விண்வெளி வீரர்கள் விண்வெளியில் வெற்றிகரமாகத் திருத்திய தொலைநோக்கியின் பெயர் ''ஹபிள்''. இனி நீங்கள் வினா 28-க்குச் செல்லுங்கள்.

30. பாராட்டுக்கள்! நீங்கள் அதிகமாக அறிந்து வைத்திருப்பீர்கள். மேலும் ஒரு வினாவைப் பார்ப்போமா? 1993 ஆம் ஆண்டு 3 நாடுகளின் பிரதமர்களாகப் பெண்கள் வந்துள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியுமா? வினா 03 உங்களுக்குப் பதில் சொல்லக்கூடும்.

31. மிக அண்மையில் வந்துவிட்டீர்கள். உலகிலேயே இரண்டாவது பெரிய நாடு கனடாதான். இதன் பரப்பளவு 9,976,140 ச.கி.மீ. ஆகும். ஆகவே சரியான விடை காணத் திரும்பவும் வினா 23-க்குச் செல்லுங்கள்.

தொகுப்பு: ''உலக உலா''

## ஜப்பான் அரிசி இறக்குமதி செய்கின்றது

தாராள ஏற்றுமதிக் கொள்கையையும், மிகவும் இறுக்கமான இறக்குமதி விதிகளையும் ஜப்பான் கடைப்பிடிக்கின்றது. இப்புவியை, தனக்கொரு சந்தையாகவே அது மதிக்கின்றது. அதே சமயத்தில், கூடுமானளவு இறக்குமதிகளைத் தவிர்ப்பதில், ஜப்பான் கண்ணுங் கருத்துமாக இருக்கின்றது. தனது மேலதிகத் தானிய வகைகளை இறக்குமதி செய்யும்படி அமெரிக்கா வற்புறுத்தியுங் கூட ஜப்பான் இதுவரை காலமும் இதற்கு இணங்கவேயில்லை. ஆனால், அண்மையில் ஜப்பானுக் கெதிராக இயற்கை சதி செய்து விட்டதென்றே சொல்ல வேண்டும்.

சென்ற வருடம் மிகவுக் கூடுதலாக மழை பெய்தபடியால், நெற்சாகுபடி ஜப்பானின் தேவைக்குக் குறைந்ததாகக் காணப்பட்டுள்ளது. ஜப்பானின் 40 வருடச் சரித்திரத்தில், இப்படியான மழை பெய்யவில்லையென்று வானியல் அதிகாரசபை தெரிவித்துள்ளது. இதனால், உறுக்குவே (Uruguay) நாட்டில் நடந்த ''காற்'' (Gatt) பேச்சுக்களில் ஜப்பான், 380,000 தொன் அரிசியை இவ்வருடமும், பின்பு வருடா வருடம் அதிகரிக்கச் செய்து 2,000ஆம் ஆண்டுவரை அரிசி இறக்குமதியைத் தொடர்ந்து அநுமதிப்பதாகவும் உறுதியளித்துள்ளது.

ஆனால், சென்ற வருடத்திலும் பார்க்கக் கூடுதலான மழை இவ்வருடத்திற் பெய்யுமென்று, வானியல் அதிகாரசபை கட்டியம் கூறியுள்ளது. அதனால், உறுதி அளித்ததிலும் பார்க்க, மிகவுங் கூடுதலான அரிசியை ஜப்பான் இவ்வருடந் தொடக்கம் இறக்குமதி செய்ய வேண்டி உள்ளது.

''நியூஸ் வீக்'' : மார்ச் 28, 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் பிணி வாட்டும்போது

நீங்கள் ஆறுதல் பெற நாடுவது:

# கிளினிக்




சூழல் மாசடைவினால்
மக்கள் அடிக்கடி
நோய்வாய்ப்படுகின்றனர்!

ஆம்!
இவ் வேளை ஆரோக்கியத்தைப்
பேணுவது நமது கடமை!

உங்கள் குழந்தைகளுக்கு
உரியநேரத்தில் தடுப்பூசி
போட வேண்டுமா?
திடீரென உருவாகும்
செப்ரிசேமியா காய்ச்சல்
மற்றும்

இதர நோய்களுக்கும் உடன் நிவாரணம் பெற

**C. C. C. கிளினிக்**

கால தாமதமின்றி உடனே வைத்தியரை நாடுங்கள்.

# C. C. C. கிளினிக்

*சுபாஸ் இல்லம், விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்படுகின்றனவா? இல்லை

பூமியில் *மகாலட்சுமி* யின்
தங்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன!

சிறந்த 22 கரட் தங்க நகைகளுக்குப் பிரசித்திபெற்ற ஸ்தாபனம்

# மகாலட்சுமி நகைமாடம்

★ அழகிற்கு அழகு மிளிர மங்கையர் மனம் நாடுவது ★

## மகாலட்சுமி நகைமாடம்



**213 A, (கஸ்தூரியார் வீதி) சந்தோஷம் வீதி,**
*யாழ்ப்பாணம்.*

---

" அன்றாட வாழ்க்கைக்கு
இதுவே அடிப்படை"



# நாதன் சகோதரர்

## பல்பொருள் வாணிபம்

உங்கள் தேவைகள் எதுவானாலும் சரி
தரமான பொருள்களை நியாய விலைகொடுத்துப்
பெற்றுக்கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்

**நாதன் சகோதரர்**

33, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான உயிரினங்கள்

வருடமொன்றுக்கு, நிலத்திலும் நீரிலும் வாழும் ஆபத்தான உயிரினங்களால் 53,000 மனித உயிர்கள் பறிக்கப்படுகின்றன. இந்த அழிவைச் செய்யும் மிகக் கொடூரமான ஜெந்துக்கள், இன்னும் மனிதனால் வசப்படுத்தப்பட்டு, சாதுவான பிராணிகள் ஆக்கப்படவில்லை. ஒருசில மிருகங்கள் மனிதனாற் பிடிக்கப்பட்டு, கூட்டில் அடைக்கப்பட்டு இருந்தாலும், பெரும்பான்மையானவை தமது இயற்கையான குணாம்சங்களை இழக்காதிருக்கின்றன.

## 1. சிங்கம்

17 ஆம் நூற்றாண்டின் ஆங்கிலக் கவிஞன் ஒருவன், முதற் பார்வைக்குப் பயங்கரமாயிருந்தாலும், சிங்கம் ஒரு சாதுவான பிராணி என்று கூறியுள்ளான். பகலில் மர நிழலில் அது உறங்கும்போது, இப்படித் தோற்றலாம். ஆனால் சிங்கம் இரவில் பசிவெறியில் உணவு தேடி அலையும்போது, தனது சுய



குணத்தைக் காட்டிவிடும். 400 இறாத்தல் நிறையுள்ள தனது உடலை, 20 அடி உயரத்திற்குத் தூக்கிப் பாயும் வல்லமை சிங்கத்திற்கு உண்டு. வேகமாக ஓடுந் தன்மையுள்ள மான் இனத்தைச் சேர்ந்த கேசல் மிருகத்தை, எளிதில் அது பிடித்து விடும். நீண்ட கழுத்துள்ள ஸீபிறா மிருகத்தை, பாய்ந்து கழுத்தைக் கடித்துக் கொன்றுவிடும். இந்த இரண்டு இனங்களையும் அது மிகவும் விரும்பிப் புசித்தாலும், வருடமொன்றுக்கு 300 மனித இனத்தவர்களையும் சிங்கங்கள் கொன்று ஒழிக்கின்றன.

## 2. பிறன்கா மீன்கள்
## ( *Piranha* )

தீட்டப்பட்ட வைரத் துண்டங்கள் போன்ற கூர்மையுள்ள பற்களை உடைய இந்த மீன், மனிதனும் மிருகமும் பயப்படவேண்டியதொன்றாகும். நாய்கள் போன்ற சிறிய மிருகங்களை, அது சில நிமிடங்களிற் கிழித்துத் தின்றுவிடும். மனிதர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் குறைவென்றாலும், இவை பசியில் இருக்கும்போது மனிதர்களையும் விட்டுவைக்க மாட்டா, இரத்தக் காயங்களுடன் பிறன்கா மீன்கள் இருக்கும் நீரில் இறங்குவது, அல்லது நீந்துவது மிகவும் ஆபத்தான செயலாகும்.



பிறன்கா ஒரு நன்னீர் இன மீனாகும். இது, பெரும்பாலும் வட அமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகியவற்றின் நீர்ப்பரப்புக்களிற் காணப்படுகின்றன.

## 3. பல்லி இனத்தைச் சேர்ந்த கொமோடோர் பல்லி:- (*Komado Dragon*)

பல்லிக் குடும்பத்தில் மிகப் பெரியது, இந்தோனேஷியாவின் ஆறு தீவுகளிற் காணப்படும் 200 இறாத்தல் நிறையும், 10 அடி



நீளமும் உள்ள கொமோடோர் பல்லி ஆகும். நிலத்தில் ஊர்வனவற்றில், மிகவும் கூர்மையான புத்தியும், அதி உந்நதமான மோப்பசக்தியும் இதற்கு உண்டென, மிருகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். இதன் மோப்ப சக்திக்குரிய மையம், இதன் நாக்கில் உண்டு. எட்டு மைல்களுக்கு அப்பால் உள்ள இரையைக் கூட, அது மோப்பம் பிடிக்கும் தன்மை உள்ளது. தனது இரையை மடக்கிப் பிடிப்பதில், அதற்கு ஒப்புவமை இல்லையென்று சொல்லப்படுகின்றது. அது விரும்பி வேட்டை ஆடுவது மான்களையே. மனிதர்களின் புதைகுழிகளைக் கிளறி, முழு உடம்பையும் ஒரே மூச்சில் உட்கொள்ளும் பண்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு உண்டு. உயிருள்ள மனிதர்களையும் அது விழுங்குவதாகத் தகவல்கள் வந்துள்ளன. இந்தோனேஷியாவின் உல்லாசப் பயணிகள் சபையின் எச்சரிக்கையை மீறி, இத்தீவுகளுக்குச் சென்ற மேற்கு நாட்டுக் கோஷ்டி ஒன்று தம்மில் ஒருவரை இந்தப் பல்லியிடம் இழந்து விட்டே நாடு திரும்பியுள்ளது.

## 4 கணவாய், நத்தை இனத்தைச் சேர்ந்த 'மொலஸ்க்':- (*Mullusk*)

இப்பிராணி மிகச் சிறியது. உருவமைப்பில் தான் இப்படி யென்றாலும், நஞ்சைக் கக்குந் தன்மையில் மிகக் கொடியது. பசுபிக் தென் கடலின் அடியில் இது கிடக்கின்றது. இது மிகவும் பிரகாசமான நீல நிறமுள்ளபடியால்,, சுழியோடிகள் இதனாற் கவரப்பட்டுக் கையில் எடுத்தால், சில நிமிடங்களில் ஆவி பிரிய நேரிடும். அது கடிப்பது, அவர்களுக்கு ஒருபோதும் தெரிவதில்லை. சில நிமிடங்களில் அவர்கள் மயக்கம் அடைவர். இருதய ஓட்டம் மெதுவாகி, உடல் நடுக்கம் தொடங்கிவிடும். சில மணித்தியாலங்களில் இறந்துவிடுவர். சிகிச்சையால், மரணத்தைக் கட்டுப்படுத்த முடியாது.



## 5. ஆபிரிக்காவின் "ஹிப்போ பொற்றாமஸ்" மிருகம்:- (*Hippotamus*)



இறைவனின் சிருஷ்டிகளில் மிகவும் அவலட்சணமான மிருகம் என்று, இது வர்ணிக்கப்பட்டுள்ளது. இதன் நிறை 3 தொன் என்றாலும், அது ஒலிம்பிக் பந்தய ஓட்ட வீரனிலும் கூடிய வேகத்தில் ஓடும் வல்லமை உள்ளது. அதிர்ஷ்டவசமாக, இது தாவர உணவை மாத்திரம் உட்கொள்கிறது. தான் வாழும் நிலப் பகுதியிலே அந்நியர் புகாவண்ணம் பாதுகாக்குந் தன்மை அதற்கு உண்டு. இதனால், பல ஆபிரிக்கர்களை அது கொன்றுள்ளது. இது, ஆபிரிக்க வாழ் மிருகம். சிங்கம்,ஆனை, காட்டு எருமை ஆகியவற்றாற் கொல்லப்படும் மொத்தத் தொகையினரிலும் பார்க்க, ஹிப்போவாற் கொல்லப்படுவோர் கூடுதலானவர்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. தனது எதிரிகளைத் துரத்திப் பிடித்தபின், மிதித்துக் கொல்வது தான் அதன் கொலைமுறை.

## 6. தென் அமெரிக்காவின் 'அனக்கொண்டா' இனப் பாம்பு:- (*Anoconda*)

இதன் நீளம் 30 அடி. இதன் நிறை 300 இறாத்தல். 6 அடி நீள முதலையையும் அது விழுங்கி, தனது உணவாக்கி விடும். 6 அடி உயரமுள்ள மனிதனையும் அது எளிதாக உட்கொள்ளும். ஆனால், ஓர் ஆறுதல் தரும். செய்தியும் உண்டு. அது, உயிருடன் உணவை உட்கொள்வதில்லை. முதலில், தனக்கு உணவாகப்போகும் உயிரினத்தின் மேல் தனது உடலாற் சுற்றிக் கொன்றபின், அது விழுங்கிவிடும். ஆகவே இதனால் விழுங்கப்படும் மனிதர்கள், இது தரும் கால அவகாசத்தை இட்டுத் திருப்திப்படலாம். தென் அமெரிக்காவிற் காணப்படும் இப்பாம்பு, மரங்களிலும் நீரிலும் வாழ்கின்றது.



லைவ், மார்ச், 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ்ற்றொஜன் கொம்பிளெக்ஸ்



விஞ்ஞானம்:

**விந்துக்களின் எண்ணிக்கை குறைகின்றன? ஆண் குறி சுருங்குகின்றது? பெண்ணுரிமைக்குப் போராடுபவர் மீது குற்றம் சுமத்தாதீர். நீரையும், உணவையும் மாசுபடுத்தும் இரசாயனப் பொருள்களால் அந்நிலை ஏற்பட்டிருக்கலாம்**

அமெரிக்க மாநிலமான ஃப்ளோறிடாவின் அப்போப்கா ஏரியிற் காணப்படும் ஒருவகைப் பெரிய முதலைகளில் (Alligators), அவற்றின் தொகை சடுதியாக வீழ்ச்சியுறாமல் எத்தனை முதலைகளை வேட்டையாடலாம் என்பதைக் கணக்கிடுவதற்கே லூயிஸ் கில்லெற் முயற்சி செய்தார். பல வருடங்களாகத் தொடைவரைக்கும் புதையும் சேற்றினூடாக நடந்து சென்று, அவற்றின் கூடுகளுக்கு அண்மையில் தடம் போட்டுப் பிடித்த பொழுது, கைப் புத்தக உறைகளாக மாறுவதிலும் பார்க்க, அவற்றுக்கு வேறு பிரச்சனைகள் இருப்பதாக அறிந்தார். ஆண் அலிகேற்றர்களின் ஆண் குறிகள் சாதாரண அளவிலும் பார்க்க நாலிலொரு பங்காக இருந்தன. விதைகளில் உற்பத்தியாகும் தெசுத்தோத்தீரோன் மட்டம், மலட்டுத் தன்மையை ஏற்படுத்தக் கூடியளவு குறைவாக இருந்தன. D. D. T. பிரிகையுறும் போது உண்டாகும் இரசாயனப் பொருள் D. D, E யின் சூழலில் ஆய்வுகூட எலிகள் வசிக்கும் பொழுது, இதே விளைவைக் காட்டியதாகவும் ஓர் ஆராய்ச்சியாளர் கில்லெற்றுக்குக் கூறினார். 1980ஆம் ஆண்டில் இதே ஏரியில் பல்லாயிரம் கலன் D.D.T கொண்டுள்ள பீடைகொல்லி பாய்ந்து விட்டது, ''எமக்கு ஒரு பிரச்சனை இங்கே உண்டு'' என கில்லெற் கூறினார். ''எமக்கு'' என்று கூறும் பொழுது, அவர் அலிக்கேற்றர்களைக் கருதவில்லை. மக்கள் சபைக்குழுவொன்றின் முன்னால் பேசும் பொழுது, மக்களின் பாலை மாற்றக்கூடிய கடல் போன்ற இரசாயனப் பொருள்கள் மத்தியில் மக்கள் வாழ்வதால், ''இவ்வறையில் உள்ள ஒவ்வொரு மனிதனும், தனது பேரனின் அரைப்பங்கு ஆண்மை உடையவனாக இருக்கின்றான்'' என மேற்கூறிய ஃப்ளோறிடா மாநிலப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் கூறினார்.

விஞ்ஞானக் கற்பனைக் கதையொன்றுக்கு, இது நல்லதொரு கருவாகும். உலக மகா யுத்தத்திற்குப் பிந்திய காலப்பகுதியில், நூற்றுக்கணக்கான அடிப்படை இரசாயனப் பொருள்களாகிய, இலத்திரனியல் உபயோகிக்கப்படும் P. C. Bக்கள், என்டோசல்ஃபான், மற்றும் அஸ்ற்றரீன் போன்ற பீடை கொல்லிகள் குழந்தைகளின் போத்தல்கள், மற்றும் நீர் முகவைகளிற் காணப்படும் பொலிகாபனேற்றுப் பிளாத்திக்குக் காகிதத்தை வெளியேற்றும் குளோறின் சேர்வைகள் ஆகியவை, மனிதப்பால் ஓமோனாகிய எஸ்ற்றொஜனை ஒத்திருக்கின்றன. மனித உயிரியலுக்கு ஒரு தொடர்பும் இல்லாத காரணங்களுக்காக இச்சேர்வைகள் ஆய்வுகூடங்களில் ஆக்கப்பட்டிருந்தாலும், எஸ்ற்றொஜனின் கட்டமைப்புக்கு ஒத்ததாக அவற்றின் மூலக்கூற்றமைப்பு இருப்பதால், உடம்பின் அதே ''வாங்கி''களில் இவை பொருந்துகின்றன. மக்களின் சாதாரணக் கருத்துக்கு மாறாக, ஆண்களிலும், அவர்களைப் போல் பெண்களிலும் எஸ்ற்றொஜன் உண்டாவதனால் ஓமோனுக்குரிய வாங்கிகளை வைத்துள்ளனர். கள்வனொருவனின் போலித் திறப்பு உபயோகிக்கப்படுவதை எவ்வாறு கதவுப் பூட்டு கூறமுடியாதோ, அதே போல், போலியான பொருளொன்று புகுந்திருப்பதை எஸ்ற்றொஜன் வாங்கி கூறமுடியாது, எனவே, இப்போலிகள் உடம்பிற் சூழ்ச்சி செய்து, சில உயிரியல் இரசாயன வழிமுறைகளைச் செயற்படுத்தும். அதுவும், விசேடமாக இனப்பெருக்கத் தொகுதியில் தாக்கம் ஏற்படும். முடிவு யாதெனில், இரு பாலாரிலும் இனவிருத்தி திசை மாறிச் செல்லும். இப்போலிகள்

PUBLIC LIBRARY, JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம், நீர், மற்றும் உணவைச் சென்றடைவதால், சுகாதாரத்தில் அவற்றின் விளைவை ஆராய்தல் முன்னுரிமை அளிக்கப்படவேண்டியது என சுற்றாடற் சுகாதார விஞ்ஞானத்தின் தேசியக் கல்வி நிறுவனப் பணிப்பாளர் கெனெத் ஒல்டன் கூறுகின்றார். ''நாம் அக்கறைப்படவேண்டிய அளவிற்கு, அங்கே போதுமான விஞ்ஞானம் உண்டு'' என மேலும் கூறுகின்றார்,

''உனது பேரனின் அரைப்பங்கு நீ'' என்று கூறுவது மிகைப்படுத்திக் கூறும் அணி அல்ல. ஐக்கிய அமெரிக்காவிலும், மற்றும் வேறு இருபது நாடுகளிலும் 1938 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆண்களின் விந்துகளின் எண்ணிக்கை ஐம்பது நூற்று வீதத்தால் வீழ்ச்சி அடைந்துவிட்டதென, 1991 ஆம் ஆண்டில் டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவரான சுரப்பிகள் சம்பந்தமான நிபுணர் நீல்ஸ் சக்கேபாக் அறிவித்தார். அதே நேரத்தில், விதைகளில் ஏற்படும் புற்றுநோயும் மும்மடங்காயிற்று. இவ்வகையான போக்கு, யதேச்சையாக ஏற்பட்டிருக்கலாம். ஆண்கள், தாய்மாரிற் கருவாக இருக்கும் போதும், பிறந்த குழந்தையாக இருக்கும்போதும், தாயின் இரத்தத்திலும், பாலிலும் எஸ்ற்றொஜன் போன்ற இரசாயனப் பொருள்களின் சூழலிலிருந்தபடியால் ஆண் விந்துகளின் வீழ்ச்சிக்கும், புற்று நோய்க்கும் காரணமாக அமைந்திருக்கலாம் என சக்கேபாக் சந்தேகிக்கின்றார்.

எஸ்ற்றொஜன் போன்ற இரசாயனப் பொருள்களே, மேற்குலக ஆண்மை வீழ்ச்சிக்குக் காரணம் என்று கூறுவது அவசர முடிவாக இருப்பினும், இரசாயனப் பொருள்களின் உயர்மட்ட உபயோகம் தவறானது என்பது வெளிப்படை. மிச்சிகன் மாநிலத்தில், P. B. B என அழைக்கப்படும் எஸ்ற்றொஜன் போலிகள், 1973 ஆம் ஆண்டிற் கால்நடைகளின் உணவுக்குள் தவறுதலாகப் பரவி, ஈற்றில் மாட்டிறைச்சியை அடைந்து, இவ்விறைச்சியை உண்ட பெண்களின் முலைப்பாலில்



உயர்மட்ட P. B. B இருந்த காரணத்தால், அவர்களின் ஆண் குழந்தைகளுக்கு விதைகள் விகாரமடைந்தும், ஆண் குறிகள் சிறுத்தும் காணப்பட்டன. இப்பிரச்சனையான களத்தில் நடத்தப்பட்ட கட்டுப்பாட்டுப் பரிசோதனை ஒன்றில், 1979 ஆம் ஆண்டு தாய்வானில் தவறுதலாகப் பரவிய P. B. Bக்கு உட்பட்ட பெண்களுக்குப் பிறந்த 118 சிறுவர்களைச் சீன விஞ்ஞானிகள் அவதானித்தனர். இவ்வாறு இரசாயனத்தாக்கத்துக்கு உட்படாத பெண்களுக்குப் பிறந்த சிறுவருடன் ஒப்பிடும்பொழுது, மேற்குறிப்பிட்ட 118 சிறுவர்க்கு, மிக்சிக்கன் மாநிலத்தின் சிறுவர்களிற் காணப்பட்ட இனப்பெருக்கத் தொகுதிக் குறைபாடுகள் காணப்பட்டன. '' நச்சுத் தன்மைக்கு உட்பட்ட காரணத்தினால் ஏற்பட்ட ஓமோன் மாற்றத்திற்கு, இக்குறைபாடுகள் தொடர்புடையன '' என்ற முடிவுக்கு விஞ்ஞானிகள் வந்தார்கள்.

மார்புப் புற்று நோய், மற்றும் மலட்டுத்தன்மையை ஏற்படுத்தும் கருப்பையின் உட்புறத்துக்குள் அணைந்திருக்கும் படலத்தின் வீக்கத்தினால் ஏற்படும் வலி (Endometriosis) போன்ற நோய்களை, எஸ்ற்றொஜன் உருவத்தில் அமைந்த மாசுபடுத்திகளுடன் தொடர்புபடுத்தும் படிப்புக்களை மருத்துவர்கள் தற்போது ஆராய்கிறார்கள். என்டோமெற்றியோசிஸ் என்ற நோயைப்பற்றிய விநோதமான செய்தி யாதெனில், எழுபது வருடங்களுக்கு முன்னர் 21 பேருக்கே இந்நோய் இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று, ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் 5 மில்லியன் பேருக்கு இந்நோய் இருப்பதாக அறியப்படுகின்றது. ஜேர்மன் நாட்டு ஆராய்ச்சி ஒன்றின்படி, எண்டோமெற்றியோஸிஸ் நோயினாற் பீடிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு, மற்றவர்களிலும் பார்க்க உயர் மட்ட அளவுக்கு P, C. B க்கள் அவர்களின் இரத்தத்தில் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. சில மார்புப் புற்று நோய்களுக்குச் சுற்றாடலும் ஒரு காரணமாக இருக்கலாம். அலிகேற்றர்களைத் தாக்கிய D. D. E. யின் உயர் அளவு, மார்புப் புற்றுநோய்உடைய பெண்களின் இழையங்களிற் காணப்படுவதாக நியூயோர்க் நகர மவுன்ற் சினாய் மருத்துவக் கல்லூரி ஆய்வாளர் மேரி வுல்ஃப் சென்ற வருடம் ஓர் ஆய்வில் அறிவித்தார். D. D. E. அடையாளங்கள் காணப்பட்ட பெண்கள் மற்றவர்களிலும் பார்க்க மார்புப் புற்றுநோயினாற் பீடிக்கப்படக் கூடிய தகவு நான்கு மடங்கு உண்டு. இவ்வருடம் தேசியப் புற்றுநோய்க் கல்வி நிறுவனம் நியூயோர்க்கின் லோங் ஐலன்டில் மார்புப் புற்றுநோயின் உயர் வீதத்தை ஆராய்வதற்காகப் பெரிய படிப்பொன்றைத் தொடங்கும். இங்கே புறநகர் கட்டப்படும் பகுதிகளில் இருந்த உருளைக்கிழங்குத் தோட்டங்களில் உபயோகிக்கப்பட்ட எஸ்ற்றொஜனை ஒத்த சேர்வைகளைக் கொண்ட பீடைகொல்லிகளுக்கு உட்பட்ட பெண்களின் மீது ஏற்பட்ட தாக்கம் ஆராயப்படும்.

ஏதோ கடுமையான பாதிப்பு ஏற்பட்டுவிட்டது என்பதனைக் காட்டு உயிரினங்களே முதன் முதலாக அறிகுறிகளைக் காட்டி நிருபித்தன என உலகக் காட்டு உயிரின நிதியத்தின் விலங்கியலாளர் தியோ கொல்பேன் கூறுகிறார். P. C. B. மற்றும் D. D. T. செறிவுகள் கூடுதலாக இருக்கும் கிறேற் லேக்சில் உள்ள மீன்களைத் தின்னும் கடற் பறவைகள் உயிர் இரசாயன இரு பாலுறுப்புக்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொண்டவையாக மாறுகின்றன. ஆண்களுக்கு இருபாலாரின் இனப் பெருக்கத் தொகுதி காணப்படு கின்றது. எஸ்ற்றொஜனை ஒத்த பீடைகொல்லியால் மாசுபடுத்தப் பட்ட உணவுச் சங்கிலியில் உண்ணும் ஃப்ளோறிடா பாஞ்தேர்ஸ்க்கும் (ஒரு வகைச் சிறுத்தைப் புலி) இனப்பெருக்கற் பிரச்சனைகள் உண்டு. கூடிய மலட்டுத் தன்மையுடைய பெண்களுக்கும் மலட்டுத் தன்மையுடைய ஆண்களுக்கும் குறைந்த எண்ணிக்கையில் விந்துகளும், உயர் மட்டத்தில் எஸ்ற்றொஜனும் காணப்பட்டன.

மேற்கூறியவை கண்டுபிடிக்கப் பட்டிருப்பினும் எஸ்ற்றொஜன் போலிகளின் செயற்பாட்டின் சான்றுகள் சூழ்நிலையிலிருந்து அனுமானிக்கப் பெற்றவையேயென நச்சுத்தன்மை பற்றிய இரசாயனத் தொழிற் கல்வி நிறுவனத்தின் ஆய்வாளர் தோமஸ் கோல்ஸ்வேதி குறிப்பிடுகிறார். உடலில்எஸ்ற்றொஜன் வாங்கிகளில் மாசுபடுத்திகள் பொருந்துகின்றன என்பதிற் சந்கம் இல்லாதிருப்பினும் உண்மையான எஸ்ற்றொஜன் செயற்படும் அதே உயிரியற் பாதை வழியே இரசாயனப் பொருள்களும் செயற்படுகின்றன என்பதை விவாதிக்க இன்னும் சிறிது இடமுண்டு. எஸ்ற்றொஜன் போலிகள் புற்றுநோயையும், மற்றும் வேறு நோய்களையும் கிளப்ப முடியுமானால் இந்நோய்களின் வளர்ச்சி வீதம் உயராமல் இருப்பதேன்? எனச் சந்தேகப்படுவோர் கேட்கின்றனர். சட்டவியற்றுநர் விடை கிடைக்கும் வரை காத்திருக்கப்போவதில்லை. மனிதச் சுகாதாரத்திலும், மற்றும் சுற்றாடலிலும் எஸ்ற்றொஜனை ஒத்த இரசாயனப் பொருள்களில் ஓர் உறுப்பாக இருக்கும் குளோரினின் விளைவைப் பற்றிய 18 மாத ஆய்வுக்கு அதன் உபயோகத்தைக் குறைக்கும், அல்லது தடை செய்யும் நோக்கத்துடன் பெப்ரவரி மாதத்தில் கிளின்ரன் நிர்வாகம் உத்தரவிட்டது. ஐந்துவருட காலத்தில் காகிதம், மற்றும் காகிதக் கூழ்க் கைத்தொழில்களில் குளோரினின் உபயோகத்தைப் படிப்படியாகக் குறைப்பதற்கு அமெரிக்கக் காங்கிரஸில் ஒரு சட்டமூலம் கொண்டு வரப்படும். தான் நினைத்த அளவுக்குத் தன்னிடம் ஆண்மையில்லை என அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர் அறியும் பொழுது அவரடையும் ஆவேசம் நரகத்திலும் இராது.

"நியூஸ்வீக்" மார்ச் 21, 1994.
கட்டுரை வடிவம் தந்தவர்கள்:- ஷறோன் பெக்ளி, டானியல் கிளிக்.

அத்துடன்,

## இப்பொழுது நல்ல செய்தி

எல்லா எஸ்ற்றொஜன் வகையும், அல்லது எஸ்றொஜன் போலிகளும் இனவிருத்தித் தொகுதியைமாற்றியமைத்து புற்றுநோய் ஏற்படும் தகவை அதிகரிப்பதில்லை. நல்ல கொலெஸ்ற்றோலும், கெட்ட கொலெஸ்றோலும் இருப்பதுபோல் நல்ல எஸ்ற்றொஜனும்கெட்ட எஸ்ற்றொஜனும் உண்டு. இவ்வகை ஓமோன்கள் மிகச் சிறிதளவு மூலக் கூறுகளால் வித்தியாசப்படுவன. சுகாதார மனித சேவைகள் பணியக முது நிலை விஞ்ஞானி டெவ்றாலீ டேவிஸ், "எல்லா எஸ்ற்றொஜனும் சமமானவையல்ல" என்று குறிப்பிடுகிறார். அவரின் அறிமுறையின்படி உடல் எஸ்ற்றொஜனை ஆக்கும் பொழுது இரண்டு உயிரியல் இரசாயன வழிகளில் ஏதாவது ஒன்றின் வழியே ஓமோன் பிரிக்கப்படும். ஒன்று 16 ஐதரொட்சியெஸ்ற்றோன் வகையை நோக்கிச் செல்கின்றது. இது D. N. A. ஐப் பாதிக்கக் கூடியதால் இவ்வகையானது மார்புப் புற்றுநோயையும், விதைப்புற்றுநோயையும் தோற்றுவிக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. மற்றவழி வேறொரு வகையான 2-ஐதரொட்சியெஸ்ற்றோனை நோக்கிச் செல்கின்றது. இது பாதிப்பை ஏற்படுத்தாமல் நன்மையையும் செய்யலாம்.

வோஷிங்ரனில் அமைந்துள்ள குழந்தைகள் மருத்துவமையத்தின் ஆய்வாளர் கென்னெத் செற்செல்லின் கூற்றுப்படி-ஃபிறெஞ்ச் பீன்ஸ், சோயா பீன்ஸ், மற்றும் மாதுளை போன்ற தாவர உணவுகளில் புற்றுநோயைத் தடுக்கக்கூடிய ஃபைற்றோ எஸ்ற்றொஜன் உண்டு. அவருடைய ஆய்வுக் கூடத்தில் சோயாப் புரதம் உண்ட எலிகளில் சோயா உண்ணாத எலிகளிலும் பார்க்கக் குறைந்த அளவு உடற் கட்டிகள் தோன்றின. ஜப்பானில் ரோஃபு, சோயாக் குழம்பு மற்றும் மிசோ— நல்ல எஸ்றொஜனின் சிறந்த மூலங்கள்-உண்ணும் பெண்களுக்குக் குறைந்த வீத மார்புப் புற்றுநோய்த் தாக்கமும் அவர்கள் அமெரிக்காவுக்குச் சென்று மேல்நாட்டு உணவு முறையைப் பின்பற்றும் பொழுது அமெரிக்க வீதத்திற் புற்றுநோய்த் தாக்கமும் ஏற்படுவதை இது விளக்கலாம். 'புறோக்கலி' போன்ற சுக உணவுகளில் உள்ள சேர்வைகள் புற்றுநோயைத் தடுக்கும் பாதையில் எஸ்ற்றொஜனைத் தள்ளலாம் என டேவிஸ் கூறுகின்றார்.

எஸ்ற்றொஜனுக்கும், அல்ஸீமர் (Alzheimer) நோய் ஏற்படும் நிலையின் குறைந்த தகவுக்கும் ஒருதொடர்பு இருப்பதாகத் தென்கலிபோர்னியாப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் விக்ரர் ஹெண்டர்சன் சென்ற இலையுதிர் காலத்தின்போது அறிவித்தார். மாதவிடாய் நின்ற 2,418 பெண்கள் குழுவில் எஸ்ற்றொஜன் குளிகை உண்டவர்களுக்கு இந்தச் சித்தசுவாதீனமற்ற நோய் வரும் தகவு உண்ணாதவர்களுக்கு வருவதிலும் விட 40 சதவீதம் குறைவாக இருக்கும் என அறியப்பட்டது. எலிகளில் நியூறோன்களுக்கு இடையே தொடர்புகளை நிலை நிறுத்தவும், பலப்படுத்தவும் வளர்ச்சிக் காரணியொன்றை ஆக்குவதற்கு எஸ்றொஜன் உதவுகின்றது. அல்ஸீமர் நோயினால் முதலாவதாகத் தாக்கப்படும் ஞாபக மையங்களில் அதன்விளைவு பலமாகவுள்ளது. - "நியூஸ்வீக்" மார்ச் 21, 1994.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னுவதெல்லாம் இரசாயனமல்ல

விஞ்ஞானம்:-

## கல்விச் சுதந்திரமும், இரசவாதமும்.

போற்றப்படும் கல்விச் சுதந்திரம் என்ற பேரால், பல்கலைக் கழகப் பீடஉறுப்பினரான கொம்யூனிசவாதிகளையும், பாசிஸ்தவாதிகளையும் இனவாதிகளையும், யூதருக்கு எதிரானவர்களையும், தன்னினச் சேர்க்கையாளர்களையும் பல்கலைக்கழகங்கள் சகித்துக் கொள்கின்றன. ஆனால், இரசவாதிகள்? ரெக்ஸ்சாஸ் மாநில A. M பல்கலைக்கழக இரசாயனப் பிரிவிற் குழப்ப நிலை தோன்றியுள்ளது. கீழ்மட்ட உலோகங்களைப் பொன்னாக மாற்றும் வழிமுறைகளை ஆராய்வதற்காக, நன்கொடையாளர் ஒருவரிடமிருந்து 200,000 டொலர் பணத்தைப் பெற்ற ஆராய்ச்சியாளரை யாது செய்வது? இரசவாதியாக மாறவிரும்பும் மின் இரசாயன வியலாளரான ஜோன் பொக்கிரிசை விலகும்படி, 15 இரசாயனப் பேராசிரியர்கள் கோரிக்கை விடுத்தார்கள். நியமமில்லாத ஆராய்ச்சியைப் பற்றியும், 300 வருடங்களுக்கு முன்னர் கைவிடப்பட்ட இரசவாதத்திற்கு இவ்வாறு பணம் பெறலாமென்பதைப் பற்றியும், இரு பல்கலைக்கழகக் குழுக்கள் அறிக்கைகள் சமர்ப்பிக்க இருக்கும் நேரத்தில், A. M பல்கலைக்கழகப் பேச்சாளர் நான்ஸி சோறல், ''முழுவதும் தர்ம சங்கடமான நிலையைத் தோற்றுவித்துவிட்டது'' என்று கூறுகிறார்.

1992 ஆம் ஆண்டில் விஞ்ஞானக் கண்டுபிடிப்பாளர் எனத் தன்னை வர்ணித்தவரான ஜோ சம்பியன் என்பவர், கீழ் மட்ட உலோகங்களைப் பொன்னாகவும், வெள்ளியாகவும் மாற்றும் நோக்குடன், பொக்கிரிசுடன் தொடர்பு கொண்டார். அது மட்டுமல்ல; அவர் நன்கொடைகளும் கொண்டு வந்தார். கலிபோர்னியாப் பண முதலீட்டாளர் வில்லியம் ரெலான்டரிடமிருந்து பெற்ற 200,000 டொலர் பணத்தை ஆராய்ச்சிக்காகக் கொண்டு வந்தார். பணம் பெறா அதிதி ஊழியராகச் சம்பியனும், மற்றும் பொக்கிரிசும், பணத்தைப் பெட்டியிற் போட்டுவிட்டுப் பரிதோதனைகளைத் தொடங்கினார்கள். ஒரு பரிசோதனையின் கீழ், உலோகங்கள் மீது றேடியோ அலைகளைச் செலுத்தினார்கள். ஆனால், மைதாஸ் அரசனின் கை தொட்டதாகத் தென்படவில்லை. வேறொரு பரிசோதனையில், வெடியுப்பான பொட்டாசியம் நைதரேற்றைக் கோப்பிப் பேணியொன்றினுள் இட்டு, கார்பன் மற்றும் வேறு உப்புக்களையும் சேர்த்து, உயர் வெப்ப நிலைக்கு வெப்பமேற்றப்பட்டது. நான்கு வெவ்வேறு பரி பரிசோதனைகளில், சிறிதளவு பொன் உண்டானதாகப் பொக்கிரிஸ் அறிவித்தார். இவ்வாச்சரியமான முடிவைப் பெறுவதற்கு, இவரின் ஆய்வுக்கூட விஞ்ஞானீகள் 20 தடவைகள் முயற்சி செய்தும் வெற்றி பெறவில்லை. பொக்கிரிசுடன் சக ஆராய்ச்சி உதவியாளராகப் பணியாற்றிய றமேஷ் பரத்வாஜ், (தற்போது தனியார் தொழில் நிறுவனத்தில் வேலை செய்பவர்.) வெற்றியடைந்த பரிசோதனைகள் யாவும் ஏமாற்று வேளைகள் என நம்புகிறார். ''சம்பியன் அவ்விடத்தில் நிற்கும் பொழுது தான், அவை செயற்பட்டன'' என இப்பத்திரிகைக்குக் கூறினார்.

உற்றா மாநிலப் பல்கலைக்கழகமின் ரசாயனவியலாளரான பொக்கிரிசின் நீண்டகால நண்பரான மாட்டின் ஃபிளெயிஸ்மானும், ஸ்ரான்லி பொன்சும், சூரியனை எரியச் செய்யும் அணுக்கருத் தாக்கத்தை, மேசையொன்றின் மீது பொருத்தப்பட்ட எளிய ஆய்கருவியை உபயோகித்து. அறை வெப்ப நிலையிற் குளிர் இணைத்தல் முறையினாற் செய்ததாக உரிமை கோரியபோது, பொக்கிரிஸ் அவர்களை ஆதரித்தார். தனது குளிர் இணைப்புப் பரிசோதனைகளிலிருந்து, வெப்பமும், ஐதரசனின் சமதானியான திரைத்தியமும் ஆக்கியதாகப் பொக்கிரிஸ் அறிவித்தார். இவரின் சக ஆராய்ச்சியாளர் நம்பவுமில்லை; பகிரங்கமாகவும் விமர்சித்தார்கள். தனது தற்போதய வேலை மிக ஆழமானதும், மற்றும் ஒடுங்கிய ஊடகத்திற் குறைந்த சக்தி அணுக்கரு மாற்றத்தினுள், மிக உயர் ஆராய்ச்சி என்று பொக்கிரிஸ் விபரிக்கிறார். ''நான் மந்திரவாதி வேலைகளில் நாட்டமுடையவன் அல்லன்'' என்றும் கூறுகிறார்.

ஆனால் நடைமுறையில், ஈயத்தைப் பொன்னாக்கும் வியாபாரத்தில் இருந்து மிகவிரைவில் பொக்கிரிஸ் விலகிவிடுவார். 7.8 மில்லியன் டொலர் வெளிநாட்டுப் பண மாற்ற மோசடியில், 380 பண வைப்பாளரை ஏமாற்றியதாக, முதலீட்டாளர் வில்லியம் ரெலான்டர் லொஸ் எஞ்சலிஸ் அமெரிக்க நீதி அலுவலகத்தினாலும், மற்றும் உறுதிப் பத்திரப் பரிவர்த்தனை ஆணைக்குழுவினாலும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார். மேலும், பொக்கிரிஸ் செலவழியாத 32,000 டொலர் பணத்தைப் பல்கலைக்கழகம் நிறுத்தி வைத்துள்ளது. சென்ற மாதம் அரிசோனா மாநில மேல் நீதி மன்றத்திலே, பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டகளவொன்றிற் குற்றவாளியாகக் காணப்பட்ட சம்பியன் ஒரு வருடச் சிறைத்தண்டனை பெற்றார் இரசவாதத்திற்குக் கெட்ட பெயர் கொடுக்க, இம்மனிதர்களே போதுமானவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பான்: அணுமின் நிலையத் திட்டங்களில், அண்மைக்கால மாற்றங்கள்.

எழுதியவர்:
ரோக்கியோவிலிருந்து
— சார்ள்ஸ் சிமித் —

தொழிற்கூடத் தயாரிப்புக்களை ஏற்றுமதி செய்வதில், ஜப்பானியப் பொருளாதாரம் பெருமளவு தங்கியிருக்கின்றது. ஜப்பான், தொழில்வளம் நிறைந்த நாடு என்றாலும், அது தனது தாதுப் பொருள், எரிபொருட் தேவைகளுக்குப் பிறநாடுகளையே நம்பி இருக்கின்றது. காலத்திற்குக் காலம், உலகில் நடக்கும் அரசியல் மாற்றங்கள், இவை ஜப்பானுக்குத் தடங்கலின்றிக் கிடைப்பதைப் பாதிக்கின்றன. மத்தியகிழக்கிற் கிடைக்கும் எரிபொருள், நெடுந்தூரப் பயணத்தின் பின், ஜப்பான் வந்து சேருகின்றது. மத்திய கிழக்கிலும், இந்து சமுத்திரத்திலும், தென்சீனக் கடலிலும், பசுபிக்சமுத்திரத்திலும் அதிகளவு மாற்றங்களும், போட்டிகளும் நடக்கும் போது, ஜப்பான் நடுநிலை வகிக்க இயலாது தவிக்கின்றது. அதே சமயம், தனது ஏற்றுமதி வாணிபம், நண்பன் எதிரி என்று பாராது, எல்லா நாடுகளுடனும் சமதையாக நடப்பதையும் ஜப்பான் கவனிக்க வேண்டியுள்ளது.

இதை உணர்ந்த ஜப்பானிய அரசு, தனது நெடுங்கால எரிபொருட் தேவையைப் பூர்த்தி செய்ய, இந்த நூற்றாண்டின் அறுபதுகளிலேயே அணுமின் நிலையத் திட்டங்களை ஆரம்பித்துள்ளது.



அணுக்குண்டுக் கவலை:-
மென்ஜூவில் கட்டப்பட்ட,
புளுட்டோனியத்தில் இயங்கும்
பரீட்சார்த்த அணுமின் நிலையம்,

தொழிற்சாலைத் தேவைகளுக்கு, மத்திய கிழக்கின் எரிபொருளுக்கு மாற்றீடாக, அணுசக்தியைப் பயன்படுத்தும் திட்டமும், செயற்பாடும் அன்றே தொடங்கிவிட்டன. இன்று வரை, முதலாந் தலைமுறை அணுமின்சக்தி நிலையங்களே ஜப்பானில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், ஜப்பான் தனது இரண்டாந் தலைமுறை அணு மின்சக்தி நிலையங்களை இயக்கத் திட்டமிட்டவுடன், உள் நாட்டிலும், மேற்குலகிலும் பெருமெதிர்ப்புக் கிளம்பியுள்ளது. முதலாந் தலைமுறை நிலையங்களைப் பெரிது படுத்தாதவர்கள், இரண்டாந் தலைமுறை நிலையங்களுக்கு ஆட்சேபந் தெரிவிப்பதின் காரணிகளை இங்கு ஆராய்வது நன்மை பயக்கும்.

முதலாந் தலைமுறை அணுமின் சக்தி நிலையங்களில், சக்தியூட்டப்பட்ட யுரேனியம், எரிபொருளாகப் பாவிக்கப்படுகின்றது. இதை, அணுக்குண்டுத் தயாரிப்பில் உபயோகிக்க இயலாது. ஆனால், இரண்டாந் தலைமுறை அணுமின் சக்தி நிலையங்களில் புளுட்டோனியம் (Plutonium) பாவிக்கப்படுவதுடன், அதே புளுட்டோனியம் சுத்திகரிப்புச் செய்யப்பட்டபின், மீள் பாவனைக்குட்படுத்தவும் முடியும். இதன் நன்மை, ஜப்பானைப் பொறுத்தளவில் புளுட்டோனியச் சேமிப்பும், தன் நிறைவும் என்று சொல்லலாம். பாவிக்கப்பட்ட புளுட்டோனியத்தை, மீண்டும் புதுப்பிக்குந் தொழில் நுட்பத்தை, மேற்குலகில் அமெரிக்கா, பிரான்சு, இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகள் வைத்திருக்கின்றன.

இந்தச் சுத்திகரிப்பு வேலையைத் தானே செய்யும் நோக்குடன், றொக்காசோமுறா என்ற இடத்தில் தனது பிரத்தியேக ஆய்வுக்கூடத்தையும் ஜப்பான் கூட்ட ஆரம்பித்துள்ளது. இது முடிந்த பின், 2,010 இல், இரண்டாவது சுத்திகரிப்பு நிலையத்தையும் கட்டுவதற்கு, ஜப்பான் எதிர்காலத் திட்டங்களை வகுத்துள்ளது. இந்தவிதமான சுத்திகரிப்பு வேலை செய்யும் போது, சில வருடங்களில் ஜப்பானின் புளுட்டோனியம் கையிருப்புப் பெருகும் வாய்ப்பு நிறைய உண்டு. இது ஓர் அபாயகரமான நிலபரம் என்று எதிர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். ஏனென்றால் இந்த எரிபொருளிலிருந்து அணுவாயுதங்கள் தயாரிக்க முடியும். இரண்டாம் உலக யுத்த முடிவில் ஜப்பான் தோற்கடிக்கப்பட்டபின், அமெரிக்க ஆட்சியின் கீழ் வந்ததன் பின்பு, தாக்குதலுக்குப் பயன்படும் சாதனங்கள், ஆயுதங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கக் கூடாது என்ற நிபந்தனையுடன், ஜப்பானுக்குத் தன்னாட்சி வழங்கப்பட்டதும், இவ்விடத்தில் நினைவு கூருவது பொருத்தம். அத்துடன், அணுவாயுதத் தயாரிப்பையும், பரவுவதையும் தடுப்பதில், அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் யாவும் ஈடுபட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

இன்று, ஜப்பானிய ஆட்சி, பல கட்சிக்கூட்டு ஒன்றின் கையில் இருக்கின்றது. இந்தக் கூட்டில் அடங்கிய சில குழுக்கள், இரண்டாந் தலைமுறைத் திட்டத்திற்குத் தமது மறுப்பைக் காட்டியுள்ளன. ஆனால், மேற்குலக எதிர்ப்பும், இக்கட்சிகளின் ஆட்சேபனையும், திட்டங்களைப் பின்தள்ளிப் போட்டுள்ளன என்பதே உண்மை நிலை. அவர்களால், திட்டங்களை அறவே ஒழிக்க முடியாது என்பது நன்கு புலப்படுகின்றது. இவ்வருட ஜனவரி மாதம், ஒன்பது ஜப்பானியத் தனியார்துறை மின்விநியோக நிறுவனங்களின் தலைவர்கள் கூட்டாக விடுத்த அறிக்கையில், தாங்கள் கூட்டவிருக்கும் வேகச் சுத்திகரிப்பு நிலையம், அடுத்த நூற்றாண்டின் முற்பகுதி வரை தள்ளிப்போடப்



புளுட்டோனியம் - சுத்திகரிப்புக்கு, ஏற்றிச்செல்லும் ஜப்பானியக் கப்பல் அக்காற் சுக்கி மாறு.

பட்டுள்ளதெனத் தெரிவித்துள்ளனர். கொள்கைக்குப் பொறுப்பான அரசு மௌனஞ் சாதிக்க, தனியார்துறை அறிக்கை விடுவது, ஒரு வியப்பான செய்தி. ஏப்ரல் மாதம் நடைமுறைக்கு வரவேண்டிய, 280 மெகாவாட் திறன் உள்ள, மொன்ஜூவில் காட்டப்பட்ட பரீட்சார்த்த மின்நிலையம், 18 மாதங்களுக்குத் தள்ளிப் போடப்பட்டுள்ளது. அத்துடன், ஜப்பானின் விஞ்ஞானத் தொழில் நுட்ப அமைப்பு, புளுட்டோனியத் தன்னிறைவுத்திட்டத்தைத் தள்ளிப்போடுவதாக அறிவித்துள்ளது. றொக்காசோமுறாவிற் கட்டப்பட்ட சுத்திகரிப்பு நிலையம், 2,002 ஆம் ஆண்டளவில், ஜப்பானில் இருக்கும் பாவிக்கப்பட்ட புளுட்டோனியத்திற் பாதியைச் சுத்திகரிக்கும் நிலைக்கு வந்துவிடும் என்றும், தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், 2,010 இல் திறக்கப்படவிருந்த இரண்டாவது நிலையம், 2,030 வரை தள்ளிப் போடப்படுமென்றும், உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு மேற்குலக இராஜதந்திரியின் கணிப்பில், ஜப்பான் ஒன்றையும் நிறுத்தவில்லை; வெறுமனே, தள்ளித்தான் போட்டுள்ளது; திட்டங்கள் யாவும் உருமாறாமல் இருக்கின்றன.

ஜப்பானியப் பிரதமர் மொறிகிறோ கொசக்காவா அவர்களுடைய ஏழு கட்சிகள் கொண்ட கூட்டாட்சியில், இரண்டாந் தலைமுறைத் திட்டத்தை முனைப்புடன் செயலாக்க வேண்டும், செயலாக்கக் கூடாது என்ற இரு சாராரும் இடம் பெறுகின்றனர். இவர்களுக்கிடையில், ஒரு மோதல் நிலையைத் தவிர்க்க, கொசக்காவா ஜப்பானிய விஞ்ஞானத் தொழில் நுட்ப அமைப்புக்கு, சற்சுக்கு ஈடா என்ற நடுநிலை இடது சாரியை நிர்வாக அதிகாரியாக நியமித்தார். இவர் (ஈடா) சொல்கிறார் :– ''பிறநாட்டு எண்ணெயில் தங்கியிருப்பதைத் தவிர்க்கவே, அணு சக்தி மின் நிலையங்களை ஆரம்பித்தோம். முதலாந் தலைமுறை நிலையங்கள், இரண்டாவதிலும் பார்க்க மலிவானவை. அத்தோடு, நாம் நிற்கத் துணிந்துள்ளோம்'' என்று. ஆனால், ஒரு மேற்குலக இராஜதந்திரியின் பார்வையில், ஜப்பான் தனது அணுசக்தி மின் நிலையத் திட்டங்களில், செலவை ஒரு பொருட்டாக ஒரு போதும் மதித்ததில்லை. அவர் மேலும் சொல்கிறார் :– ''அவர்களுடைய இத்தியாதித் திட்டங்களில், அடிப்படை மாற்றங்கள் ஒன்றுமேயில்லை. அடுத்த நூற்றாண்டில், சுத்திகரிப்பு நிலையங்களையும், புளுட்டோனியத்தில் இயங்கும் அணுமின்சக்தி நிலையங்களையும் ஏற்றுமதி செய்யும் நிலைக்கு ஜப்பான் வந்துவிடும்'' என.

F) பார் ஈஸ்ரேன் எக்கனோமிக், றிவியூ
மார்ச், 04, 1994

## உணவும் கருத்தடையும்

தாய்லாந்தில் ''கோவாக் கறியும், ஆண்களின் கருத்தடை உறையும்'' என்ற பெயருடைய தொடர் உணவகங்கள் மிகவும் பிரபல்யமானவை, இங்கு உருசியான உணவுடன் குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமான சகல இலவச உதவிகளும் வழங்கப்படுகின்றன. தாய்லாந்தின் சனத்தொகையைக் குறைப்பதில் இந்த உணவகங்கள் பெரும்பங்கு வகிப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த உணவகங்களின் சொந்தக்காரரான மெச்சாயி வீரவைத்தியர் இந்தச் சேவையை ஒரு தேசப் பணியாகச் செய்து வருகின்றார். சீன அரசு இதைத் தனது கவனத்தில் எடுத்து இவரை இதுபோன்ற உணவகங்களைச் சீனாவிலும் திறக்கும்படி அழைப்பு விடுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறை வழிவந்த தனித்தன்மை!
ஆமாம் . . . .

# சாந்தி ஆயுள்வேத வைத்திய நிலையம்



மூளை வளர்ச்சி அற்ற.
கைகால் சூம்பிச்
செயலிழந்த,
வலிப்பு நோயினால்
பாதிக்கப்பட்ட
குழந்தைகளுக்கான
சிறப்புச் சிகிச்சை.

சரவணை சிவசம்பு,
198 / 1 பொன்னப்பா லேன்,
வண்ணார்பண்ணை

★ கிரந்தி எண்ணெய ★ பொன்னாங்காணித் தைலம்
★ கபால இடி எண்ணெய்

*இன்னும்! இன்னும்!!*

நாட்பட்ட நோய்களுக்கான சித்த வைத்திய ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ளவும் . . .

# சாந்தி வைத்திய நிலையம்

ஓட்டுமடம், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் ! விலை !! சுவை !!!

மூன்றும் சரிவர அமைந்துள்ள ஒரே சிற்றுண்டிச்சாலை

# ஸ்ரீ சரஸ்வதி பவான்

## தேனீர் அகம்

சுவைப்பிரியர்களுக்கு ஓர் இனிய நற் செய்தி!

*"வடை தயார்"*



காலை உணவு, மாலை உணவு, சிற்றுண்டி வகைகள்
எதுவானாலும் நிறைவுடன் சுவைக்க நாடுங்கள்......

**ஸ்ரீ சரஸ்வதி பவான்**

இல. 195 (57) காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கிவி" பறவைக்கான கடைசி அறைகூவல்.

ஒக்ஸ்.:போட் பல்கலைக்கழகத்தில் பறவையியற் கலாநிதிப் பட்டமாகப் பரிணமித்தது. அவர் தாயகமான நியூசிலாந்துக்குத் திரும்பியதும் சமூகக் கைத்தொழில் ஆராய்ச்சித் திணைக்களத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். இதில் வெலிங்டனில் 5 ஆண்டுகள் பணிபுரிந்தார். இக்காலப் பகுதியிற் காடுகளுக்கு அடிக்கடி

## மறைந்து வாழும் இந்தப் பறவையின் இரகசிய வாழ்க்கையை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து, அதனை அழிவினின்றும் காப்பாற்றுவார்களா?

எழுதியவர்:
— போல் றஃபாயேல் —

12 வயதாக இருக்கும்போது ஹியூ றொபேற்சன் தன் குடும்பத்தோடும், நண்பர்களோடும் நியூசிலாந்தின் தெற்குத் தீவின் கரடுமுரடான மேற்குக் கரையோரத்திற்குக் கால் நடையாகச் சென்றார். இரவில் சுற்றிவர அமைந்திருந்த காடுகளிலுள்ள பறவைகள் எழுப்பும் ஒலிகளை வெளியிலமர்ந்து கேட்பார்; இரசிப்பார். ''மோபோக்'' பறவையின் மெல்லிய கனைப்பு; வெக்காவின் தூரவிருந்து ஒலிக்கும் பலத்த குரல். இவற்றைவிட இன்னோர் ஓசையும் அவர் காதிற் கேட்கின்றது. அது அவரை மகிழ்விக்கின்றது. மிக உயர்ந்த சத்தத்தில் ட்ர்ர்ர்ர் . . . என்ற ஒலியே அது. ஆம்; அதுதான்! புன்னகையோடு பையன் நினைக்கின்றான். கிவியின் அழைப்பே அதுவாகும்.

நியூசிலாந்திலுள்ள பலரைப் போலவே இந்த அபூர்வமான பறவையைப் பையன் ஒருபோதும் காட்டிற் கண்டதில்லை. ஆனால் மூன்றிலிருந்து ஐந்து கோடி ஆண்டுகளுக்கு முன்னர் முழங்கால்வரை உயரமான இந்த உயிரினம் ஆகாயத்தை விட்டு விலகிப் பூமியிலே வாழத் தொடங்கி விட்டது என்பதை அவன் அறிந்திருந்தான். அதன் முடிவு? உலகத்தின் மிக மிகத் தொன்மையான பறவையினமான அதற்குப் பறக்க முடியாது. இரவிலேயே நடமாடும். முயலைப்போல நிலத்தினடியிற் கூடுகட்டி வாழும். அன்னம் போல் வாழ்வில் ஒரு முறையே பாலியல் உறவு கொள்ளும் அவ்வதிசயப் பறவையினம் தரையிலே குடிகொண்டது.

வாலிப வயதை எட்டிய போது றொபேற்சனுக்குப் பறவைகள் மேல் ஒரு தீவிரப் பற்று ஏற்படலாயிற்று. 1989 ஆம் ஆண்டளவில் அவரது ஓய்வுநேரப் பொழுது போக்கு இங்கிலாந்தின்



(பின்னணி) மறைந்து வாழும் கிவிப் பறவையின் தனித்துவ வாழ்க்கை நடக்கும் தெற்கு அல்ப்சின் ஒரு மலைத் தொடர். (உள்ளே) தனது பிரதேசத்துக்குள் நுழைந்த ஓர் ஊடுருவற்காரரைக் கிவி தாக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று வந்ததோடு உள்நாட்டுப் பறவையினங்களின் பழக்க வழக்கங்களைக் கற்றறிந்தார். ''எனக்குப் பழக்கப்பட்ட அந்தச் சத்தம் மலைகளிலிருந்து வருமென்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால் அழைப்பு வரவேயில்லை'' என்று ஆதங்கப்படுகிறார் அவர்.

நியூசிலாந்து முழுவதிலும் விவசாயிகள் வனப் பாதுகாப்பு அதிகாரிகள் பறவைகளைக் கவனிப்போர் என எல்லோருமே இதனைக் கண்டுள்ளார்கள். கிவி ''ட்ர்ர்ர்'' என்று ஒலி எழுப்பும் பின்தங்கிய பகுதிகளிலும்- யுகாந்திர காலம் அதன் ஓசை கேட்ட இடங்களில் - இரவு நிசப்தமாகவே அடங்கி ஒடுங்கியது. நாய்கள், பூனைகள், ''ஸ்ரோற்'' எனப்படும் கம்பளி மிருகம் போன்றவற்றை ஐரோப்பியர் இந்தத் தீவுகளுக்குக் கொண்டு வந்த காலந் தொடங்கி அதாவது 150 வருட காலமாகப் கிவிப் பறவைகள் அருகி வந்துள்ளன. 1980 களில் அவற்றின் எண்ணிக்கையும், விநியோகமும் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியடையத் தொடங்கி விட்டன.

அதிர்ச்சியுற்ற நியூசிலாந்து அரசு தனது தேசிய அடையாளம் அருகிப் போகாமல் இருப்பதற்காக விஞ்ஞானிகள் வன பரிபாலன முகாமையாளரைக் கொண்ட அதிரடிக் குழுவொன்றை உருவாக்கி 1989 இல் நிதியும் ஒதுக்கியது. இந்த ஐந்தாண்டு கிவி மீட்புத் திட்டத்தின் பொறுப்பு நாட்டின் மிகச் சிறந்த பறவையியலாளர்களுள் ஒருவரான றொபேற்சனிடம் கையளிக்கப்பட்டு அந்தப் பணி 1991 இல் தொடங்கியது. எவ்வளவு கிவிப் பறவைகள் வாழ்கின்றன என்பதைக் கண்டு கொள்வதற்கேஅவர் முன்னுரிமை அளித்தார். ஒருபோதுமே கண்டு கொள்ள முடியாத ஒரு பறவையினத்தின் எண்ணிக்கையைக் கண்டுகொள்வதென்பது இலகுவான காரியமல்லவே,

கப்பிற்றித் தீவை இருள் கவ்வியது. சய எட்டுப் பாகை செல்சியசிற்கு (-8oC) சீதோஷ்ணம் வீழ்ச்சியடைகிறது. றொபேற்சனும், நானும், இன்னும் ஒரு சிலடசின் பயிற்சியாளர்களும் குளிர்ப் பாதுகாப்பு உடைகளை அணிந்து கொண்டு செங்குத்தாக உயர்ந்து செல்லும் காடொன்றின் கீழ்ப் பகுதியிலமைந்துள்ள புல் மடுவில் ஏறுகிறோம். அது ஒரு நேர்த்தியான கிவி நாடாகும். எட்டு மணியிலிருந்து ஒன்பது மணி வரை சரியாக ஒரு மணித்தியாலத்திற்கு நாங்கள் கிவியின் அழைப்பிற்குச் செவி மடுப்போம். ''இன்னும் ஐந்து, பத்து, அல்லது இருபது ஆண்டுகளுக்குப் பின்பு ஆய்வாளர்கள் இதே நேரத்தில் வந்து இந்த ஓசையைச் செவி மடுத்து விட்டு எமது கூற்றை ஒப்பு நோக்கலாம்'' என்கிறார் றொபேற்சன்.

அந்தக் குளிரில் நாங்கள் கவனஞ் செலுத்தத் தொடங்கிய ஐந்தே நிமிடங்களில் கிவியின் முதலாவது அழைப்புக் கேட்கிறது. மிக உயர்ந்த ஸ்தாயியில் ''கிறீச்'' என்ற அதிர்வோடு இசைக்கிறது அந்த அழைப்பு. திசைகாட்டி ஒன்றின் உதவியோடு குரல் வந்த வழியை றொபேற்சன் கண்டு கொள்கின்றார். ''அது ஒரு ஆண்'' என்கிறார் அவர். சில விநாடிகள் கழித்து அந்தப் பறவையின் சோடியினது வேட்கை அழைப்பைக் கேட்க முடிகிறது. உணவு உட்கொள்ளும்போது ஆணும் பெண்ணும் அடிக்கடி அழைத்துக் கொள்வர். ''இளவேனிலின் இனப் பெருக்கக் காலத்தில் இரு பகுதியினரும் இரவில் அடிக்கடி சந்தித்துக் கொள்வர்'' என்று சொல்கிறார் றொபேற்சன். ஒரு மணித்தியாலத்தில் 35 வெவ்வேறு கிவிகளை நாங்கள் அடையாளங் கண்டு விடுகின்றோம்.

றொபேற்சனும், அவரது சகபாடிகளும் கிவிகளைக் காப்பாற்ற நீண்ட காலத் திட்டம் வகுப்பதற்கு முன்னர் கிவியின் இரகசிய வாழ்வின் புதிர்களைக் கண்டு பிடிக்க வேண்டும். இந்தச் சவால் மிகவும் கடினமானது. ஒவ்வொரு கிவியின் பிரதேசமும் 50 ஏக்கர் விஸ்தீரணமிருக்கும். இந்தப் பிரதேசத்திற்குள் அது புகுந்து வாழும் 30 குழிகள் இருக்கும். இவற்றிலே ஏதாவதொன்றில் அது ஒளித்திருக்கும், ''10 வருடங்களுக்கு முன் வரையில் இந்தப் பறவையின் இரவு வாழ்க்கை முறையைக் கண்டு கொள்வது இயலாத காரியமாகவே இருந்தது'' என்று கூறுகிறார் றொபேற்சன். உயர் தொழில்நுட்பக் கண்கணிப்புக் கருவிகளின் உதவியை விஞ்ஞானிகள் நாடினார்கள். அதனோடு கூடவே ஒளி குறைந்த ஒளிப்பதிவுக் கருவிகள், புகைப்படக் கருவிகள், வானொலிச் சமிக்ஞைக் கருவிகள் எல்லாம் கோரப்பட்டன.

## கெட்ட கோபம் :

தெற்குத் தீவின் மேற்குக் கரையோரத்திலமைந்துள்ள ஒக்காறிற்ரோ மலைக் காட்டின் அடர்த்தியான இடம், பின்னிப் படர்ந்துள்ள கொடிகளுக் கூடாக றோபேற்சனுடனும், அவருடைய உதவியாளர் றோகன் கொல்போறனுடனும், நானும் புகுந்து கொள்கிறேன் இன்னமும் 100 வரையிலான பறவைகள் மட்டுமே எஞ்சியுள்ள, ஒக்காறிற்ரோவில் ஊதா நிறக் கிவிகளிலொன்றின் வதிவிடம் நோக்கியே எமது பயணம். பத்து வாரங்களுக்கு முன்னர், ஒலியனுப்பும் கருவியொன்று அதன் மீது பொருத்தப்பட்டிருந்தது. றொபேற்சன், இப்போது தனது வானொலி அன்ரனாவை உயர்த்திப் பிடித்து, தனது தலைத்தொலைபேசியைச் சரிசெய்து கொள்கிறார். ''பறவை இருக்கிறது, 1,600 அடி அடிதூரத்தில்'' என்று, தகவல் தருகிறார் றொபேற்சன்.

அரை மணித்தியாலம் செங்குத்தான அடர்ந்த 'காட்டுக்குள் நாங்கள் நடந்து சென்று, பறவையின் குழிக்கு 170 யார் தொலைவுக்கு வந்துவிட்டோம். ''விசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியிலிறங்கவேண்டிய நேரம் வந்துவிட்டது'' என்று கூறிய கொல்போறண், இதற்கென விசேடமாகப் பயிற்றப்பட்ட ''லப்றடோர்'' நாயை, கிவிக் கூட்டை மோப்ப சக்தியாற் கண்டுபிடிப்பதற்காகக் கட்டவிழ்த்து விடுகிறார். காட்டு நிலத்திற் குறுக்கும் நெடுக்குமாக நடந்து, சருகுக் கூட்டங்களை மோப்பம் பிடித்துக் கொண்டே போகிறது லிசா. திடீரென்று ஒரு மரக்குற்றிக்குப் பக்கத்தில் நிலை கொண்ட நாய் குறிப்பிட்ட இடத்தில் விறைத்துப்போன மாதிரியாக, வாலை மட்டும் ஆட்டிக் கொண்டு நின்றுவிடுகிறது. ''நல்ல பெண்'' என்று நாயைப் பாராட்டிய றொபேற்சன், இருண்ட உட்புறத்தில் 'ரோச்' வெளிச்சத்தைப் பரவ விடுகிறார். பிரகாசமான இரண்டு சோடி சிவப்புக் கண்கள் வெறித்துப் பார்க்கின்றன. அதுவே எனது முதற் காட்சியாகும்.

றொபேற்சன் தனது கையை மேலங்கியால் மறைத்துக்கொண்டு, இயற்கையில் ஓய்வெடுப்பது போன்ற இந்தப் பறவைகளுக்குக் கடுமையான கோபம் வரும் என்கிறார். மரக்குற்றிக்குள் அவர் கையை விடுகிறார். கிவி பயங்கரமாகத் தாக்கிவிட பிறாண்டிக் கிழிக்கப் பார்க்கிறது. பறவையின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்ட றொபேற்சன், அதனை இழுத்து வெளியே எடுக்கிறார். பட்டப்பகலில் விழி பிதுங்கப் பார்க்கிறார்.

எனது அச்சத்துக்கு மத்தியில், கோபப்படும் கிவியை றொபேற்சன் தருகிறார். பறவை என்னை முறைத்துப் பார்க்கிறது. பயங்கரமான அதன் கண்கள ஒளி வீசுகின்றன. ''பயப்பட வேண்டாம்'' என்று கூறிய றொபேற்சன்,'' அது கொத்த மாட்டாது, அதன் கால்களைப் பற்றியே கவனமாக இருக்க வேண்டும்'' என்கிறார். அது ஏன் என்று எனக்குப் புரிந்தது. அதன் நகங்கள் பெரியவை. றூஸ்ற்ரரிலும் பார்க்க, பல மடங்குகள் பெரிதாக அவை காணப்பட்டன. அதன் நகங்கள் ஓர் அங்குல நீளமும், சவரக் கத்தி போன்று கூராகவும் இருந்தன. பறவையின் உடல் முழுவதையும் மிகவும் மென்மையான மயில் போன்ற இறகு மூடியிருந்தது. இதைக் காட்டிய றொபேற்சன், ''உடம்பைச் சூடாக்கவே இவை. தவிர, கிவிகள் பறப்பதற்கு, சாதாரணப் பறவைகள் போல இறுக்கமான சிறகுகள் தேவையில்லை'' என்று விளக்கினார்.

சிறிது கசப்பாகவே, பறவை மிருதுவான ஊதாமயிருடலை என் விரல்களாற் கோதிவிட்டேன். சிறகுக்குப் பதிலாக, அவை உடலிற் கட்டை கட்டையாக இருந்தன எனது செயலாற் குழம்பிய பறவை, தனது நீண்ட அலகை ஆட்டியது, அச்சத்தினால் நான் கையை இழுத்தேன். ''கவலைப்பட வேண்டாம். ஆயுதமாகப் பாவிக்குமளவுக்கு, அதன் அலகு இறுக்கமானதல்ல'' என்றார் றொபேற்சன் அதன் அலகின் நுனியிலே, மிகச் சிறிய ஊசியால் ஏற்படுத்தப்பட்ட ஒட்டைகள் போன்ற அளவில் நாசித்துவாரங்கள் இருப்பதை, அவர் எனக்குக் காட்டினார். பறவை உலகிற் கண்டு கொள்ள முடியாத புதுமை அது. இருட்டில் எதிரிகளை இனங்காணவும், நிலத்தினடியிற் பூச்சி புழுக்களைக் கண்டு கொள்ளவும், அவை உபயோகிக்கப்படுகின்றன.

சுகாதாரப் பரிசோதனைக்காகப் பறவையை மீண்டும் கொல்போறணிடம் கையளிக்கின்றேன். அதைத் தலைகீழாகப் பிடித்துக் கொண்டே, அதன் கால்களை ஒரு வெளிக்களத் தராசில் மாட்டிக் கொண்டே, இது ஒரு பெண்பறவை என்றார் அவர். ''ஆறு இறாத்தலுக்கு மேல் இருக்கிறது. ஆகவே, நன்றாக உணவு உண்கிறது'' என்றார். கொல்போறண் சாமணத்தை உபயோகித்து, பறவையின் இறகுகளுக்கிடையில் உள்ள பேன்களைப் பிடிக்கிறார். பின்னர், இதிற் பரிசோதனை நடத்துவார்கள். பறவையிலே மாட்டப்பட்டிருந்த ஒலி அனுப்புங் கருவியை அகற்றிவிட்டு, புதிய திராட்சைப் பழ அளவிலான ஒன்றை அதன் காலில் மாட்டி, மிகவும் மெதுவாகத் துவாரத்தின் நுழைவாயிலிற் பறவையை விடுகிறார் கொல்போறண். பறவை துவாரத்துக்குள் ஓட்டம் எடுக்கின்றது. ''இது போலவே எல்லாம் நடந்து கொள்ளுமாயின், ஒக்காற்றிற்ரோ ஊதாக்களுக்கு எதிர் காலமுண்டு'' என்று சொல்கிறார் அவர்.

## இரகசிய வாழ்க்கை:

ஒலியனுப்புங் கருவிகள், குறிப்பிட்ட பறவைகளின் இடங்களைக் கண்டுகொள்ள விஞ்ஞானிகளுக்கு உதவுகின்றன. ஆனால் கிவியின் இரகசிய வாழக்கையை அறிந்து கொள்வதற்கு, றொபேற்சனும், அவருடைய குழுவினரும் மிகவும் வெளிச்சங் குன்றிய நிலையில் ஒளிப்பதிவு செய்யும் வீடியோப் புகைப்படக் கருவிகளையே நம்பியிருக்கிறார்கள். ''இங்கிருந்து ஒரு மைல் தொலைவில், கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் கூடு கட்டி வாழும் குடும்பம் ஒன்று இருக்கின்றது. அதையும் போய்ப் பார்ப்போம்'' என்று றொபேற்சன் அழைத்தார். மீண்டும் ஒரு முறை, பின்னிப் பிணைந்த கொடிகளினூடே, செங்குத்தான மலைச் சரிவில் வீழ்ந்து கிடக்கும் பெருமரங்களைத் தாண்டி நாங்கள் நடக்கின்றோம்.

கடைசியாக, மிகவும் பழைமை வாய்ந்த றட்டா மரத்தின் அடித்தளத்திலே அமைந்துள்ள, கூடு இருக்கின்ற கண்காணிப்புப் பிரதேசத்தை அடைகின்றோம். நுழைவாயிலிருந்து ஏழு அடி தொலைவில், சிறிய அளவிலேயே இயங்கும் தூலம் வைக்கப்பட்டுள்ளது. ''துவாரத்தினுள்ளேயோ, வெளியேயோ, ஏதாவது நகரும் போது தூலம் அசையும். வீடியோப் புகைப்படக்கருவி, அடுத்த ஒரு நிமிடத்திற்குத் தானாக இயங்கிப் பணி செய்யுமென்று றொபேற்சன் விளக்குகிறார்.

அவர் புகைப்படக் கருவிக்குள் புதிய படச்சுருள்களை உட்செலுத்துகிறார். கூடு தொடர்பான வீடியோப்பட நாடாவைப் போட்டுப்பார்ப்பதற்காக, குழுவினரின் தளத்திற்குத் திரும்பி வருகிறோம். அங்கே, பாரிய தோற்றத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைக் கொண்ட ஆண் கிவியொன்று, நாலு நாட்கள் வயதுள்ள குஞ்சு ஒன்றை முன்னுக்குத் தள்ளி விடுவதைக் காண முடிகிறது. குஞ்சு மிகவுஞ் சிறியது. கடமையுணர்வோடு, அடந்த மயிர்களால் மூடப்பட்ட கிவி காட்டுக்குப்பையைக் கிளறி, குஞ்சுக்கு இரை தேட முனைகிறது. தன்குஞ்சை மீண்டும் கூட்டிற்குள்ளே காவிச் சென்று வைத்த அந்தப் பறவை, வெளியே வந்து, துவாரத்தின் வாசலை அடையாளங் காணமுடியாதவாறு சருகு, குப்பைகூளம் ஆகியவற்றால் மூடிவிடுகிறது.

பல நூறு மணித்தியாலங்கள் இவ்வகையான நாடாக்களைப் போட்டுப் பார்க்கும் கொல் போறணும், அவரது கூட்டாளிகளும் ஓர் உண்மையைக் கண்டறிந்துள்ளார்கள். ''தீங்கில்லாதவை'' என்று கருதப்படும் அவுஸ்திரேலிய ''பொசும்கள்'' பல இலட்சக்கணக்கில் நியூசிலாந்தில் அலைவதுண்டு. இவை கிவிகளின் கூடுகளுக்குள் புகுந்து, அவற்றின் முட்டைகளை அழித்து விடுகின்றன. கிவி மீட்புத் திட்டம் வெற்றிபெற வேண்டுமென்றால், இவ்வாறான ஊடுருவற்காரரைக் கட்டுப்படுத்த வேண்டும். இதற்காக, நஞ்சூட்டப்பட்ட உருசி மிகுந்த உணவுப் பொருள்கள் பல இலட்சக்கணக்கில் உலங்கு வானூர்தி மூலம் நியூசிலாந்தின் காடுகளிற் போடப்பட்டுள்ளன. இந்த நஞ்சுணவு, இளங் கிவிகளை இரையாக உண்டு அழித்து வரும் காட்டுப் பூனைகளையும், ஸ்ரோற் எனப்படும் மிருகங்களையும் அழிக்க உதவும். இதற்கிடையில், இவ்வகையான எதிரிகள் இல்லாதொழிக்கப்பட்ட தீவுகளுக்குக் கிவிக் குடியேற்றங்களை நகர்த்த, றொபேற்சன் ஆயத்தமாகிறார்.

கிவி பறவையினத்தை அழிந்துவிடாமற் காப்பாற்றுவதற்கான இறுதிக் காப்புறுதித் திட்டமாக, அவைகளைப்பிடித்து அடைத்துப் பெருக வைக்கும் முறையை, நியூசிலாந்திலும் வேறு இடங்களிலுமுள்ள சரணாலயங்கள் கடைப்பிடித்து வருகின்றன. ''கிவியின் நாலுவகையினதும் பரம்பரையலகுகளைப் பேணிக் காப்பதற்கு, இதுவே நிச்சயமான வழி'' என்று கூறுகிறார், வெலிங்டன் சரணாலயத்திற் கிவிக் கண்காணிப்பாளரான றொன் கவுட்ஸ்வாட்.

சமீப காலம்வரை, அவர் சர்வதேசக் கிவி கண்காணிப்பாளராகப் பணியாற்றியிருக்கிறார். அவரது பணி, அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் போன்ற பரந்துபட்ட இடங்களிலுள்ள சரணாலயங்களில் வளர்க்கப்படும் 100 வரையிலான கிவிகளைப் போய்ப் பார்த்து ஆலோசனை வழங்குவதாகும்.

அமெரிக்காவின் சன்ட்யோகோ சரணாலயத்தில், ஆண்டுக்கு இரண்டு குஞ்சுகள் வீதம் பிறந்துள்ளன. சிங்கப்பூரிலும், ஜெர்மனியிலுமுள்ள சரணாலயங்களில் இந்தப் பறவைகள் மிகவுங் கவனமாக வளர்க்கப்படுகின்றன. நியூசிலாந்தில், கடந்த ஐந்து ஆண்டு காலத்துள் 53 குஞ்சுகள் அடைகாக்கப்பட்டுப் பொரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்றிலொரு பங்குக்கு அதிகமானவை வெலிங்டன் சரணாயைத்திற் பொரிக்கப்பட்டவையாகும். அங்கே, ஓர் இருள்வீட்டிற்கு கவுட்ஸ்வாட் பொறுப்பாகவுள்ளார். 500 சதுர அடியில் செயற்கைக் காடு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அந்தக் காடு அமைந்துள்ள வீட்டுக்குள் வெளிச்சம் புக முடியாது. அங்கே. பகல் இரவாக்கப்படுகிறது, மூன்றடி ஆழமான மண், புற்களால் அங்கிங்கென்று மாற்றப்பட்டுள்ளது. காலை 10 மணி அளவில், மின்விளக்குகளின் ஒளி குறைக்கப்படுகின்றது. சூரிய அஸ்தமனத்தை இது காட்டும். மாலை 6 மணியளவில், மீண்டும் மின்விளக்குகள் சிறிதாக ஒளி வீசுகின்றன. சூரிய உதயம் கண்சிமிட்டுவதைப் போல அது இருக்கும்.

இந்தத் தந்திரம், அதிசயிக்கத்தக்க வகையிற் பயனளிக்கிறது. பாடசாலைப் பிள்ளைகளின் குழுவொன்றோடு நானும் சேர்ந்து, ஒரு பக்கம் மட்டும் பார்க்கக் கூடிய கண்ணாடி வழியாகப் பார்க்கிறோம். ஒரு கிவி இரை தேடுகிறது. நாங்கள் கவனித்துக் கொண்டிருக்கும்போது, அந்தப் பறவை தன் இரையை மேலே உயர்த்துகிறது. கூடவே, காதைத் துளைக்கும் விதத்தில் ட்ர்ர்ர் . . . என்று ஓசை எழுப்புகிறது. சவாலுக்கு யாருமே இல்லையென்று உறுதிசெய்துகொண்டவுடன், உண்ணத் தொடங்குகிறது. பார்த்துக்கொண்டு நின்ற பிள்ளைகளுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

கிவியின் நடவடிக்கைகளைக் கண்டு அறிந்து கொள்வதற்கு, இந்த வகையிலான இருள் வீடுகள் விஞ்ஞானிகளுக்கு உதவுகின்றன. சாதாரண நியூசிலாந்துக் குடிமக்களும் இவற்றை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. ''தேசியப் பறவையான கிவியைக் காப்பாற்றுவதற்கான எமது போராட்டத்தில், நாடு முழுவதும் பங்கு கொள்ள இது அவசியம்'' என்கிறார் கவுட்ஸ்வாட்.

விஞ்ஞானிகள் எந்தவகையான தீர்வுகளைக் கொண்டுவந்த போதும், வாழவேண்டுமென்ற இந்தப் பறவையின் திடசங்கற்பமே, பெரிய மூலதனமாகும். கல்பிற்றி போன்ற தீவுகளில் எஞ்சியிருந்த 1,000 வரையிலான கிவிகளைவிட, ஏனையவை அழிந்து விட்டன வென்றே, ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நியூசிலாந்து மக்கள் நம்பினர். பின்னர், 1991 இல் தெற்குத் தீவின் காட்டில் கொல் போறண் ஒரு கிவியைக் கண்டு பிடித்தார். வன விலங்குப் பாதுகாப்பு அதிகாரிகளான ஜோன் வியோலும், ஜோன் றீட்டும் பின்னர், ஒலியனுப்புங் கருவியை அதில் மாட்டிவிட்டார்கள்.

வேறு கிவி நிபுணர்களுடனும், உள்ளூர் மாஓறி மக்களுடனும் கலந்துரையாடிய பின்பு, 1992 இல் றொபேற்சன் உள்ளூர் எதிரிகளின் மத்தியில் அந்தப் பறவையை விட்டு வைப்பது ஆபத்தெனஉணர்ந்தார். இன்று, அந்தக் கிவி மானாத் தீவில் வாழ்கிறது. சிறு புள்ளிகளுள்ள ஒரு புதிய பரம்பரையலகை அது உருவாக்குமென்று நம்பலாம். ''இந்தப்புள்ளி விழுந்த பறவையினம், மீண்டும் நியூசிலாந்து பிரதான பூமியிற் பல்கிப் பெருகி வாழ்வதைக் கண்டுகளிக்க வேண்டும் என்பதே, என் வேணவா'' என்று கூறுகிறார் றொபேற்சன். சகல நியூசிலாந்து மக்களும் பகிர்ந்துகொள்ளும் கனவு இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலை அகற்றப்பட்டதால், ஆதிவாசிகள் மனதில் தடுமாற்றம்.

மனித வாழ்வு, பெரும்பாலும் நம்பிக்கைகளில் வேரூன்றி இருக்கின்றது. புராதனக் காலத்திற்கும், சமகால விஞ்ஞான யுகத்திற்கும் இது பொருந்தும். கோளவடிவான பூமியைத் தாயென்றும், பிறந்த மண்ணைத் தாய் நாடென்றும் கூறும் வழக்கம், இவ்வுலகோர் அனைவரிடமும் காணப் படுகின்றது. ஆகவே, 'தாய் நாடு' என்ற சொற்றொடர் பலதரப்பட்ட உணர்ச்சிகளைக் கிளறும் தன்மையுடையது. மலைகள் அங்கு வாழும் மக்களது ஊட்டச்சத்துக்களின் இருப்பிடமென்ற கூற்று மிகவும் உயர்ந்த கருத்துச் செறிவு உடையதாகும்.

இந்தோனேசியாவுக்குச் சொந்தமான இறியன் ஜெயா (IRIAN JAYA) தீவில் வசிக்கும் 20,000 மக்கள் கொண்ட டமால் (DAMAL) இனத்தவர்களின் உட்பிரிவு, 8,000 தொகையினர் கொண்ட 'அமுங்' (AMUNG), அல்லது 'அமுங்கே' (AMUNGE) இனத்தவர்களாகும். இத்தீவின், நடுப்பகுதியில் உள்ள மலைத் தொடரை அண்டிய பிரதேசத்தில் இவர்கள் வாழ்கிறார்கள். இந்த மலைகள், இவர்கள் வாழ்வில் பெரும் பங்கு வகிக்கின்றன. மேலே, அடைப்புக் குறிகளுக்குள் கூறப்பட்ட வாசகங்கள் இதற்கு எடுத்துக் காட்டாகும். இத்தீவில் உள்ள ஒவ்வொரு மலைக்கும் தாங்கள் தனிப் பெயர் வைத்திருப்பதாகவும், தமது உயிருக்கு ஆதாரம் இந்த மலைகளே என்றும், ஓர் அமுங்கே ஆதிவாசி கூறுகின்றார். மலைகளுக்குப் பெயர் வைக்கும் வழக்கம், ஒன்றும் புதிதல்ல. இனம், இடம், காலம் என்ற பேதமின்றி, இவ்வழக்கு இப்புவியிலிருந்து வருகின்றது.

மேற்கு நாட்டவர்கள் கிழக்கே நோக்கி வந்து பல நூற்றாண்டுகளாகியும், அமுங்கே மக்களின் வாழ்க்கை ஒரு பாதிப்புமின்றி, ஒரே சீராகச் சென்றுள்ளது. வெளி உலகில் என்ன மாற்றங்கள் நடைபெறுகின்றன என்று அறியாமல்,



இறியன் ஜெயாவின்-ஆதிவாசிகள், சுரங்கத் தொழில் நடக்கும் இடத்திற்கு அண்மையிற் காணப்படுகின்றனர்.

**பூமி எங்கள் தாய்**
**மலைகள் அவளின்**
**மார்பகங்கள்.**
**எங்களுக்குத்**
**தேவைப்படும்**
**ஊட்டச்சத்து**
**மலைகளிலிருந்தே**
**கிடைக்கின்றது.**

— பழங்குடியினரின்
எண்ணங்கள்

இவர்கள் தங்கள் பாரம்பரிய முறைப்படி வாழ்ந்துகொண்டிருந்தனர். ஆனால், இந்த நிலை 1950 ஆம் ஆண்டுடன் முடிவடைந்துள்ளது. இவ்வருடம் ஃபோ(ர்)ப்ஸ் வில்சன் (FORBES WILSON) என்ற அமெரிக்கப் புவியியல் வல்லுநர், இவ்வளவு காலமும் காப்பகங்களில் மறைந்திருந்த டச்சுக்காரர்களின் படங்களையும், குறிப்புக்களையும் ஆதாரங் காட்டி, இறியன் ஜெயா மலைகளில் அதிகளவு செம்பு (தாமிரம்) இருப்பதாகத் தெரிவித்தார். அமெரிக்கத் தொழிற்சாலைகளுக்கு இந்த உலோகம் அதிக அளவிலே தேவை. உடனே நேரடியாக இடத்தைப் பார்வையிட, அமெரிக்காவிலிருந்து இறியன் ஜெயாவுக்கு வில்சன் வந்துள்ளார். டச்சுக்காரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோனேசியாவை ஆண்ட காலத்தில் அவர் இப் பிரதேசத்தை ஆராய்ந்து, செம்பு இருப்பதாக முதன் முறையாகத் தெரிவித்துள்ளார். ஆனால், டச்சுக்காரர் ஒரு நடவடிக்கையையும் எடுக்காதபடியால், செம்பு தேடுவாரற்றுக் கிடந்திருக்கின்றது. வில்சனின் அபிப்பிராயப்படி, இந்த இடம் '' மிகவும் பின்தங்கிய, அணுக முடியாத தூரத்தில், நோய்கள் நிறைந்ததாக '' க் காணப்பட்டுள்ளது. அதாவது, அங்கு வாழ்ந்தோரின் வாழ்க்கை பழைய முறைப்படி, மாற்றமின்றி இருந்திருக்கின்றது என்று நாம் அநுமானிக்கலாம்.

வில்சன் இப் பிரதேசத்தைப் பார்வையிட்ட 35 வருடங்களுக்குள், மத்திய இரியன் ஜெயாவிலுள்ள மலைகளிலொன்று முற்றாக வெட்டிப் பெயர்க்கப்பட்டு, அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. டச்சுக்காரர் தங்கள் படங்களில் '' ஏற்ஸ்பேக் '' ( ARTSBERG ) எனப் பெயரிட்ட 4,000 மீற்றர் உயரமுள்ள, முழுவதும் செம்பிலான மலையே இது. அமெரிக்காவின் மிகப்பெரிய உலோகத் தொழில் நிறுவனம் ( F ) பிறீபோட் மெக்மோறன் '' ( FREE PORT MC MORAN ) இந்தோனேசிய அரசுடன் ஒப்பந்தம் செய்து, மேற்படி மலையை வெட்டி அகற்றியுள்ளது. அத்துடன், அடுத்த மலையான கிராஸ்பேக் ( GRASBERG ) மீதும், மேற்படி ஒப்பந்தத்தின்கீழ் வெட்டு வேலையை அவர்கள் தொடங்கி விட்டார்கள்.

இந்த இடத்திற்கு அமெரிக்கர்களின் வருகை, அமுங்கே மக்களின் வாழ்க்கையை மாற்றி அமைத்துள்ளது. வெளியுலகத் தொடர்பின்றித் தனிமையில் வாழ்ந்தவர்கள், திடீர் என இருபதாம் நூற்றாண்டு வாழ்க்கை முறைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். வாகனப் போக்குவரத்துக்கு வசதியாக, அமெரிக்கர்கள் சாலைகளை அமைத்துள்ளனர். அத்துடன், தமது தொழிலாளர் தங்கும் இடங்களையும் அமைத்துள்ளனர். கற்கால நாகரிகத்தில் நின்ற அமுங்கே இனத்தவர்களுக்கு, இவை யாவும் ' பிரளயம் ' போன்ற திருப்பங்களாகும். பின்தங்கிய இனத்தவர்களின் வாழ்வில் திடீர் மாற்றங்கள் பற்றி ஆய்வுகள் செய்யும் மேற்கு நாட்டுக்குரியவர் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:- '' தனது வாழ்வைப்பற்றிய தீர்மானங்களை, அவர்களே எடுக்க வேண்டும். '' இது பிழையான நிலைப்பாடு. பழங்குடியினர், தீர்மானம் எடுக்கும் நிலையில் இல்லை. மாற்றங்கள், பெரும் வேகத்தில் அவர்களைத் தள்ளிக்கொண்டு போகின்றன.

இத்தீவின் வேறு பகுதிகளில் வாழும் சனத்தொகை கூடிய எக்காறி ( EKARI ), டானி ( DANI ), அஸ்மற் ( ASMAT ) போன்றவர்களின் வாழ்வும் பெரும் மாற்றம் அடைந்துள்ளது. ஜோன் கட்ஸ் ( JOHN CUTTS ) என்ற கிறிஸ்தவ மதப் பிரசாரகர் சொல்கிறார்:- '' முன்பு மேற்கூறியவர் கற்கால வாழ்வு நடத்துகிறார்கள் என்று சொல்லலாம். இப்போது, 1994 -க்கு வராவிட்டாலும், மாறிவிட்டார்கள் என்று சொல்லலாம். '' மிகவும் நன்மையான சில மாற்றங்களையும் அவர் குறிப்பிடுகின்றார்.: நரமாமிசம் புசித்தல் நின்றுவிட்டது. பன்னெடுங்காலமாக இனங்களுக்கிடையில் நடந்த போர், முடிவுக்கு வந்துள்ளது. ஒரு குழுவின் தலைவன் இறந்தபின் அவனுக்கு மிகவும் பிரியமான மனைவியைக் கொல்லும் வழக்கமும் நின்றுள்ளது. இரட்டைப் பிள்ளைகளில், இரண்டாவதாகப் பிறப்பது பிசாசின் அவதாரம் என்ற நம்பிக்கையில், அதை உயிருடன் புதைக்கும் செயலுக்கும் முடிவு கட்டப்பட்டுள்ளது. இப்படியாக, அவர் அடுக்கிக்கொண்டே போகின்றார். இன்னும், கேளிக்கைகளிலும், கொண்டாட்டங்களிலும் மனைவிமாரை மாற்றிக்கொள்ளும் வெறுப்பான நடைமுறையை மாத்திரம் மாற்ற முடியவில்லையென்று, ஜோன் கட்ஸ் கவலைப்படுகின்றார்.

மிக இளவயதுப் பெண்களை விலைபேசி விற்கும் பாரம்பரிய வழக்கம், இன்னும் மாறாமல் இருக்கின்றது. 12 வயதிலேயே விற்கப்பட்ட பெண்கள், இப்போது சற்றுக் கூடிய வயதிலேயே விற்கப்படுகின்றனர். இதுதான், இப்போதைய சமுகமாற்றம். விலையாகக் கொடுக்கப்படும் பொருள்களிலும், இன்னும் மாற்றம் ஏற்படவில்லை ( ஒரு கூட்டம் பன்றிகளும், இத் தீவின் பணமான சிப்பிகளும் ) அரசும், இத் தீவுக்கு வரும் வியாபாரிகளும், அவர்கள்மீது பெரும் அழுத்தம் பிரயோகிக்கிறார்கள். இந்த அதிர்ச்சிகளிலிருந்து, கிறிஸ்தவ மதகுருமார்கள் அவர்களைக் காப்பதாக ஜோன் கட்ஸ் கூறுகின்றார். சமுகக் குறைபாடுகளை நீக்குவதற்கு மத மாற்றம் உதவுமா? என்ற பொதுக் கேள்வி இவ்விடத்தில் எழுகின்றது. ஆம்; அல்லது இல்லை என்று, இருவிதமான பதில்களும், அதற்குரிய ஆதாரங்களும், மேற்கோள்களும் நீட்டப்படுகின்றன. ஆனால், அறுதியிட்டுக் கூறமுடியாத பிரச்சனை என்பதில் ஐயமில்லை. பல விதமான மோசடிகளுக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என்று கெட்ஸ் தெரிவிக்கின்றார். இதைத் தாக்குப்பிடிக்க, அவர்களுக்குப் போதிய பயிற்சி இல்லையென்பது அவருடைய அபிப்பிராயம். அவர்களுக்குப் படிப்பு வசதிகள் இல்லை. பெரும்பாலானோர், தங்கள் 50 வயதை எட்ட முன்பாகவே போஷாக்கின்மையாலும், வசிப்பிடத்திற் சுகாதாரமின்மையாலும் இறக்கின்றனர். அவர்களை அப்படியே விட்டாலென்ன? ஏன் மாற்றப் பார்க்கிறீர்கள்? என்று என்னிடம் கேட்கப்பட்டுள்ளது. ''தங்கள் வாழ்வின் பல அம்சங்களை, அவர்களே மனமார வெறுக்கிறார்கள் என்பது தான் எனது பதில் '' -ஜோன் கட்ஸ்.

செம்புக்காக நடக்கும் வெட்டு வேலைகளாலும் அகழ்வுகளாலும், மலைச் சாரல்களில் வாழ்ந்த பல அமுங்கே இனத்தவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கோ, வேறு உதவிகள் செய்வதற்கோ, முயற்சிகள் ஒன்றும் எடுக்கப்படவில்லை. '' செம்பை வெட்டுபவர்களும், அரசப் பிரதிநிதியும் இந்த நிலம் அரசுக்குச் சொந்தம் என்கிறார்கள். இது உண்மையல்ல. பரம்பரையாக நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வாழ்கிறோம். அதுதான் முக்கியம்.'' தொடக்கத்திற் பலாத்கார நடவடிக்கைகளை எடுத்த அமுங்கே இனத்தவர்கள், இப்போது அடங்கிப்போய் உள்ளனர். பெரும் மழையும், வெள்ளமும் அவர்களுடைய கோபத்தை அடக்கிவிட்டன. இப்போது, தொழில் நடக்கும் இடத்தில் அண்டிப்பிழைக்கக் கற்றுக் கொண்டுள்ளார்கள். அமெரிக்கர்களைவிட, 800 தொழிலாளர்கள் இங்கு வேலை செய்கிறார்கள். இதில் 300 அமுங்கேயினரும் காணப்படுகின்றனர். இவர்களுக்கு மிகக் குறைந்த ஊதியம் கொடுக்கப்படுகின்றது. அவர்களுக்குக் கல்வியறிவு இல்லாததே அதற்கான காரணம். இங்கு வேலை செய்ய அமுங்கேயினர் பெரிதும் விரும்புகின்றனர். தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் சீருடை சமுதாய ஏற்றத்தைக் காட்டும் சின்னமாக மதிக்கப்படுவதே, இப்போதைய காரணம்.

செம்பை விலைகொடுத்து வாங்கும் நிறுவனம் தனது பொறுப்பையுணர்ந்து, ஆதி வாசிகளுக்கு உதவச் சில திட்டங்களை வகுத்துள்ளது. கடற்கரையிலிருந்து 35 கிலோ மீற்றர் உள்ளிட்ட பகுதியில், டிமிக்கா என்ற குடியிருப்பு நிறுவப்பட்டுள்ளது. இங்கு 25,000 மக்கள் வாழ்கின்றனர். அமுங்கேயினர் பெருந்தொகையில் இங்கு காணப்படுகின்றனர். இங்கு மலேரியா நோய் பெரும் பிரச்சனையாக இருக்கின்றது. அமுங்கேயினர் சிலர் இந்த நோயினால் இறந்திருந்தாலும், தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை நினைத்து, அவர்கள் பழைய வாழ்வுக்குத் திரும்பாதிருக்கின்றனர். மெல்கி தக்கிமாயி என்ற அமுங்கே இனத்தவர் சுயமாக, கேள்வியறிவால் ஆங்கில ஞானம் பெற்றுள்ளார். இவர், தனது இனத்தவர்களுக்கும், அமெரிக்கர்களுக்குமிடையே இடைத் தொடர்பாக விளங்குகின்றார். இவருடைய அபிப்பிராயத்தில், பழைய வாழ்வுக்குத் திரும்புவது இயலாத காரியம். மாறிக்கொண்டு போகும் உலகுடன் ஒத்துப்போவது மிக அவசியமென்பது அவரின் அபிப்பிராயம். "எங்களுக்கு, இப்போது பள்ளிக்கூடமும், வைத்திய சாலையும் பிரதான தேவைகளாகும்'' என்கிறார், மெல்கி தக்கிமாயி.

''(F) பார் ஈஸ்ரேன் எக்கொனோமிக் றிவியூ'', மார்ச் 24, 1994

---

# லூசியின் பேரன்

எழுதியவர்:
மைக்கல் டீ: லெமொனிக்

**உயிர்ச்சுவட்டு மண்டை ஓடு ஒன்று குறித்த காலத்திற்கு முன் தெரிய வந்த மனிதனின் மூதாதையர் நீண்ட காலம் வாழ்ந்த ஒரே இனங்களைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.**

சிறிய உருவம், மனிதக் குரங்கின் சாயல், மானிடப் பரிணாமத்தின் அதியுயர் நட்சத்திரம், ''சுப்பர் ஸ்டார்'' அதுதான் லூசி என்பது, எல்லோரும் அறிந்த விடயம். 1974 இல் அவளுடைய உயிர்ச்சுவடாக்கப்பட்டு விட்ட பகுதி வன்கூடு கண்டெடுக்கப்பட்டபோது மனித இனத்தின் மூதாதையர்கள் 30 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னரே யாரும் கற்பனை செய்து பார்ப்பதற்கும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய காலத்திலேயே இந்தப் புவியில் நடந்திருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுகள் கிடைத்தன. இது கண்டெடுக்கப்பட்ட பின்னர் தொல்லுயிர் வல்லுநர்கள் அவர்களுடையது போன்ற பல எலும்புகளை வெளிக்கொணர்ந்துள்ளனர். அவற்றுட் பல லூசியினுடையதிலும் பார்க்கத் தொன்மை வாய்ந்தவை. இவைகளெல்லாம் அவளைக் கண்டெடுத்த எத்தியோப்பியாவின் ஒரு பகுதியிலேயே கிடைத்துள்ளன. இந்த உயிர்ச்சுவடுகளெல்லாம் விஞ்ஞானத்தில் ஒஸ்றலோப் பெத்தேக்முஸ் அபாறெற்சில் என்ற பெயர் கொண்ட ஒரே இனத்தைச் சேர்ந்தவையென்றே பலரும் நம்புகிறார்கள். இந்த இனந்தான் பிந்திய ஹோமின்ட்ஸுகளுக்கெல்லாம்- ஹோமோ சேப்பியன்ஸ் உட்பட முன்னோடியாயிருக்க வேண்டும்.

தொல்லுயிரியலாளர்களுட் சிலர் எப்போதுமே வேறு ஒருவித கோட்பாட்டையும் முன்வைத்துள்ளனர். அவர்களின் கருத்துப்படி ஒ.அபறெஞ்சிஸ் தனி ஓர் இனமல்லவென்றும் தளர்ந்த பல இனங்களின் குழுவே அதுவென்பதாகும். அது உண்மையானால் இவற்றிலும் தொன்மையான இனங்கள் பல இன்னமும் கண்டு பிடிக்கப்படாமல் இவையெல்லாவற்றுக்கும் மூதாதையர்களாக இருந்திருக்க வேண்டும். உயிர்ச்சுவட்டு வேட்டையில் ஈடுபடுவோர் ஒருபோதும் முழுமையான ஒ. அபறென்சிஸ் மண்டையோடு எதையும் கண்டெடுத்ததில்லை என்பதால் இந்த விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவது கடினம். மண்டை ஓடுகளே தொல்லுயிரியலின் சதபத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரவுருக் கற்கள் (Rosetta Stones) என்பதால் அவையே தனித்துவமான உருவமைப்புக் கொண்டு இரண்டு உயிர்ச் சுவட்டு மாதிரிகள் ஒரேவிதமான ஜெந்துக்களிலிருந்து வந்தனவா என்பதை விஞ்ஞானிகள் அறிந்து கொள்ள உதவுவன எனலாம்.

இப்போது அவர்களிடம் சாட்சியங்களிருக்கின்றன. கலிபோர்னியாவின் பேக்லியிலுள்ள மனித ஆரம்ப நிறுவனத் (IHO) தின் ஆய்வாளர்கள் இஸ்ரேலின் ரெல் அவீவ் பல்கலைக்கழக விஞ்ஞானிகளோடிணைந்து ஓர் ஆண் ஒ. அபறென்சிசின் மண்டை ஓட்டைக் கண்டுபிடித்து விட்டதாக ''நேச்சர்'' -இயற்கை என்ற சஞ்சிகையில் கட்டுரை ரூபமாக வெளியிட்டுள்ளனர். லூசிக்கு 200, 000 ஆண்டுகளுக்குப் பின் இவர் வாழ்ந்திருக்கக்கூடும் என்றும், இவரை லூசியின் பேரன் என அழைக்கலாம் என்றும் அறிவித்துள்ளனர். இந்த மண்டையோட்டோடு கூடவே வேறும் ஆண்களின் கை எலும்புகளும் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. புதிய உயிர்ச்சுவடுகள் ஒ. அபறென்சிஸ் ஒரே இனந்தான் என்பதையும், எப்போதையும் விட இப்போது அது மனிதக் குடும்ப மரத்தின் ஆணி வேரில் வைக்கப்படுகின்றது என்பதையும் தெளிவாக்குகின்றன. மிகப் பழைய ஒ. அபறென்சிஸ் எலும்புகளை விடப் புதியவை. 10 இலட்சம் ஆண்டுகள் இளையவை என்பதால் லூசியும், அவருடைய உறவினர்களும் அசாதாரணமான நீண்ட காலம் வாழ்ந்த இனங்கள் என்று விவாதிக்கப்படுகிறது. ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொன்மையான மனித எலும்புகள் பற்றிய நிபுணரான அலன் வோக்கர், ''இதைப்பற்றி ஒவ்வொருவரும் உணர்ச்சிவசப் பட்டிருக்கிறார்கள்'' என்றுசொல்கிறார்.

மாதிரிகளின் பல்வேறு அளவுகளைக் கொண்டே ஒ. அபறென்சிஸ் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற கோட்பாடு உருவானது. உதாரணமாக லூசிஒருமீற்



றர் உயரமும், 27 லிருந்து 30கிலோ நிறையும் கொண்டவளாக இருந்திருக்க வேண்டும். அதே வேளை சில ஆண்கள் 1.5மீற்றர் உயரமும்50 கிலோ எடையும் கொண்டிருந்திருப்பர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. உயர்ந்த வகை மனிதக் குரங்குகளிடையே பால் வேறுபாட்டுக்கமைய அளவில் வித்தியாசமும் காணப்படுவது சாதாரணமானது. ஆனால் ஹோமின்களிடையே இத்தகைய பாரிய இடைவெளிகள் இருப்பதில்லை, புகழ்பெற்ற விளையாட்டு வீராங்கனையான ஷக்குவில் ஒனீலுக்கும் மிகச் சிறிய உருவ அமைப்புக் கொண்ட பாலியற் சிகிச்சை நிபுணரான டொக்டர் றுத் வெஸ்ரெயிமெருக்கும் இடையில் அளவு வேறுபாடு மிகவும் அதிகமாக இருப்பினும் சராசரி நவீன ஆண் பெண்களுக்கிடையில் 13 சென்ரிமீற்றர் வித்தியாசமே காணப்படுகிறது.

இதுவரை கண்டெடுக்கப் பட்டுள்ள மிகக் குறைந்த எண்ணிக்கையிலான அபறென்சிஸ்களின் கை, கால் எலும்புகளை நோக்கும்போது அமைப்பு வேறுபாடுகள் வெவ்வேறு தேவைகளுக்கமைய இருந்திருப்பதைக் காண முடிகிறது. சிறிய பெண்கள் மரங்களில் தாவுவதில் ஆண்களைவிடத் திறமையுள்ளவர்களாக இருந்திருக்கின்றனர். ஆண்கள் நடப்பதில் திறமை படைத்திருந்திருக்கிறார்கள். ஒரே இனத்தின் உறுப்பினருக்கிடையிலான கட்டமைப்பில் இவ்வளவு வேறுபாட்டைக் கற்பனை செய்வது கடினமானதாகும்.

மறுபக்கத்திலும் ஆதாரபூர்வமான விவாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. நவீன மனிதர்களிடையே அளவில் அதிக வேறுபாடுகள் இல்லாதிருப்பினும் முந்திய ஹோமின்ற்களிடையே அது இருந்திருக்கிறது. இதனோடு இரண்டு இனங்கள் என்ற கோட்பாட்டை ஏற்பதாயின், நாங்கள் காணக் கிடைத்தது ஓர் இனத்திலிருந்து பெண்களையும், மற்றோர் இனத்திலிருந்து ஆண்களையும் மட்டுமேயாக இருக்க வேண்டும் என்று விவாதிக்கிறார், '' நேச்சர் '' சஞ்சிகை அறிக்கையின் பிரதம ஆக்கியோனான, மனித ஆரம்ப நிறுவனத்தைச் சேர்ந்த வில்லியம் கிம்பெல். இது நினைத்துப் பார்க்க முடியாத ஒரு கால நிகழ்வாகும் என்கிறார் அவர்.

கடந்த 20 ஆண்டுகாலப்பகுதியில் விஞ்ஞானிகள் தோண்டி எடுத்துள்ள சில நூற்றுக்கணக்கான அபறென்சிஸ் எலும்புத் துண்டுகள் மிகச் சிறிய எண்ணிக்கை என்பதாலும், மிகவும் சிறிய துண்டுகள் என்பதாலும் எந்தக் கோட்பாட்டின் சார்பிலும் வெகு தொலைவுக்குப் போக முடியாமலுள்ளது. அதனாலேயே லூசியின் பேரன் இவ்விடயத்தில் ஒரு வெற்றிச்சாதனை என்று கூறுகிறார். வோக்கர்: '' தனிப்பட்ட அபறென்சிஸ்களின் மண்டையோட்டுப் பாகங்களே இதுவரை எமக்குக் கிடைத்து வந்தன. ஒரு முழுமையான மண்டையோடு எப்படியிருக்கும் என்று இப்போது எமக்குத் தெரியும். சரியான விகித பாகங்களும் எம்மிடமுள்ளன '' என்கிறார்.

விகிதபாகங்களும் பேரனுடையதும், மற்றையவர்களுடையதுமான மண்டையோட்டுத் துண்டுகளின் ஒப்பீடுகளும், அவை பெரியதும் சிறியதுமாக இருக்கின்றபோதும் அபறென்சிஸ் என்பது ஒரே இனந்தான் என்று கிம்பெலையும், அவருடைய சகாக்களையும் எப்போதும் போலவே நம்பச் செய்துள்ளது. இந்த எண்ணத்தைக் கை எலும்புகள் வலுப்படுத்துகின்றன. லண்டன் பல்கலைக் கழகக் கல்லூரியைச் சேர்ந்த தொல்லுயிரியல் நிபுணரான லெஸ்லி அயெல்யோவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மரம் ஏறுபவரின் ஆரோக்கியமான வண்ணவமைப்பு இவர்களில் காணப்படுவதாகக் கூறுகிறார். இருபாலாரிடமும் வெவ்வேறு திறமைகள் தென்படாதபோதும் இருசாராரும், '' சித்திர வடிவில் இடுப்புக்குக்கீழே இருகாலும், இடுப்புக்கு மேலே மரத்தில் வாழுகின்ற '' அமைப்பையும் கொண்டிருக்கின்றனர் என்கிறார் அவர்.

கழுத்துக்கு மேலே முன்னைய எலும்புத்துண்டுகளால் கட்டப்பட்ட அமைப்பை மண்டையோடு உறுதிப்படுத்துகிறது. ஒரு ஒ. அபறென்சிசுக்கு மனிதக் குரங்கு போன்ற முகமும், முன்னால் தள்ளிக் கொண்டிருக்கும் தாடையும், மேலால் விழுர் கண் புருவமும் காணப்படுகிறது. மூளை மனிதக் குரங்கைவிடப் பெரிதல்ல. 9,000 நூற்றாண்டுகளுக்குத் தாக்குப் பிடித்து வாழும் அளவிற்கு லூசியும், அவளது உறவினரும் கால மாற்றத்திற்கும், சூழலுக்கும் ஈடுகொடுக்கக் கூடிய இறுக்கமுடையோராய் இருந்திருக்கின்றனர். காலத்தாற்கூடிய ஹோமின்ற் உயிர்ச் சுவடுகள் வேறு கண்டுபிடிக்கப்படாவிட்டால்-அது சாத்தியமற்றதல்ல. லூசியும் அவளின் இனத்தவருமே மனிதனை மற்றும் மிருகங்களிலிருந்து வேறுபடுத்தும் பரிணாமப்படிகள் என்ற பெருமையைத் தக்கவைத்துக் கொள்வார்கள்.

நியூயோர்க்கிலிருந்து அரிஸ் பாத்.

---

# நேசப்பூக்கள்

விஞ்ஞான விந்தைதனை-
விண்வெளியின் ஆய்வுதனை-
மண்ணின் அகழ்வுதனை-
கடலடியின் ஆராய்ச்சிதனைக் காத்திரமாய், கட்டுரையாய் வெளியிட்டுத் தமிழீழத்தின் தன்னிகரில்லாச் சஞ்சிகையாக மிளிரும் உலக உலாவின் வெளியீட்டாளர்கள் பாராட்டுக்குரியவர்களே! சாதனையின் அதர்சபுருஷர்களான இவர்களுக்கு அறிவியலுக்கான நோபல் வேண்டாம்——

தமிழீழத்தின் அதிஉயர் '' மாமனிதர் '' விருதுதனை வழங்கலாமே? அரிஷ்டாட்டலும் - அண்ணாவும் – அலெக்சாண்டர் பிளேமிங்கும் அவனியிலே ஒரு தரந் தான் தோன்றினார்கள் ஆனால் . . . உலக உலாவோ திங்கள் தோறுந் தோன்றி அறிவுச்சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றதே! தமிழீழத்தில் இப்படியொரு சஞ்சிகையா? எப்படி இப்படித் தரமாய் வெளியிட்டுச் சாதனை படைக்க உங்களால் முடிகிறது? உலக உலாவின் வளர்ச்சி - தமிழர் தம் அறிவின் வளர்ச்சி பெருக! வாழ்க உலக உலா! வளர்க அவர் தம் பணி!

அன்பின்
ஜீ. ஐரின் சுபத்திரா

வண்ணார் பண்ணை
யாழ்ப்பாணம்.

★ ★

கிக்கெட்டும் நிகழும் பரபரப்பான செய்திகளையும், காலத்தால் அழியாத அறிவியல் ஆய்வுகளையும், விஞ்ஞான விந்தைகளையும், மருத்துவ ஆலோசனைகளை அளிக்க வல்ல கட்டுரைகளையுந் தாங்கி வரும் '' உலக உலா '' தமிழீழத்திலிருந்து தான் வெளிவருகிறது என்பதைக் கேள்வியுற்றதும் உண்மையிலேயே நான் பிரமித்துப் போனேன். அவ்வளவிற்கு அதன் தரம் இந்த யுத்த சூழ்நிலையிலுங் கூட மெருகு குறையாமல் வெளிவருகிறதே! அதனால் தான் நான் ஆச்சரியப்பட்டேன்.

ஏப்ரல் மாத இதழில் நீங்கள் அட்டைப்படச் செய்தியாகப் போட்டிருந்த மனிதனின் ஆரம்பம் என்னும் கட்டுரை ஒவ்வொரு மனிதனும் வாசித்தறிய வேண்டியதொன்று. மனிதன் தன்னுடைய ஆரம்பம் பற்றி அறியாதிருத்தல் கூடாது.

ஒவ்வொரு தமிழனும் அறிவின் உலகத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு உலக உலா ஓர் ஊடகமாக இருப்பதையிட்டுத் தமிழராகிய நாம் பெருமை கொள்கிறோம்.

உலகின் விஞ்ஞான நகர்வுக்கேற்ப நாமும் நகர ஏதுவாக இருக்கும் உலக உலாவை நான் மனமார வாழ்த்துகிறேன். பல்லாண்டு காலம் தமிழுலகில் நீடுழி வாழ வேண்டும் உலக உலா.

வே. சின்னத்தம்பி

வெற்றிலைக் கேணி

★ ★

வெளியிடுவோர்; உலக உலா என்ரபிறைசஸ் (3-ம் மாடி) 144, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்
அச்சிடுவோர்: இராசன் அச்சகம், 144, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி / தொழிற்றுறை சார்ந்த வழிகாட்டல்

## CAREER GUIDANCE

★ தொழிற் கல்விக்கான வழிகள் எவை?
★ படிக்கவேண்டிய பாடங்கள் என்ன?
★ கல்வி அறிவு எந்த மட்டத்தில் தேவை?
★ பல்கலைக்கழகம் சென்றுதானா இவற்றைப் பெறவேண்டும்?
★ தொழில் பற்றிய விளக்கங்களை யாரிடம் பெறுவது?
★ இவ்வாறான தொழில்கள் என்ன வருமானத்தைத் தரும்?

பிறநாடுகளில் இருக்கும் இத்தகைய தொழில் வழிகாட்டும்
(CAREER GUIDANCE) சேவை இப்பொழுது இங்கும் கிடைக்கும்!

உங்கள் எதிர்காலத்தின் வழிகாட்டி.... "திசைகாட்டி"

## COMPASS

கல்வி / தொழிற்றுறை சார்ந்த
ஆலோசனைச் சேவை
"விமலம்" நல்லூர் குறுக்குத் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

உங்களின் தேவைகள்
அச்சிலே பதிக்கவேண்டுமா?
அது எதுவானாலும்

*யாமிருக்கத் தயக்கமேன்?*

தமிழீழத்தின் தரமான
அச்சுப்பதிப்பாளர்களாகிய நாங்கள்
உங்கள் எண்ணம் போல்
உங்கள் தேவைகளை
நிறைவு செய்கின்றோம்.

## இராசன் அச்சகம்

144, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொறி மற்றும் வாகன உரிமையாளர்களே !...
உங்கள் வாகனத்திற்கு வில்லுத்தகடு போட வேண்டுமா ...?
செசி மற்றும் இரும்பு வேலைகள் செய்யவேண்டுமா ....?

**கவலையை விடுங்கள் ...**
**உடனே நீங்கள் நாட வேண்டியதெல்லாம்**

# யாழ். இரும்புத் தொழிற்சாலை



- ★ வில்லுத்தகடு போடுதல்
- ★ வில்லுத்தகடு கோலுதல்
- ★ செசி வேலைகள்
- ★ இரும்பு வேலைகள்

அனைத்துக்கும் சிறந்த ஒரே இடம்:

## யாழ். இரும்புத் தொழிற்சாலை

பிறவுண் வீதி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

வைத்தியத்துறையில் ஓர் மகத்தான சேவை!...

# சம்பந்தன் மெடிக்கல் கிளினிக்



உடல் அசதி,
பலவீனம்,
வாதம்,
இருதய நோய்கள்,
ஆஸ்துமா,
மனநோய்கள்,
நீரிழிவு

*மற்றும்*
*தீராத நோய்கள்*
*எதுவானாலும்*
*சரி*

சகல விதமான
வைத்திய
ஆலோசனைகளுக்கும்
சிகிச்சைகளுக்கும்

PUBLIC LIBRARY, JAFFNA
CHUNDIKULI BRANCH LIBRARY

## சம்பந்தன் மெடிக்கல் கிளினிக்

22, இராமையா ட்டியார் ஒழுங்கை,

*யாழ்ப்பாணம்.*

அச்சுப்பதிப்பு:- இராசன் அச்சகம் 144, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org